வெளியீட்டுத் தொடர் எண்: 4

# அனுபோக வைத்திய நவநீதம்

நான்காம் பாகம்

ஆசிரியர் :

ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள்



அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழுவினரால்
பதிப்பிக்கப்பட்டு
தமிழ்நாடு அரசுக்கு
நன்கொடையாக அளிக்கப்பட்டது

கி. பி. 1975

Cell: 8489777140
ஸ்ரீ சங்கு விநாயகர் பழைய புத்தக கடை
மு. முருகன்
13, சாஸ்திரி தெரு, மெயின் ரோடு,
கனரா வங்கி பின்புறம்,
சிவகங்கை 630 561.

முதற் பதிப்பு : 1905

இரண்டாம் பதிப்பு :
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

சி. ம. நூ. வெ. குழு — 1975ஆம் ஆண்டு

உரிமை :

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு,
இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகம்
சென்னை-600029.

அச்சிட்டோர் :

பூம் பிரிண்டர்ஸ்,
32, தாணு தெரு,
புரசைவாக்கம்,
சென்னை-600 007.

# அருள்மிகு
# பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

## அறங்காவலர் குழு

திரு. பு. மனோகரன், அறங்காவலர் குழுத் தலைவர்
திரு. வி. வி. சி. ஆர். எம். கந்தசாமி பி. எஸ்ஸி அறங்காவலர்
திரு. என். நாச்சிமுத்து எம். எல். ஏ. ,,
திரு. புலவர் சி. பழனிச்சாமி எம். எல். ஏ. ,,
திரு. ஏ. பச்சையப்ப கவுண்டர் ,,

வி. எஸ். கோதண்டபாணி பி. எஸ்ஸி., பி.எல்
துணை ஆணையர்—நிர்வாக அதிகாரி

# அருள்மிகு
# பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்

## சித்த மருத்துவநூல் வெளியீட்டுக் குழு

டாக்டர் இரா. தியாகராசன் எல். ஐ. எம்.,
பொறுப்பு அலுவலர்,
சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம்,
சென்னை-600010. ... தலைவர்

டாக்டர் ஆ. ஆனந்தகுமார் ஜி. சி. ஐ. எம்.,
தலைவர், தமிழ்நாடு அரசு இந்திய மருத்துவ
மத்தியக் கழகம், சென்னை-600005. ... பொருளாளர்

திரு. பு. மனோகரன், தலைவர், அறங்காவலர் குழு
அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில். ... உறுப்பினர்

டாக்டர் ப. சிற்சபை, காஞ்சி,
துணைத் தலைவர்,
இந்திய மருத்துவ மத்தியக்கழகம். ... உறுப்பினர்

திரு. வி. எஸ். கோதண்டபாணி பி. எஸ்ஸி., பி.எல்.,
நிர்வாக அதிகாரி, அருள்மிகு பழநி
தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில். ... உறுப்பினர்

டாக்டர். பு மு வேணுகோபால் எச். பி. ஐ. எம்.,
இந்திய மருத்துவத்துறை இயக்குநர்,
சென்னை-600029 ... சிறப்பு அழைப்பினர்

# சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு

## உறுப்பினர்கள்

1. டாக்டர் இரா. தியாகராசன் எல்.ஐ.எம்., பொறுப்பலுவலர், சித்த மருத்துவ மைய ஆராய்ச்சி நிலையம், சென்னை-600010. … தலைவர்
2. டாக்டர் பு.மு. வேணுகோபால் எச்.பி.ஐ.எம்., இந்திய மருத்துவத்துறை இயக்குநர், சென்னை-600029. உறுப்பினர் செயலர்
3. டாக்டர் சி. எஸ். உத்தமராயன் எச். பி ஐ. எம்., முன்னாள் இந்திய மருத்துவத்துறை இயக்குநர், சென்னை-600005. உறுப்பினர்
4. டாக்டர் எம். சண்முகவேலு எச். பி. ஐ. எம்., முன்னாள் மருத்துவப் பேராசிரியர், இராமநாதபுரம். ,,
5. டாக்டர் கே. இராதாகிருஷ்ணன் எல்.ஐ.எம்., மருத்துவ அலுவலர் ஊராட்சி ஒன்றிய மருந்தகம், காவேரிப்பாக்கம், வட ஆற்காடு. ,,
6. டாக்டர் எ. சிறில் ஹென்றி எல். ஐ. எம்., ஓய்வுபெற்ற மருத்துவ அலுவலர், நகராட்சி மருந்தகம், திருச்சி.
7. டாக்டர் ஆ. ஆனந்தகுமார் ஜி. சி. ஐ. எம்., தலைவர், தமிழக அரசு இந்திய மருத்துவ மத்தியக் கழகம், சென்னை 600005. ,,
8. டாக்டர் ப. சிற்சபை ஆர். ஐ. எம். பி., துணைத்தலைவர், இந்திய மருத்துவ மத்தியக் கழகம்
9. பண்டிட் செ. முத்துகருப்பப் பிள்ளை ஆர்.ஐ.எம்.பி., தலைவர், சித்த மருத்துவ சங்கம், மதுரை.
10. டாக்டர் டி. வி. கல்யாணசுந்தரம் ஆர். ஐ. எம். பி., தலைவர், சென்டிரல் சித்தா மெடிகல் கவுன்சில், சென்னை-600012. ,,
11. டாக்டர் என். சேதுரகுநாதன், தமிழ்ப் பேராசிரியர், விருதுநகர். ,,
12. திரு. நி. கந்தசாமிப்பிள்ளை, முன்னாள் செயலர், சரசுவதி மகால் நூலகம், தஞ்சை.

## சிறப்பு அழைப்பினர்கள்

1. டாக்டர் பொன். குருசிரோன்மணி பி.ஏ., ஜி.சி.ஐ.எம்., முதல்வர், அரசினர் இந்திய மருத்துவக்கல்லூரி, பாளையங்கோட்டை. ,,
2. டாக்டர் மு. வே. ரமணன் எல். ஐ. எம், பேராசிரியர், மேல் பட்டப் படிப்பு, அரசினர் இந்திய மருத்துவக் கல்லூரி, பாளையங்கோட்டை. ,,
3. டாக்டர் டி. வி. சுப்பாரெட்டி, கௌரவ இயக்குநர், இந்திய மருத்துவ வரலாற்று ஆராய்ச்சி நிலையம், ஐதராபாத்.
4. டாக்டர் இரத்தினவேலுசுப்பிரமணியம் பி.எஸ்ஸி., எம்.டி., எம்.ஆர்.சி.பி. (லண்டன்), சென்னை-600010.

Cell:
ஸ்ரீ சங்கு விநாயகர் பழைய புத்தக டீலை
மு.முருகன்
13, சாஸ்திரி தெரு, மெயின் ரோடு,
கனரா வங்கி பின்புறம்,
சிவகங்கை 630 561.

மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்

மாண்புமிகு

பேராசிரியர் க. அன்பழகன் எம். ஏ., அவர்கள்

அளித்த

## அணிந்துரை

முன் தோன்றிய—மூவா மொழியாம் தமிழுடனும் அதன் நாகரிகத்துடனும் பிறந்து வளர்ந்த — சித்த மருத்துவத்தின் நன்மையும் மேன்மையும் உலகம் என்றும் இழந்து விடாது காப்பது நம் கடன். தமிழகத்திலும் பிற தென் மாநிலங்களான திராவிடத்திலும் சித்த மருத்துவம் இன்றும் பலரால் — வழிவழியாகவும் கற்றறிந்தும்—கையாளப்பட்டு வரினும் அதன் சிறப்பும் புகழும் நிலைபெறுதற்கு நாம் ஆற்ற வேண்டிய பணிகள் பலவாகும். தமிழக அரசின் ஆதரவாலும் - இத்துறை வல்லுநர்களின் முயற்சியாலும் — மருத்துவ முறைகளுள் சித்த மருத்துவமும் இடம் பெற்று வளருகிறது. எனினும், அதன் தனிச் சிறப்புகள் அறிவியல் ஆய்வாளர்கள் ஒப்புக்கொள்ளுமாறு ஆய்வுகள் மூலம் நிலைநிறுத்தப்பட்டாக வேண்டும் என்பதை நாம் கருத்தில் கொண்டு செயற்படவேண்டும். அந்த நிலை உருவாவதற்கு—ஓலைச் சுவடிகளாகவும்—ஒரு காலத்தில் அச்சேறியும் இன்று கிடைத்தற்கரிதாகவும் உள்ள நூற்றுக் கணக்கான சித்த மருத்துவ நூல்கள் — உடனடியாகப் பதிப்பிக்கப்பட வேண்டும். இவை வெளிவந்தால் தான், இன்று சித்த மருத்துவம் பயிலும் மாணவரும், இளம் மருத்துவரும், அவற்றைப் பயின்று பயன்பெற இயலும். மருந்து செய்முறைகளை ஒப்புநோக்கி உண்மை தெளியவும், மருந்துகளின் தரத்தை உறுதிப்படுத்தவும், அரிய மூலப் பொருள்கள் கிடைக்காத விடத்து மாற்று மூலப்

பொருள்களைக் கொண்டு மருந்து செய்திடவும், மருந்து உற்பத்தியைப் பல மடங்காகப் பெருக்கி மக்களுக்குப் பரவலாகக் கிடைக்கச் செய்யவும் வாய்ப்பாகும்; பரவலாக எங்கும் எளிதில் கிடைப்பதால் செல்வாக்குப் பெற்றுள்ள அலோபதி மருந்துகட்கு ஈடு கொடுத்து மக்களிடம் செல்வாக்குப் பெறவும் முடியும்.

எனவே, சித்த மருத்துவ நூல்கள் வெளியிடும் முயற்சிக்குத் தகுந்த நிதி உதவி வேண்டும் என்னும் எனது வேண்டுகோளை இசைவுடன் ஏற்று அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவல் குழுவினரும் — அதன் தலைவர் திரு. **ப. மனோகரன்** அவர்களும் — இதற்காக இரண்டு இலட்சம் ரூபாய் நிதிஒதுக்க முன் வந்ததுடன் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்கென டாக்டர் **இரா. தியாகராஜன்** எல்.ஐ.எம்., அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவையும் அமைத்துச் செயல்படுத்தலாயினர்.

இக் குழுவின் தலைவரும் உறுப்பினர்களும் ஆர்வத்துடன் ஈடுபட்டு ஆற்றிவரும் நற்பணியும் - பல்வேறு வகையிலும் அவர்கட்குத் துணைநிற்போர் ஆற்றும் பணியும் — இந்திய மருத்துவத்துறை இயக்குநர் டாக்டர் **ப. மு. வேணுகோபால்** அவர்களின் இயக்குவித்திடும் திறனும் எனது பாராட்டுக்குரியனவாகும்.

பழநி திருக்கோயில் அறங்காவலர் குழுவினருக்கும், அக்குழுவின் தலைவருக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரியவாகும்.

இந்த நூல் வெளியீட்டுக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பெற்று முதலில் வெளியிடப்படும் நூல் வரிசையே **அனுபோக வைத்திய நவநீதம்** - ஒன்று முதல் பத்து பாகங்களும் அவற்றின் திறவுகோலும் - ஆகும். இன்று கிடைக்காத பதிப்பாக உள்ள இந்த மருத்துவக் களஞ்சியம் வெளிவருவது மிகுந்த பயன் தரவல்லதாம்.

இந்நூல்களின் ஆசிரியர் - சித்த மருத்துவ வல்லுநர் ஹக்கீம் பா. முகம்மது அப்துல்லா சாயபு அவர்கள் இளமை முதலே - தமது முன்னோர்தம் மருத்துவக் கலையைப் பொன்னேபோல் போற்றிப் பயின்று தொடர்ந்து பல ஆண்டுகள் பாடுபட்டுப்பயன்படுத்தித் தேர்ந்து தெளிந்து - உலகோர்க்குப் பயன்பட வேண்டும் என்னும் உயர்ந்த நோக்கத்துடன் அரிய சித்த மருத்துவ நூல்கள் பலவற்றை இயற்றி வெளியிட்டுள்ளார். இச் செயல்களின் பெருமை அவரையே சாரும்.

மறைபொருளாய்ப் பேணப்பட்டு அதனாலேயே உருவழிந்து மறைந்து போவதற்கு ஆளாகிவிட்ட சித்த மருத்துவ உண்மைகள் — இருட்டறையிலிருந்து வெளிக்கொணரப்பட்டு — ஒளி காண்பதற்கு வழிகண்ட வல்லுநரில் அவர் தலைசிறந்தவர் என்பது மிகையாகாது.

தெளிவுடனும், துணிவுடனும், அறிவுடனும், ஆற்றலுடனும், நெறியுடனும், பொறுப்புடனும் எளிய இனிய தமிழில் - இத்தனை நூல்களை இயற்றியமைக்கு, சித்த மருத்துவ உலகம் - ஹக்கீம் அப்துல்லா அவர்கட்கு எந்நாளும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையதாகும்.

அவர் இயற்றிய அனுபோக வைத்திய நவநீதம் முதற் பாகத்தின் முகவுரையே சித்த மருத்துவத்தின் அக்கால நிலைமை விளக்கமாகவும், நம்மவர் கடமையை எடுத்துக் காட்டுவதாகவும் அமைந்துள்ளதைக் காண்க.

"மிகக் கொடிய நோய்களையும், அறத்தீர்க்கும் பற்பம் செந்தூரமாகிய முறைகள், நமது நாட்டு மருத்துவத்தில் இருப்பதுபோல மற்ற மருத்துவத்தில் இல்லையென நமது மருத்துவ நூல் பயிற்சியுள்ள ஐரோப்பிய மருத்துவர்கள் மனப்பூர்வமாக ஒப்புக்கொள்கின்றனர். ஆங்கில மருத்துவம், நாட்டு மருத்துவம் ஆகிய இரண்டிலும் சிறப்புள்ளவர்களான சிறந்த பண்டிதர்களின் தீர்மானமாவது :

> "அறுவை செய்தல் முதலிய இரண மருத்துவத்தில் ஆங்கிலமுறை வைத்தியம் மிகவும் மேலானது. மற்ற நோய்களின் மருத்துவத்தில் தற்கால சாந்தியாகச் செய்வதிலும் ஆங்கில வைத்தியமே அதிகம் சிறந்தது; ஆனால், நாட்பட்ட நோய்களையும் பெரிய நோய்களான குன்மம், நீரிழிவு, சயம், எருவாய்நோய், பாண்டு, மந்தாக்கினி, மேகம், தாது இழப்பு முதலிய கடின நோய்களையும் அறத் தீர்ப்பதற்கு நாட்டு மருத்துவ முறைகளே மிக மேன்மையானவை. அவற்றுள்ளும் முறைக் கிரமமாகச் செய்யப்பட்ட பற்ப செந்தூரங்களே மிக மேன்மை பெற்றவை."

என்பதே.

இந்த அபிப்பிராயமானது மிகவும் சரியானதெனவும் உத்தமமானதெனவும் அதிகம் வாய்மையானதெனவும் சிறந்த மருத்துவர்களான ஒவ்வொருவரும் முழுமனதோடு ஏற்றுக்கொள்வார்கள்.

இக்கூற்று உண்மையாவதை, நவீன கருவிகள் வளர்ச்சியால் ஆல்லென வளர்ந்து அடர்ந்து நிற்கும் அலோபதி மருத்துவமும் ஏற்கும் வண்ணம் நடைமுறையில் செயல்படுத்தி எண்பிக்கும் வல்லமையும், ஆராய்ச்சி முறையில் சான்றுகளை உருவாக்கும் முயற்சியும் ஓங்கவேண்டும் என்பதே எனது பேரவா.

இந்த உயர்ந்த நோக்கத்துக்கு உறுதுணையாகுமாறு — மருந்து செய்முறைகளை — அரிய நூல் வடிவத்தில் வழங்கிச் சென்ற — ஹக்கீம் பா. மு. அப்துல்லா சாயபு அவர்களின் தொண்டு,

“செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
செயற்கரிய செய்கலா தார்.”

என்னும், குறள் கூறும் பெரியருக்குச் சிறந்த ஓர் எடுத்துக்காட்டு ஆகும்.

இந்த நூல்களின் வெளியீடு மேலும் பல நூல்களை வெளியிடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளோரை ஊக்கப் படுத்துவதற்குத் துணைசெய்வதாகும் என நம்புகிறேன். அவர்தம் முயற்சி வளர வாழ்த்துகின்றேன்.

சென்னை
20-3-1975

க. அன்பழகன்

# இரண்டாம் பதிப்பின் முன்னுரை

உலக மொழிகளில் மிகப் பழமையானது தமிழ்மொழி; தமிழ் மருத்துவ முறையும் அத்தகைத்தே. இம் மருத்துவ முறையைத் தோற்றுவித்தவர் சித்தர்கள் எனப்படுவர். ஆகையால், இம் மருத்துவத்திற்குச் சித்த மருத்துவமென்று பெயர் அமையலாயிற்று. அச் சான்றோர்கள் தாம் கண்ட உண்மைகளையும் மருத்துவ நுணுக்கங்களையும் மருந்து சரக்குகளின் குணம் முதலானவைகளையும் மாணவர்கள் பலரை ஏற்று ஓதியும் ஓதுவித்தும் பற்பல ஏடுகளில் பதிவு செய்தும் உலகோர்க்கு உதவி செய்து தம் மருத்துவ முறைகளைப் பரப்பி வந்தார்கள்.

காலப்போக்கில், சிறிது சிறிதாய் இயற்கையின் — நிலநடுக்கம், கடற்கோள் போன்ற — சீற்றம் காரணமாகவும், வெளி நாட்டார் படையெடுப்பு, சிதலை, இராமபாணம் போன்றவைகளின் தாக்குதலாலும் பல ஏடுகள் அழிந்தவை போக மிகுந்தவைகளில் சில, மேலைநாட்டு நூல் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லப் பட்டன வெனக் கூறப்படுகின்றது. இன்னும் எஞ்சியுள்ள ஏடுகளாலும், அம் மருத்துவக் கலையைத் தொன்று தொட்டு கையாண்டு வரும் மருத்துவர்கள் வாயிலாகவும் பல நூற்றாண்டுகளாக அதன் அடிப்படை உண்மை, தனித் தன்மை காரணமாகவும் சித்த மருத்துவம் அழியாது நிலைபெற்றிருக்கிறது.

தஞ்சையை ஆண்ட மாரட்டிய மன்னர் சரபோஜி அவர்களின் ஆட்சிக் காலத்தில் சித்த, அயுர்வேத, யூனானி மருத்துவ ஏடுகள் எல்லாம் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் அரியணை ஏறின. மருத்துவப் புலவர்களின் அனுபவங்கள் ஏடுகளில் ஏறி ஏமமுற்றன. மருத்துவம் செய்முறையும், பிணித் தீர்வும் அவர் ஏற்படுத்திய தன்வந்திரி மகாலில் மறுமலர்ச்சியுற்றன. அவர் ஆட்சிக்குப் பின் சித்த மருத்துவம் அரசு ஆதரவை இழந்து பழையபடி குடிமக்களின் ஆதரவு கொண்டு ஆங்காங்கு வழக்கில் இருந்து வரலாயிற்று.

மிக அண்மையில் வெள்ளையராட்சிக் காலத்தில் நீதிக்கட்சிச் சார்பில் முதல் அமைச்சராகப் பணியாற்றிய பானகல் அரசர் 1924இல் இந்திய மருத்துவப் பள்ளியைத் தோற்றுவித்து, பல கிராம மருத்துவ மனைகளையும் அமைத்து இயங்கச் செய்து சித்த

மருத்துவம் முதலான இந்திய மருத்துவ முறைகளின் மறுமலர்ச்சிக்கு வித்தூன்றினர். அக்காலத்தில் மேற்படி கல்வி நிலையத்தில் பயிலும் மாணவர்களுக்கு அமைந்த பாடத்திட்டபடி கற்பிக்கப் போதிய பாடபுத்தகங்களும் முதல் (மூல) நூல்களும் இல்லாத் குறையை ஓர்ந்து பாடபுத்தக ஆக்கக் குழுவை அரசு அமைத்தது. அந்நாள் சித்த மருத்துவத்துறை தலைமை ஆசிரியராய் இருந்த பண்டிட். வைத்திய ரத்னம், மருத்துவ சிரோன்மணி காலஞ்சென்ற திரு. க. ச. முருகேச முதலியார் அவர்கள் குணபாடம் (மூலிகை வகுப்பு) என்னும், நூலைத் தன் சொந்த முயற்சியால் இயற்றி அரசினர்க்கு நன்கொடையாக அளித்து வெளியிடச் செய்தும் குழுவினர் அரசு வழி வெளியிட்ட நஞ்சுநூல், பால வாகடம் என்னும், நூல்களைப் பார்வையிட்டும் உதவினர். அக்குழுவினர் நூற்றுக்கு மேற்பட்ட மருத்துவச் சுவடிகளையும் அச்சிட்ட நூல்களையும் சேகரித்து ஒரு நூல் நிலையம் ஏற்படுத்தினர்.

மேற்படி பள்ளி, கல்லூரியாக மிளிர்ந்த போது, அந்நாள் கௌரவ இந்திய மருத்துவ இயக்குநராகப் பணியாற்றிய டாக்டர் ம. ரா. குருசுவாமி முதலியார், ஊக்கம் கொடுத்ததை காரணமாக 1950இல் சித்த மருத்துவம், மருத்துவாங்கச் சுருக்கம், நோயில்லா நெறி, குணபாடம் (மூலிகை வகுப்பு), தாது சீவ வகுப்பு என்ற நூல்களும் அப்போது பணிபுரிந்து வந்த கல்லூரி விரிவுரையாளர்களைக் கொண்டு எழுதுவித்து அரசுவழி வெளியிடப் பெற்றன.

அக்கல்லூரி நிகழ்ந்த காலத்திலும் பின்னர்ப் பாளையங்கோட்டைக் கல்லூரி தோன்றிய பின்னும்கூட பாடநூல்களும் துணைநூல்களும் நிரம்பாமை பெருங்குறையாக நீடித்து வருவதாயிற்று.

ஆகவே, பண்டைய சித்த மருத்துவ ஓலைச்சுவடிகளையும், கையேடுகளையும், ஒரு முறை அச்சாகிப் பின் விற்பனைக்குக் கிட்டாத புத்தகங்களையும் சேகரிக்கவும், மருந்து செய்முறை அட்டவணை தயாரிக்கவும், பாடநூல்கள் வெளியிடவும் ஆகிய பணிகள் செய்ய (pharmacopoea committee 1966 G. O.M.S. 2163 Dt. 23-8-60) ஒரு குழுவும், சித்த மருத்துவக் கல்வி மற்றும் பாடநூற் குழு என்று (G.O.MS. NO. 1060 health Dt. 12-6-56) ஒரு குழுவும் திருவருட்பா, திருப்புகழ் முதலியவைகளில் உள்ள மருத்துவப் பகுதிகளை ஆய்வதற்காக ஒரு குழுவும் என தமிழக அரசு குழுக்களை ஏற்படுத்தியது. அதன் விளைவாக அறுவை மருத்துவம், சூல் மருத்துவம் என்ற நூல்கள் வெளிவந்தன.

மீண்டும் விரைவில் பயன் காணவேண்டிய 1973ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 15 ஆம் நாள் தமிழக அரசினர் மேற்கூறிய குழுக்களை ஒருங்கிணைத்துச் சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக்குழு என்னும், ஒரு குழுவைத் (G. O. MS. NO. 2571 of 23 - 10 - 73) தோற்று வித்தார்கள். அக்குழுவின் பணிகளாவன, சித்த மருத்துவ அரிய சுவடிகள், கையேடுகள், அச்சாகிய பழைய நூல்கள் ஆகியவைகளைச் சேகரித்துப் பாதுகாத்தல்; ஓலைச்சுவடிகளை ஆய்ந்து கையெழுத்துப்படி, நட்டெழுத்துப் படி முதலியவைகளை எடுத்து அச்சியற்றி வெளியிடல்; ஒரு முறை அச்சில் வெளிவந்து விற்பனைக்குக் கிடைக்கப் பெறாத நூல்களை மீண்டும் வெளியிடல்; இதுவரை அச்சிடப் பெறாத நூல்களை வெளியிடல் என்பனவாம். அதன்படி இக்குழுவினர் இதுவரை 400 சுவடிகளையும் 100 கையெழுத்துப் பிரிதிகளையும், 230 அச்சான பழைய நூல்களையும் சேகரித்துள்ளனர்.

இக்குழுவினர் தாம் மேற்கொண்ட பணிகளைச் செயலாற்ற இந்திய மருத்துவத்துறை இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனி அலுவலரையும் அவர்க்கு உதவியாளர்களையும் நியமித்துள்ளனர். அவர்கள் நூல்களைப் படியெடுத்தும் திருத்தம் செய்தும் அச்சியற்றத் தக்க வகையில் செய்து வருகின்றனர்.

அருள்மிகு பழநி தண்டாயுதபணி சுவாமி திருக்கோயில் நிதியிலிருந்து சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்கென்று ஒதுக்கப்பட்ட இரண்டு இலட்சம் ரூபாயைக் கொண்டு மேற்படி நூல்களை, நடைமுறைச் சிக்கல்களைத் தவிர்த்து வெகு விரைவில் வெளியிட மேற்படி சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழுவிலுள்ள உறுப்பினர் சிலருடன் அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களையும் மேற்படி திருக்கோயில் நிர்வாக அதிகாரியையும் கொண்டு அருள்மிகு பழநிதண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சித்த மருத்துவ நூல் வெளியீட்டுக்குழு ஏற்படுத்தப்பட்டது. அக்குழு முடிவெடுத்தபடி முதல் வெளியீட்டு வரிசையில் அனுபோக வைத்திய நவநீதம் பத்துப் பாகங்களும் திரவுகோலும் வெளியிடப்படுகின்றன. மேற்படி அனுபோக வைத்திய நவநீதம் என்னும், உரைநடை நூல்களின் ஆசிரியர் ஹக்கீம். பா. முகம்மது அப்துல்லா சாயபு ஆவார். இவர் சென்னை, ஜார்ஜ் டவுனில் அப்பு மேஸ்திரி தெருவில் 12ஆம் எண்ணுள்ள வீட்டில் வாழ்ந்தார். இவர் தஞ்சை மன்னர் சரபோஜி அவர்களின் தன்வந்திரி மகாலை அலங்கரித்த மருத்துவர் ஒருவரின் வழித்தோன்றல் ஆவார். இவர் பரம்பரை மருத்துவர். சித்த, யூனானி ஆகிய இரு முறைகளிலும் கைபாகம், செய்பாகம், நோய்த்தீர்வு முதலிய எல்லாக் கலைகளிலும் மிக்கத் தேர்ச்சிபெற்றவர். இவர் தனக்குச் சொந்தமாக மருந்துவமனையும், மருந்துசெய்சாலையும், அச்சகமும் நடத்தி வந்தார்.

இவர் கடவுள் நம்பிக்கை, பிறர்நலம் பேணல், கொடை, பரிவு ஆகிய நற்பண்புகள் நிறைந்தவர். சர். உஸ்மான் சாயபு அவர்களின் நெருங்கிய உறவினராவார்.

இவர் ஐம்பதுக்கும் மேற்பட்ட மருத்துவ நூல்களை உரைநடையில் இயற்றி வெளியிட்டதுடன், தேரையர் யமகம், தேரையர் கரிசல், அகத்தியர் இலக்க செளமிய சாகரம் போன்ற முதல் (மூல) நூல்களையும் வெளியிட்டுள்ளார். இவருக்குப்பின் இவரது நூல்களை மறுமுறை பதிப்பித்து வெளியிடுவோரின்மையால் அவை கிட்டுவது அரிதாயிற்று.

ஆகவே, இவரது அனுபோக வைத்திய நவநீதம் பத்துப் பாகங்களையும் அவைகளின் திறவுகோலுடன், முன் பதிப்பிலிருந்த தமிழ் இலக்கங்களை நீக்கி ஆங்கில இலக்கங்களாக மாற்றி, பழைய எடுத்தலளவைக்குச் சரியான மெட்ரிக் எடையை இணைத்துப்பிழைகளைத் திருத்தம் செய்து வெளியிடப்படுகிறது. இந்தப் பத்து நூல்களின் பெருமை அவைகளைக் கற்று மருத்துவத் துறையைச் செய்வார்க்கு மிக நன்ருக விளங்கும். அவ்வந்நூல்களின் பழைய முகவுரைகள் வாயிலாக அவற்றின் மேன்மை தெரியவரும்.

மேற்கண்ட அரிய நூல்களின் வெளியீட்டுப் பணிக்குப் பெருந்தொகை தேவைப்படுவதால், இப் பெரும் பணியை விரைவில் செயல்படுத்த உளங்கொண்ட நம் தமிழக அரசின் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் உயர்திரு க. அன்பழகன் எம். ஏ., அவர்கள் பேரார்வங்கொண்டு மேற்படி பணி முட்டின்றி முடிவதற்கு அரசு நிதியிலிருந்து ஆண்டொன்றுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வழங்க ஆணை பிறப்பித்து மேலும், அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் அறங்காவலர் குழுத் தலைவர் உயர்திரு. பு. மனோகரன் அவர்களைக் கொண்டு முதல் தவணையாக மேற்படி திருக்கோயில் கருவூல நிதியிலிருந்து இரண்டு இலட்சம் ரூபாயை ஒதுக்கி வழங்கச் செய்தமையும், சித்த மருத்துவ நூல்கள் விரைவில் வெளியாக வாய்ப்புத் தேடித் தந்தமையும் காலஞ்சென்ற திரு. டாக்டர் ஜி. டி. நாயுடு அவர்களைக் கொண்டு, காலஞ்சென்ற திரு. டி. வி. சாம்பசிவம் பிள்ளையவர்கள் தொகுத்து வைத்திருந்த மருத்துப் பேரகராதியின் முதல் மூன்று பகுதிகளையும் பிற சித்த மருத்துவ இலக்கிய நூல்களையும் அச்சிட்டு வெளியிடச் செய்தமையும் அமைச்சர் பெருமகனார் சித்த மருத்துவ மறுமலர்ச்சிக்கு முழுமனதுடன் ஆற்றிவரும் செயற்கரிய ஆக்கச் செயல்களாகக் கூறிப்பெருமிதமடையலாம். இதற்குத் தமிழகம் என்றென்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது.

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமிதிருக்கோயில் அறங்காவலர் குழுத்தலைவர் உயர்திரு.பு.மனோகரன் அவர்கள் தமக்குள்ள பற்பல அறப்பணிகட்கிடையேயும் இக் குழுவின் கூட்டங்களில் பங்கு கொண்டு, நூல் வெளியீட்டுக்கான பற்பல வழிமுறைகளையும் ஆலோசனைகளையும் வழங்கி வெளியீட்டுப்பணி ஊக்கமும் ஆக்கமும் பெற்றுத் தங்குதடையின்றி நூல்கள் வெளிவர மேற்படி திருக்கோயில் நிதியிலிருந்து மேற்படி அறங்காவலர் குழுவினரைக் கொண்டு முதல் தவணையாக இரண்டு இலட்ச ரூபாய் வழங்கச் செய்ததோடு, சித்த மருத்துவக் கல்லூரி ஒன்று பழநியில் தோற்றுவிக்க உடன்பட்டமைக்கும், சென்னையில் மத்திய சித்தமருத்துவ நூலகமொன்றை நிறுவக் கட்டடம் கட்டித்தர முயன்று வருகின்றமைக்கும், இக்குழுவினரும், இதில் பணியாற்றி வருபவர்களும் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர் ஆவார்கள்

மேற்படி அறங்காவலர் குழுத் தலைவர் அவர்களுக்கு உறுதுணையாக இருந்து ஒத்துழைத்துவரும் மேற்படி திருக்கோயில் நிர்வாக அதிகாரியாகிய உயர்திரு. வி. எஸ். கோதண்டபாணி பி. எஸ்ஸி., அவர்களுக்கும் இப்பணிகள் நிறைவுபெற ஆக்கிய தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளித்துவரும் இந்து சமய அறநிலையப் பாதுகாப்புக்கு முத் தலைவர் உயர்திரு. நரசிம்மன் ஐ. ஏ. எஸ்., அவர்களுக்கும் இக் குழுவினரின் உளங்கனிந்த நன்றி உரித்தாகும்.

இக்குழுவினர் பணியாற்றுவதற்கு ஏற்ற இடவசதியும் பிற வசதிகளும் தம் அலுவலகத்தின் ஒருபகுதியில் கொடுத்து, பணி இடையீடின்றி நடைபெற வேண்டிய ஆலோசனைகளும் ஊக்கமும் அளித்துவரும் இந்திய மருத்துவத்துறை இயக்குநர் உயர்திரு. டாக்டர். பு. மு. வேணுகோபால் எச். பி. ஐ. எம்., அவர்களுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அடக்க விலையில், மிக விரைவில் அச்சடிக்கும் தாள்கள் சேஷசாயி பேப்பர் மில்சாரிடமிருந்து கிடைக்கும்படி செய்த முத்தமிழ்க் காவலர் உயர்திரு. கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களுக்கு இக்குழு நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளது.

மற்றும், இந்நூல்களை அச்சியற்ற ஏற்ற வண்ணம் மூலப்படிகளைத் திருத்தம் செய்வித்தும், அச்சுப்படிகளைத் திருத்தம் செய்தும் இக்குழுவுக்குத் துணை புரிந்துவரும் தனிஅலுவலர் திரு. டாக்டர் வி. விசுவநாதன் எல். ஐ. எம்., அவர்களையும் அன்னாருக்குத் துணைபுரிந்துவரும் புலவர்கள் வை. முரு. முத்துக்குமாரசாமி, மு. சௌரிராசன், வி. செ. விநாயகம், வே. வாசுதேவன் ஆகியவர்களையும் இக்குழு மனமுவந்து பாராட்டுகிறது.

மேற்கண்ட பணிக்குத் தேவையான நூல்களைக் கொடுத்துதவிய சித்த மருத்துவர்கள் திரு. ப. சிற்சபை, திரு.கே. சீனிவாசன் திரு. மு. சௌரிராசன் ஆகியோர்க்கும், அந்நூல்களைத் திரட்டித்தர துணைபுரிந்த சித்த மருவத்துவர்கள் திரு. டி. வி. கல்யாணசுந்தரம், திரு. பூசலிங்கம் ஆகியோர்க்கும் இக்குழுவின் சார்பில் நன்றி கூறப்படுகிறது.

அச்சுக்கலையில் மிகவும் பட்டறிவு வாய்ந்த திரு. புலவர் நா. மு. மாணிக்கம் அவர்கள் அச்சுக் கோப்புகளின் திருத்துங்களைச் செய்து உதவியமையை இக்குழு பாராட்டுகிறது.

ஒவ்வொரு நூலையும் குறுகிய காலத்தில் அழகிய முறையில் அச்சியற்றிய அந்தந்த வச்சகத்தாரின் சேவைக்கு இக்குழு மன முவந்து பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறது.

சான்றோர் மிகுந்த இவ்வுலகு இந்நூல்களில் காணும் குற்றங் கண்டு முனியாது நனியாதரவு தந்து எம்மை ஊக்குவிக்குமென்ற துணிபுடன் இந்நூல்களை வெளியிடுகின்றனம்.

**டாக்டர் இரா. தியாகராசன் எல். ஐ. எம்.,**
தலைவர்

அருள்மிகு பழநி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில்
சித்த மருத்துவநூல் வெளியீட்டுக்குழு.

இந்திய மருத்துவத்துறை,
இயக்குநர் அலுவலகம்,
சென்னை-600029.

## முதற்பதிப்பின் முகவுரை

சான்றோர்களே !

இந்த நூலினது அருமை பெருமைகளும், இதை வெளிப்படுத்த நேர்ந்த காரணம் முதலியன இன்னவென்பதும் இதன் முந்தின மூன்று பாகங்களாலும் அவைகளின் முகவுரைகளாலும் பார்த்த நண்பர்களுக்கு நேர்த்தியாக விளங்கியிருக்கும். ஆதலின், இங்கெழுதல் மிகையென விடுத்தோம்.

இதற்கு முந்தின பாகத்தில், அடுத்த பாகங்களை வெகு விரைவில் வெளியிடுவோமென எழுதியிருந்தும் நமக்கேற் பட்டிருந்த உடல் நலமின்மையாலும் நமது குடும்பத்தில் நடந்த பல சுப காரியங்களாலும் அவ்வாறு நிறைவேற்றத் தடைபட்டிருந்தது. அப்படி இருந்தும் இதன் முந்தின பாகங்களைப் பார்த்த நமது ஆதரவாளர்கள் பலரும், மற்றும் சில நண்பரும் இதனைத் தாமதிக்காமல் வெளியிடவேண்டுமென்று ஆவலுடன் கடித முகத்தாலும், நேரிலும் வற்புறுத்தி வந்ததை மறுக்கவசமற்று பணச்செலவு முதலியவைகளையும் எதிர்பாராது சில நாள்களுக்கு முன்னர் தொடங்கி வெகு விரைவில் வேலையை முடித்து இந்த நான்காம்பாகத்தை வெளியிட்டனம். இது முந்தின பாகங்களைக் காட்டிலும் மிக மேன்மை பொருந்தியதென்பது பார்வையிடும் ஒவ்வொரு நண்பர்க்கும் தானே விளங்கும்.

இதில் இலிங்கத்தின் பிரபாவம், அதன் பெயர்கள் அதன் இயல்புகள், வகைகள், வைப்புகள், தூய்மைகள், கெந்தகத் தூய்மைகள், வாலைரசங்கள், இலிங்கம் முதலியவைகளைச் சுருக்கிடும் முறைகள், இலிங்கத்தின் கட்டுகள், மெழுகுகள், செந்தூரங்கள், வாழைப்பழச் செயநீர், காடிக்காரப் பக்குவம், இரசசெந்தூர பக்குவம், தன்வந்திரி செந்தூரம், இரகுராமபாண செந்தூரம். சந்திரப் பிரபாசு செந்தூரம், ஓமவன்னி செந்தூரம், இலிங்கத்தின் பற்பங்கள், சுண்ணங்கள், பதங்கங்கள், சண்டரச பற்பம், நீலகண்டவாலை, இலிங்க மாத்திரைகள், மார்த்தாண்ட பைரவம், வச்சிரகண்டி மாத்திரை, வச்சிரகண்டித் தைலம், இலிங்கப் புகைகள், இலிங்கத் தைலங்கள், இலிங்க நஞ்சு வீறு குறிகுணங்கள், அதற்குப் பரிகாரம், இரசகற்பூரத்தின் குணங்கள், தூய்மைகள், அதன் கட்டுகள், நாயுருவி உப்பு, இரசகற்பூர மெழுகுகள், கோரோசனை மெழுகு, வெட்டை மெழுகு, இரசகற்பூர மாத்திரைகள் வாயுமாத்திரை, நவஸ்பூர மாத்திரை, தீர் அந்தாஸ்கான் மாத்திரை, கற்பூர சிந்தாமணி மாத்திரை, சூலை இராட்சச மாத்திரை ஹல்தீபூர மாத்திரை, சுகபேதி மாத்திரை, பாலசஞ்சீவி மாத்

திரை, ஔவைபால சஞ்சீவி மாத்திரை, இரசகற்பூர பற்பங்கள், அட்டகற்பூரம், இரசகற்பூரப் பதங்கம், இரசகற்பூர செந்தூரங்கள், சண்டமாருத செந்தூரம், முப்பூரச் செந்தூரம், இரசகற்பூர வீறுக் குறி குணங்கள், அதற்கு மருத்துவம், வீரத்தின் வைப்புகள், வீரத்தின் குணங்கள், அதன் தூய்மைகள், கட்டுகள், வீரக் கட்டிற்குத் துப்பாக்கி மருந்து, வீரக்கட்டுகளை உபயோகிக்கும் விதம், வீரச்செந்தூரத்திற்கு பூநீற்றுச்செயநீர், அதற்கு அயச்செய நீர், வீரச் செந்தூரங்கள், வீரமெழுகுகள், வீரபற்பங்கள், வீரச் சுண்ணங்கள், வீரப் பதங்கங்கள், வீர மாத்திரை, வீரப்புகை, அயவீரச் செந்தூரம், வாய்பிடிக்கும் மருந்துகள் வாய்பிடிக்கா திருக்க துணைமருந்துகள், வீரநஞ்சு வீறு குறிகுணங்கள், அதன் மருத்துவங்கள் முதலியவைகளும், இவைகட்கு உட்பிரிவுகளு மாகிய 151-முறைகளடங்கி இருக்கின்றன.

இவைகள் யாவும் நமது பரம்பரையில் வெகு இரகசியமாக வைக்கப்பட்டிருந்த பல ஆயிர முறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப் பட்டவை. இவைகளின் குணங்களை அளவிட்டுச் சொல்ல முடியாது. மற்ற பாகங்களிலுள்ள முறைகளைக் காட்டிலும் இதி லுள்ள முறைகள் மேன்மை பொருந்தியனவென்பது இவைகளைச் செய்தனுபவிப்பவர்கட்குத் தானே விளங்கும்.

இந்த நான்காம் பாகமானது 228-பக்கங்களுள்ளதாய் உயர்ந்த தாளில் அச்சிடப்பட்டிருக்கின்றது. உலக மக்கட்கு உதவும் நோக்கில் இதனால் ஏற்பட்ட சிரமத்தை எதிர்பாராது மிகவும் குறைந்த விலையே ஏற்படுத்தியிருக்கின்றோம். ஆதலின், வைத்திய ஆர்வமுள்ள பெருமக்கள் இதற்குமுன் நாம் அச்சிட்டு வெளிப்படுத்திய நூல்களை வாங்கி இவ்வித நூல்களை வெளிப் படுத்துவதற்காம் ஊக்கத்தை எமக்கு மென்மேலும் உண்டாக்கி எம்மைக் கனப்படுத்தியது போலவே இதனையும் வாங்கி மேன் மைப் படுத்துமாறு விரும்புகின்றோம்.

**ஹக்கீம் பா. மு. அப்துல்லா சாயபு,**
12, அப்புமேஸ்திரி தெரு,
ஜார்ஜ்டவுன், சென்னை.

## பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| அண்டத் தைலம் | ... | 21 |
| அபஷிலிங்கமெழுகு | ... | 31 |
| அயவீரச்செந்தூரம் | ... | 154 |
| அவ்வைலிங்க மெழுகு | ... | 28 |
| அஷ்ட கற்பூரம் | ... | 113 |
| இரகுராமபாண செந்தூரம் | ... | 61 |
| இரசகற்பூரத் தூய்மை | ... | 91, 92 |
| இரசகற்பூரச் செத்தூரம் | ... | 114 |
| இரசகற்பூரத்தின் இயல்பு | ... | 90 |
| ,, (சித்தமருத்துவம்) | ... | 90 |
| ,, (யூனானி மருத்துவம்) | ... | 90 |
| ,, (அலோபதி மருத்துவம்) | ... | 90 |
| இரசகற்பூர பற்பம் | ... | 110, 111 |
| இரசகற்பூர மெழுகு | ... | 98,99,103 |
| இரசகற்பூரம் | ... | 89 |
| இரசகற்பூர வீறுக் குறி குணங்கள் | ... | 118 |
| இரசகற்பூர வீறு முறிவு மருத்துவம் | ... | 118 |
| இரசகற்பூர வைப்பு | ... | 90 |
| இரசத்தூய்மை | ... | 67 |
| இரசசெந்தூர பக்குவம் | ... | 55 |
| இலகு சொர்ணலிங்க செந்தூரம் | ... | 60 |
| இலகு இலிங்க மாத்திரை | ... | 83 |
| இலிங்கக் கட்டு | ... | 14-17 |
| இலிங்கக்கட்டு (இளம்பிள்ளை வாதத்திற்கு) | ... | 18 |
| இலிங்கக்கட்டு (விடாச் சுரத்திற்கு) | ... | 19, 20 |
| இலிங்கத் தூய்மை | ... | 10-13 |
| இலிங்கச் செந்தூரம் | ... | 33-51 |
| இலிங்கச் சுண்ணம் | ... | 74, 75 |
| இலிங்க சொர்ண செந்தூரம் | ... | 56 |
| இலிங்கத்தின் குணம் (சித்த மருத்துவம்) | ... | 3 |
| இலிங்கத்தின் ,, (தன்வந்திரி) | ... | 3 |
| இலிங்கத்தின் ,, (யூனானி) | ... | 4 |
| இலிங்கத்தின் பெயர்கள் (வடமொழி) | ... | 3 |
| இலிங்கத்தின் ,, (தமிழ் மொழி) | ... | 3 |
| இலிங்கத்தின் ,, (அரபுமொழி) | ... | 3 |

| | பக்கம் |
|---|---|
| இலிங்கத்தின் பண்பு | 2 |
| இலிங்கத்தின் வகைகள் | 4 |
| இலிங்கத் தைலம் | 88 |
| இலிங்கபற்ப இங்கித முறை | 73 |
| இலிங்க பற்பம் | 65-72 |
| இலிங்கப் பதங்கம் | 76 |
| இலிங்கப் புகை | 86, 87 |
| இலிங்க மெழுகு | 22, 27 |
| இலிங்க வீறு குறிகுணங்கள் | 89 |
| இலிங்க வீறு முறிவு மருத்துவம் | 89 |
| இலிங்கவீர செந்தூரம் | 53 |
| இலிங்கவைப்பு மேல்நாட்டு முறை | 5 |
| இலிங்க வைப்பு (வேறு) | 6 |
| இலிங்காதி உபசண்டமாருத செந்தூரம் | 57 |
| இலிங்காதிப் பதங்கம் | 77 |
| உருத்திரவாயு இலிங்க மாத்திரை | 82 |
| உருமி இலிங்க வைப்பு | 5 |
| ஓமவன்னிச் செந்தூரம் | 62 |
| ஔவை லிங்க மெழுகு | 28 |
| ஔவை பாலசஞ்சீவி மாத்திரை | 109 |
| கற்பூர சிந்தாமணி மாத்திரை | 106 |
| கனக இலிங்க மெழுகு | 24 |
| காடிக்காரப் பக்குவம் | 55 |
| கெந்தகத் தூய்மை | 7-8 |
| கோரோசனை மெழுகு | 100 |
| சண்டமாருத செந்தூரம் | 116 |
| சண்டரச பற்பத்திற்குச் சங்குத் திராவக முறை | 78 |
| சண்டரச பற்பம் | 78 |
| சந்திரப்பிரபாவ செந்தூரம் | 61 |
| சம்பீர இலிங்க மெழுகு | 26 |
| சர்வநோய் இலிங்க செந்தூரம் | 52 |
| சீனலிங்க செந்தூரம் | 59 |
| சுகக்கழிச்சல் மாத்திரை | 108 |
| சுருக்கிடல் | 13 |
| சூலை இராட்சச மாத்திரை | 107 |
| தன்வந்திரி செந்தூரம் | 57 |
| தீபலிங்க செந்தூரம் | 64 |
| தீர் அந்தாஸ்கான் மாத்திரை | 105 |
| நந்தி இலிங்க மெழுகு | 23 |
| நவஸ்பூர மாத்திரை | 105 |
| நாட்டு இலிங்க வைப்பு | 5 |
| நாயுருவி உப்பு | 97 |
| நீலகண்ட வாலை | 81 |
| பம்பாய் இலிங்க வைப்பு | 4 |
| பால சஞ்சீவி மாத்திரை | 109 |
| பால ரசம் | 9 |
| பிரதாப லிங்க செந்தூரம் | 63 |
| பூநாகத் தைலம் | 21 |
| பூரக்கட்டு | 92-97 |
| பூர சட்ரச பற்பம் | 112 |
| பூரச் செந்தூரம் | 115 |
| பூரப் பதங்கம் | 114 |
| பூர மாத்திரை | 103 |
| மாதுளை இலிங்க வைப்பு | 5 |
| மார்த்தாண்ட பைரவம் | 84 |
| முடி பூர பற்பம் | 112 |
| முப்பூர செந்தூரம் | 117 |
| மோக லிங்க செந்தூரம் | 59 |
| வச்சிர கண்டக இலிங்க மெழுகு | 23 |
| வச்சிர கண்டித் தைலம் | 85 |
| வச்சிர கண்டி மாத்திரை | 85 |
| வாயு மாத்திரை | 104 |
| வாயு இராஜலிங்க மெழுகு | 26 |
| வாய்பிடிக்கும் மருந்துகள், வாய் பிடிக்கா திருக்க துணைமருந்துகள் | 155 |
| வாழைப்பழச் செயநீர் | 34 |
| விழுசி இலிங்க மெழுகு | 24 |

| | | பக்கம் |
|---|---|---|
| வீரக்கட்டிற்குத் துப்பாக்கி மருந்து | ... | 124 |
| வீரக்கட்டு | ... | 121 |
| வீரக்கட்டுகளை உள்ளுக்குப் பயன் படுத்துதல் | ... | 125 |
| வீரச் சுண்ணம் | ... | 149-150 |
| வீரத் தூய்மை | ... | 120 |
| வீரச் செந்தூரத்திற்கு அயச் செயநீர் | ... | 126 |
| வீரச் செந்தூரத்திற்கு பூநீற்றுச் செயநீர் | ... | 125 |
| வீரச் செந்தூரம் | ... | 125, 135 |
| வீரச் செந்தூரம் (பச்சை) | ... | 133 |
| வீரத்திற்குப் பகைச் சரக்குகள் | ... | 120 |
| வீரத்தின் குணம் (சித்தமருத்துவம்) | ... | 120 |
| வீர பற்பம் | ... | 147, 148 |
| வீரப் பதங்கம் | ... | 150-153 |
| வீரப் புகை | ... | 152 |
| வீர மாத்திரை | ... | 152 |
| வீர மெழுகு | ... | 136-147 |
| வீரம் | ... | 118 |
| வீர நஞ்சுவீறு குறி குணங்களும் அதற்கு முறிவு மருத்துவமும் | ... | 156 |
| வீர வைப்பு | ... | 119 |
| வீர வைப்பு (ஆங்கில முறை) | ... | 120 |
| வெட்டை மெழுகு | ... | 101 |
| ஹல்தீபூர மாத்திரை | ... | 107 |
| ஜீவாக்கினி இலிங்க செந்தூரம் | ... | 54 |


**அனுபோக வைத்திய நவநீதம்**
நான்காம் பாகம் பொருளடக்கம் முற்றிற்று.

# அனுபோக வைத்திய நவநீதம்

## நான்காம் பாகம்

### கடவுள் வணக்கம்

மாவா ரனுபோக வைத்ய நவநீதம்
பாவாரு மச்சிற் பதித்திடவே—நாவாரும்
ஆதியே பல்கோடி யண்டமனைத் தும்படைத்தாள்
சோதியே செய்வாய் துணை.

### குரு வணக்கம்

திருவும் புகழுந் திகழறிவுஞ் சேரெங்
குருவின் பதம்பணிந்து கொண்டு—வருநலனு
போகமாம் வாகடத்திற் போற்றுநவ நீதமுயர்
வாகவியற் றத்தொடங்கு வாம்.

### நூல்

திருவின் அருளாலும், பெரியோர்களின் வாழ்த்தினாலும் பற்பல மருத்துவ அறிஞர்களின் ஆதரவினாலும் இதன்முன் மூன்று பாகங்களிலும் அநேக சிறப்புமிகு நுட்பமான முறைகள், குருமுறைகள், மறைபொருளான முறைகள் முதலிய பற்பல அற்புத முறைகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவற்றிலுள்ள முறைகளெல்லாம் பல தலைமுறைகளாகப் பலதடவைகளிலும் அனுபவ சித்தி பெற்றவைகள். யாவரும் இலகுவாகத் தெரிந்துகொள்ளும் விதமாக வகைவிபரமாகவும் எழுதப்பட்டுள்ளன. அவற்றின் முறைகளைச் செய்தேர்ச்சியுள்ள மருத்துவப் பயிற்சியாளர்கள் ஒவ்வொருவரும் அவற்றின் அருமை பெருமைகளை அடங்காமகிழ்ச்சியோடு வெகு வாய்ப் புகழ்ந்து நன்கு மதித்து வருகின்றார்கள். ஆகையால், முன்னிலும் உற்சாகம் அதிகரித்து இந் நான்காம் பாகத்தில் நமது முன்னோர்களும், நாமும் பல தடவைகளில் உபயோகித்து அனுபவ சித்தி பெற்றவைகளும் பரம்பரையாக அனுபவித்து வரப்பட்டவை

களுமான அநேக சித்த, யூனானி மருத்துவ முறைகள், உயிர்களின் மீதுள்ள அருளினாலும், பிறர்க்கு உதவும் நோக்குடனும் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன. இதிலடங்கிய கருத்துகள், விவரங்கள், முறைகள் முதலியவைகளெல்லாம் இதுவரையில் அச்சில் வெளிப்படுத்தப்படாத நூதனமானவைகள்; நாட்பட்ட நோய், கடின நோய், மிகுமுயற்சியால் நலப்படும் நோய் முதலிய கொடிய நோய்களைஅறத் தீர்க்கும் பற்பல முறைகள் இந்நான்காம் பாகத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன. இம் முறைகளை ஒவ்வொருவரும் சந்தேகமறத் தெரிந்துகொள்ளும் விதமாக மிகவும் தெளிவாகவும் வெளிப்படையாகவும் செந்தமிழ்நடையில் எழுதப்பட்டுள்ளன. இவற்றின் அருமை பெருமைகளெல்லாம் அங்குச் சொல்லி இருக்கிறபடி செய்து அநுபவிப்பவர்களுக்கு 'உள்ளங்கை நெல்லிக்கனி போல' விளங்கும்.

## இலிங்கத்தின் பண்பு

இலிங்கமானது இரசம், கெந்தகம் ஆகிய இரண்டின் சேர்க்கையானதாகையால் இது மருத்துவம், வாதமென்னும் இருவகைக்கும் உயிராதாரமானதாம். இதனை முறைப்படி சித்தஞ்செய்து உபயோகித்தால் மற்றெல்லாச் சரக்குகளைப் பார்க்கிலும் அதிக மேலான குணத்தைத் தருமென்பது திண்ணம்.

இப் பிரபஞ்சமானது பஞ்சபூத மயமென்பது எல்லா மருத்துவ அறிஞர்களின் முடிவாகும். இரசமானது ஏக பூதச் சரக்காக இருப்பதுபோலவே கெந்தகமும் ஏகபூதச் சரக்கு. இரசத்திற்குச் சிவமென்றும், கெந்தகத்திற்குச் சத்தியென்றும் பெயர்களுண்டு. ஆகையால், இலிங்கமானது சத்திசிவ சேர்க்கையுற்றதாம். இரசமானது சூரிய சம்பந்தமுடையது. கெந்தகமானது சந்திர சம்பந்தமுடையது. ஆகையால், இவ்விரண்டின் சம்பந்தங்களால் எல்லா உலோகங்களும் தோன்றுகின்றனவென்பது சித்த, ஆயுள்வேத, யூனானி மருத்துவர்களின் முடிவாகும். இன்னும், இது பெரும்பான்மையும் எல்லாவகை நோய்களிலும் (முக்கியமாக சுரநோய், சன்னிபாதம், மேகநோய், புண்கள், விரணநோய், தாது இழப்பு முதலிய தீயநோய்களைக் கண்டிக்க) உபயோகப்படுத்தப் படுகின்றபடியாலும், இரசக் கலப்புள்ளமருந்துகளை உபயோகிக்க அதிக விழிப்புணர்வும், அதிகப் புத்திக்கூர்மையும் அவசியமாக இருப்பதுபோல இதற்கு அவ்வளவாக அவை அவசியமில்லாதபடியாலும், சித்த, ஆயுள்வேத மருத்துவர்கள் இதனை மிக உயர்ந்தவைகளுள் ஒன்றென மதிக்கின்றார்கள். இரசத்தைக் கட்டவும், அதனை யோக முறைகளாகச் செய்யவும் அதிக உழைப்பு வேண்டியதாகும். ஆனால், இதனை அவ்விதம் சித்தப்படுத்துவதில் அவ்வளவு முயற்சியும் உழைப்பும் பிரயா-



சையும் அவசியமில்லை. இன்னண பல காரணங்களால் இலிங்கத்தைக் குறித்து வெகுவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. அவை எல்லாவற்றையும் இங்கெழுதுவதானால், இச்சிறிய நூலானது அதிக விரிவெய்துமெனப் பயந்து இம் மட்டோடு நிறுத்தப்பட்டது.

**இலிங்கத்தின் பெயர்கள்:**—இதன் பெயர்கள் அநேகம். மருத்துவ வழக்கிலும், வாத வழக்கிலும் இதன் பயனைக்கருதி குறிப்பாகப் பல பெயர்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு பெரிய மருத்துவ நூல்களிலும் பலவகைப் பெயர்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன. அவை எல்லாவற்றையும் இங்கெழுதுவது இயலாததாயினும் நமக்குத் தெரிந்த வரையிலும், நமக்குக் கிடைத்த வரையிலும் சிலவற்றை இங்கெழுதுவோம்.

**வடமொழி:**—(1) ஹிங்குளா, (2) தரதா, (3) மிலேச்ச, (4) மணிராகா, (5) அதிரக்தா, (6) கற்கட, (7) சீர்ஷ்சோண, (8) பாரஜ, (9) சர்மரஞ்சன, (10) மணிராககர, (11) ரங்க, (12) இந்திர கோபாருண, (13) அருண என்ற பெயர்களும் வேறு பல பெயர்களும் உண்டு.

**அரபுமொழி:**—(1) ஜன்ஜ்பர், (2) ஜங்க்பர், (3) ஷன்ஜ்ரப், (4) ஜன்ஜறப், (5) குண்பாரே நநரீ, (6) குன்பாரேஸியூஸ், (7) அஸ்ரீகூன், (8) யஊத், (9) சுர்க், (10) கஹ, (11) ஹஜ்றுத்தீன், (12) ஹிங்கோல், (13) ஷன்காப், (14) ஈங்குர் என்ற பெயர்களும் வேறு பல பெயர்களும் உண்டு.

**தமிழ் மொழி:**—(1) இங்குலிகம், (2) குலிகம், (3) சாதிலிங்கம், (4) மணிவாரி, (5) வன்னிகற்பம், (6) சண்டகம், (7) செந்தூரம், (8) சமரசம், (9) கலிங்கம், (10) காஞ்சனம், (11) சாணியம், (12) மலைராசம், (13) மணிநாகம் முதலிய பெயர்களும் இன்னும் பல வேறு பெயர்களுமுண்டு.

இலிங்கத்தின் குணம் (சித்த மருத்துவம்):— சிவந்த சாதிலிங்கமானது இரச கெந்தக உருக்காகையால், அந்த இரச குணத்தைக் கொண்டு பெருங்கழிச்சல், வறட்சி சன்னிபாதம், அற்புதப் புண், மிகுமூத்திரம், காணுநஞ்சு, இருமல், கரப்பான், சிரங்கு, நுணுக்காய்க் கிரந்தி, மண்டலகுட்டம், உடற் குத்தல், வாத நோய், உடல் அகநோய்கள் முதலியவை தீரும். நரம்புகள் முறுக்கேறி வீரியமுண்டாகும்.

**தன்வந்திரி:**—வெப்ப வீரியமுண்டாகும்; நஞ்சு, குட்டம், சிவந்த நோய், தோல் நோய் ஆகியவைகள் தீரும்.

**பூரனி** :—இரத்தம் முதலியவைகளைப் பந்தப்படுத்தும். தீயநீரை வறட்டும். காயம்பட்ட உறுப்புகளில் அசுத்தநீரை விடாமல் தடுக்கும். உட்டிணசம்பந்தமான வீக்கங்களைக் கரைக்கும். வறட்டுச்சொறி, நைப்புச்சொறி, குட்டம், தீயினுலுண்டான புண் முதலிய நோய்களுக்கும் உபயோகப்படும். குறைநோய், மேகநோய், தோல்நோய் முதலியவைகளுக்குப் பயன்படுத்தலாம். கபநோய்கள், சுவாசநோய்கள், இருமல் நோய்கள் முதலியவைகளுக்கும் ஆகும்.

**இலிங்கத்தின் வகைகள்** :—இது பிறவிஇலிங்கம், வைப்பு இலிங்கம் என இருவகைப்படும். பிறவி லிங்கமானது பெரும்பான்மையும் பொன் சுரங்கம், தாம்பிரச் சுரங்கம் ஆகியவைகளில் கிடைக்கின்றது. அப்படிக் கிடைக்கும் இலிங்கத்தைச் சிலர் சிவப்புக் கெந்தகமெனச் சொல்கின்றார்கள். அது எப்படியாயினும் பிறவிஇலிங்கம் அகப்படுவது அரிது. பொதுவாக வைப்பு இலிங்கந்தான் கிடைக்கிறது. வைப்பு இலிங்கத்திலும் பலவகைகளுண்டு. அவை பின்வருகிற விதமாம்.

(1) உலாந்தா இலிங்கம், (2) ரூமி லிங்கம், (3) மாதுளை இலிங்கம், (4) பம்பாய் இலிங்கம், அல்லது, மிசிறி லிங்கம், (5) நாட்டு இலிங்கம், அல்லது, சீன லிங்கம் என்பவைகளாம்.

கடைகளில் தற்காலத்தில் உயர்ந்த இலிங்கம் அகப்படுகிறதில்லை. ஆகையால், நாம் வைத்துச் சித்தப்படுத்திக் கொண்டால் வைத்தியம், வாதமென்னும் இருவகைகளிலும் அதிகம் உபயோகமாம். பஞ்சாப், காஷ்மீரம் முதலிய நாடுகளில் ரூமிஇலிங்கம் கிடைக்கிறது. சென்னை எல்லையில் அவ்வித இலிங்கம் அகப்படுவது மிகவும் அரிதாக இருக்கிறது. நினைத்தபோதெல்லாம் அவ்விடத்திலிருந்து வரவழைப்பது அதிக கடினமாயிருப்பதால் கூடுமானவர்கள் தாங்களே செய்துகொண்டால் மிகவும் அனுகூலமாக இருக்கும் ஆகையால், இலிங்க வைப்புமுறைகளில் சிலமுறைகளையும் இங்கெழுதுகின்றோம். விருப்பமானவர்கள் இம் முறைகளின்படி செய்துகொண்டால் எல்லாச் செயல்முறைகளுக்கும் அனுகூலமாகவும் உத்தமமாகவுமிருக்கும். இன்னும், கடையில் விற்கப்பட்ட இலிங்கமானது தூய்மை செய்யாத சரக்குகளினுற் செய்யப்படுகின்றபடியால் நாம் அந்தச் சரக்குகளைத் தூய்மைசெய்து கொள்வதினுல் பலவகை அனுகூலங்களுக்கு ஏதுவாகும்.

## 1. பம்பாய் இலிங்கவைப்பு

தூய்மைசெய்த இரசம் ஏழுபங்கு, தூய்மைசெய்த கெந்தகம் இரண்டு பங்கு, இவ்விரண்டையும் ஒன்ருகச் சேர்த்தரைத்து



இரசம் மடிந்து கருப்பான பின் ஏழு சீலைமண் செய்துலர்த்தின பளிங்குக்குப்பிக்குள் போடவேண்டும். மருந்தானது குப்பியில் அரைபாகம் இருக்கவேண்டியது. குப்பியின் வாய்க்கு மாக்கல் மூடியிட்டு அதற்கும் ஏழு சீலைமண் செய்துலர்த்திக் கொள்ளவேண்டும். ஒரு பானையில் நாலங்குலம் மணல் போட்டு அதன்மீது முன் குப்பியை வைத்துக் குப்பியின் கழுத்துவரையில் மணலைக் கொட்டிப் பானை வாயை மண்தாலத்தால் மூடிச் சீலைமண் செய்துலர்த்தி அடுப்பின் மீதேற்றிப் பதினுறு சாமத்திற்குக் குறையாமல் அல்லது, மணல் சிவந்து போகிறவரையில் எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறின பின்பு எடுத்து உடைத்தால் குப்பியின் வாயில் இலிங்கம் கட்டிப்போயிருக்கும். அதனை எடுத்துப் பின் சொல்லுகிற முறைகளில் சொல்லியபடி தூய்மைசெய்து உபயோகப்படுத்திக் கொள்ளவும். இவ் வகையாகச் செய்த இலிங்கத்திற்கு பம்பாய் அல்லது, மிசிரி இலிங்கமென்று சொல்லப்படுகிறது.

## 2. நாட்டு இலிங்க வைப்பு

தூய்மைசெய்த இரசம் ஒரு பங்கு, கெந்தகம் ஒரு பங்கு மேற்கண்ட விதமாகச் செய்து கொள்வதேயாகும்; இதற்கு சைன இலிங்க மென்றும் பெயர்.

## 3. ரூமி இலிங்க வைப்பு

தூய்மைசெய்த இரசம் பன்னிரண்டு பங்கு, கெந்தகம் எட்டு பங்கு, மனேசிலை ஐந்து பங்கு.

மேற்கண்டபடியே அரைத்துச் சித்தப்படுத்திக் கொள்வதே உத்தமம்.

## 4. மேலைநாட்டுமுறை இலிங்க வைப்பு

இரசம் 16 அவுன்சு (320 கிராம்), கெந்தகம் 5 அவுன்சு ($106\frac{1}{4}$ கிராம்). இவ்விரண்டையும் சேர்த்து உருக்கவும். சரக்குகள் பொங்கி எழும்புகிற வரையில் தியிட்டெரித்துப் பாத்திரத்தை அடுப்பை விட்டிறக்கிச் சரக்குகள் தீப்பிடிக்காமல் பத்திரமாக மூடிப் பிறகு தூள்செய்து மேற்கண்டபடி பதங்கித்துக் கொள்ளவும்

## 5. மாதுளை இலிங்க வைப்பு

இரசம் ஒரு பங்கு, தொட்டிப்பாடாணம் ஒரு பங்கு, இவ்விரண்டையும் சேர்த்தரைத்து மேற்கண்டபடி பதங்கித்து எடுத்துக் கொள்வதேயாகும்.

## 6. இலிங்க வைப்பு (வேறு)

கெந்தகம் பன்னிரண்டு பங்கு, மனோசிலை இரண்டு பங்கு. இவ்விரண்டையும் சேர்த்தரைத்து அஞ்சனம் போலானபின்பு இருபது பங்கு இரசத்தைச் சேர்த்து அரைத்துச் செம்மையான பொடியான பின்பு மேற்கண்டபடி குப்பியில் வைத்தெரித்துப் பதங்கித்துக் கொண்டால் உயர்தரமான லிங்கமாகும். இது வாதம், (வேதியல்) வைத்தியமென்னும் இருமுறைகளுக்குமாகும்.

**குறிப்பு :**—தற்காலத்தில் வைக்கப்படும் இலிங்கமானது தூய்மை செய்யாத சரக்குகள் சம்பந்தமாகவே பதங்கித்து விற்கப் படுகிறது. ஆகையால், விருப்பமானவர்கள் உழைப்பிற்கு அயராமல் இரசம், கெந்தகம் முதலிய சரக்குகளைத் தூய்மைசெய்து மேற்கண்ட பாகப்படி பதங்கித்துச் சித்தப்படுத்திக் கொண்டால் அதிக பயனுடையதாகும். ஆகையால், அவசியமானவர்கள் செய்து கொள்ளும் பொருட்டு இரசத்தைத்தூய்மை செய்யும் முறைகளில் சிலபாகங்களையும் கெந்தகத்தைத் தூய்மைசெய்யும் முறைகளிற் சில பாகங்களையும் முன்னர் இங்கெழுதுவோம்.

### 1. இரசத் தூய்மை

இரசத்தை உரத்த துணியில் வைத்துப் பிழிய வேண்டும். பிழிந்த இரசத்தை மறுபடியும் துணியில் வைத்துப் பிழிய வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஆயிரம் தடவைகள் செய்வதால் அதிலுள்ள பலவகை மாசுகள் ஒருவாறு நீங்கும். பிறகு, அந்த இரசத்தை ஓட்டிலிட்டு அது முழுகிநிற்கும்படியாகத் தண்ணீர்விட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரிக்க வேண்டும். நீர் சுண்டச்சுண்ட அடுத்தடுத்து நீர் விட்டுவரவேண்டும். இரசமானது நீருக்குள்ளேயே இருக்க வேண்டும். இரசத்தின் மீதுள்ள தண்ணீர் சுண்டிவிட்டால் இரசம் பறந்துபோகஏதுவாகும். ஆகையால், இந்த செய்முறையில் அதிக விழிப்பாக இருக்க வேண்டும். இப்படிச் செய்து வந்தால் தண்ணீரானது சிறுகருப்பு வண்ணமாகிவிடும். அதுவே பதமெனக் கீழிறக்கிக் காடியைவிட்டுக் கையினால் பிசைந்து நாலைந்து தடவைகள் காடியை விட்டே கழுவி எடுத்துக் கொள்ளத் தூய்மையாம். பிறகு, குப்பியில் எடுத்து வைத்துக்கொண்டு வேண்டியபோது மருந்துகளுடன் சேர்த்து உபயோகிப்பதனால் அதிகப் பயன்களுண்டாகும்.

### 2. இரசத் தூய்மை (வேறு)

**மேற்கண்டபடி இரசத்தை உரத்த துணியில் வைத்து மடக்கி மடக்கி நூறு அல்லது,இருநூறு தடவைகள் செய்து கல்வத்**திலிட்டுச் சிற்றாமணக்கிலைச் சாற்றை அல்லது, பேராமணக்கிலைச் சாற்றைச் சிறுகச்சிறுக விட்டு நான்கு சாமம் அரைத்து வெப்பிலில் வைத்துலர்த்தி நன்றுபுலர்ந்தபின் ஊதுகுழாய் முதலியவைகளால் ஊதி அதிலுள்ள அழுக்குகளைப் போக்கி இரசத்தை எடுத்து மறுபடியும் கல்வத்திலிட்டு மணித்தக்காளியிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு முன்போல் நான்கு சாமம் அரைத்து முன்போல் வெப்பிலிலுலர்த்தி ஊதுகுழாயால் ஊதி அழுக்கைப் போக்கி இரசத்தை மாத்திரம் எடுத்துக் கொள்ள வேண்டும். இவ்விதம் செய்வதனாலும் இரசத்திலுள்ள மாசுகள் நீங்கி தூய்மையாகிவிடும்.

### 3. இரசத் தூய்மை (வேறு)

இரசம் 5 பலம் (175 கிராம்), சித்திரமூல வேர்ப்பட்டைத்தூள், அரிசித்திப்பிலித் தூள், மேற்றோல் சீவின சுக்குத்தூள், மிளகுத் தூள், பெருங்காயம், இந்துப்பு இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) இவ்வேழு சரக்குகளையும் ஒன்றாக இடித்துத் தூள்செய்து முன் இரசத்தைக் கல்வத்திலிட்டு இந்தத் தூளைச் சேர்த்து 12 சாமம் அரைக்க வேண்டும். இதைத் தொடர்ச்சியாக அரைக்க வேண்டுமென்னும் நிர்ப்பந்தமில்லை. சாவகாசமான காலங்களில் எவ்விதமும் 12 மணிநேரம் அரைத்தாக வேண்டியது.

இவ்விதம் அரைத்தானபின் அதிலுள்ள மருந்துகளை ஊதுகுழாய் முதலியவைகளால் ஊதியாயினும் முறம் முதலியவைகளிற் போட்டுக் கொழித்தாயினும் தூளைப் போக்கி இரசத்தை மாத்திரம் எடுத்து முன்போற் கல்வத்திலிட்டு முன்போல் முன்மருந்துகளை முன்னளவே இடித்துத் தூள்செய்து முன்போல் இரசத்துடன் சம்பந்தப்படுத்தி 12 சாமம் அரைக்க வேண்டியது. இவ்விதம் 12 சாமத்திற்கு ஒருதடவை சரக்குகளைப் புதிதாகச் சேர்த்து, ஏழு, பன்னிரண்டு சாமங்கள் அரைக்க வேண்டும். இப்படிச் செய்வதால் இரசத்திலுள்ள எல்லாக் குற்றங்களும் நீங்கித் தூய்மையாகிவிடும். இவ்விதம் இரசத்தை சம்பந்தப்படுத்திச் செய்யும் மருந்துகளினால் வாய்பிடித்தல் முதலிய எவ்விதத் தீயகுணங்களும் உண்டாகாது. இவ்வித இரச சம்பந்தமான மருந்தின் குணச்சிறப்பை அவரவர்களே தத்தம் அநுபவத்தில் தெரிந்து நிச்சயித்து ஆனந்திக்க ஏதுவாகும். ஆனால், இது கடினமான வேலையென மலைப்பவர்களுக்கு எல்லாம் மலையைப் போலவே தோன்றும். அதற்காக நாம் என்ன செய்வோம்.

### 1. கெந்தகத் தூய்மை

**நெல்லிக்காய்க்கெந்தகம் 5 பலம் (175 கிராம்), (இதனைத் தூள்செய்து கொள்ளவும்) சோற்றுக்கற்றாழைச் சாறு 1 படி, வெங்காயச்சாறு 1படி.**

**செய்முறை:**—வாயகன்ற ஒரு சிறுபானையில் சோற்றுக்கற்றாழைச் சாற்றைவிட்டு வாய்க்கு மெல்லிய துணியால் வேடு கட்டி துணியின்மீது கெந்தகத்தைப் பரப்பிப் பானையின் உதடு மட்டம் பூமியில் புதைத்துப் பானையின்மேல் ஒரு மண் தாலத்தால் மூடி அதன்மீது நாலைந்து வறட்டியை ஒடித்தடுக்கி நெருப்பிடவும். குளிர ஆறின பின்பு கெந்தகத்தை எடுத்துப் பொடித்து முன் போலவே புதிய சோற்றுக்கற்றாழைச் சாற்றை வார்த்துப் புடமிட வேண்டும். இவ்விதம் முடிந்த அளவு மூன்று, ஐந்து, ஏழு, பத்து முறை செய்து, இவ்விதமே வெங்காயச் சாற்றிலும் மேற்கண்ட தடவைகள் செய்து கொள்ளவும்.

**குறிப்பு:**— இவ்விதம் செய்யப்பட்ட கெந்தகத் தூய்மையானது வைத்தியம், வாதமென்னும் இரு முறைக்குமாகும். ஆனால், வாதமுறையில் பொன் செய்வதற்காக அவசியமானால், இருபது தடவை புடம் போட்டெடுத்துக் கொள்ளவேண்டும்.

இப்படிப் புடம் போடுவது மிகக்கடினமாகத் தோன்றுமானால் மேற்படி சாற்றில் கெந்தகத்தைக் கிழிக்கட்டித் தொங்கவிட்டுச் சாறெல்லாஞ் சுண்டுகிறவரையில் மெதுவாகத் தீயெரித்து ஆற விட்டு எடுத்துக்கொள்ளலாம்.

## 2. கெந்தகத் தூய்மை (வேறு)

எருமைப்பாலில் மேற்கண்டபடி இருபது தடவை புடமிட்டுக் கொள்ளலாம். அல்லது, மேற்படி பாலில் கெந்தகத்தைக் கிழி கட்டித் தொங்கவிட்டு எரித்தெடுத்துக் கொள்ளலாம். குறைந்த அளவு ஐந்து தடவை செய்ய வேண்டியது. ஐந்து முதல் இருபது வரையில் எத்தனை தடவைகள் செய்து கொள்ளுகிறோமோ அத்தனைக்கத்தனை சிறப்புமிகு குணமுமுண்டாகும். இது பெரும் பான்மையும் மருந்திற்குச் சிறப்பானதாகும்.

## 3. கெந்தகத் தூய்மை (வேறு)

ஒரு இரும்புக் கரண்டியில் கெந்தகத்திற்குத் தகுந்தபடி கொஞ்சம் நெய்யை விட்டுக் காய்ச்சி அதில் கெந்தகத்தைப் போட்டுருக்கி கெந்தகம் உருகினவுடன் பசுவின் பாலில் சாய்க்க வேண்டும். ஆறின பின்பு முன்போல் நெய்யில் உருக்கி முன் போல் பாலில் சாய்க்கவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி முப்பது தடவைகள் செய்து கொண்டால் வைத்தியம், வாதம் இரண்டிற்கும் உபயோகமாகும்.



**குறிப்பு:**—கெந்தகத்தைத் தூய்மை செய்வதில், அரைவாசி எடை குறைந்து போகும். ஆகையால், நமக்கு வேண்டிய அளவிற்கு இரண்டு பங்கெடை கெந்தகத்தை தூய்மைசெய்து கொள்ளவேண்டும்.

## 1. பாலரசம்

இலிங்கத்தில் இரசமும் கெந்தகமும் சேர்ந்திருக்கிறதென்பது நமக்குத் தெரிந்த ஒன்று; ஆகையால், இலிங்கத்திலுள்ள இரசத்தைப் பிரித்தெடுத்துக் கொண்டால் கடை இரசத்தைப் பார்க்கிலும் அதிக சிறப்பானதும் தூய்மையானதுமாகும். இவ்விதம் இலிங்கத்திலிருந்தெடுக்கப்பட்ட இரசத்திற்குப் பாலரசமென்று பெயர். ஆகையால், அம் முறைகளுள் இரண்டொரு முறைகளையும் இங்கு எழுதுவாம்.

நான்குபலம் பம்பாய் இலிங்கத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு நான்கு சாம நேரமரைக்கவேண்டும். பிறகு ஒரு வில்லையாகச் செய்து கொள்ளவேண்டும். இரண்டு பானைகளை வாயைத் தேய்த்து மட்டமாகச் செய்து கொண்டு மேற்பானைக்கு ஊமத்தை இலைச் சாற்றை அல்லது, முள்முருக்கை இலைச் சாற்றைச் சுவறச் சுவறப்பூசி ஈரமில்லாமல் உலர்த்திக்கொள்ளவேண்டும். பிறகு, அடிப்பானையில் முன் சித்தப்படுத்தின வில்லையை வைத்து மேற்பானையையும் மூடி ஏழு சீலைமண் செய்துலர்த்தி அடுப்பேற்றி ஆரம்பத்தில் ஒரு சாமம் சிறு தீயாக எரித்து பிறகு காடாக்கினியாக மூன்று சாமம் எரிக்க வேண்டும். இவ்விதம் எரிக்கும்போது மேற்பானையின் மீது ஈரத் துணியைப் போட்டுவைத்து ஈரம் உலரவுலர நனைத்துக் கொண்டே வரவேண்டும். அடுப்புடனே குளிரவிட்டு நன்றாக ஆறின பின்பு கவசத்தை விழிப்புடன் பிரித்து மேற்பானை முதலிய இடங்களிலுள்ள பதங்கத்தை மயிர்க்கற்றையினால் துடைத்து ஒரு பீங்கான் பாத்திரத்தில் போட்டுக் கையினால் பிசைய பிசைய எல்லாம் இரசமாகி விடும். இதனை உரத்த துணியில் 21 தடவை அல்லது, 31 தடவை வைத்துப் பிழிந்து எடுத்துக் குப்பியில் பத்திரப்படுத்திக் கொள்ளவேண்டும். இவ்விதம் செய்யப்பட்ட இரசத்தை யாகிலும் மருத்துவர்கள் மருந்தில் உபயோகித்தால் நன்மைக்கு ஏதுவாகும். இவ்விதம் இரச சம்பந்தமான மருந்துகளின் குணமும் சிறப்பாகக் காணப்படும்.

## 2. பாலரசம் (வேறு)

உலாந்தா அல்லது, பம்பாய் சாதிலிங்கம் 2 பலம் (70 கிராம்), இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றைச்

சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமம் அரைத்து ஈரமில்லாது வெய்யிலில் உலர்த்திக் கொள்ளவேண்டும். ஒரு மண்பானையில் இரண்டு பலம் கொடிவேலி வேர்ப்பட்டையையும், இரண்டுபலம் ஓமத்தையும் இடித்துப் போட்டு பரப்பி அதன்மேல் முன் சித்தப்படுத்தி இருக்கும் இலிங்கத்தைப் பொடித்துத் தூவி மேற்சட்டி மூடி சந்தில்லாமல் ஏழு சீலைமண் செய்து உலர வைத்து அடுப்பேற்றி முன் சொல்லி இருக்கிற பாகப்படி ஆறவிட்டு விழிப்புடன் எடுத்து சீலையைப் பிரித்து மேலே இருக்கும் பதங்கத்தை வழித்தெடுத்துப் பீங்கான் பாத்திரத்திலிட்டு பிசைந்தெடுக்க இரசமாகும். இந்த இரசத்தை சக்திக்குத் தக்கவாறு 10 அல்லது, 20 தடவைகள் மடக்கி மடக்கி இரட்டுத்துணியில் வைத்துப் பிழிந்து கொள்ளவும்.

## 1. இலிங்கத் தூய்மை

சாதிலிங்கம் 1 பலம் (35 கிராம்), (இது ஒரே கட்டியாய் இருக்கவேண்டும்). இதனை அப்பிரேகத் தகட்டின்மீது வைத்துத் தகட்டை அடுப்பின் மீதேற்றி சிறு தீயாக எரித்துத் தாய்ப்பாலால் சுருக்கிடவேண்டும். அதாவது, இலிங்கத்தின்மீது மேற்படி பாலைச் சிறு துளிகளாக விட்டுக் கட்டியைப் புரட்டிக் கொடுத்துவர வேண்டியது. அல்லது, ஒரு மெல்லிய குச்சியின் நுனியில் மெல்லிய துணியைச் சுற்றிக்கொண்டு மேற்படி பாலில் தோய்த்து கட்டியின் நான்குபுறமும் தடவிப் புரட்டிக் கொடுத்து வருவதேயாம். இவ்விதம் இரண்டு சாமத்திற்குக் குறையாமல் சக்திக்கியன்ற வரையில் எத்தனை சாமமானாலும் சுருக்கிடலாம். இப்படிச் செய்வதினால் இலிங்கமானது தூய்மையாவதுடன் குணத்திலும் சிறந்ததாகும். அதிலுள்ள வெப்பகுணம் நீங்கி நற்குணமுண்டாகும்.

**குறிப்பு:**—இலிங்கத்தைத் தாய்ப்பாலில் இரண்டு மூன்று நாள் ஊறவைத்தெடுப்பதாலும் தூய்மையாகுமென நூல்களில் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆயினும், அநேக மருத்துவர்கள் தம்தம் அனுபவத்தால் பாலில் ஊறப் போடுவதைக் காட்டிலும் சுருக்கிடுவதே மிக சிறப்பாகுமெனக் கண்டு நிச்சயித்திருக்கின்றனர்கள். அப்பிரேகத் தகட்டில் கட்டியைவைத்துப் பாலைத் தடவினால் உடனே வழிந்துபோக எதுவாயிருக்குமாகையால், அப்பிரேகத் தகட்டின் மத்தியில் கோதுமைமாவைக் குழைத்து வட்டாகாரமாகச் சுவர்போல் தடைசெய்து உலர்த்தி பிறகு சுருக்கிடுவது உத்தமம். அனுபோகசாலிகளுக்கு இந்த கருத்து செம்மையாகத் தெரிந்திருக்குமாகையால், மற்றவர்களுக்கு உபயோகப்படுமாறு இங்கும் குறித்துக் காட்டினோம்.



## 2. இலிங்கத் தூய்மை (வேறு)

தேவையான இலிங்கத்தைச் சிறுகட்டிகளாகச் செய்து ஒரு மெல்லிய துணியில் தளர்ச்சியாக முடிந்து கிழிக்கட்டி ஒரு சிறு பாத்திரத்தில் தொங்கவிட வேண்டும். இந்தப் பாத்திரத்தில் முக்கால்வாசி இருக்கும்படியாக ஆட்டுப்பித்து நீரை விடவேண்டும். முடிப்பானது பாத்திரத்தினடியில் படாமலும் பித்துநீருக்குள் 4 அங்குலம் ஆழ்ந்திருக்கும்படியாகவும் தொங்கவிட வேண்டும். பிறகு, அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து நீரெல்லாம் சுண்டின பின்னிறக்கி ஆறவிட்டு இலிங்கத்தை எடுத்து வேறு துணியில் முன்போல் முடிந்து முன்போல் கிழிக்கட்டி தொங்கவிடவேண்டும். அதில் 5 பலம் (175 கிராம்), உவர்மண்ணை 25 பலம் தண்ணீரில் கரைத்துத் தெளியவைத்து தெளிவெடுத்து முன் கிழி கட்டியிருக்கிற பாத்திரத்தில் விடவேண்டும். இதுவும் முன்போலவே பாத்திரத்தின் அடியில்படாமலும் 4 அங்குலம் நீரில் ஆழ்ந்தும் இருக்க வேண்டியது. மெதுவாக எரித்து நீர் சுண்டினபின் எடுத்து ஆறவைத்து இலிங்கத்தை எடுத்துக் கொள்ளவேண்டியது. இரண்டாம் தடவையும் முன்போலவே உவர்மண் தண்ணீரில் கிழிக்கட்டி எரித்து சித்தப்படுத்திக் கொள்ள வேண்டியது. இவ்விதம் மடக்கி மடக்கி குறைந்த அளவு ஏழுதடவைகள் செய்து கொள்ளவும். பதினைன்கு தடவை செய்துகொண்டால் மிக உயர்வானதாக இருக்கும். பிறகு, முன்போலவே தாளிக்காத சுண்ணாம்பு நீரில் முன் போலவே கிழிகட்டி ஏழுதடவை எரித்து எடுத்துக் கொள்ள வேண்டும். இந்த விதத்தையும் பதினைந்து தடவைகள் செய்து கொண்டால் மிக மேலானதென நாமிங்கு எடுத்துச் சொல்லவேண்டியதில்லையல்லவா. இதனைச் செய்வதற்கு சிலருக்குக் கடினமாக காணப்படும். ஆனால், இதனைத் தனியாகவும் உபயோகிக்கலாம். சுரம், சன்னி, மேகநோய், நீரிழிவு, மதுமூத்திரம் முதலிய பல நோய்கள் இதன் பெயரைக் கேட்டபோதிலும் ஓடிப்போகும்.

**குறிப்பு:**—தாளிக்காத சுண்ணாம்பைத் துணியில் சலித்து 5 பலம் (175 கிராம்) நிறுத்தெடுத்து, அதில் 25 பலம், தண்ணீரை விட்டுக் கரைத்துக் கறுப்புவண்ணக் குப்பியில் விட்டு வைக்கவேண்டும். அடிக்கடி குலுக்கி வைக்கவும் வேண்டும். 12 மணி நேரம் சென்றபின்பு மேற்றெளிவை இறுத்துக் கறுப்பு வண்ணக் குப்பியில் வைத்துக் கொள்ளவேண்டும். வேறு வண்ணக் குப்பியில் வைத்தால் இந்தக் காரம் சீக்கிரம் கெட்டுப் போகும். கறுப்புவண்ணக் குப்பி அகப்படாவிட்டால் வெள்ளைக் குப்பியின் மேல் கறுப்புக் காகிதத்தை ஒட்டி உலர்த்தி உபயோகித்துக் கொள்ளலாம். இங்கு கல்சுண்ணாம்புதான் சிறப்பானது. அதி

அகப்படாத சமயங்களில் சிப்பிச்சுண்ணாம்பு, சங்குச்சுண்ணாம்பு ஆகியவைகளை உபயோகித்துக் கொள்ளலாம்.

## 3. இலிங்கத் தூய்மை (வேறு)

இலிங்கம் ஒருபங்கு, எலுமிச்சம்பழச்சாறு 10 பங்கு. இலிங்கத்தைக் கல்வத்திலிட்டு பொடித்து மேற்படி சாற்றை சிறுகச்சிறுக வார்த்து அரைக்கவேண்டும். சாறெல்லாம் சென்றபின்பு கெட்டிப் பதத்தில் வில்லைசெய்து வெய்யிலில் உலர்த்திக்கொள்ளவேண்டும். இது ஒரு அரைப்புடமாம். பிறகு, இலிங்கத்தைப் பொடித்து முன்னளவு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து முன்போலரைத்து முன்போல் வில்லைசெய்து உலர்த்திக்கொள்ள வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி 10 தடவைகள்செய்து கொண்டால் இலிங்கம் தூய்மையாகும். இவ்விதமே தாய்ப்பால் அல்லது, வெள்ளாட்டுப்பால் ஆகிய இரண்டிலொன்றில் அரைத்து மேற்கண்டவிதம் 10 தடவைகள் மடக்கி மடக்கி உலர்த்தியெடுத்துக் கொண்டாலும் இலிங்கம் தூய்மையாகும். இந்த இலிங்கத்தையும் தனியாக உபயோகிக்கலாம். உழைப்புக்குத் தகுந்த ஊதியமென்பது சத்தியவாக்கு.

## 4. மேற்படி (வேறு)

இலிங்கம் 1 பலம் (35 கிராம்), (இது ஒரே கட்டியாயிருக்க வேண்டும்) தாய்ப்பால், தேன், வெங்காயச்சாறு, எலுமிச்சம்பழச் சாறு, இந்நான்கும் வகைக்கு 1 ஆழாக்கு. மேற்படி இலிங்கத்தை இரும்புத் தகட்டின்மீது வைத்து மேற்படி சாறுகளை முறையே சுருக்கிட்டு எடுத்துக் கொள்வதும் ஒருவகைத் திறமான தூய்மையாகும். இதனைத் தனியாகவே சுரம், தாது இழப்பு, சூலை முதலிய பல நோய்களுக்கு உபயோகிக்கலாம்.

## 5. மேற்படி (வேறு)

இலிங்கம் தேவையான அளவு. இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாம நேரமரைத்து ஒரு உருண்டையாகச் செய்து மெல்லிய துணியில் முடிந்து கிழிகட்டி ஒரு சிறு மண்பாத்திரத்தில் தொங்க விட வேண்டும். அந்தப் பாத்திரத்தில் இலிங்கம் ஒரு பலத்திற்கு எலுமிச்சம்பழச் சாறு கால்படி வீதமாக விடவேண்டும். சாற்றில் தொங்கவிட்டிருக்கும் முடிச்சு, சாற்றில் படாமல் நான்கு அங்குல உயரத்தில் தொங்கிக் கொண்டிருக்கவேண்டும். அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துச் சாறெல்லாம் சுண்டினபின்பு இலிங்கத்தை எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் வைத்து உலர்த்திப் பொடித்துக்



குப்பியில் பத்திரப்படுத்தவும். இவ்விதம் செய்வதால் இலிங்கத்தின் வேகம் தணிந்து சாந்தமான குணமுள்ளதாகும். இன்னும், அதிலுள்ள தீய குணங்களெல்லாம் நீங்கி நற்குணத்திற்கு ஏதுவாகும்.

## 6. மேற்படி (வேறு)

இலிங்கம் 1 பலம் (35 கிராம்), (இது ஒரே கட்டியாயிருந்தால் உத்தமம். சிறுகட்டிகள் பலவாகவுமிருக்கலாம்) அழிஞ்சில்மரப் பட்டை 10 பலம் (350 கிராம்), புளித்தகாடி 1 படி. காடியில் மேற்படி பட்டையை இடித்துத் தூள்செய்து போட்டு 24 மணிநேரம் ஊறவைத்து ஒரு சிறு பாத்திரத்தில் விட்டு நன்றுகப் பிசைந்து கலக்கி இலிங்கத்தைத் துணியில் முடிந்து கிழிகட்டி அதில் தொங்கவிட்டு மேற்சட்டி மூடிச் சீலைமண் செய்து ஒரு பகல் வெய்யிலில் வைத்திருந்து மறுநாள் அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து அந்தத் திரவம் சுண்டின பதத்தில் இறக்கி ஆறவிட்டுக் குளிர ஆறின பின்பு இலிங்கத்தை எடுத்துக்கொள்ளவும்.

புளியரணைச் சமூலம் 10 பலம் (350 கிராம்), காடி 1 படி, இவ்விரண்டிலும் மேற்சொல்லி இருக்கிறது போலவே எடுத்துப்போட்டு ஒரு நாளூற வைத்துப் பிசைந்து அடுப்பேற்றி மேற்படி இலிங்கத்தைக் கிழி கட்டித் தொங்கவிட்டு மேற்சட்டி மூடி சீலை மண் செய்து ஒருநாள் வெய்யிலில் வைத்து மறுநாள் அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துக் குளிர ஆறினபின்பு எடுத்துக் கொள்ளவும்.

நன்னாரிவேர் 10பலம், காடி 1 படி. இவைகளிலும் முன் செய்தது போலவே இடித்து ஊறவைத்து ஒருநாள் சென்ற பின்பு முன் இலிங்கத்தைத் துணியில் முடிந்து கிழிகட்டித் தொங்கவிட்டுச் சீலைமண் செய்து ஒருநாள் வெய்யிலில் வைத்து மறுநாள் அடுப்பேற்றி முன்போல் சிறு தீயாக எரித்து எடுத்துக் கொள்ளவும் இவ்விதம் செய்துகொண்டால் தூய்மையாகி சிறப்பான குணமுள்ளதாகும்.

**குறிப்பு:**—இந்தத் தூய்மையானது செய்வதற்குக்கொஞ்சம் கடினமானதாயினும் குணத்தில் மிகவும் சிறந்தது. ஆகையால், உழைப்பிற்கு அயராமல் செய்து கொள்பவர்கள் அதிகப் பிரயோசனத்தையடைவார்களென்பது சத்தியம்.

### சுருக்கிடல்

இலிங்கம், பாடாணம் முதலிய சரக்குகளை அபிரேகத்தகட்டின் மீது அல்லது, அக்கினிப் பீங்கான் மீது வைத்துச் சுருக்குக் கொ

டுக்க வேண்டிய திரவத்தைச் சிறுகச்சிறுக அந்தச் சரக்கின் மீது விட்டு அந்தச்சரக்கின் நாலாப்பக்கங்களிலும் படும்படியாக அதைப் புரட்டிக் கொடுத்து வருவது ஒருவிதமாம்.

சுருக்கிட வேண்டிய சரக்கைக் குழிபோன்ற பாத்திரத்தில் வைத்து அந்தச் சரக்கு அமிழ்ந்திருக்கும்படியாகச் சுருக்கிட வேண்டிய திரவத்தை விட்டுச் சிறுதீயாக எரித்து, விட்ட திரவம் சுண்டச் சுண்ட அந்தத் திரவத்தை விட்டுக்கொண்டு அந்தச் சரக்கின் நாலாபச்சங்களிலும் படும்படியாக அதைப் புரட்டிக் கொடுத்து வருவது ஒருவகை.

சுருக்கிடவேண்டிய சரக்கைக் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சுருக்கிட வேண்டிய திரவத்தைச் சிறுகச் சிறுக வார்த்துக் குறித்த நேரம் வரையிலரைத்து வில்லைசெய்து அவிபுடமாகப் போட்டு எடுத்து மறுபடியும் முன்போலரைத்து முன்போல் புடமிட்டுப் பக்குவப் படுத்துவது ஒருவகை. ஆனால் இந்த வகைக்குப் பக்குவப் படுத்தல், பாவனை செய்தல் என பலவகை பெயர்களுண்டு.

இம் மூன்று வகைகளிலும் முன்சொல்லப்பட்டுருப்பதே உத்தமமானது. ஆயினும் பின் சொல்லப்பட்ட இரண்டு வகைகளும் சில சமயங்களில் உபயோகமாகும்.

## 471. இலிங்கக் கட்டு

திறமான இலிங்கம் 1 பலம் (35 கிராம்), பழமையான வெங்காயச்சாறு 20 பலம், சூடன் 1 வராகன் எடை.

**செய்முறை :—** சூடனைப் பொடித்து வெங்காயச் சாற்றில் கலக்கி ஒரு குப்பியில் விட்டுக் கல்காரக்கிட்டு மூன்று நாள் வைத்து நான்காம் நாள் உபயோகிக்க வேண்டும். இலிங்கத்தை அப்பிரேகத் தகட்டின்மீது வைத்துக் கொஞ்சம் சூடேறின பின்பு முன்சித்தப்படுத்தி இருக்கிற திரவத்தை ஒரு சிறு கரண்டியால் சிறுகச் சிறுக வார்த்துச் சுருக்கிட வேண்டும். ஒரு தடவை விட்ட சாறுனது சுண்டிப்போன பின்பு மறுதடவை முன் சாற்றை விட வேண்டும். அடிக்கடி இலிங்கக்கட்டியையும் எல்லாப் பக்கங்களிலும் சுருக்கேறும்படி புரட்டிக் கொடுத்து வரவும் வேண்டும். சரக்கின் அழுக்குக் கட்டியின்மேல் சேர்ந்து விடுகிற சாற்றை இழுத்துக் கொள்ளத் தடையாயிருக்குமாகையால், ஒரு சாமத்திற்கு ஒருதடவை கட்டியின் மீதுள்ள அழுக்கைக் கூர்மையான கத்தியால் சுரண்டி நீக்கி சுருக்கிடவேண்டும். இவ்விதம் அந்தச் சாறெல்லாம் செல்லுகிற வரையில் தீயை மெதுவாக எரித்துச்



சுருக்கிடவேண்டும். குளிர ஆறவிட்டு இதில் கொஞ்சமெடுத்து நெருப்பில் போட்டுப் பார்க்க, அது புகையாதிருக்கும், அதுதான் பக்குவம். அப்படி இல்லாவிட்டால் மறுபடியும் முன் போல் சித்தப் படுத்திச் சுருக்கிட்டால் சித்தரது அருளால் நெருப்பிற்குப் புகையாமல் முழுக் கட்டாகி விடும். பிறகு இதனைப் பொடித்து குப்பியில் பத்திரப்படுத்தி வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** ½ முதல் 1 குன்றி மணி எடை.

**துணைமருந்து :—** இஞ்சிச்சாறு, சுக்குக் குடிநீர் பஞ்சதீபாக்கினி இளகம் பால்அல்வா, பாலேடு முதலியவைகளாம்.

**தீரும்நோய் :—** சுரநோய்கள், சன்னிபாதநோய்கள், மார்பு வலி, பக்கநோவு, உத்திரவாயு, நாட்பட்ட சுரம் ஆகியவைகள் தீரும். தாது இழப்பு தீர்ந்து நரம்புகள் முறுக்கேறி நல்ல பலமுண்டாகும்.

**மருத்துணவு :—** நோய்க்குத் தகுந்தபடியும், உடல் இயல்புக்கு ஏற்றவிதமாயும் மருத்துணவு ஏற்படுத்த வேண்டியது. தாது விருத்திக்காலுல், பாலன்னம், பாற்பாயசம், பால் அல்வா முதலியவைகளை அதிகமாக உபயோகிக்கவேண்டியது. வயது சென்றவர்களுக்கு உண்டாகும் தாது இழப்பிற்கு இதுஅதிகம்உபயோகமாகும்.

## 472. இலிங்கக் கட்டு (வேறு)

இலிங்கக் கட்டி 1 பலம் (35 கிராம்), எலுமிச்சம்பழச் சாறு 1 ஆழாக்கு, தாளகம் 1 பலம் (35 கிராம்), முட்டை வெள்ளையம் பிலி செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** இலிங்கத்தை அப்பிரேகத் தகட்டின்மீது வைத்து எலுமிச்சப்பழச் சாற்றுல் சுருக்கிடவேண்டும். சாறெல்லாம் சென்றபின்பு எடுத்து அதன்மீதுள்ள அழுக்குகளை நீக்கி வைத்துக் கொள்ளவும். தாளகத்தைப் பொடித்து வெள்ளையம்பிலியைச் சிறுகச் சிறுக வார்த்து வெண்ணெய் போலான பின்பு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற இலிங்கக்கட்டிக்கு நாலாப் பக்கங்களிலும் சமமாக இருக்கும்படி சிறுகச் சிறுகப் பூசி வெய்யிலிலர்த்திச் செம்மையாக உலர்த்திக் கொள்ள வேண்டும். நன்ருக வெந்த இரண்டு திறமான செங்கற்களைத் தேய்த்து மட்டமாக்கி இரண்டும் பொருந்தும் படியாகப் பார்த்து இரண்டு செங்கற்களிலும் கவசம் கொள்ளும்படியான குழிசெய்து கவசத்தை வைத்துப் பொருத்தி ஐந்து சீலைமண் செய்து உலர்த்தி நூறுபலம் வறட்டியில் புடமிட்டு ஆறின பின்னெடுக்க இலிங்கமானது கட்டுப்பட்டிருக்கும்

இலிங்கக் கட்டியின் மீதுள்ள அழுக்கு முதலியவைகளை நீக்கிப் பொடித்துக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**—$\frac{1}{2}$ முதல் *1* குன்றிமணி எடை.

**துணைமருந்து :**—தேன், நெய், இஞ்சிசுரசம், சுக்குக் குடிநீர், சோம்புக் குடிநீர், சீரகக் குடிநீர் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :**—கப சம்பந்தமான சுரங்கள், வாத சம்பந்தமான சுரங்கள், கீல்வாயுக்கள், முடக்குவாயு முதலிய பல வாயு நோய்கள் தீரும்.

**மருந்துணவு :**—நோய்க்குத் தகுந்தபடி சமயோசிதம் போல பத்தியம் ஏற்படுத்திக் கொள்ளவும்.

## 473. இலிங்கக் கட்டு (வேறு)

(அ) திறமான இலிங்கம் *1* பலம் (*35* கிராம்), செம்பு அரபொடி *2* வராகன் எடை (*7* கிராம்), பித்தளை அரபொடி *2* வராக எடை வெங்கல அரபொடி *2* வராகன் எடை சோற்றுக் கற்ருழைப் பால் செல்லத்தக்க அளவு.

(ஆ) சீனக்காரம் *4* வராகன் எடை (*14* கிராம்), வெண்காரம் *4* வாரகன் எடை, நவச்சாரம் *4* வாரகன் எடை.

**செய்முறை :**— இலிங்கக் கட்டியைக் கற்ருழப்பாலில் தோய்த்துப் புரட்ட பொடியெல்லாம் ஒட்டிக் கொண்டபின்பு உலர்த்தி முன்போல் கற்ருழப்பாலில்தோய்த்துவெங்கலப்பொடியில் போட்டுப் புரட்டி வெய்யிலில் காயவைக்க வேண்டும். இந்தக் கட்டியைச் செம்மையாக காய வைத்து, வைத்துக் கொள்ளவும். (ஆ) விலுள்ள மூன்று சரக்குகளையும் உமிழ் நீராலரைத்து முன் கட்டிக்குச் சிறுகச்சிறுகச் கவசித்துலர்த்தி அதற்குமேல் ஒரு சீலமண் செய்து உலர்த்தி ஒரு மண் சட்டியில் இரண்டுபடி வெள்ளாட்டுப் புழுக்கையைப் போட்டு அதன் மத்தியில் மேற்படி கவசத்தை வைத்து அதன்மேலும் இரண்டுபடி வெள்ளாட்டுப் புழுக்கையைப் போட்டுக் காற்றில்லாத இடத்தில் வைத்து எரிந்து குளிர ஆறின பின்பு எடுக்கக் கட்டியானது உருகிக் கட்டியிருக்கும். இதனையெடுத்து மேலுள்ள கருக்குகளைக் கத்தியால் சுரண்டி நீக்கி சீனக்காரம் | வராகன் எடை (*3*) கிராம்), சூடன் *1* வராகன் எடை (*3*$\frac{1}{2}$ கிராம்) புனுகு $\frac{1}{2}$ வராகன் எடை (*1*$\frac{1}{2}$ கிராம்), இம்மூன்றையும் பொடித்து உமிநீராற் குழைத்துமுன்சித்தப்படுத்தின் லிங்கக் கட்டிக்குக் கவசஞ் செய்துலர்த்தி ஒட்டிவிட்டு மேலோடு மூடிச் சீலமண் செய்துலர்த்தி நூறுபலம் வறட்டியில் புடமிட்டு ஆறின பின்னெடுக்க அதிலுள்ள ஊறல்போய் தூய்மையாகி இருக்கும் இதனைப் பொடித்துக் கொள்ளவும். இந்தப் பொடி ஒரு பங்கு, மேற்ரேல் சீவினசுக்கு, மிளகு, அரிசிதிப்பிலி, மஞ்சள் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிவற்றல் இவைகளின் தனித்தனித் தூள்வகைக்கு ஒருபங்கு. இவை எல்லாவற்றையும் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரம் அரைத்து அரைக்குன்றிமணி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும்.



**அளவு :**— *1* முதல் *1*$\frac{1}{2}$ மாத்திரை.

**துணைமருந்து :**— இஞ்சிச்சாறு, சுக்குக் குடிநீர், ஆவாரம் பட்டைக் குடிநீர், ஆவாரம்பூக் குடிநீர் முதலியவைகளாம்.

**தீரும் நோய்கள்:**— சுரநோய்கள், சன்னிபாத சுரங்கள், வாயு, நீரிழிவு, புண், புரை, மேகநோய் ஆகியவைகள் தீரும்.

**மருத்துணவு:**— நோய்வலிமை, உடல் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்தபடி மருத்துணவு ஏற்படுத்துவது மருத்துவர்களின் கடமையாகும்.

**குறிப்பு :**—மேற்படி இலிங்கத்தைச் செம்பையுருக்கி எட்டிற் கொன்று கொடுத்து ஊதியெடுத்தால் செம்பானது தூய்மையாகி இருக்கும். தொந்த வேலைக்கு உபயோகமாகும்.

## 474. இலிங்கக்கட்டு (வேறு)

திறமான இலிங்கம் *1* பலம் (*35* கிராம்), எலுமிச்சம்பழச் சாறு *1* ஆழாக்கு, நெய் *12* பலம் (*420* கிராம்), சேராங்கொட்டை *12* பலம் (*420* கிராம்), எட்டிக்கொட்டை *12* பலம்

**செய்முறை :**— இலிங்கக் கட்டிக்கு-472இல் சொல்லி இருக்கிறபடி சுருக்கிட்டு எடுத்து அதன்மீதுள்ள அழுக்குகளை நீக்கி விடவும். பிறகு, ஒரு சட்டியில் வைத்து அதில் நெய்யை விட்டு சேராங்கொட்டையை இரண்டிரண்டாகவும், எட்டிக் கொட்டையை நவ்வாலாகவும் நறுக்கிப்போட்டு மெதுவாக எரித்து வந்தால், எல்லாம் பற்றியெரியும். இடையிடையே கட்டியைக் கொஞ்சம் புரட்டிக்கொண்டும் வரவேண்டியது. எல்லாம் எரிந்தாறின பின்பு கட்டியை எடுத்து அதன்மீதுள்ள கருக்கைச் சுரண்டி நீக்கிப் பொடித்துக் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

2

**அளவு:—** $\frac{1}{2}$ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து:—** தேன், நெய், பஞ்சதீபாக்கினி இளகம் சோம்புக்குடிநீர், பாலேடு முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:—** பலவகை சுரங்கள், சன்னிபாத சுரங்கள், வாயு, பக்கவாத நோய்கள், கைகால் சோர்வு, அசதி முதலிய நோய்கள் தீரும்.

**மருத்துணவு:—** நோய்க்குத் தகுந்தபடியும், சமயோசிதம் போலவும் மருத்துணவு ஏற்படுத்திக் கொள்ளவும்.

## 475. இலிங்கக்கட்டு (இளம்பிள்ளைவாதத்திற்கு)

இஞ்சிச்சாறு 8 பலம் (280 கிராம்), ஓலேக்கனமுள்ளதும் எட்டங்குல சதுரமுள்ளதும் இரண்டு பலம் நிறையுள்ளதுமான 1 தாம்பிரத் தகடு, திறமான லிங்கம் 1 பலம் (35 கிராம்).

**செய்முறை:—** ஒரு மண்பாத்திரத்தில் மேற்படி இஞ்சிச் சாற்றைவிட்டு அதன்மீது மேற்படி தாம்பிரத் தகட்டை வைத்து அதன்மீது இலிங்கக்கட்டியை வைத்து, மேற்சட்டிமூடி ஐந்து சீலேமண்செய்து ஈரமுலர்ந்த பின்பு அடுப்பேற்றிக் கமலாக்கினி யாக இரண்டுசாமம் எரித்தெடுத்தால் இலிங்கமானது கட்டிப் போயிருக்கும். சாறெல்லாம்சுண்டிக் குழம்பாயிருக்க வேண்டியது. சாறு சுண்டாமலிருந்தால் மறுபடியும் முன்போல் சீலேமண் செய்து சாறெல்லாம் சுண்டிப்போகும்படி எரித்துக் கொள்ளவேண்டியது குளிர ஆறினபின்பு சட்டியைப் பிரித்து இலிங்கக்கட்டியை எடுத்து அதன்மீதுள்ள கருக்கைச் சுறண்டி நீக்கிவிட்டு பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** 1 முதல் 2 குன்றி எடை.

**துணைமருந்து:—** இஞ்சிச்சாறு, தேன் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:—** இதனைக் காலே, மாலே, இரண்டு வேளேயும் பத்துநாள் உபயோகித்தால், இளம்பிள்ளைவாத நோய் தீரும். வேறுவகை வாயு நோய்களும் தீரும்.

**மருத்துணவு:—** நோயின்வலிமை, உடல் வலிமை முதலிய வைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்தவும்.



## 476. இலிங்கக்கட்டு (விடாச்சுரத்திற்கு)

இலிங்கம் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்). (இது ஒரே கட்டியாயிருக்க வேண்டும்), தலேமுடி $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்) (இதனைச் சிகைக்காய், சவுக்காரம் முதலியவைகளின் நீரில் ஊறவைத்து எண்ணெய்ச் சிக்கு இல்லாமல் கழுவி வெய்யிலிலுலர்த்தி எடுத்துக்கொள்ள வேண்டும்.) அரிதாரம் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), சூடன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), அண்டவெள்ளைக்கரு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** இலிங்கக் கட்டியின்மீது மேற்படி மயிரைச் சுற்றிக்கட்டி தெரியாவண்ணம் நான்கு பக்கமும் சமமாகச்சுற்றிச் சித்தப்படுத்திக் கொள்ளவும். தாளகத்தைப்பொடித்துச் சூடனைச் சேர்த்தரைத்து வெள்ளையம்பிலியைச் சிறுகச்சிறுக வார்த்து மெழு காகிற பதம் வரையிலரைத்து முன் சித்தப்படுத்தி இருக்கிற கட்டியின்மீது ஓலேக்கனம் எங்கும் சமமாயிருக்கும்படியாகத் தடவி காயவைத்து அகலில்வைத்து மேலகல்மூடி நான்கு சீலேமண் செய்துலர்த்திக் கவசத்தின் இரண்டுபங்கெடை வறட்டியில் புட மிட்டுக் குளிர ஆறினபின்பு கவசத்தைப் பிரித்துக் கட்டியின்மீது உள்ள கருக்கைக் கூரிய கத்திமுனையால் சுறண்டிநீக்கி முன் போல் அரைப்பலம் தலேமுடியைச் சுற்றிச் சித்தப்படுத்தி முன் போல் முன் இரண்டு சரக்குகளேயும் முன்னளவே அரைத்து முன்போலவே கவசம்செய்து அகலில்வைத்து மேலகல்மூடி சீலேமண் செய்துலர்த்தி புடமிடவும். இவ்விதம் மடக்கிமடக்கி ஐந்து புடமிட்டெடுக்க இலிங்கமானது கட்டுப்பட்டிருக்கும். பிறகு, இலிங் கத்தைப் பொடித்துப் புட்டியில் பத்திரபடுத்தவும்.

**அளவு:—** 1 முதல் 2 குன்றி எடை.

**துணைமருந்து:—** தேன், இஞ்சிச்சாறு முதலியவைகளாம்.

**தீரும் நோய்கள்:—** விடாச்சுரங்கள், நாட்பட்டச் சுரங் கள், கபவாத சுரங்கள், சன்னிபாதங்கள் ஆகியவைகள் தீரும்.

**மருத்துணவு:—** நோய்க்குத் தகுந்தபடியும், உடல் வலிமைக்குத் தகுந்தபடியும் ஏற்படுத்திக்கொள்ள வேண்டியது.

**குறிப்பு:—** இந்த முறையில் இரண்டரைப்பலம் தலேமுடி யும், அரைப்பலம் தாளகமும், சூடனும் அவசியம்.

## 477. இலிங்கக்கட்டு (வேறு)

திறமான இலிங்கம் 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம் 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்).

**செய்முறை:—** கெந்தகத்தைப் பொடித்து வைத்துக்கொண்டு, ஒரு இரும்புக் கரண்டியில் மேற்படி கெந்தகத்தூளில் சுமார் அரை வராகன் எடை பொடியைப்போட்டு நெருப்பில்காட்டி கெந்தகம் உருகினவுடன், மேற்படி இலிங்கக்கட்டியைப் போட்டுப் புரட்டிக்கொடுக்க வேண்டும். போட்டதூள் எரிந்துபோனவுடன் மறுபடியும் முன்போல் கெந்தகத்தூளைப் போட்டுப் புரட்டவேண்டும். இவ்விதம், பத்துத்தடவைகள் செய்தெடுத்தால் இலிங்கமானது கட்டிப்போய்விடும். கூரியகத்தி முனையால் அதன்மேலுள்ள கருக்கை நீக்கிவிட்டுப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** $1\frac{1}{2}$ முதல் $1\frac{1}{2}$ குன்றி எடை.

**துணைமருந்து:—** தேன், இஞ்சிச்சாறு முதலியவைகளாம்.

**தீரும் நோய்கள்:—** பலவகைச் சுரங்கள் பலவகை சன்னி பாதங்கள், வாத நோய்கள் முதலியவை தீரும்.

**மருந்துணவு:—** புளி, புகை புணர்ச்சி நீக்குக.

**குறிப்பு:—** மேற்கண்டபடியே இரச கற்பூரத்தையும் கட்டிக்கொள்ளலாம். வாயு நோய்கள் மேகநோய்கள் முதலியவைகளிளும் உபயோகிக்கலாம்.

## 478. இலிங்கக்கட்டு (வேறு)

திறமான லிங்கம் 1 பலம் (35 கிராம்), தாய்ப்பால் 1 ஆழாக்கு, ஆடுதின்னாப்பாளை இலைச்சாறு 2 ஆழாக்கு, பூநாகத்தைலம் $\frac{1}{2}$ ஆழாக்கு.

**செய்முறை:—** இலிங்கக்கட்டியை அப்பிரேகத் தகட்டின் மீது வைத்துத் தாய்ப்பாலைச் சிறுகச்சிறுக வார்த்து 471இல் சொல்லி இருக்கிறபடி சுருக்கிடவேண்டும். தாய்பாலால் ஒருசாமம் சுருக்கிட்டால் போதுமானது. பிறகு, ஆடுதின்னாப்பாளை இலைச்சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து மேற்கண்டபடி சுருக்கிட வேண்டும். இரண்டு சாமத்திற்குக் குறையாமல் சுருக்கிடவும். அடிக்கடி கட்டியின் மீதுள்ள அழுக்கு முதலியவைகளைக் கூரிய கத்தியினால் நீக்கியும் வரவேண்டும். முடிவாக இலிங்கக்கட்டியைத் தூய்மைசெய்து அப்பிரேகத்தகட்டின்மீது வைத்துச் சூடு கண்டவுடன் ஒரு மெல்லிய துணியைச்சுற்றி பூநாகத் தைலத்தில் தோய்த்துக் கட்டியின் நாலாபக்கங்களிலும் படும்படியாகத் தடவிக் கட்டியைப் புரட்டிக் கொடுத்தும் வரவேண்டும். இதனால், நான்கு சாமத்திற்குக் குறையாமல் சுருக்கிட வேண்டும். இலிங்கக் கட்டியானது கெட்டிப்பட்டு உறுதியாகிவிடும். பிறகு, கட்டியின் மீதுள்ள அழுக்கு முதலியவைகளைச் சுரண்டி நீக்கிவிட்டுப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.



**அளவு:—** $\frac{1}{2}$ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து:—** இஞ்சிச் சுரசம், சுக்குக் குடிநீர், தேன், நெய் பாலேடு முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:—** பலவகை சுரங்கள், கபநோய்கள் புண்புரைகள், நரம்புத்தளர்ச்சி, பக்கவாதம், தாது இழப்பு, நீர் நோய் முதலியவைகள் தீரும்.

**மருந்துணவு:—** நோயிற்குத் தகுந்தது போலும் சமயோசிதம் போலும் மருந்துணவு ஏற்படுத்த வேண்டியது.

### பூநாகத் தைலம்

செம்மண் தரையிலுள்ள பூநாகம் அல்லது, வேறு தரையிலுள்ள பூநாகம் ஆகியவைகளைச் சேகரித்து மோரில் போட்டு ஒரு சாமநேரம் மூடி வைத்திருந்தால் பூச்சிகளின் வயிற்றிலுள்ள மண்ணெல்லாம் வெளிப்பட்டுத் தூய்மையாகிவிடும். பிறகு, வெய்யிலில் உலர்த்திச் சிறு துளையிட்ட ஓர் தோண்டியிலிட்டு வாய் பந்தனம் செய்து குழித்தைலமாக இறக்கிக் கொள்வதே பூநாகத் தைலமாகும்.

**குறிப்பு:—** பூநாகத்தைலம் அகப்படாத சமயங்களில் கீழ்க்கண்ட விதமாகத் தூய்மைச் செய்யப்பட்ட அண்டத் தைலத்தை உபயோகித்துக் கொள்ளலாம்.

### அண்டத் தைலம்

கோழிமுட்டை 100, வெந்நீர் குமிழிடும்படியாகக் கொதிக்க வைத்து அதில் முட்டைகளைப் போட்டுப் பத்து நிமிடநேரம் மூடிவைத்திருந்து முட்டைகளை உடைத்து மஞ்சட்கருவை மாத்திரம் எடுத்துக்கொள்ள வேண்டும். இந்த மஞ்சட்கருக்களை

இரும்பு சட்டியில் போட்டு அடுப்பேற்றி நிதானமாக எரித்து வந்தால் கருக்களெல்லாம் கருகிவரும். அந்தச் சமயத்தில் ஒரு பலம் தூய்மை செய்த பூநீற்றை அல்லது, வாஷிங்சோடா என்னும் உப்பைப்போட்டு இரும்புக் கரண்டியால் துழாவி நசுக்கிவந்தால் தைலம் புலப்படும்; தைலமெல்லாம் புறப்பட்டபின்பு கவனமாக வடிகட்டிப் புட்டியில் பத்திரபடுத்திக் கொள்ளவும். பூநாகத் தைலம் அகப்படாத சமயங்களில் இந்த அண்டத் தைலத்தை உபயோகித்துக்கொள்ளலாம்.

## 479. இலிங்க மெழுகு

மேற்கண்டபடி 472இல் கட்டிய இலிங்கம் பலம் ஒன்றிற்குத் தங்க அரப்பொடி 1வராகன் எடை இரண்டையும் சேர்த்துக் கல்வத்திலரைத்துப் பூநாகத் தைலத்தை அல்லது, அண்டத் தைலத்தைச் சிறுகசிறுகச் வார்த்து ஒருசாம நேரமரைத்து வில்லைசெய்து பீங்கான் பாத்திரத்தில் வைத்துமூடிச் சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் இரண்டு பங்கெடை வறட்டியைக் கொளுத்திப் புகையடங்கின பின்பு கவசத்தைவைத்து மூடிவிடவேண்டும். குளிர ஆறினபின்பு எடுத்துக்கல்வத்திலிட்டுப்பொடித்துமுன்போல் பூநாகத்தைலத்தை அல்லது, அண்டத் தைலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரம் அரைத்து முன்போல் வில்லைசெய்து பீங்கான் பாத்திரத்திலிட்டு மேல்மூடி சீலைமண்செய்து முன்போல் அவிபுடம் போடவும். இவ்விதம், மடக்கி மடக்கிப் பத்துத் தடவைகள் செய்தால் மெழுகாகிவிடும். இதன் தேர்வு, வெள்ளித் தகட்டை அல்லது, தாமிரத் தகட்டைக் காய்ச்சி அதன்மீது மேற்படி மெழுகில் கொஞ்சமெடுத்து வைத்தால் நெருப்புக்கோடாமல் மெழுகைப் போலுருகிப் பரவி விடுவதேயாம். இந்த மெழுகை வெள்ளிக் குப்பியில் அல்லது பீங்கான் குப்பியில் பத்திரபடுத்தவும். மேற்கண்ட தேர்வில் ஒத்திராவிட்டால் முன் செய்ததுபோல் நான்கு அல்லது, ஐந்து தடவை செய்துகொண்டால் கடவுளின் அருளால் தேர்விற்கு வெற்றி பெற்று நிற்கும்.

மேற்கண்டபடி இலிங்கத்தையும் தங்கத்தையும் சேர்த்தரைத்து உருண்டையாகச் செய்து விளக்கில் வாட்டியும் கொள்ளலாம். அவ்விதமே மடக்கி மடக்கி அரைத்தரைத்து வாட்டினால் மெழுகாகிப் போய்விடும்.

**அளவு:—** $\frac{1}{4}$ முதல் 1 உளுந்தெடை.

**துணைமருந்து:—** மேற்கண்டவைகளாம்.



**தீரும்நோய்கள்:—** மேற்கண்ட நோய்களைத் தீர்ப்பதுமின்றி உடல்வலிமை, விந்து விருத்தி முதலியவைகளை உண்டாக்குவதில் அதிகமும் உபயோகப்படும். இது இரசவாதத் தொழிலுக்கும் உபயோகமாகும். வெள்ளியை உருக்கிப் பத்திற்கொன்று கொடுத்தால் இரசவாதம் பொன்னுகும். தாமிரத்தை உருக்கிப் பத்திற்கொன்று கொடுத்து ஊதியெடுத்தால் தாம்பிரம் தூய்மையாகும். இதன் தன்மைகளெல்லாம் அநுபவத்தால் தெரிந்து சமயோசிதம்போல செய்துகொள்வதுதான் புத்திசாலிகளின் விவேக இலட்சணமாம்.

## 480. நந்தி இலிங்க மெழுகு

மேற்கண்ட வகைகளுள் ஏதேனும் ஒருமுறையாகக் கட்டின இலிங்கம் 1 பலம் (35 கிராம்), (இப்படிக் கட்டிக் கொள்ளக்கூடாத சமயத்தில் தூய்மைசெய்த இலிங்கம் 1 பலம் (35 கிராம்) சேராங் கொட்டைத் தைலம் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** மேற்படி இலிங்கத்தை ஒரு இரும்பு கரண்டியில் போட்டு நெருப்பின் மீது வைத்து மேற்படி சேராங் கொட்டைத் தைலத்தைச் சிறுகச்சிறுக வார்த்துப் புரட்டிக் கொண்டே வரவேண்டியது. இரண்டு சாமத்திற்குள் இலிங்கம் மெழுகாகிவிடும். அதனை எடுத்துக் கல்வத்திலரைத்துப் பீங்கான் குப்பியில் அல்லது, கொம்புச்சிமிழில் வைத்துக்கொள்ளவும்.

**அளவு:—** $\frac{1}{2}$ முதல் 1 குன்றி மணி எடை.

**துணைமருந்து:—** பனைவெல்லம், சுக்கையரைத்த விழுது, சர்க்கரை, பாலேடு முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:—** பக்கசூலை, சூலைக்கட்டு, குன்மவாயு, வலிகுன்மம் முதலியவைகள் தீரும்.

**மருந்துணவு:—** இச்சாபத்தியம்.

## 481. வஜ்ஜிரகண்டக லிங்கமெழுகு

இலிங்கம் 5 வராகன் எடை ($17\frac{1}{2}$ கிராம்), தாய்ப்பால் செல்லத்தக்க அளவு, இலைக்கள்ளிப்பால் 5 பலம் (175 கிராம்).

**செய்முறை:—** இலிங்த்தைச் சிறுக துண்டுகளாகச் செய்து தாய்ப்பாலில்போட்டு நான்கு சாமநேரம் ஊறவைத்துப் பிறகு, கழுவி எடுத்து ஒரு இரும்புக்கரண்டியில் வைத்து

கள்ளிப்பாலையும் விட்டுக் கரிநெருப்பின் மீதுவைத்து விசிறிக்கொண்டேயிருக்க வேண்டும். கரண்டியானது சிவந்துபோன பதத்தில் இரும்பு கட்டப்பாரையால் செம்மையாகக் கடைந்து மெழுகுபதமானவுடன் எடுத்து ஆறினபின்பு பீங்கான் சிமிழில் அல்லது, கொம்புச் சிமிழில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** ½ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், சர்க்கரை, பாலேடு முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** கிருமிநோய்கள், பக்கசூலைநோய்கள், மேகநோய்கள், விரணநோய்கள் முதலியவை தீரும்.

**மருந்துணவு :—** நோயிற்குத் தகுந்தபடி உப்பு, புளி, புகை ஆகியவைகளை நீக்கி வைக்கலாம். நோய் இலகுவாயிருந்தால் இச்சாபத்தியமாகவும் உபயோகிக்கலாம்.

## 482. விழுசி இலிங்க மெழுகு

தூய்மைசெய்த இலிங்கம் 1 வராகன் எடை (3½ கிராம்), அபின் 1 வராகன் எடை (3½ கிராம்), இரசசெந்தூரம் 1 வராகன் எடை (3½ கிராம்), தேன் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரண்டு சரக்குகளையும் தூள் செய்து அபினையும் சேர்த்தரைத்துத் தேனைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரம் சென்றபின்பு மெழுகு பதமாகும் சமயத்தில் வழித்துப் பீங்கான் சிமிழில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** 1 முதல் 2 குன்றி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், சர்க்கரை முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** நச்சுக்கழிச்சல் வேறுவகைக் கழிச்சல்கள், வாந்தி, குளுமை, சைத்தியம் முதலியவை தீரும்.

**மருந்துணவு :—** சமயோசிதம்போல் செய்யவும்.

## 483. கனக இலிங்க மெழுகு

(அ) தூய்மைசெய்த சாதிலிங்கம் 2½ வராகன் எடை (8¾ கிராம்), தூய்மைசெய்த வீரம் 2½ வராகன் எடை (8¾ கிராம்), தூய்மை



செய்த இரசகற்பூரம் 2½ வராகன் எடை (8¾ கிராம்), தூய்மை செய்த இரசம் அல்லது வாலைரசம், தூய்மைசெய்த தாளகம், தூய்மைசெய்த கெந்தகம், தூய்மைசெய்த இரசம் இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்).

(ஆ) சாதிக்காய், கார்போகரிசி, மெற்ரேல் சீவிய சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, கோட்டம், சிற்றரத்தை, தேசாவரம், சித்திரமூல வேர்ப்பட்டை, அக்ராகாரம், சன்னிநாயகம், ஓமம் இவற்றைத் தனித்தனியே இடித்துத்துணியில் வடிக்கட்டியத் தூள் வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), பச்சைகற்பூரம், இந்துப்புத்தூள் இவை வகைக்கு 1 வராகன் எடை (3½ கிராம்), தேன் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** கெந்தகத்தையும், இரசத்தையும் சேர்த்து அரைத்து நன்றுகக் கறுத்தபின்பு எடுத்து வைத்துக் கொள்ளவும். தாளகத்தைப் பொடித்து (ஆ) விலுள்ள மற்றச் சரக்குகளையும் சேர்த்தரைத்து முன் சித்தப்படுத்தினதையும் சேர்த்துக் கலந்து வைத்துக் கொள்ளவும். (ஆ) விலுள்ள பச்சைக்கற்பூரம், இந்துப்பு ஆகிய இரண்டையும் சேர்த்தரைத்து (அ) விலுள்ள சரக்குகளையும் முன் சித்தப்படுத்தி வைத்திருக்கும் தூளையும் ஒன்றுகக் கலந்து கல்வத்திலுள்ள மருந்தோடு சேர்த்துத் தேனைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரமரைத்து மெழுகுபதத்தில் வழித்துப் பீங்கான் சிமிழில் எடுத்து வைத்துக்கொள்ளவும்.

**அளவு :—** ½ முதல் 1 குன்றிமணி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், சர்க்கரை, பாலேடு, வெண்ணெய் முதலியவைகளாம்.

**குறிப்பு :—** இதனைத் தொடர்ச்சியாக ஏழுநாள் உபயோகிக்கலாம். குழந்தைகளாயிருந்தால் ஒவ்வொரு வேளையாக ஏழு நாளும் உபயோகிக்கலாம். பெரும்பான்மையும் வாய்பிடிக்கிறதில்லை; ஆனால், சிலருக்குச் சில சமயங்களில் இலகுவாய் வாய்பிடிப்துண்டு. ஆகையால் மருத்துவர்கள் உடல் வலிமையை நிதானித்துக் கையாண்டால் இது தகுந்த குணத்தைத் தரும். பல மருந்துகளுக்கு வசப்படாத கொடிய நோய்களெல்லாம் இதற்கு வசப்படும்.

**தீரும்நோய்கள் :—** வெட்டை நோய்கள், புண்கள், சூலைநோய்கள், வாயுநோய்கள், வயிற்றுவலி, சூதகவாயு, சன்னி பாதங்கள், தோடங்கள், முடக்குவாதம், நீர்க்கடுப்பு, நீர்க்குத்தல் அரையாப்பு, தொடைவாழை, பிளவைநோய்கள், நெஞ்சடைப்பு, மார்புவலி, ஏழுவகை வலிப்புகள் முதலிய அநேக கொடிய நோய்கள் தீரும்.

**மருந்துணவு :—** கத்தரிப்பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, வரால், குறவை, உடும்பு, முயல், காடை, கௌதாரி, அதிகமாக பச்சைப்பயறு, துவரம் பருப்பு முதலியவை களாகும். நெய், பால் ஆகியவைகளை அதிகமாக உபயோகிக்க வேண்டியது.

## 484. வாயு ராஜ இலிங்க மெழுகு

திறமான இலிங்கம் 1 பலம் (35கிராம்), தோலுரித்த வெள்ளைப் பூண்டிதழ் 8 பலம் (280 கிராம்), நல்வேளை வேர்ப்பட்டை 5 பலம் (175 கிராம்).

**செய்முறை :—** பூண்டையும் நல்வேளை வேர்ப்பட்டையை யும் சேர்த்து இடித்துச் சாறுபிழிந்து வடிகட்டி வைத்துக் கொள்ள வும். இலிங்கத்தைச் சன்னத்துண்டுகளாகச் செய்து இலேசான ஒரு இரும்புத்தகட்டின் மீது வைத்து மூன்று கல் அடுப்பின் மீது மேற்படி தகட்டை வைத்து அதனடியில் ஒருவிரற்கனமுள்ள திரிபோட்ட விளக்கில் விளக்கெண்ணெயை விட்டு விளக்கேற்றி வைத்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு சுருக்கிட்டு இரும்புக் கரண்டியால் கிண்டி வருகையில் நார்போல் கம்பியாக வந்தால் பதமாம். இதனை வழித்துக் கொம்புச் சிமிழில் அல்லது, பிங்கான் பாத்திரத்தில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** 1 முதல் 2 குன்றிமணி எடை.

**துணைமருந்து :—** தேன், வெல்லம், சுக்குக் குடிநீர், இஞ்சிச்சாறு முதலியவைகளாம்.

**தீரும் நோய்கள் :—** அண்டவாயு, உருத்திரவாயு, முதலிய பலவகை வாயுநோய்களைக் கண்டிக்கும். அபான வாயுபறிந்து வாயுவெல்லாம் வெளிப்பட்டுப் போகும். சுரம், குன்மநோய் ஆகிய வைகளும் தீரும்.

## 485. சம்பீர இலிங்க மெழுகு

தூய்மைசெய்த இலிங்கம் 2 பலம் (70 கிராம்), எலுமிச்சம் பழச்சாறு 1 படி, குடன் 2 பலம் (70 கிராம்).

**செய்முறை :—** இலிங்கத்தை அஞ்சனம்போல் பொடித்து மேற்படி எலுமிச்சம்பழச்சாற்றில் கரைத்து வைத்துக்கொள்ளவும். ஒரு சிறு சட்டியில் மேற்படி குடனை வைத்து மறுசட்டியால் மூடிச்



சீலமண் செய்து அடுப்பின்மீதேற்றி எரித்து ஆறவிட்டெடுக்க மேல் சட்டியில் பதங்கமேறியிருக்கும். பதங்கமுள்ள சட்டியை அடுப்பின்மீது வைத்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற இலிங்கக்குழம்பைச் சிறுகச் சிறுக விட்டு அடுப்பை மெதுவாக எரித்து வரவும். குழம்புப் பதத்திலிறக்கி வாயகன்ற ஒரு புட்டியில் வைத்து மூடி பத்திரப்படுத்திக் கொள்ளவும்.

**அளவு :—** 2 முதல் 5 துளிகள் நாவில் தடவி வரவும்.

**தீரும்நோய்கள் :—** கரகரப்பு, நாவறட்சி, தோடம், சுரத்திலுண்டாகும் தாகம், நச்சுக் கழிச்சலிலுண்டாகும் தாகம், அரட்டல், புரட்டல் முதலியவைகள் தீரும். அதிதாக நோயிலும் இதனை உபயோகித்தால் அந்த நோயும் குணமாகும். செரியாமை, மாந்தம் முதலியவைகளும் தீரும்

**மருந்துணவு :—** நோயிற்குத் தகுந்தபடியும் சமயோசி தம் போலவும் மருந்துணவு முதலியவைகளை எற்படுத்தி உப யோகிக்கவும்.

**குறிப்பு :—** இது ஒரு தகுந்த பாணிதமாகையால் சுரநோய் சன்னிபாத நோய் முதலியவைகளிலுண்டாகும் தாகம், தோடம் முதலியவைகளில் இதனை உபயோகிக்கலாம். ஆகையால், இதனை பிரபல மருத்துவர்கள் முன்னதாகச் சித்தப்படுத்தி வைத்துக் கொள்வது உத்தமமாக இருக்கும்.

## 486. இலிங்க மெழுகு

இலிங்கம் 1 பலம் (35கிராம்), வேப்பிலை 1வீசை(1400 கிராம்) பன்றி நெய் 10 பலம், வெங்காயச்சாறு 10 பலம் (350 கிராம்).

**செய்முறை :—** வேப்பிலையை மைபோலிடித்து ஒரு கலயத்தில் அரைவாசியை வைத்தழுத்தி நடுவில் இலிங்கக் கட்டியை வைத்து மறுபாகத்தையும் மேல் வைத்தழுத்திக் கலயத்தின்வாய்க்குச் சில்லிட்டுச் சீலமண் செய்து உலர்த்திக் கவசத்தின் இரண்டு பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுத்துக் கொஞ்சம் நெருப்பில்போட்டு பரீட்சித்துப் பார்த்தால் புகையாமலிருந்தால் பக்குவம். புகைந்தால் முன்போல் வேப்பிலை யில் புடம்போட்டெடுக்க வேண்டும். இவ்விதம், இரண்டு அல்லது மூன்றுபுடத்திற்குள் நெருப்பிற்கோடாமல் இலிங்கங்கட்டிப்போகும்

பிறகு குழியான ஒரு சட்டியில் வைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து முன் நெய்யையும் வெங்காயச்சாற்றையும் கலந்து சிறுகச் சிறுக கட்டியின் மீது சுருக்கிட்டு வந்தால் இலிங்கமருானது மெழுகாகிவிடும். இதனை, எடுத்துக் கல்வத்திலரைத்து பீங்கான் டப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:**— 1 முதல் 2 குன்றிமணி எடை.

**துணைமருந்து:**— பனைவெல்லம், சர்க்கரை, பாலேடு முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:**— சுரநோய்கள், வாயுநோய்கள், சன்னிபாதநோய்கள், பக்கநோய்கள் முதலியவைகள் தீரும்.

**மருந்துணவு:**— இச்சாபத்தியம். வியாதி பலமாயிருந்தால் அதற்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்தவும்.

## 487. அவ்வை லிங்க மெழுகு

தூய்மைசெய்த இலிங்கம் 2வராகன் எடை (7 கிராம்). தூய்மை இரசகற்பூரம் 4 வராகன் எடை (14கிராம்), நாட்டுவெண்காரம் 4 வராகன் எடை (14கிராம்), சிற்றுமணக்கின் பருப்பு 4 வராகன் எடை (14 கிராம்) இதனை, ஓட்டில் இளவறுப்பாக வறுத்து அதன் மீதுள்ள சருகுபோன்ற தோலையும், அதைப்பிளந்து அதற்குள் இருக்கிற முனை, இலையையும் நீக்கிப் பிறகு நிறுத்தெடுத்துக் கொள்ளவேண்டும். தூய்மைசெய்த நேர்வாளப்பருப்பு 10 வராகன் எடை (35கிராம்).

**செய்முறை:**— மேற்படி சரக்குகளை எல்லாம் பொடித்தெடுத்துக் கொள்ளவும். இரண்டு பருப்பினங்களையும் சேர்த்து அரைத்து வெண்ணெய்போலான பின்பு முன் சித்தப்படுத்தின பொடிகளைச் சேர்த்து இரண்டுசாம நேரம் கைவிடாமலரைத்து மெழுகுபதத்தில் வழித்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப் படுத்தவும்.

**அளவு:**— ½ முதல் 2 குன்றி எடை.

**துணைமருந்தும், தீரும் நோய்களும்:**— ஒரு பலம் பிரண்டையை நருக்கி அரைப்படி நீரில் போட்டுக்காய்ச்சி அரைக்காற்படியாகச் சுண்டக்காய்ச்சி இறக்கி வடிகட்டின குடிநீரில் மேற்படி மெழுகை அளவுப்படி கொடுக்க இரண்டொரு தடவை கழிச்சலாகி, வயிற்றுவலி, குன்மநோய் ஆகியவைகள் தீரும்.



கற்கடகசிங்கி, கழற்சிக்காய்ப்பருப்பு, வெள்ளைப்பூண்டிதழ், இவை வகைக்கு 1 பலம். இம்மூன்றையும் சிதைத்துக் கால்படி நீரில் போட்டு மூன்றிலொருபாகமாகச் சுண்டவைத்து இறக்கி வடிகட்டின குடிநீரில் மேற்கண்ட மெழுகை அளவுப்படி கலந்து கொள்ள, அண்டவாதம், அண்டசூலை ஆகியவைகள் தீரும்.

அவசியமானால் மேற்படி குடிநீருடன் சுக்கு, முருங்கைக் கொழுந்து முதலியவைகளையும் சேர்த்துக் கொள்ளலாம். அவசியமானால், சர்க்கரையும் சேர்த்துக் கொள்ளலாம்.

வெண்ணொச்சி இலைச்சாறு 2 வராகன் எடை (7 கிராம்), தேன் 2 வராகன் எடை (7 கிராம்), இரண்டையும் கலந்து மேற்கண்ட மெழுகை அளவுப்படி சேர்த்து உட்கொள்ள வாதசுரம் தீரும்.

நத்தைச்சூரி சமூலச்சாறு, கொடிவேலி இலைச்சாறு, குப்பைமேனி இலைச்சாறு இவை வகைக்கு ¼ படி. சிற்றுமணக்கெண்ணெய் ¾ படி. சாறுவகைகளையும் எண்ணெயையும் கலந்து காய்ச்சி நீர்சுண்டிக் கடுகுதிரள் பதத்தில் வடிகட்டி வைத்துக் கொள்ளவும். இந்த எண்ணெய் இரண்டுவராகன் எடையுடன் மேற்படி மெழுகைப் அளவுப்படி கலந்து உட்கொள்ள வேண்டும். காலை, மாலை இரண்டு வேளையும் உட்கொண்டுவந்தால் கிரந்தி நோய்கள், மேகவகைகள் ஆகியவை தீரும்.

ஏலம், அதிமதுரம், கொத்துமல்லிவிதை, தக்கோலம், கோட்டம் இவை வகைக்கு 1 வராகன் எடை (3½கிராம்), இவற்றைச் சிதைத்துக் கால்படி நீரில்போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி இளஞ்சூடான பதத்தில் மேற்படி மெழுகை அளவுப்படி சேர்த்துப் பருகச் செய்விக்க தொந்த சுரங்கள் தீரும்.

வேலிப்பருத்தியிலை, மின்னியிலை வகைக்கு ½ பலம் (17½ கிராம்) இவ்விரண்டையும் கால்படி நீரில்போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டின குடிநீரில் மேற்படி மெழுகை அளவுப்படி சேர்த்துப் பருகச் செய்விக்க கால்திமிர், கைத்திமிர் ஆகியவைகள் தீரும்.

சங்கின்வேர்ப்பட்டை ¾ பலம் (26¼ கிராம்), இதனைச் சிதைத்துக் கால்படி நீரில் போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டின குடிநீரில் மேற்கண்ட மெழுகை மேற்கண்ட

அளவுப்படி, சேர்த்துக்கொடுக்க மேகச்சொறி விஷகரப்பான் ஆகியவை தீரும்.

நிலவாகை இலை அல்லது வேர்ப்பட்டை ½ பலம் (17½ கிராம்), இதனைக் கால்படி நீரில் போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்ட வைத்திறக்கி வடிகட்டின குடிநீரில் மேற்படி மெழுகை அளவுப்படி சேர்த்துக் கொடுக்க, மேகச்சொறி விஷகரப்பான் ஆகியவைகள் தீரும்.

மஞ்சள்கடுக்காய்த்தோல், முற்றின பூவரசம் பட்டை வகைக்கு ½ பலம் (17½ கிராம்) இரண்டையும் சேர்த்துச் சிதைத்துக் கால்படி நீரில்போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டின குடிநீரில் மேற்கண்ட மெழுகை அளவுப்படி சேர்த்துக் கொடுக்க மேகநோய்கள் தீரும்.

சுரைத்தண்டு, நீர்முள்ளிவேர் இவை வகைக்கு 1 பலம் (35கிராம்), இரண்டையும் சிதைத்து மூன்று ஆழாக்கு நீரில் போட்டு ஒரு ஆழாக்காக சுண்டவைத்து இறக்கி வடிகட்டின குடிநீரில் மேற்கண்ட மெழுகை அளவுப்படி சேர்த்துக் கொடுக்க காமாலைநோய்கள், பாண்டுநோய்கள் ஆகியவை தீரும்.

சின்னியிலைச்சாறு 3 பலம் (10½கிராம்), தேன் 3 பலம் (10½ கிராம்). இரண்டையும் சேர்த்து மேற்கண்ட மெழுகை அளவுப்படி சேர்த்துக் கொடுக்க செய்யான்நஞ்சு, கடிநஞ்சுகள், படர்தாமரை ஆகியவைகள் தீரும்.

எருக்கின் கொழுந்துச்சாறு 1½ வராகன் எடை (5¼கிராம்), தேன் 1½ வராகன் எடை (5¼ கிராம்), இரண்டையும் சேர்த்து மேற்கண்ட மெழுகை அளவுப்படி கலந்து கொடுக்க எலிக்கடி நஞ்சுகள் தீரும்.

**குறிப்பு:—** இந்த மெழுகானது குறைந்த அளவில் கொடுத்தாலும் சிலருக்கு அதிகமாவதும், அதிக அளவில் கொடுத்தால் சிலருக்குப் பேதியாகாமலும் இருப்பதுண்டு. ஆகையால், இந்த மருந்தை இரண்டொரு வேளை குறைந்த அளவாக உபயோகித்து நிதானித்து சமயோகிதம்போல உபயோகிக்க வேண்டியது. இரண்டு வேளையில் உடல் வலிவை அறிந்து கொள்ளலாம். கழிச்சல்அதிகமாக வேண்டுமானுல் குளிர்ந்தநீர் குடிக்கவேண்டும். கழிச்சல்அதிகமானுல் வெந்நீர் குடித்தால் நின்றுபோகும். அதிலும்,



நிற்காவிட்டால் மோருஞ் சாதமும் சாப்பிடவேண்டும். ஒரு வேளை அதிலும் நிற்காவிட்டால் வசம்பைச்சுட்டுச் சாம்பலாக்கி தேனில் குழைத்துச் சாப்பிட உடனே நிற்கும்.

முருங்கையீர்க்கு 1 வராகன் எடை (3½கிராம்), சீரகம் 1 வராகன் எடை (3½கிராம்) இவ்இரண்டையும் சிதைத்து ஒன்றே கால் ஆழாக்கு நீரில்போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத் திறக்கி வடிகட்டிப் பருகச் செய்வித்து வரலாம். இந்த மருந்தினுல் உண்டாகும் வேகம் முதலியவைகளெல்லாம் சாந்தமாகி விடும்.

இது ஒரு சிறந்த மருந்து. ஆனுல் இதனை அனுபவத்தில் கொஞ்சம் மருந்து உபயோகித்து இதன் சுபாவம் தெரிந்து விட்டால் இதைப்போன்ற மருந்து வேறொன்றும் இல்லையென கூறுவதற்கு ஏதுவாயிருக்கும். மேலும், இந்த மெழுகானது நாள்பட நாள்பட குணத்திலும் அதிகமேன்மையாகிக் கொண்டே வருகிறது. இதை உபயோகிப்பதாயிருந்தால் காலையில் மேற்கண்ட முருங்கையீர்க்கு, சீரகம் ஆகியவைகளின் குடிநீரை உபயோகித்து வரலாம். இந்த மெழுகினுல் நாட்பட்ட நோய்களெல்லாம் குணமாகியிருக்கின்றன. இன்னும், இதனை அநேகர் உபயோகித்து வருகிறார்கள். இதன் குணம் அனுபவத்தில் தெரியவரும். இதன் சிறந்த குணம் பற்றியே இதற்கு அவ்வையின் பெயரிட்டிருப்பதாகத் தெரிகிறது. இதனைச் செய்து அனுபவித்து நிச்சயித்துக் கொள்ளலாம்.

## 488. அபஷி லிங்க மெழுகு

முன்சொல்லியிருக்கிற வகைகளுள் ஒருவகையாகக் கட்டின இலிங்கம் 1பலம் (35 கிராம்), மைபோலிடித்த சேராங்கொட்டை 24 பலம் (840 கிராம்), தேன் 24 பலம் (840கிராம்) நெய் 24 பலம் (840 கிராம்), இரும்பு டப்பி ஒன்று.

**செய்முறை:—** மேற்படி இலிங்கத்தை இரும்பு டப்பிக்குள் போட்டு தாம்பிரக் கம்பிகளினுல் செம்மையாகச் சுற்றிக் கட்டிவிட வேண்டும்; மூன்று சரக்குகளையும் கலந்து ஒரு பாத்திரத்தில் போட்டு முன்சித்தப்படுத்தியிருக்கிற இரும்பு டப்பியையும் அதில் போட்டு பாத்திரத்தின் வாயை மண்தாலத்தால் மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பேற்றிப் பாத்திரத்தின்மீது ஆறு அல்லது ஏழு வீசையுள்ள கல்லை அல்லது படிக்கல்லை வைக்கவேண்டும்.

ஆரம்பத்தில் தீயை தீபம்போல் ஒன்றரை சாமம் வரையில் எரிக்கவேண்டும். அதன் பிறகு ஒன்றரைசாமம் வரையில் கொஞ்சம் அதிகப்படுத்தி எரிக்கவேண்டும். அதற்குப் பிறகு கொஞ்சம் தீயை அதிகப்படுத்தி எட்டுசாமம் வரையில் எரிக்க வேண்டும். குளிர ஆறின பின்பு எடுத்தால் டப்பிக்குள் இலிங்கமானது மெழுகாகியிருக்கும். இந்த மெழுகைப் பிங்கான் டப்பியில் பத்திரப்படுத்தி வைக்கவும்.

**அளவு:—** 1 முதல் 2 குன்றி எடை.

**துணைமருந்து:—**வெண்ணெய், பாலேடு, வாதுமை அல்வா, பால் அல்வா, வில்வாதி இளகம், மதனகாமேசுர இளகம் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:—** தளர்ந்துபோன நரம்புகள் உரத்துப் பெருத்து முறுக்கேறி ஆண்தன்மை, விந்து முதலியவைகளுண்டாகும். உடல்வலிமை, போகசக்தி, மனஉற்சாகம், தைரியம், ஆகியவைகளுண்டாகும். பசி தீபனம் அதிகப்படும்.

**மருத்துணவு:—** சீரண சக்திக்குத் தகுந்தபடி பசுவின் பால், பசுவின்நெய் ஆகியவைகளை அதிகமாக உபயோகப்படுத்தி வரவேண்டும். அசைவ உணவுகளானால் ஆட்டிறைச்சி, இறைச்சி சம்பந்தமான புலவு முதலியவைகளையும் உபயோகித்து வர வேண்டியது. பால் அல்வா, பால்பாயசம், கோதுமைப் பால் அல்வா, மிட்டாய் வகைகள் ஆகியவைகளை உபயோகிக்க வேண்டியது.

**குறிப்பு:—** இலிங்க மெழுகுகளில் இது ஒரு அருமையான முறை. ஆனால், இதைச் செய்வதற்கு அதிக புத்தியும் நுட்பமும், சாமார்த்தியமும் வேண்டியது. ஆனால், இரண்டொரு தடவை செய்தால் அனுபவத்தில் தானே தெரிந்துபோகும். ஆகையால், இதனைச் செய்ய விருப்பமுள்ளவர் இரண்டொரு விஷயங்களைச் சற்றுக்கவனத்தில் வைக்கவேண்டியது. அவையாவன:— இரும்பு டப்பியைச் உயரம் ஒன்றரை அங்குலம் உயரமும் இரண்டங்குல நீளமும் ஒரு அங்குல அகலமுமுள்ளதாக இருக்கவேண்டும். இந்த டப்பியின் சுற்றிலும் தகட்டின் மத்தியில் தடைவைத்து மேல் மூடியானது அதில் பொருந்தும்படியாகச் செய்யவேண்டியது. அதாவது டப்பியின் உயரம் ஒன்றரை அங்குலமாகையால் முக்கால் அங்குலத்தில் சுற்றிலும் தடைவைக்கவேண்டியது. இப்படிச் செய்தால் டப்பியின் மூடியானது ஆழ்ந்து அழுந்தியிருக்கும். டப்பியின் உள்ளிருக்கிற பொருள் வெளியில் வராமலும், வெளியிலுள்ள பொருள் டப்பிக்குள் செல்லாமலும் டப்பியைச் செப்புக்கம்பியினால் செம்மையாகச் சுற்றிக் கட்டிவிட வேண்டும். இரண்டாவது:—அடுப்பை ஆரம்பத்தில் மெதுவாக எரிக்க வேண்டும். தீ அதிகமானால் பானை வெடித்து மருந்து சேதமாகி விடும். ஆகையால், ஆரம்பத்தில் மெதுவாக எரித்து முறையே அதிகப்படுத்தி வரவேண்டியது. மேற்கண்ட இரண்டு செய்முறைகளிலும் விழிப்புடன் இருந்தால், மேற்கண்ட இலிங்க மெழுகைத் தப்பாமல் செய்துகொள்ளலாம். அடுப்பின்மீது மருந்தை வைத்தெரிக்கும்போது அசுத்தமானவர்கள் அவ்விடம் வரலாகாது; அசுத்தமானவர்களின் சாயை முதலியவைகளும் படலாகாது; கூடியவரையில் சுத்தமாகவேயிருந்து மருந்தை முடிக்கவேண்டும். தாது விருத்தி மருந்துகளில் இதுவும சிறந்தஒன்று. இதிலிருக்கப் பட்ட சரக்குகளெல்லாம் எங்கும், எப்போதும் கிடைக்கக் கூடியவைகளாகையால், நினைத்தபோது நினைத்தவிடத்தில் செய்து கொள்ளக்கூடும். இன்னும், இந்த மெழுகினால் சன்னி, சுரம் முதலியவைகளும் தீர்ந்திருக்கின்றன. மேலும் இந்த மருந்தானது இளமையுடையவர்களைப் பார்க்கிலும் கொஞ்சம் வயது தளர்ந்தவர்களுக்குச் சஞ்சீவிக் கொப்பானது.

## 489. இலிங்கச் செந்தூரம்

தூய்மைசெய்த இலிங்கம் 1 பலம் (35 கிராம்), பால் சாம்பிராணி 5 பலம் (175 கிராம்), சூடன் 5 பலம் (175கிராம்), வாழைப்பழ செயநீர் செல்லத்தக்க அளவு, குப்பைமேனியிலை 40 பலம் (1400கிராம்).

**செய்முறை:—** சாம்பிராணியைப் பொடித்துக் கொண்டு சூடனைச் சேர்த்தரைத்து மெழுகுபோலான பின்பு எடுத்து ஐந்து பாகமாக்கி வைத்துக் கொள்ளவேண்டும். ஒருபாகத்தை ஓட்டிலிட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்து உருகினவுடன் இலிங்கக் கட்டியைப் போட்டுப் புரட்டிக் கொண்டேயிருக்கவேண்டும். அது எரிந்து சற்றுக் கரிந்த பதத்திலெடுத்துக் குளிர ஆறின பின்பு இலிங்கத்தின் கட்டியின் மீதுள்ள கருக்கைக் கூரிய கத்தியினால் சுரண்டி நீக்கி மறு ஒரு உருண்டையை ஓட்டிலிட்டு உருகினவுடன் முன் கட்டியைப் போட்டு முன்போல் புரட்டிக் கொடுக்க வேண்டும். அது கரிந்தபின்பு முன்போல் கருக்கை நீக்கி முன்போல் சாம்பிராணி சூடன் மெழுகிற் புரட்டிக் கொடுக்கவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஐந்து தடவைகள் செய்து முடிவாகக் கட்டியின் மீதுள்ள கருக்கு முதலியவைகளை நீக்கித்தூய்மைசெய்து

வைத்துக் கொள்ளவும். இந்தக்கட்டியை அப்பிரேகத் தகட்டின் மீதுவைத்துக் கீழ்ச்சொல்லப்பட்டிருக்கும் வாழைப்பழச் செயநீரை சிறுகச் சிறுகக் குத்தி இரண்டு சாமநேரம் சுருக்கிட்டு எடுத்துக் கொள்ளவும். முன் குப்பைமேனியிலையை அரைத்து இரண்டு சாகமாக்கி ஒருபாகத்தை ஒருகலயத்தில் வைத்தழுத்தி அதன் மீது முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற இலிங்கக் கட்டியை வைத்து அதன்மீது அரைவாசி குப்பைமேனி விழுதையும் வைத்துக் கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டுச் சீலைமண் செய்து ஈரமுலர்ந்த பின்பு கவசத்தின் சமனெடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின்னெடுத்துக் கொள்ளவும். உள்ளேயிருக்கிற இலையானது கருகிப் போகும்படி நெருப்பிட்டால் போதுமானது. புடமிட்டெரியும் போது காற்றின் மிகுதி, குறைவு ஆகியவைகளால் தீ அதிகப்பட்டுப் போவதும் குறைந்து போவதுமுண்டு. ஆகையால் இரண்டு தடவையில் இதன் நிதானம் தானே தெரிந்து கொள்ளக் கூடும். பிறகு, மேற்படி இலிங்கக்கட்டியைப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 2 குன்றி எடை.

**துணைமருந்து :—** இஞ்சிச் சுரசம், சுக்குக் குடிநீர், பனை வெல்லம், நெய், தேன், இளக வகைகள் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** சுரநோய்கள், சன்னிபாத சுரங்கள், வாயு நோய்கள், சூலை வகைகள், கிரந்தி வகைகள், புண் ஆகியவைகள் தீரும்.

**மருந்துணவு :—** நோய் பலமாக இருந்தால் புளியைத் தள்ளி வைக்கவும். மற்ற சமயங்களில் இச்சாபத்தியமாக வைக்கவும்.

### வாழைப்பழச் செயநீர்

ரஸ்தாளி வாழைப்பழம் தேவையான அளவு, இதன் தோலை உரித்து நீக்கிவிட்டு நிறுத்தெடுத்துக் கொள்ளவும். வாழைச் சருகைச் சுட்டசாம்பல் பழத்தின் எடைகுக் எட்டிலொரு எடை, கற்சுண்ணும்பு எட்டிலொரு எடை, இரண்டையும்சேர்த்து மேற்படி வாழைப்பழத்தில் போட்டுப் பிசைந்து வைத்திருந்தால் அதிலிருந்து நீர் தோன்றும் அந்தத் தண்ணீர்ச் சேரச்சேர இறுத்து ஒரு புட்டியில் பத்திரப்படுத்தவும். இவ்விதம், அதில் நீர் வருகிற வரையில் சேகரித்துக்கொள்ளவும். இதுவே வாழைப்பழச் செயநீராம்.



## 490. இலிங்கச் செந்தூரம் (வேறு)

தூய்மைசெய்த இலிங்கம் 1 பலம் (35 கிராம்), கருந்துளசி இலையை அரைத்த விழுது 20 பலம் (1700 கிராம்), கறியுப்பு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** மேற்படி இலிங்கத்தைக் கருந்துளசியை அரைத்த விழுதுக்குள் வைத்து உருண்டைபோல் செய்து கறி உப்பையும் வெண்ணெய்போலரைத்து அதன்மேல் அரை அங்குல கனம் கவசித்து உலர்த்தி இரண்டு மூன்று சீலைமண் செய்து கவசத்தின், ஐந்து பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறின பின் எடுக்கக் கட்டியாகவே செந்தூரித்திருக்கும்.

**அளவு:—** $1\frac{1}{2}$ முதல் 2 குன்றி எடை.

**தீரும்நோய்கள்:—** சுரநோய், வாயுநோய், சன்னிபாத நோய் முதலியவைகள் தீரும்.

**மருந்துணவு:—** இச்சாபத்தியம்.

## 491. இலிங்கச் செந்தூரம் (வேறு)

இலிங்கம் 1 பலம் (35 கிராம்), கடுகிலைச்சாறு 1 ஆழாக்கு.

**செய்முறை:—** இலிங்கத்தை அப்பிரேகத் தகட்டின் மீது வைத்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாமநேரம் சுருக்கிடவேண்டும். பிறகு, அந்த இலிங்கத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி கடுகிலைச்சாற்றையே சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாமநேரம் அரைத்துக் குழம்பு பதமாகச் சித்தப்படுத்திக் கொள்ள வேண்டும். கும்பிடு கிளிஞ்சில்களைப் பிளந்து ஒவ்வொன்றிலும் அரைப்பாகம் இருக்கும்படியாக மேற்படி குழம்பை விட்டுச் சந்தில்லாமல் பொருத்தி ஒவ்வொன்றிற்கு ஐயைந்து சீலைமண் செய்து எல்லாக் கவசத்தையும் நிறுத்து அதற்குச்சமனெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் ஒவ்வொரு கவசத்தையும் சாக்கிரதையாகப் பிரித்து அதற்குள்ளிருக்கிற இலிங்கத்தை மாத்திரமெடுத்துக் கல்வத்தில் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** 1முதல் $1\frac{1}{2}$குன்றி எடை.

**துணைமருந்து:—** இஞ்சிச்சாறு சுக்குக் குடிநீர், மிளகுக் குடிநீர், கொடிவேலி வேர்ப்பட்டைக் குடிநீர், பனைவெல்லம், தேன், முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:**—அண்டவாயு, குன்மசூலை, செரியாமை நோய், சுரநோய், சன்னிபாத நோய், வாயுநோய் முதலியவைகள் தீரும்.

**மருந்துணவு:**— சமயோசிதபோல் ஏற்படுத்தவும்.

## 492. இலிங்கச் செந்தூரம் (வேறு)

**தூய்மைசெய்த** இலிங்கம் 1 பலம் (35 கிராம்), வெங்காயச் சாறு $\frac{1}{2}$ படி, எட்டிக்கொட்டை 2 பலம் (210 கிராம்) கடுகு 6 பலம் (210 கிராம்) வாலுளுவை அரிசி 24 பலம் (840 கிராம்) வெங்காயம் 6 பலம் (210 கிராம்), நெய் 24 பலம், தேன் 24 பலம்.

**செய்முறை:**— இலிங்கத்தை அப்பிரேகத் தகட்டின் மீது வைத்து வெங்காயச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்துச் சுருக்கிட வேண்டும். ஒரு மணிக்கொரு தடவை கட்டியின் மீதுள்ள அழுக்கு முதலியவைகளைச் சுரண்டித் தூய்மை செய்து கொண்டும் வரவேண்டும். சாறெல்லாம் சென்ற பின்பு கட்டியின் மீதுள்ள கருக்கைச் சுரண்டி நீக்கிவிடவும். பிறகு, மற்றச்சரக்குகளையெல்லாம் தனித்தனியே இடித்துப் பிறகு, எல்லாவற்றையும் சேர்த்து ஒரு இடித்து நெய், தேன் ஆகிய இரண்டையும் சேர்த்து உருண்டையாகச் செய்து அதன் நடுவில் முன்சித்தப்படுத்தின இலிங்கத்தை வைத்து இரும்பு சட்டியில் போட்டு அடுப்பேற்றி எட்டுச்சாமம் எரித்து ஆறின பின்பு இலிங்கத்தை எடுத்துப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:**— $\frac{1}{2}$ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்தும் தீரும்நோய்களும்:**—இரண்டு வராகன் எடை நிலவேம்பை முக்கால்ஆழாக்குத் தண்ணீரில்போட்டு மூன்றிலொரு பாகமாகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டின குடிநீருடன் 3 வராகன் எடை தேனைக் கலந்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண, யானைக்கால் வீக்கம், வீக்கம் ஆகியவைகள் தீரும். பவுத்திரநோய், எல்லாவகை மூலநோய்கள் தீரும்.

**பூனைக்காலி விதைத்தூள்** $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), நெல்லிவற்றல் தூள் $1\frac{1}{2}$ வராகன் எடை ($5\frac{1}{4}$ கிராம்), தேன் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்) இவையெல்றாவற்றையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண விந்து விருத்தி அதிகப்படும். மெலிந்த உடல் பருமனாகும். கண்ணொளி அதிகப்படும்.



நீர்முள்ளி வேர்பட்டைச்சாறு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்) தேன் 3 வராகன்எடை ($10\frac{1}{2}$ கிராம்). இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண, பாண்டு நோய், அஸிமக பாண்டுநோய், காமாலை நோய் ஆகியவைகள் தீரும்.

தூய்மைசெய்த மைசாட்சி $\frac{1}{4}$ வராகன் எடை, விதை நீக்கின திராட்சைப்பழம் $\frac{1}{4}$ வராகன் எடை, தேன் 2 வராகன் எடை. இவையெல்லாவற்றையும் சேர்த்தரைத்து மேற்படி செந்தூரத்தை அளவுப்படி சேர்த்துண்ண, பக்கவாத நோய், பக்கவாதத்தினாலுண்டான கைகால் சோர்வு, ஆகியவைகள் தீரும்.

சடாமாஞ்சில்தூள் $\frac{1}{4}$ வராகன்எடை, ஏலக்காய் விதைத்தூள், $\frac{1}{4}$ வராகன் எடை, தேன் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), இவற்றைச்சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்து உண்ண, அசீரண நோய், குட்ட நோய், குறைநோய் ஆகியவைகள் தீரும்.

தூதுவளைப் பூச்சாறு 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), தேன் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்). இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண, எல்லா வகைச் சுவாச, இரைப்பு, இருமல் எல்லா வகை நோய்களும் தீரும்.

வெள்ளைப் பூண்டிதழ் 1 பலம் (35 கிராம்). இதனை அரை ஆழாக்கு பசுவின் பாலில் வேகவைத்து ஒரு பலம் வெள்ளைச் சர்க்கரையைச் சேர்த்துக் கடைந்து வைத்துக் கொள்ளவும். இதற்குப் பூண்டுலேகியமென்று பெயர். இது $\frac{1}{2}$ வராகன் எடை ($1\frac{3}{4}$ கிராம்), தேன் 1 வராகன் எடை ($3\frac{1}{2}$ கிராம்), நெய் 7 வராகன் எடை இவை எல்லாவற்றையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண, எல்லா வகை வாயுநோய், எல்லாவகை கபநோய், நாள்பட்ட சுரங்கள், வயிற்றுப்புசம், நாள்பட்ட பெருங்கழிச்சல் ஆகியவைகள் தீரும்.

மேற்சருகு போக்கின சீந்திற்கொடிச்சாறு 6 வராகன் எடை (21 கிராம்), தேன் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), இவை எல்லாவற்றையும் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண, குட்டநோய் தீரும், சொறி, பேய்ச்சொறி, ஆகியவைகளும் தீரும்.

**மருந்துணவு :—** உடல் வலிமை, உடலியல்பு முதலிய வைகளுக்கேற்றபடி ஏற்படுத்த வேண்டியது.

## 493. இலிங்கச் செந்தூரம் (வேறு)

இலிங்கம் 1 பலம் (35 கிராம்), எலுமிச்சம்பழச்சாறு ஆழாக்கு, வெண்ணிறமான வெங்காயச்சாறு ஆழாக்கு, பசுவின் நெய் 12 பலம் (420 கிராம்), தேன் 12 பலம் (420 கிராம்), சேராங் கொட்டை 12 பலம்.

**செய்முறை:—** இலிங்கத்தை அப்பிரேகத் தகட்டின் மீது வைத்து எலுமிச்சம்பழச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து சுருக்கிடவேண்டும். எலுமிச்சம்பழச்சாறெல்லாம் சென்ற பின்பு கட்டியின் மீதுள்ள அழுக்கைக் கத்தியால் சுறண்டி நீக்கி முன் போலவே அப்பிரேகத் தகட்டின் மீதுவைத்து வெங்காயச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டுச் சுருக்கிடவேண்டும். வெங்காயச் சாறெல்லாம் சென்ற பின்பு கட்டியின் மீதுள்ள அழுக்குகளைக் கூர்மையான கத்தியால் சீவி நீக்கி சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். சேராங்கொட்டையைக் கல்லுரலில் இட்டு விழிப்புடன் மைபோலிடித்து மற்றிரண்டு திரவத்தையும் சேர்த்துக் கலக்கி இரும்பு சட்டியில் விட்டு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற இலிங்கக்கட்டியையும் போட்டுக் கரிநெருப்பின் மீது வைத்து விசிறிக்கொண்டிருக்கவேண்டியது. அல்லது, அடுப்பின் மீது வைத்துச் சிறு தீயாகவும் எரிக்கலாம். எல்லாம் சுண்டி முடிவில் தானே பற்றியெரியும். எரிந்தடங்கின பின்பு ஆறவிட்டுக் குளிர ஆறினபின்பு எடுத்துக் கட்டியின் மீதுள்ளவைகளைத் துணியால் துடைத்து நீக்கிவிட்டுக் கல்வத்தில் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** 1 முதல் 1½ அரிசி எடை.

**துணைமருந்து:—** வெண்ணெய், பாலாடை, வாதுமை அல்வா, பால் அல்வா முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:—**தலை, மூளை, இதயம், ஈரல், இரைப்பை முதலிய இராச கருவிகளைப் பலப்படுத்தும். தேகத்திலுள்ள நரம்புகள் வலுத்து முறுக்கேறி தாதுவிருத்தி, உடல்வலிமை முதலியவைகளுண்டாகும்.

**மருந்துணவு:—**புளிப்புப் பொருள்களைக் குறைந்த அளவாக உபயோகிக்கவேண்டியது. பசுவின்பால், பால் பாயசம், மிட்டாய் தினுசுகள் முதலியவைகளைச் செரிக்கும் சக்திக்குத் தகுந்தபடி உபயோகித்து வரவேண்டியது.



## 494. இலிங்கச் செந்தூரம் (வேறு)

உயர்ந்த இலிங்கம் 6 வாரகன் எடை (21 கிராம்), (இது ஒரே கட்டியாக இருக்கவேண்டும்) அடைக்கலங்குருவி 101, பசுவின் நெய் செல்லத்தக்க அளவு, ஆட்டுத்தலை 14.

**செய்முறை :—** ஒரு குருவியை அறுத்து தலை, கால், குடல் ஆகியவைகளை நீக்கித் தூய்மை செய்து ஷ இலிங்கத்தை அதன் வயிற்றுக்குள் வைத்து சந்தில்லாமல் நூலினால் தைத்துக் கொஞ்சம் நெய்யைவிட்டு நெய் கொதித்தவுடன் முன் சித்தப் படுத்தியிருப்பதைப் போட்டுப் புரட்டிக் கொடுத்துப் பொரிக்க வேண்டும். குருவி சிவந்து போனவுடன் எடுத்துத் தனியே வைத்துக் குளிர ஆறினபின்பு இலிங்கத்தை எடுத்து முன்போல் வேறொரு குருவியைச் சித்தப்படுத்தி அதற்குள் வைத்துத் தைத்து முன்போல் நெய்யில் பொரித்தெடுக்கவேண்டும். இவ் விதம் நூற்றொரு குருவிகளிலும் வைத்துப் பொரித்தெடுத்து ஆட்டுக் கால் மூளைக்குள் செலுத்தி வேப்பமுளையினால் அதன் வாயை அடைத்து ஒரு ஆட்டுத்தலையை ரோமம், எலும்பு முதலியவை களைச் தூய்மைசெய்து இறைச்சியை மாத்திரமெடுத்து அது வேகத் தக்க நீர்விட்டு முன் சித்திப்படுத்தின இலிங்கத்தையும் போட்டு வேகவைக்கவேண்டியது. இறைச்சியானது பஞ்சுபோல வெந்து விட்டால் பதம். அதனை இறக்கி ஆறவிட்டு இலிங்கக் கவசத்தை எடுத்துக் கொள்ளவும். மற்றொரு தலையை முன்போல் சித்தப் படுத்தி முன் இலிங்கக் கவசத்தையே போட்டு முன்போல் வேக வைக்கவேண்டியது. இவ்விதம் பதினாலு ஆட்டுத் தலைகளிலும் வேகவைத்து இலிங்கத்தை எடுத்துக் கல்வத்தில் பொடித்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—**½ முதல் 1 அரிசி எடை.

**துணைமருந்து :—**வெண்ணெய், பாலேடு, நெய், வாதுமை அல்வா, பால் அல்வா, கோதுமைப்பால் அல்வா முதலிய வைகளாம்.

**தீரும்நோய்கள்:—**பிறவித்தாது நட்டத்தைத் தவிர மற்றெல்லாவகைத் தாதுநட்டங்களும் தீரும். தளர்ந்து சோர்ந்து போன நரம்புகள் பலப்பட்டு முறுக்கேறி உரத்துப் போகும். மனதைரியம், மனஊக்கம், உல்லாசம் முதலியவைகளுண்டாகும். இதன் அருமையான குணத்தை இங்கெழுத முடியாது. விருப்ப முடையவர்கள் இதனைச்செய்து உண்டு அனுபவித்து நிச்சயித்துக் கொள்ளவேண்டியது.

**மருத்துணவு:**—பசுவின்பால், பசுவின்நெய், பால்பாயசம், பாலன்னம், பால்அல்வா, வாதுமை அல்வா முதலியவைகளை அதிகமாகச் சேர்க்கவேண்டியது. அசைவ உணவினர்களானால் பறவைகளை நெய்யிற் பொரித்து அதிகமாகச் சேர்த்துவரவும். ஆட்டிறைச்சி முதலியவைகளையும் பொரித்து உபயோகிக்கலாம்.

**குறிப்பு :**—முன் பொரித்த அடைக்கலன் குருவிகளைத் தேனிற்போட்டு வைத்துக்கொண்டு தினம் ஒவ்வொன்ருக அல்லது இரண்டிரண்டாக உபயோகித்து வந்தால் அதிக மேலான குணந்தரும்.

இந்த மருந்தானது தாதுவிருத்தி மருந்துகளில் அதிகம் சிறந்தவைகளுள் ஒன்று. இது ஒரு அருமையான முறை. ஆனல், சோம்பல் சுபாவமுடையவர்களுக்கு இது அதிக கடினமுடையதாகத் தோற்றும். இது சற்றேறக்குறைய ஒரு வாரத்திற்குள் செய்யக்கூடியது. "மனமுண்டானல் வழியுமுண்டாம்" என்னும் பழமொழிக்கொப்ப விருப்பமானவர்கள் எவ்விதமும் செய்து முடிக்கக்கூடும். ஆகையால் கடினத்திற்குப் பால்மாறமல் செய்கிறவர்கள் எல்லாவற்றிலும் வெற்றியடைவார்களெனத் திட்டமாகச் சொல்லலாம்.

## 495. இலிங்கச் செந்தூரம் (வேறு)

இலிங்கம் 3 வராகன் எடை, (10½ கிராம்) வெங்காயச்சாறு 28 பலம் (980 கிராம்), கிறமான பிராந்தி 20 பலம் (700 கிராம்), சீமைச்சாராயம், கோழிமுட்டை மஞ்சள்கரு 10 பலம் (350 கிராம்

**செய்முறை :**—மேற்படி இலிங்கத்தைக் கல்வத்திலிட்டு வெங்காயச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து அரைத்து வரவேண்டும். சாறெல்லாம் சென்றபின்பு சீமைச்சாராயத்தை சிறுகச் சிறுக வார்த்து அரைக்கவேண்டும். சாராயம் எல்லாம் சென்றுபோன பின்பு மஞ்சட்கருவைச் சிறுகச் சிறுக வார்த்து அரைக்கவேண்டும். அந்த மஞ்சட்கருவெல்லாம் சென்றுபோன பின்பு ஒரு கலயத்தில்போட்டு மூன்று சீலைமண் செய்து உலர்த்தி 25 பலம் வறட்டியை அடுக்கிக் கொளுத்திப் புகையடங்கினவுடன் அதன் மத்தியில் இதனை வைத்து மேலும் நெருப்பிடவேண்டும். குளிர ஆறின பின்பு எடுத்துக் கல்வத்திலரைத்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு :**—1 முதல் 2 அரிசி எடை.



**தீரும்நோய்கள்:**—தாதுவளமை, உடல்வலிமை, போக சக்தி ஆகியவைகளை விருத்தியாக்கும். தளர்ந்துபோன நரம்புகள் பலப்படும். சோர்ந்து சுருங்கிப்போன அவயவங்கள் திமிர்த்துப் பலப்படும். நரம்புகளில் நச்சு நீருண்டாகி வளைந்துபோன உறுப்புகள் நரம்பிலுள்ள நச்சு நீர் நீங்கி விடுவதினல் அவை இயல்பான நிலைமையை அடையும். பிறவித்தாது நட்டத்தைத் தவிர மற்றெல்லா தாது நட்டத்திற்கும் சஞ்சீவிக் கொப்பானது. கைச்சேட்டை முதலிய கெட்ட பழக்கங்களினல் நேரிட்ட பற்பல வகைத் தோடங்களை நீக்கி முக்கிய அவயங்களைச் சீர்ப்படுத்துவதில் அதிக வலிமையுள்ளது. உடற்சக்தியைப் பலப்படுத்தி உடலைக் கல்போல் இறுகச் செய்யும் குணமுடையது.

**மருத்துணவு:**—புளி, புணர்ச்சி, புகை ஆகியவைகளை நீக்க வேண்டியது. பால் நெய், இறைச்சி முதலியவைகளை அதிகமாகச் சேர்க்கவேண்டியது.

## 496. இலிங்கச் செந்தூரம்

இலிங்கம் 3 வராகன் எடை (10½ கிராம்), (இது ஒரே கட்டியாயிருக்க வேண்டும்) ஆற்றுத்தும்மட்டிக்காய் 10.

**செய்முறை:**—ஒரு தும்மட்டிக்காயைத் துளைத்து அதற்குள் இலிங்கக்கட்டியைச் செலுத்தி எடுத்த சதையையே சந்தில்லாமல் வைத்தழுத்தி மூன்று சீலைமண் செய்து கவசத்தின் நான்கு பங்கெடை வறட்டியில் புடமிடவேண்டும். இந்தப் புடமானது காற்றில்லாத இடத்தில், அல்லது, குழியில் இடவேண்டும். குளிர ஆறினபின்பு எடுத்து வேருெரு காயை முன்போல் துளைத்து முன்போல் அடைத்து முன்போல் கவசம் செய்து முன்போல் புடமிடவேண்டும். இவ்விதம், மடக்கிமடக்கி நூறு புடமிட்டால் முதல் தரமான செந்தூரமாம். எழுபத்தைந்து தடவை புடமிட்டால் இரண்டாந்தரச் செந்தூரமாம். இருபத்தைந்து தடவை புடமிட்டால் நான்காந்தர செந்தூரமாம். இனி அவரவர்கள் தங்கள் விருப்பம் போல் செய்து கொள்ளலாம். உழைப்பிற்குப் பால் மாருதவர்கள் நூறு புடமிட்டுக் கொண்டால் வாதம், வைத்தியமென்னும் இருமுறைக்கும் சிறப்புடையதாகும்.

**அளவு:**—½ முதல் 1 அரிசி எடை.

**மருத்துணவு:**—பனைவெல்லாம், சர்க்கரை, நாட்டுச் சர்க்கரை, பறங்கிப்பட்டை இளகம், அசுவகந்தாதி இளகம், முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :**—கிரந்திநோய், மேகப்படை, மேகப் புண், சூலை, கைகால் முடக்கு, பலவகைப் படைகள், கருமேகம், செம்மேகம், முதலிய விரணமேக சம்பந்த நோய்களெல்லாம் தீரும்.

**குறிப்பு :**—இந்த மருந்தை உபயோகிக்கும்போது கழிச்சல் அதிகமாகும். ஆகையால், உடல் இயல்பை நிதானித்து மருந்தைக் குறைத்து உபயோகிக்க வேண்டியது.

**மருத்துணவு:**—நோயின் வலிமை, உடல்வலிமை ஆகிய வைகளுக்குத் தகுந்தபடி புளியைச் சேர்த்தும், சேர்க்காமலும் உபயோகிக்கலாம்.

## 497. இலிங்கச் செந்தூரம் (வேறு)

இலிங்கம் 1 பலம் (35 கிராம்), (இது ஒரே கட்டியாயிருக்க வேண்டும்) இதைத் தாமிரப் பாத்திரத்தில் வைத்து எட்டுப்பலம் எலுமிச்சம்பழச் சாற்றைச் சுருக்கிடவேண்டும். பிறகு, 16 பலம் (560 கிராம்), வெங்காயச்சாற்றைச் சுருக்கிடவேண்டும். அதன் பிறகு எட்டிக்கொட்டை, கடுகு, வாலுளுவை அரிசி, நெய், தேன் இவை வகைக்கு 6 பலம் (210 கிராம்), இவற்றுள் நெய், தேன் தவிர மற்ற சரக்குகளை எல்லாமிடித்துச் தூள்செய்து எல்லாவற் றையும் ஒன்றுகச் சேர்த்துப் பிறகு நெய்யையும் தேனையும் கலந்து ஒரு உருண்டையாகச் செய்து அதன் நடுவில் முன் சித்தப் படுத்தின இலிங்கத்தை வைத்து மூடி ஒரு இரும்பு சட்டியில் வைத்து மிதமான தீயாக எரிக்கவேண்டும். அதிலுள்ள சரக் கெல்லாம் தானே பற்றியெரிந்து போகும். குளிர ஆறின பின்பு எடுத்துப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**—$1\frac{1}{2}$ முதல் $1\frac{1}{2}$ குன்றி எடை.

**துணைமருந்து:**—வெற்றிலை, பனைவெல்லம், சர்க்கரை, இளகங்கள் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :**—பசிதீபனம் அதிகப்படும். உடற் சோர்வு, நபுஞ்சகத்தன்மை முதலிய தீயகுணங்கள் நீங்கி, உடல் வலிமை, புணர்ச்சி வலிமை உண்டாகும். இதனைத் தகுந்த துணை மருந்துகளில் உபயோகித்து வந்தால், அநேக நோய்கள் தீரும். முக்கியமாக பக்கவாதம், நரம்புகளின் தளர்ச்சி, வாய்க்கோணல், முகங்கோணல் முதலிய நோய்கள் தீரும்.



**மருத்துணவு :**—நோயின் பலத்திற்குத் தகுந்தபடி ஏற் படுத்தவேண்டியது. இதனைப் பத்தியமாக உபயோகித்தால் அநேக நோய்கள் தீரும்.

## 498. இலிங்கச் செந்தூரம் (வேறு)

இலிங்கம் 3 வராகன் எடை ($10\frac{1}{2}$ கிராம்), (இது ஒரே கட்டி யாக இருக்கவேண்டும்) பிரமதண்டிப்பால் 1 பலம் (35 கிராம்), சோற்றுக்கற்றாழைச்சதை 8 பலம் (280 கிராம்).

**செய்முறை:**—இலிங்கக் கட்டியின்மீது நாலாபக்கமும் சம மாக இருக்கும்படி மேற்படி பாலை அடித்து உலர்த்தவேண்டும். ஒருவாரம் பத்துநாள் பாலடித்துப் பிறகு நிறுத்துப் பார்த்தால் பதின்மூன்று வாரகன் எடை இருக்கவேண்டும். பிறகு, ஒரு சிறு கலயத்தில் அரைவாசி சோற்றுக்கற்றாழைச் சதையை வைத்து அதன்மீது முன்சித்தப்படுத்தின கவசத்தை வைத்து மேலும் மற்ற அரைவாசி சோற்றுக்கற்றாழைச் சதையை வைத்து வாய்க்குச் சில்லிட்டுச் சீலைசெய்து கவசத்தின் நாலுபங்கெடை வறட்டியில் புடமிட்டுக் குளிர ஆறினபின்பு எடுத்தால் கலயத்திற்குள் உள்ள வைகள் எரிந்துபோய் இலிங்கக்கட்டி மாத்திரமிருக்கும். அதன் மீது பால் கவசமிருந்தால் அதனை நீக்காமல் அப்படியே பொடித்துக் கொள்ளலாம். அதனை நீக்கிவிட்டும் இலிங்கத்தை மாத்திரம் பொடித்தும் கொள்ளலாம்.

**அளவு:**—$\frac{1}{2}$ முதல் $\frac{3}{4}$ குன்றி எடை.

**துணைமருந்து:**—பாலேடு, வாதுமை அல்வா, பாஉ அல்வா, கோதுமைப்பால் அல்வா, வெண்ணெய் முதலியவை களாம்.

**தீரும்நோய்கள் :**—இரத்தத்திலுள்ள தோடங்கள் நீங்கி அது சுத்தப்படும். தளர்ந்த நரம்புகள் முறுக்கேறி பலப்பட்டு உடல்திடமுண்டாகும். உடல்சக்தி, போகசக்தி, ஊக்கம், தைரியம் முதலியவைகளுண்டாகும்.

**மருத்துணவு:**—புளிப்பு முதலிய பொருள்களை அதிக மாகச் சேர்க்காமல் சுமாராகச் சேர்த்துக் கொள்ள வும்.

## 499. இலிங்கச் செந்தூரம் (வேறு)

இலிங்கம் 6 வராகன் எடை (21 கிராம்) (இது ஒரே கட்டியாக இருக்கவேண்டும்) வாழைமரத்தின் அடிக்கட்டை முக்கால் கெசமுள்ளதுண்டு.

**செய்முறை:**—வாழைக்கட்டையை நிற்கவைத்து அரை வாசி வரையில் செல்லும்படி நடுவில் துளைசெய்து அத்துளைக்குள் மேற்படி இலிங்கத்தைச் செலுத்தி எடுத்த தூளைப்போட்டு அடைத்துக் கட்டை முழுவதும் மூன்று சீலைமண்செய்து ஒருமுழச் சதுரமான குழிதோண்டி அதன் மத்தியில் முன்கட்டையை நிறுத்தி வைத்து அதைச் சுற்றிலும் வறட்டியை அடுக்கி அதன் மீதும் அது மறையும்படியாக வறட்டியை அடுக்கி நெருப்பிட வேண்டும். குளிர ஆறின பின்பு அதிக சாக்கிரதையுடனெடுக்க வேண்டும். வாழைச்சாம்பலும் அதில் கலந்து போகுமாகையாலும், வறட்டிச்சாம்பலும் அதனுடன் கலந்துபோக ஏதுவாயிருப்பதனாலும் புடம் வைக்கும்போதே இந்த வாழைக்கட்டையினடியில் பெரிய மண்தாலத்தை வைத்துக்கொண்டால் இலிங்கமும் வாழைக்கட்டைச் சாம்பலும் மண்தாலத்திலிருக்கும். அந்தச் சாம்பலை மெதுவாக ஊதுகுழாயால் ஊதிவிட்டால் இலிங்கம் மாத்திரம் தங்கிநின்று விடும். இதனைப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:**—2 முதல் 4 அரிசி எடை.

**துணைமருந்து:**—தேன், நெய், பனைவெல்லம், சீனி சர்க்கரை, வெண்ணெய், இளகவகைகள் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:**—இது நெருப்புக்கோடாமல் கட்டுப்பட்டுப் போயிருப்பதால் நாட்பட்ட எந்த நோயாகிலும் உபயோகிக்கலாம். பிரதானமாய் சுரநோய்கள், சூலைநோய்கள், பக்கவாதம், கீல்வாயு நோய், முதலிய அநேக நோய்களில் உபயோகிக்கலாம். உலோகங்களை வருணிக்கும் குணமும் இதற்குண்டு. இதன் உபயோகம் அநுபவசாலிகளுக்குத் தெரியும்.

**மருத்துணவு:**—நோய்வலிமை, உடல்வலிமை, முதலியவைகளுக்குத் தகுந்தபடி **ஏற்படுத்த வேண்டியது.**

**குறிப்பு:**—இதற்காக வேண்டிய வாழைக்கட்டையின் சுற்றளவு பன்னிரண்டங்குலமிருந்தால் போதுமானது, வாழை வகைகளில் எந்த வகையாயிருந்தாலும் சரியே. எந்தச் சமயத்தில் எந்தவகை கிடைக்கிறதோ அந்த வகையை உபயோகித்துக் கொள்ளலாம். இந்த முறையானது செய்வதற்கு அதிக சுலபமானபடியாலும், நெருப்பிற்கோடாமல் கட்டுப்பட்டுப் போகின்றபடியாலும் எல்லா நோய்களிலும் உபயோகப்படுகின்றபடியாலும் வைத்திய இரகசிய முறைகளில் இதுவும் ஒன்று.



## 500. இலிங்கச் செந்தூரம் (வேறு)

இலிங்கம் 3 வராகன் எடை (10½ கிராம்), சர்க்கரை வள்ளிக் கிழங்கையிடித்துப் பிழிந்த பால் 10 பலம் (350 கிராம்).

**செய்முறை:**—மேற்படி இலிங்கத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி பாலைச் சிறுகச் சிறுக வார்த்து அரைக்க வேண்டும். பாலெல்லாஞ் சென்றபின்பு ஒரு வில்லையாகச் செய்து உலர்த்திக் கொஞ்சமும் ஈரமில்லாமல் செம்மையாக உலர்ந்தபின்பு ஒரு பெரிய சர்க்கரை வள்ளிக்கிழங்கைத் துளைத்து அதற்குள் முன்சித்தப்படுத்தின வில்லையை வைத்து அதன்மீது முன் சக்கைகளையே போட்டுத் திணித்துச் சந்தில்லாமல் அடைத்து அதன்மீது ஏழு சீலைமண் செய்துலர்த்தி கலசத்தின் எட்டுப் பங்கெடை வறட்டியில் காற்றில்லாத இடத்தில், அல்லது, குழியில் புடமிட்டு ஆறினபின்னெடுக்க இலிங்கமானது செந்தூரமாகியிருக்கும். இதனைப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:**—½ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து:**—தேன், நெய், பனைவெல்லம், பால் அல்வா, வாதுமை, அல்வா முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :**—உடற்சோர்வு, அசதி, சோம்பல், முதலியவைகள் நீங்கி சுறுசுறுப்பு, மனோதிடம், ஊக்கம் முதலியவைகளுண்டாகும். நரம்புகள் பலப்பட்டு உடற்சக்தி, போகசக்தி ஆகியவைகளுண்டாகும். பசிதீபனம் அதிகரித்து நல்ல ஆகாரத்தையேற்றுக் கொள்ளச் செய்யும். சுருக்கிச் சொல்லில் இது எல்லாவகை நோய்களிலும் உபயோகமாகும்.

**மருத்துணவு:**—நோய் பலமாயிருந்தால் புளியைத் தள்ளி வைக்கவும்; நோய் சாதாரணமானதாயிருந்தால் ஒன்றும் பத்தியமில்லாமலேயே உபயோகிக்கலாம். நாட்பட்ட நோயாக இருந்தால் மருத்துணவு வைத்து, அல்லது, வைக்காமல் சமயோசிதம்போல் செய்து கொள்ளவும்.

## 501. இலிங்கச் செந்தூரம் (வேறு)

இலிங்கம் 3 விராகனெடை (10½ கிராம்) ஊமத்தையிலைச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :**—இலிங்கத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாம நேரமரைத்

துச் சிறுவில்லையாகச் செய்துலர்த்தி சிறு ஓட்டில் வைத்து மேலோடுமூடி ஓடு முழுவதிலும் ஏழு சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் நான்குபங்கெடை வறட்டியில் புடமிட்டாறின பின் னெடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு:**—$\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ குன்றி எடை.

**துணைமருந்து:**—பாலேடு, வெண்ணெய், பால்அல்வா, கோதுமை அல்வா, கோதுமைப்பால் அல்வா முதலியவை களாம்.

**தீரும்நோய்கள்:**—தாதுவிருத்தி, தம்பனசக்தி உண்டா கும். உடற்சோர்வு, கைகாலசதி முதலியவைகள் தீர்ந்து தெம்பு, தைரிய முண்டாகும். கீல்வாயு, முடக்கு வாயு, முறைசுரம் முதலியவைகளும் தீரும்.

**மருத்துணவு :**—நோய்வலிமை, உடல்வலிமை முதலிய வைகளும் தகுந்தபடி மருத்துணவு ஏற்படுத்தவும்.

## 502. இலிங்கச் செந்தூரம் (வேறு)

இலிங்கம் 10 விராகனெடை (35 கிராம்) எருக்கம்பால் செல்லத்தக்க அளவு, அரசம்பட்டைச் சாம்பல் $1\frac{1}{4}$ படி.

**செய்முறை:**—இலிங்கத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி எருக்கம்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டு சாமநேர மரைத்து ஒரே வில்லையாகச்செய்து நிழலிலுலர்த்திக்கொள்ளவும். மேற்படி சாம்பலை இரண்டு பாகமாக்கி ஒருபாகத்தை ஒரு சிறு பானையில் போட்டு நாலாபக்கமும் சமமாக அழுத்திவிட்டு அதன் நடுவில் முன் சித்தப்படுத்தின வில்லையை வைத்து அதன்மீது மறுபங்கு சாம்பலைப் போட்டுச் சமமாக அழுத்திவிட்டு பானை வாயை மண்தாலத்தால் மூடிச் சீலைமண் செய்து அடுப்பேற்றி நான்கு சாமநேரம் கமலாக்கினியாக எரித்துக் குளிர ஆறினபின்பு கல்வத்தில் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு,**—1 முதல் 2 அரிசி எடை ஒரு குன்றிமணி எடை வரையில் கொடுக்கலாம்.

**துணைமருந்து:**—வெண்ணெய், பாலேடு, நெய், இளக வகைகள் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்:**—பக்கவாதம், கீல்வாயு, கைகால் பிடிப்பு, சூலைநோய், சுவாசகாசம், மந்தந்தார காசம், கோழைக் கட்டு, கபக்கட்டு முதலிய அநேக நோய்கள் தீரும். இன்னும் தம்பனசக்தி, போகசக்தி முதலியவைகளுண்டாகும். தளர்ந்து சோர்ந்த நரம்புகள் பலப்பட்டு முறுக்கேறி உடல்திடம், உடல் வன்மை முதலியவைகளுண்டாகும்.



## 503. இலிங்கச் செந்தூரம் (வேறு)

இலிங்கம் 5 விராகனெடை ($17\frac{1}{2}$ கிராம்), (இது ஒரே கட்டி யாக இருக்கவேண்டும்.) கோதுமைமா 84 பலம் (2940 கிராம்), எருக்கம் பால் செல்லத்தக்க அளவு, தும்மற்பூண்டிலை, அல்லது, புல்லாமணக்கிலை செல்லத்தக்க அளவு.

**செய்முறை :**—நான்குபலம் கோதுமை மாவில் எருக்கம் பாலைவிட்டுக் குழைத்து இலிங்கக் கட்டிக்குச் சமமாகக் கவசஞ் செய்து மேற்படி தும்மற்பூண்டிலையில், அல்லது, புல்லாமணக் கிலையில் சுமார் ஒரு பலமெடுத்துக் கவசத்தின் மீது சுற்றி ஓட்டில் வறுக்கவேண்டும். கோதுமை மாவானது சிவந்துவிட்டால் பத மென நிதானித்து எடுத்து ஆறவைக்கவேண்டும். குளிர ஆறின பின்பு கவசத்தைப் பிரித்து நீக்கிவிட்டு முன்போல் கோதுமை மாமை எருக்கம்பாலில் குழைத்துச் கவசம் செய்து முன் கூறிய இலையில் சுற்றி நூலாற்கட்டி ஓட்டில் வறுத்துச் சிவந்த பதத்தில் எடுத்து ஆறவைக்கவேண்டும். பிறகு, கவசத்தைப் பிரித்து முன்போல் மாவைக்குழைத்துக் கவசித்து அதன் மேல் இலையைச்சுற்றிக் கட்டி வறுக்கவேண்டும். இவ்விதம், மடக்கி மடக்கி இருபத்தொரு தடவைகள் செய்தெடுத்துக் கல்வத் தில் பொடித்துப் பத்திரப்படுத்தவும்.

**குறிப்பு:**—மேற்படி பாகத்தில் சொல்லியிருக்கிறபடி வறுத்து எடுக்க அதிக கடினமாயிருப்பதுடன் அதிக காலதாமதமும் நேரிடு கிறது. ஆகையால், கரிநெருப்பை உண்டாக்கி அதில் நாலா பக்கமும் படும்படியாகத் திருப்பிக் கொடுத்து சுட்டெடுத்துக் கொள்வது சுலபமார்க்கம்; மேற்கண்ட தும்மற்பூண்டிலை அல்லது புல்லாமணக்கிலை அகப்படாவிட்டால் கள்ளியிலையை, அல்லது, எருக்கிலையைச் சுற்றியும் செய்து கொள்ளலாம்.

**அளவு:**—$\frac{1}{2}$ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து :**—வெண்ணெய், நெய், பாலேடு, இளக வகைகள் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :**—பசி சக்தி அதிகப்படும். தாது

குறைவு தீர்ந்து தாது வலிமை உண்டாகும். மேகவாயு, கீல்வாயு, கைகால் குடைச்சல், முதலிய அநேக வாதநோய்கள் தீரும். மந்தாரகாசம், சுவாசகாசம், கோழைக்கட்டு, தொண்டைக்கட்டு முதலிய கபநோய்களும் தீரும்.

**மருந்துணவு** :—உடல்வலிமை, நோய்வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தபடி புளியைக் குறைத்து, அல்லது, அறவே நீக்கிவைப்பது உத்தமம். இது வேகமான மருந்தாகையால் மருந்தை உபயோகிக்கும்போது பசுவின்பால், பசுவினெய் ஆகியவைகளை அதிகம் உபயோகித்து வரவேண்டியது. அசைவ உணவு உண்பவர்கள் ஆட்டிறைச்சி சூப்பு, ஆட்டிறைச்சிப் பொரியல் முதலிய உணவுகளை அதிகம் உபயோகித்து வரவேண்டியது.

## 504. இலிங்கச் செந்தூரம் (வேறு)

இலிங்கம் 10 வராகனெடை (35 கிராம்) (இது ஒரே கட்டியாக இருந்தால் உத்தமம்) உத்தாமணி என்னும் வேலிப்பருத்திச் சமூலத்தை உலர்த்தி எரித்தெடுத்த சாம்பல் 20 பலம் (700 கிராம்), சோற்றுக் கற்றாழைச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை**:—மேற்படி சாம்பலை துணியில் வடிக்கட்டச் செய்து கல்மணல் முதலியவைகளில்லாதபடி நீக்கி கல்வத்தில் போட்டுச் சோற்றுக்கற்றாழைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரம் அரைத்து மெழுகுபோலான பின்புஒரு உருண்டையாகச் செய்து அதன் நடுவில் மேற்படி இலிங்கக கட்டியை வைத்து அந்த உருண்டை கொள்ளும்படியான ஒரு சிறு சட்டியில் வைத்து மேற்சட்டி மூடி ஏழு சீலமண் செய்துலர்த்திக் கவசத்தின் மூன்று பங்கெடை வறட்டியில் புடமிட்டுக் குளிர ஆறினபின்பு கவசத்தைப் பிரித்து இலிங்கத்தை எடுத்துப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு**:—½ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து**:—இஞ்சிக் குடிநீர், சுக்குக் குடிநீர், சோம்புக் குடிநீர், தேன், நெய், வெண்ணெய், பாலேடு முதலியவைகளாம்.

**தீரும் நோய்கள்**:—கால்வீங்கி நெரிகட்டி வருகிற மேகசுரம், யானைக்கால் விக்கம், யானைக்கால் விக்கசம்பந்தமான சுரம், பக்கவாதம், செரியாமைநோய் முதலியவைகள் தீரும்.

**மருந்துணவு** :—கடினமான நோய்களுக்குத் தகுந்தபடி



யும் உடல் வலிவிற்குத் தகுந்தபடியும் மருத்துணவு ஏற்படுத்த வேண்டியது மருத்துவர்களின் கடமையாகும்.

## 505. இலிங்கச் செந்தூரம் (வேறு)

இலிங்கம் 10வராகனெடை (35கிராம்), தித்திப்புத் தும்மட்டிக்காய் 1 (இது பல தேசங்களில் பலவிதப் பெயர்களாக வழங்கப்படுகிறது. இதற்கு ஹிந்துஸ்தானியில் கர்பூஜ் என்று பெயர். இது மேலே கறுஞ்சாயலான பசுமையாயிருக்கும். அறுத்தால் உள்ளே சிவந்து நீர் நிறைந்திருக்கும். விதைகள் பீர்க்கு விதையைப் போன்று கறுத்திருக்கும்.) இது சுமார் ஒரு வீசைக்குக் குறையாததாக இருக்கவேண்டும்.

**செய்முறை** :—மேற்படி பழத்தின் மத்தியில் சக்கரமாகத் துவாரஞ்செய்து ஒரு வில்லையாக எடுத்துக் கொண்டு அதற்குள் இலிங்கக்கட்டியை வைத்து முன் எடுத்த வில்லையை வைத்தடைத்து அதன்மீது ஏழு சீலமண் செய்து ஈரமுலர வைத்துக் கவசத்தின் நான்கு அல்லது, ஐந்து பங்கெடை வறட்டியில் காற்றில்லாத இடத்தில் அல்லது குழியில் புடமிட வேண்டும். செம்மையாக ஆறினபின்பு மிக்க கவனத்துடன் கவசத்தைப் பிரித்து இலிங்கத்தை எடுத்துப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**குறிப்பு** :— மேற்கண்ட பாகப்படியே முலாம்பழம், கல்யாணப்பூசணிக்காய் ஆகியவைகளிலும் புடமிட்டெடுத்துக் கொள்ளலாம்.

**அளவு** :— 1 முதல் 3 அரிசி எடை.

**துணைமருந்து** :—வாதுமை அல்வா, கோதுமை அல்வா கசகசாத்தோல் (போஸ்தக்காய்) குடிநீர், பசுவினெய், பசுவின் வெண்ணெய், முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள்** :— தலைமூளை வலுக்குறைவு, மறதி, பஞ்சேந்திரிய வலுவின்மை, நரம்புத் தளர்ச்சி, நரம்பின் சோர்வு முதலியவைகள் தீரும். தாதுக்குறைவுந் தீர்ந்து தாதுவிருத்தி உண்டாகும். நரம்புகள் பலப்பட்டு உடற்சத்து, உடல்வலிமை முதலியவைகளுண்டாகும். தம்பன சக்தி அதிகப்படும்.

**மருத்துணவு** :— நோயிற்குத் தகுந்தபடி மருத்துணவு ஏற்படுத்தவேண்டியது. தாதுவிருத்திக்கானுல் தித்திப்புப் பொருள்கள், மிட்டாய்த் தினுசுகள் ஆகியவைகளையும் உபயோகிக்க

வேண்டியது. பாலன்னம், பால்பாயசம் முதலியவைகளையும் உபயோகிக்கலாம்.

## 506. இலிங்கச் செந்தூரம் (வேறு)

இலிங்கம் 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), (இதனைச் சிறு துண்டுகளாகச் செய்து கொள்ளவேண்டும்.) பருமனுக கருந் தேள் 1.

**செய்முறை:**— மேற்படி இலிங்கத்துண்டுகளை, அதன் வாய் வழியாக வயிற்றில் செலுத்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து ஒரு சிறு பானையில் ஒருபடி மணலைக் கொட்டி அதன்மீது முன் கவசத்தை வைத்து அதன்மீதும் ஒரு படி மணலைக்கொட்டி அடுப்பேற்றிச் சிறுதீயாக இலந்தை விறகால் நான்கு சாமத்திற்குக் குறையாமல் எட்டுசாமம் வரையில் எரிக்க லாம். குளிர ஆறினபின்பு கவசத்தைப் பிரித்து இலிங்கத்தை எடுத்து இரண்டு பாகமாகச் செய்து ஒரு பாகத்தில் சமனெடை கஸ்தூரியைச் சேர்த்தரைத்துக் கருவேலின் பிசின் நீரைவிட்டு அரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகள் செய்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு :**— $\frac{1}{2}$ முதல் 1 மாத்திரை செந்தூரமானுல் 2 முதல் 3 அரிசி எடை.

**துணைமருந்து :**— தாதுவிருத்திக்கானுல்: பாலேடு, பால் அல்வா, கோதுமைப் பால்அல்வா, வாதுமை அல்வா, வெண் ணெய், நெய், முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :**— மேற்படி மாத்திரைகளால் பிளேக் என்னும் நச்சுசுரம், சன்னிபாத நோய்கள், சீதளநோய் முதலிய வைகளும் தீரும்.

செந்தூரத்தால் நரம்புத்தளர்ச்சி, தேகச்சோர்வு, அசதி முதலியவைகள் தீர்ந்து, சீரணசக்தி, உடல் வலிமை, முதலிய வைகளுண்டாகும். பிறவியாயில்லாத நபுஞ்சகத் தன்மையை நீக்கி வலிவுத்தன்மை உண்டாகுவதில் இது மிகவும் சிறந்தது.

**மருத்துணவு :**— சமயோசிதம் போல் நோய் வலிமை உடல் வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தபடி மருத்துணவு ஏற் படுத்த வேண்டியது.

## 507. இலிங்கச் செந்தூரம் (வேறு)

இலிங்கம் 5 வராகனெடை ($17\frac{1}{2}$ கிராம்), (இது ஒரே கட்டி யாய் இருக்கவேண்டும்.) தாமரைக் கிழங்குகள் 7.



**செய்முறை :**— மேற்படி கிழங்குகளுள் ஒன்றை நடுவிற் குடைந்து அதற்குள் மேற்படி இலிங்கத்தை வைத்துக் கிழங்கின் சக்கையினுலேயே அடைத்து மூன்று சீலைமண் செய்து கவசத்தின் மூன்று பங்கெடை வறட்டியில் புடமிடவேண்டும். குளிர ஆறின பின்பு கவசத்தைப் பிரித்து நீக்கிவிட்டு வேருெரு கிழங்கை முன் போல துளைத்து முன்போல் இலிங்கக்கட்டியை அதற்குள் செலுத்தி முன்போல் சீலைமண்செய்து முன்போல் புடமிடவும். இவ்விதம், மடக்கி மடக்கி ஏழு கிழங்குகளிலும் ஏழு புடமிட்டு எடுத்துப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**—1 முதல் $1\frac{1}{2}$ குன்றி எடை.

**துணைமருந்து :**— கசகசாவையரைத்த விழுது, கசகசாக் குடிநீர், கசகசாத்தோற் குடிநீர், வெண்ணெய், பாலேடு முதலிய வைகளாகும்.

**தீரும்நோய்கள் :**—பீனிசநோய்கள், நீர்ப்பீனிசம், அடிக் கடி உண்டாகும். நீர்க்கோர்வை, முதலியவைகள் தீரும். தாது வலிவு, உடல்வலிவு ஆகியவைகளுண்டாகும். இது மிகவும் சாந்த மான மருந்தாகையால் குழந்தைகள் பெண்கள் முதலியவர்களுக்கு மிகவும் ஏற்றது.

## 508. இலிங்கச் செந்தூரம் (வேறு)

இலிங்கம் 5 வராகனெடை ($17\frac{1}{2}$ கிராம்), திருக்கள்ளிப்பால் செல்லத்தக்க அளவு, உத்தாமணிப்பூ 2 பலம் (70 கிராம்), வெள் ளெருக்கம்பூ அல்லது வெள்ளெருக்கின் இலை 2 பலம்.

**செய்முறை:**—இலிங்கத்தைக்கல்வத்தில் பொடித்துத்திருக் கள்ளிப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமமரைத்து ஒரே வில்லையாகச் செய்து நிழலில் உலர்த்தி முன் இரண்டு மூலிகை களையும் அரைத்து அதற்குள் வைத்து அதை ஒரு சிறு கலயத் திற்குள் வைத்துக் கலயத்தின் வாயைக்குச் சல்லெட்டு மூன்று சீலை மண் செய்து கவசத்தின் நான்கு பங்கெடை வறட்டியில் புட மிட்டுக் குளிர ஆறினபின்பு எடுத்துக் கவசத்தைப் பிரித்து இலிங் கத்தை மாத்திரமெடுத்து பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத் தவும்.

**அளவு :**— $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ அரிசி எடை.

**துணைமருந்து :**— பசுவின் வெண்ணெய், பாலேடு முதலிய வைகளாகும்.

**தீரும்நோய்கள் :**— இது கழிச்சல் உண்டாக்குமாகையால், ஆரம்பத்தில் மிகவும் குறைந்த அளவாக உபயோகித்து, உடல்வலிமையை நிதானித்து அளவை ஏற்படுத்தவேண்டும். மேகநோய், கிரந்தி, புண், புரை முதலிய பழமையான நோய்களுக்கு சஞ்சீவி போன்றது. ஆனால், உடல்வலிவு முதலியவைகளை நிதானித்துச் சமயோசிதம்போல உபயோகித்தால் அதிக குணம் உண்டாகும். கருப்பையிலுள்ள புழுக்கள். அல்குல்புற்று, நுணைக்காய்க் கிரந்தி முதலிய நோய்களும் தீர்ந்திருக்கின்றன.

**மருத்துணவு :**—உடல் வலிமை, நோய் வலிமை, முதலியவைகளுக்குத் தகுந்தபடி மருத்துணவு ஏற்படுத்த வேண்டியது.

**குறிப்பு :**—இன்னும், இது இரசவாத முறைகளுக்கும் ஆகும். தாமிரத் தகட்டின் மீது தடவிப் புடமிட்டால் தாமிரத்திலுள்ள ஊறல் நீங்கி வெளுத்துப்போம். இதனைத் தேனிற்குழைத்து மூர்ச்சை நோயிற்கு உச்சியில் தடவி வைத்தால் சில நிமிடங்களுக்குள்ளாக மூர்ச்சை நீங்கி நல்ல குணம் முதலியவைகளுண்டாகும்.

## 509. சர்வநோய் இலிங்கச் செந்தூரம்

தூய்மைசெய்த இலிங்கம் 1 பலம் (35 கிராம்), தூய்மைசெய்த வெங்காரம் 4 பலம் (140 கிராம்).

**செய்முறை :**— இலிங்கத்தைப் பொடித்து வைத்துக் கொள்ளவும். வெண்காரத்தைப் புது ஓட்டில் வைத்து அடுப்பேற்றிச் சிறு தீயாக எரித்துத் தண்ணீர் போல உருகினவுடன் மேற்படி இலிங்கத்தூளைச் சிறுகச் சிறுகத் தூவி வரவேண்டும். அடிக்கடி கிளறிக் கொடுத்தும் வரவேண்டும். உருகின வெண்காரமானது கெட்டியாவதற்கு முன்பு இலிங்கப்பொடி எல்லாவற்றையும் தூவி விடவேண்டும். செம்மையாகக் கிளறிக் கொடுத்துக் கெட்டியான பதத்தில் கீழிறக்கி வைத்துக் குளிர ஆறினபின்பு எடுத்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :**—1 முதல் $1\frac{1}{2}$ குன்றி எடை.

**துணைமருந்து :**— தேன், நெய், பசுவின் வெண்ணெய், சுக்குத்தூள், சீரகத்தூள், அரிசித்திப்பிலித் தூள், பஞ்ச தீபாக்கினி இளகம், வில்வாதி இளகம், முதலியவைகளாகும். இது எல்லாநோய்களிலும் உபயோகப்படுகின்றபடியால் அந்தந்த நோய்க்குத் தகுந்த இளகம், தூள், குடிநீர் முதலியவைகளில் சேர்த்துக் கொடுக்க அந்தந்த நோய்கள் தீரும்.



**தீரும்நோய்கள் :**— எல்லாவகையான சுரங்கள், வாயு நோய்கள், கபநோய்கள், பித்தநோய்கள், கல்லடைப்பு, சதையடைப்பு முதலிய அநேக நோய்கள் தீரும். பெண், ஆண், சிறுவர், முதியவர் ஆகிய எல்லோருக்கும் எல்லா நோய்களிலும் ஆரம்பமருந்தாக உபயோகிக்கலாம்.

**மருத்துணவு :**— அந்தந்த நோய்க்குத் தகுந்தபடியும் அந்தந்த சுபாவத்திற்குத் தகுந்தபடியும் மருத்துணவு ஏற்படுத்த வேண்டியது மருத்துவர்களின் கடமையாகும்.

## 510. இலிங்கவீரச் செந்தூரம்

இலிங்கம் 10 வராகனெடை (350 கிராம்), (இது ஒரே கட்டியாக இருக்கவேண்டும்.) வீரம் $2\frac{1}{2}$ வராகனெடை ($8\frac{3}{4}$ கிராம்), (இதுவும் ஒரே கட்டியாக இருக்கவேண்டும்.) எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு. காட்டாமணக்குப்பால் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :**— இலிங்கத்தை அப்பிரேகத் தகட்டின் மீது வைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து இலிங்கம் சூடுகண்டவுடன் மேற்படி எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டுச் சுருக்கிடவேண்டும். கட்டியின் நாலாபக்கங்களிலும் படும்படியாக கட்டியைப் புரட்டிக் கொடுத்துக் கொண்டு வரவேண்டும். சாமத்திற்கு ஒரு தடவை இலிங்கக் கட்டியின் மீதுள்ள வெண்டல் முதலியவைகளைக் கூரிய கத்தி முனையால் சுறண்டி நீக்கியும் வரவேண்டும். இவ்விதம் நான்குசாமம் சுருக்கிட்டான பின்பு அதன் மீதுள்ள கருக்கு முதலியவைகளைச் சுறண்டி நீக்கி வைத்துக்கொள்ளவும். இவ்விதமே வீரக்கட்டியை அப்பிரேகத் தகட்டின் மீது வைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துச் சூடுகண்டவுடன் காட்டாமணக்குப் பாலால் சுருக்கிடவேண்டும். இதனைச் சுருக்கிடும்போது பாலை அதிகமாக விடாமல் ஒரு குச்சியின் நுனியில் மெல்லிய துணியைச் சுற்றிக் கொண்டு அதை மேற்படி பாலில் நனைத்துக் கட்டியின் மேல் பூசி வருவது உத்தமமானவழி. பாலை அதிகமாக விட்டால் கட்டியில் சரிவரச் சுவறுமல் அங்குமிங்குமாகச் சேதமாகிவிடும். இதற்கு எவ்வளவு விழிப்புடன் எவ்வளவு மேற்படி பாலை ஊட்டுகிறுமோ அவ்வளவிற் கவ்வளவு இதன் தீயகுணங்களெல்லாம் நீங்கிச் சிறந்த குணத்திற்கேதுவாகும். மேற்கண்ட விதமாக இரண்டு சாமத்திற்குக் குறையாமல் சுருக்கிடவேண்டும். அதிகமாக எத்தனை சாமம் சுருக்கிடுகின்றேமோ அவ்வளவும் சிறப்புடையதாகும்.

முன் சித்தப்படுத்தின இலிங்கம் 8 வராகனெடை (27 கிராம்) முன் சித்தப்படுத்தின வீரம் 1 வராகனெடை (3½ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்துக் கல்வத்தில் மைபோலப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— ½ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து** :— பனைவெல்லம், வெண்ணெய், பசுவின் நெய், சுக்கு இளகம், இஞ்சி இளகம், அசுவகெந்தி இளகம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்**:— சுரம், சன்னி, வாயு, சூலை, கீல்வாயு, மேகவாயு, மாரடைப்பு, மூர்ச்சை, சூதகவாயு, கடின சூதகம், சூதகசன்னி, சூதகவலிப்பு, பிரசவத்திற் காணும் சன்னி, நச்சுக் கழிச்சல்ஊறி, நச்சுக்கழிச்சலில் காணும் நளிர் முதலிய அநேக நோய்கள் தீரும்.

**மருந்துணவு** :— நோய்க்குத் தகுந்தபடியும் உடல் நிலைமைக்குத் தகுந்தபடியும் சமயோசிதம்போல மருந்துணவு ஏற்படுத்தவேண்டியது.

**குறிப்பு** :— இந்த மருந்தானது மருத்துவர்கள் கையில் எப்போதும் இருக்கத்தக்கது. ஆனால், இதனைக் முறைப்படி செய்யாமலும் உடல் வலிமைக்குத் தகுந்தபடி உபயோகிக்காமலும் தம் தம் விருப்பப்படி செய்கிறதினாலும் உடல் இயல்புநிலை அறியாமல் உபயோகிப்பதனாலும் வாய்பிடித்தல் முதலிய தீயகுணங்களுக்கு ஏதுவாகிறது. மேற்கண்ட சரக்குகளையும் மேற்கண்டபடி சுருக்கிட்டுச் சித்தப்படுத்திக் கொண்டால் வாய்பிடித்தல் முதலிய தீய குணங்களுண்டாகாது. இன்னும், இளமையோடிருப்பவர்களுக்கு ஒவ்வொரு வேளை குறைந்த அளவாக உபயோகித்துக் கொள்ளலாம். மூன்று நாள், நான்கு நாள் உபயோகித்து இடையில் இரண்டு மூன்றுநாள் விட்டும் உபயோகிக்கலாம். இந்த கருத்துக்களையெல்லாம் இங்கெழுதி முடியாது; அவரவர்கள் அனுபோக சித்தமாகவும், புத்திக்கூர்மையாகவும் நிதானித்து உபயோகிக்க வேண்டியது.

## 511. ஜீவாக்கினி இலிங்கச் செந்தூரம்

பாகப்படுத்தின காடிக்காரம், காட்டாமணக்குப் பாலில் சுருக்கிட்ட வீரம் வகைக்கு 1 வராகனெடை (3½ கிராம்), பாகப்படுத்தின இரச செந்தூரம் 2 வராகனெடை (7 கிராம்), எலுமிச்சம் பழச்சாற்றில் சுருக்கிட்ட இலிங்கம் 5 வராகனெடை (17½ கிராம்).



**செய்முறை** :— இவை எல்லாவற்றையும் சேர்த்துக் கல்வத்திலிட்டுப் பொடித்துப் ஒரு சாமநேரம் அரைத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு**:— ½ முதல் 1 அரிசி எடை.

**துணைமருந்து**:—தேன், நெய், வெண்ணெய், பஞ்சதீபாக்கினி இளகம், சுக்கு இளகம், சீரக இளகம், முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்** :— மேற்கண்ட அளவாக தினம் ஒன்றிற்கு இரண்டு அல்லது மூன்று தடவைகள் சாப்பிட்டால், பசி தீபனம் அதிகரித்துப் தாங்கக்கூடாத பசி உண்டாகும். அப்படி பசி கண்டவுடன் புளி சேர்த்த இரசம், தயிர், மோர், நீர்மோர், இளநீர், முதலியவைகளிலொன்றை அருந்தவேண்டும். காலை மாலை இரண்டுவேளையும் உபயோகித்து வந்தால் சுரம், சன்னி, நளிர், சீதளநோய், நச்சுக்கழிச்சல், முதலிய அநேக நோய்கள் தீரும். சூதகவலி, சூதகசன்னி, வயிற்றிலுண்டாகும். கட்டி, குன்மநோய், அசீரணநோய் முதலியவைகளும் தீரும். மேகவாயு, கைகால் முடக்கு, கீல்வாயு, மாரடைப்பு, மூர்ச்சை நோய் முதலியவைகளும் தீரும்.

**மருந்துணவு** :— சமயோசிதம்போல் நோய்களுக்குத் தகுந்தபடி மருந்துணவு ஏற்படுத்திக் கொள்ளவும்.

### காடிக்காரப் பக்குவம்

வெள்ளிகாடிக் காரத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து அது கொள்ளத்தக்க அளவு தாய்ப்பாலை விட்டு அரைத்து, விட்டபால் சுவறினவுடன் கல்வத்துடன் உலர்த்தி விட்டு விடவேண்டும். ஈரமில்லாமல் உலர்ந்த பின்பு மறுபடியும் பொடித்து முன்போல் அது கொள்ளத்தக்க பாலைவிட்டு அரைத்து, பால் வற்றினவுடன் அப்படியே உலரவிடவும். இவ்விதம், மடக்கிமடக்கி மூன்று தடவைகளுக்குக் குறையாமல் செய்து கொள்வதே காடிக்காரப் பக்குவமாம்.

### இரசசெந்தூர பக்குவம்

இரச செந்தூரத்தைக் கல்வத்தில் பொடித்து அது கொள்ளத்தக்க அளவு எலுமிச்சம்பழச்சாற்றை விட்டு அரைத்துச் சாறு சுண்டினவுடன் கல்வத்துடன் உலரவிட்டு மறுபடியும் பொடித்து முன்போல் எலுமிச்சம்பழச்சாற்றை விட்டு முன் போல் அரைத்து முன்போல் உலர விடவேண்டும். இவ்விதம், மடக்கிமடக்கி மூன்று

தடவைக்குக் குறையாமல் செய்து கொள்வதே இரச செந்தூர பக்குவமாம். இங்கு அதுகொண்ட திரவம் என்பது: சரக்கின் எடையில் மூன்று அல்லது நான்கு பங்கெடை சேர்த்துக் கொள்ள வேண்டும். எப்படியெனில்:— காடிக்காரம் ஒரு வராகனெடையானல் மூன்று அல்லது நான்கு வராகனெடை பாலை ஒரு தடவை விட்டரைக்க வேண்டும். அவ்விதமே இரச செந்தூரம் ஒரு பங்கானல் மூன்று அல்லது நான்கு பங்கு எலுமிச்சம்பழச்சாற்றை ஒருதடவை விட்டரைக்க வேண்டுமென்பதாம்.

## 512. இலிங்கசொர்ண செந்தூரம்

தூய்மைசெய்த இலிங்கம் 5 வராகனெடை (17½ கிராம்), இரச செந்தூரம் 2 வராகனெடை (7 கிராம்), வீரம் 1 வராகனெடை (3½ கிராம்), மெல்லிய தங்கரேக்கு ¼ வராகனெடை.

**செய்முறை :—** முன் மூன்றையும் கல்வத்திலிட்டுப் பொடித்து ஒரு சாமநேரம் அரைத்துக் கல்வம் நிறைய தண்ணீரை விட்டுக்கலக்கி பன்னிரண்டுமணி நேரம் அசையாமல் வைத்து மறுபடி மெதுவாக தண்ணீரை இறுத்துவிட்டு மறுபடியும் ஒருசாமம் நேரம் அரைத்து, முன்போல் கல்வம் நிறைய தண்ணீரை வார்த்துப் பன்னிரண்டு மணிநேரம் வைத்துப் பிறகு தெளிவை இறுத்து விடவேண்டும். மூன்றுந்தடவையும் ஒருசாமநேரம் அரைத்து முன்போல் கல்வம் நிறைய நீரை வார்த்து பன்னிரண்டு மணிநேரம் வைத்துப் பிறகு தெளிவை இறுத்து நீக்கிவிட்டு வெளியில் வைத்து ஈரமில்லாமல் உலர்ந்த பின்பு கால் வராகனெடை தங்கரேக்கைச் சேர்த்து அரைத்து மைபோலான பின்பு புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** ½ முதல் 1 அரிசி எடை.

**துணைமருந்து :—** தேன், நெய், பசுவின் வெண்ணெய், நெல்லிக்காய் முறப்பா, இஞ்சிமுறப்பா, கடுக்காய் முறப்பா, நெல்லிக்காய் இளகம், இஞ்சிஇளகம், சுக்குஇளகம், பஞ்சதீபாக்கினி இளகம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** மேற்கண்ட அளவுப்படி தினம் ஒன்றிற்கு இரண்டு மூன்று தடவைகள் உபயோகித்துவந்தால் பசி நோய் அதிகப்படும். மந்தாக்கினி செரியாமை, குன்மம் நோய் முதலியவைகள் தீர்ந்து உடல் வலிமை முதலியவைகளுண்டாகும். இன்னும் சுரம், சன்னி, வாத நோய் முதலிய வைகளும் தீரும்.



**பத்தியம் :—** நோய் வலிவு, உடல் வலிவு, முதலியவைகளுக்குத் தகுந்தபடியும் சமயோசிதம் போலவும் பத்தியம் ஏற்படுத்த வேண்டியது.

## 513. தன்வந்திரி செந்தூரம்

தாய்ப்பாலால் சுருக்கிட்டுந் தூய்மைசெய்த இலிங்கம் 4 வராகனெடை (14 கிராம்), காட்டாமணக்குப்பாலிற் சுருக்கிட்ட வீரம் 1 வராகனெடை (3½ கிராம்), தாய்ப்பாலில் ஒரு சாமம், முசுமுசுக்கைச் சாற்றில் ஒருசாமம் சுருக்கிட்ட இரச கற்பூரம் 1 வராகனெடை, (3½ கிராம்), எலுமிச்சம்பழச் சாற்றில் பாகப்படுத்தின இரச செந்தூரம் 1 வராகனெடை பசுவின் பாலில் உருக்கிச் சாய்த்துத் தூய்மைசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் 1 வராகனெடை (3½ கிராம்).

**செய்முறை :—** இவையெல்லாவற்றையும் கல்வத்திலிட்டுப் பொடித்துப் பவழ நிறமாகிற வரையில் அரைத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 2 குன்றி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், சுக்குஇளகம், கருஞ்சீரக இளகம், பறங்கிச்சக்கை இளகம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** ஆறாத இரணங்கள், குழிஇரணங்கள், புரை இரணங்கள், கிரந்திகள், அரையாப்பு, தொடைவாழை, வெடிமேகம், கண்டமாலை, ஓடுகண்டமாலை, அல்குல்புற்று, இலிங்கப்புற்று, கள்ளிப்பூக்கிரந்தி, நுணைக்காய்க்கிரந்தி, குதிக்கால் வாதம், அங்குலிவாதம், கெண்டைக்கால்வாதம், சூலைநோய், கைகால்முடக்கு, வாதசன்னி, கபசன்னி, சுரம், பித்தநோய் முதலியவைகள் தீரும்.

## 514. இலிங்காதி உபசண்டமாருத செந்தூரம்

தாய்ப்பாலில் சுருக்கிட்டுச் தூய்மைசெய்த இலிங்கம் 8 வராகனெடை (28 கிராம்), தாய்ப்பாலில் ஒரு சாமமும், முசுமுசுக்கைச்சாற்றில் ஒருசாமமும் சுருக்கிட்டுச் தூய்மைசெய்த இரசகற்பூரம் 4 வராகனெடை (14 கிராம்), பசும்பாலில் உருக்கிச் சாய்த்துச் தூய்மைசெய்த நெல்லிக்காய்க்கெந்தகம் 2 வராகனெடை (7 கிராம்), எலுமிச்சம்பழச் சாற்றை விட்டரைத்துப் பாகப்படுத்தின இரச செந்தூரம் 2 வராகனெடை (7 கிராம்), காட்டாமணக்குப்பாலில் இரண்டு சாமம் சுருக்கிட்டுத் தூய்மைசெய்த

வீரம் 2 வராகனெடை (7 கிராம்), கோழிமுட்டை வெள்ளைக்கரு செல்லத்தக்க அளவு.

**செய்முறை** :— மேற்படி சரக்குகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்து ஒருமணி நேரமரைத்து மேற்படி வெள்ளையம்பிலியைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டு சாமநேரமரைத்து மெழுகுபதத்தில் சிறு வில்லைகளாகச் செய்து காயவைத்துக் கொள்ளவேண்டும். ஒரு புதுச்சட்டியில் ஒருபடி நீரை வார்த்து அடுப்பேற்றிக் கொதிக்க வைத்து குமிழிபொழும்பும்போது மேற்படி வில்லைகளை அதில்போட்டு ஐந்து நிமிடநேரம்தாமதித்து வில்லைகளையெடுத்துக் கொள்ளவும். வில்லைகளை வெய்யிலில்வைத்து ஈரத்தை உலர்த்திக் கொள்ளவும். பிறகு, பச்சரிசி நொய் ½ ஆழாக்கு, சுரைக்காய்த் துண்டு 2 பலம் (70 கிராம்), சுரைக்காயைச் சிறுதுண்டுகளாக துண்டித்து அரிசியுடன் கலந்து ஒருபடி நீரில்போட்டு அரிசி வெந்தபதத்தில் மேற்படி வில்லைகளைப் போட்டு பத்துநிமிட நேரம் வைத்திருந்து வில்லைகளை எடுத்துக் கொஞ்சம் நீரைவிட்டுக் கழுவி வெய்யிலில் உலர்த்திப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— ½ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து** :— பனைவெல்லம், பசுவின் வெண்ணெய், இளக வகைகள் முதலியவைகளாகும். அந்தந்த நோய்க்குத் தகுந்த எந்த துணைமருந்துகளிலும் கொடுக்கலாம்.

**தீரும்நோய்கள்** :— சன்னிகள், வாதநோய், சூலைநோய்கள், பக்கவாதம், விதைவாதம், அண்டவாதம், முகவாதம், சூதகவாயு, கணவாதம், பக்கவலி, குதிரைவலி, குமரகண்டவாயு தமரகவாயு, சுரநோய்கள், பாம்புக்கடி, பூரான்கடி, நாய்க்கடி, எலிக்கடி, முதலிய அநேக நோய்கள் தீரும். இன்னும், இது அநேக நோய்களில் உபயோகப்படுத்தப்படுகிறது. ஆனால், அனுபவத்தில்தான் தெரியவரும்.

**மருந்துணவு**:— அநேகமாய் இதற்கு மருத்துணவுஇல்லை; ஆயினும், நோயின்வலிவு, உடல்வலிவு, முதலியவைகளுக்குத் தகுந்தபடி மருத்துணவு ஏற்படுத்த நேரிடும். சில நோய்களில் கூடுமானல் நெய், பால், இறைச்சி முதலியவைகளைச் சேர்த்து வரலாம். ஆகையால், மருத்துவர்கள் சமயோசிதம்போல் ஆகாரவகைகளை ஏற்படுத்த வேண்டியது. ஒவ்வொரு மருந்திற்கும் துணைமருந்தும், பத்தியம் முதலியவைகள் குறிப்பாகவும் சுருக்கமாகவும் எழுதக்கூடுமேயொழிய எல்லாவற்றையும் எழுத சாத்தியப்படாது. ஆகையால், புத்திமான்கள் சமயோசிதம்போல் துணைமருந்தும், பத்தியம் முதலியவைகளையும் ஏற்படுத்திக் கொள்வார்கள்.



## 515. மோகலிங்கச் செந்தூரம்

இலிங்கம் 1 பலம் (35 கிராம்), ஆதண்டையிலை 10 பலம் (350 கிராம்) இலுப்பையெண்ணெய் செல்லத்தக்க அளவு.

**செய்முறை** :— ஆதண்டையிலையை வெண்ணெய் போல அரைத்து இலிங்கக்கட்டியின் மேல் சமமாகக் கவசம் செய்து ஒரு குழிச்சட்டியில் வைத்து இலுப்பையெண்ணெயை விட எண்ணெயில் மேற்படி கவசமானது நாலங்குலம் ஆழ்ந்திருக்க வேண்டியது. அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துவந்தால் எண்ணெயானது சுண்டி முடிவாகப்பற்றியெரியும். பற்றியெரிந்து அடங்கின பின்பு எடுத்து இலிங்கக்கட்டியின் மீதுள்ள கவசத்தைநீக்கி ஒரு பீங்கானில்வைத்து தனியே வைத்துவைக்கவும். இருபத்துநான்கு மணி நேரஞ்சென்றபின்பு கல்வத்திற்பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு**:— 1 முதல் பலம் 1½ குன்றி எடை.

**துணைமருந்து** :—நெய், வெண்ணெய், பனைவெல்லம், இஞ்சிச் சுரசம், சுக்குக் குடிநீர், பஞ்சதீபாக்கினி இளகம் சுக்கு இளகம், சீரகஇளகம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்** :— சுரநோய், வாயுநோய், சூலை, கைகால்பிடிப்பு, பக்கவாயு, பித்தநோய் முதலியவைகள் தீரும். எந்த நோய்க்கும் அந்தந்த துணைமருந்துகளில் உபயோகித்தால் முறையே அந்நோய்கள் தீரும்.

**மருந்துணவு** :—சமயோசிதம்போல நோய்களுக்குத் தகுந்தபடி மருத்துணவு ஏற்படுத்தவேண்டியது.

## 516. சீனலிங்கச் செந்தூரம்

இலிங்கம் 1 பலம் (35 கிராம்), சீனக்காரம் 2 பலம் (70 கிராம்), கம்பிவெடியுப்பு 2 பலம்.

**செய்முறை** :— வெடியுப்பையும் சீனக்காரத்தையும் பொடித்துப் புதுச்சட்டியில் போட்டு அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துவந்தால், சரக்குகளுருகிப் பொங்கும். அந்தச் சமயத்தில் மேற்படி இலிங்கக்கட்டியைப் போட்டுப் புரட்டிக்கொண்டேஇருக்க வேண்டும். சரக்கில் புகைகண்டவுடன் எடுத்து மேலிருப்பதைச் சுறண்டிவிட்டு இலிங்கத்தைப்பொடித்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 1½ குன்றி எடை.

**துணைமருந்து :—** தேன், பனைவெல்லம், பால்அல்வா, வாதுமைஅல்வா முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—**சுரநோய், மாரடைப்பு, வாயுநோய்கள், கைகால்குடைச்சல், கீல்வாயு முதலியவைகள் தீரும்; தாது வலிமை உண்டாகும்.

**மருத்துணவு:—**நோய்க்குத் தகுந்தபடியும், உடல் நிலைமைக்குத் தகுந்தபடியும் சமயேசிதம்போல் பத்தியம் ஏற்படுத்திக் கொள்ளவும்.

**குறிப்பு :—**மேற்கண்ட விதமாகவே இரசகற்பூரத்தையும் செய்துகொள்ளலாம்.

## 517. இலகு சுவர்ணலிங்கச் செந்தூரம்

தூய்மைசெய்த இலிங்கம் 4 வராகனெடை (14 கிராம்), இரசசெந்தூரம் 2 வராகனெடை (7 கிராம்), வீரம் 1½ வராகனெடை (5¼ கிராம்) தங்கரேக்கு 2 வராகனெடை (7 கிராம்).

**செய்முறை :—**முன்மூன்று சரக்குகளையும் கல்வத்தில் பொடித்து இரண்டுமணி நேரம் அரைத்துக் கல்வம் நிறைய தண்ணீரை விட்டுக் கலக்கிஒரிரவுவைத்திருந்து மறுநாட்காலையில் தெளிவையிறுத்து விடவேண்டும். பிறகு, முன்போல் இரண்டு மணிநேரம் அரைத்துத் தண்ணீரைவார்த்துக் கலக்கி முன்போல் ஓரிரவுவைத்து மறுநாள் காலையில் தெளிவை இறுத்துவிட வேண்டும். இவ்விதம், ஏழுதடவைகள், மடக்கி மடக்கி அரைத்தும் தெளிவையிறுத்தும் பக்குவப்படுத்தினபின்பு வெய்யிலில் வைத்துலர்த்தி ஈரதுல்லாமல் உலர்ந்தபின் மேற்படி தங்கரேக்கைச் சேர்த்து அரைத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 1½ குன்றி எடை.

**துணைமருந்து :—**பனைவெல்லம், வெண்ணெய், நெய் முதலியவைகளும்; தாதுவலிமைக்கு: பாலேடு, பால்அல்வா, பால்கோவா, கோதுமைப் பால்அல்வா, முதலியவைகளுமாம்.

**தீரும்நோய்கள் :—**சுரநோய், வாயுநோய் முதலியவைகளைக் கண்டிக்கும். பசிதீபனத்தை அதிகப்படுத்தி உட்கொண்ட ஆகாரங்களைத் தகித்து சீரணமாக்கும். தாதுவலிமை தாது விருத்தி உண்டாகும்.



**மருத்துணவு:—**நோய்வலிமை, உடல்வலிமை, முதலியவைகளுக்குத் தகுந்தபடி ஏற்படுத்தவும்.

## 518. இரகுராமபாணச் செந்தூரம்

தூய்மைசெய்த இலிங்கம் 8 வராகனெடை (28 கிராம்), வெள்ளிக்காடிக்காரம் 1 வராகனெடை (3½கிராம்), இரசசெந்தூரம் 1 வராகனெடை (3½ கிராம்).

**செய்முறை :—** இம்மூன்று சரக்குகளையும் நுண்மையாகப் பொடித்து இரண்டு மணிநேரம் அரைத்து அரை அவுன்ஸ் புட்டியில் அடைத்து உள்ளே நீர்போகாமல் கல்காரக்கிலடைத்து புட்டியில் சோற்றுப்பசையில் சீலைமண்மாதிரி காகிதம் ஒட்டி நெல் வேகவைக்கிறபோது அந்தப் பானைக்குள் வைத்து நெல்வெந்த பிறகு எடுத்துக்கவசத்தைப் பிரித்துப் புட்டியிலுள்ள செந்தூரத்தைக்கல்வத்திலிட்டு மறுபடியும் அரைத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** ½ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து :—**இஞ்சிச்சாறு, தேன், சுக்கு, பனைவெல்லம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** வாதசுரம், பித்தசுரம், கபசுரம் முதலிய சுரங்கள் தீரும். சன்னி, சூதக வயிற்றுவலி, குழந்தைகளுக்குக் காணும் மாந்தம், இசிவு, தோடம், வயிற்றுக்கழிச்சல் முதலியவைகள் தீரும்.

**மருத்துணவு :—** இச்சாபத்தியம்.

## 159. சந்திரப்பிரபாவ செந்தூரம்

தூய்மைசெய்த இலிங்கம் 5 வராகனெடை (17½ கிராம்), இந்துப்பு 5 வராகனெடை.

**செய்முறை :—** இரண்டையுஞ் சேர்த்துக் கல்வத்தில் பொடித்து ஒருமணி நேரம் அரைத்துப் புட்டியில் போட்டுக் கல்காரக்கிட்டுப் பத்திரப்படுத்தவும். இதனைக் காடுதாசியில் மடித்து வைத்திருந்தால் நைப்பாகி விடும். ஆகையால், இதனை புட்டியிலேயே வைத்திருக்க வேண்டியது.

**அளவு :—** 2 முதல் குன்றி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், வேப்பங்கொழுந்தை அரைத்தவிழுது, சுக்கை அரைத்தவிழுது முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** அக்கிரம சூதகம், சூதகவாயு, சூதக பந்தம், சூதகச்சூலை, பிரசவகாலத்திலுண்டாகும் அழுக்குச்சிக்கல் அதனாலுண்டாகும் சுரம் முதலியவைகள் ஆகிய கருப்பையைப் பற்றின அநேகநோய்கள் தீரும். இதனைச் சூதகம் காணும் சமீப காலத்தில் ஆரம்பித்து சூதகமாக இருக்கும்போதும் உபயோகிக்க வேண்டியது. முதலமாதம் கொடுத்தால் மறுமாதம் சூதகம் கிரமப்பட்டுப்போம. ஆனால், மேற்கண்டபடி இடையிடை விட்டு மூன்றுதடவை கொடுத்தால் சூதகசம்பந்த நோயளெல்லாந் தீர்ந்துசந்ததிக்கு ஏதுவாகும்.

**மருந்துணவு :—** சமயோசிதம் போலவும், உடல் நிலைக்குத் தகுந்தபடியும் பத்தியம் ஏற்படுத்தவும்.

## 520. ஓமவன்னி★ செந்தூரம்

இலிங்கம் 1 பலம் (35 கிராம்), மருதோன்றியிலை 5 பலம் (175 கிராம்), தேய்த்து உமிபோக்கின ஓமம் ¼ பலம்.

**செய்முறை :—** மருதோன்றுஇலையையரைத்து இலிங்கத் தின்மீது கவசஞ்செய்து காயவைத்து ஓமத்தை இரணடு பாக மாக்கி ஒரு பாகத்தை ஓடு பானையில்போட்டு அதன் நடுவில் கவசத்தை வைத்து அதன்மேல் மறுபாதி ஓமத்தைப்போட்டு பாத்திரத்தின் வாயக்குச் சில்லிட்டு மூன்று சீலைமண் செய் துலர்த்தி நூறுபலம் வறட்டியில் புடமிடவேண்டும். குளிர ஆறின பின்பு எடுத்துக்கவசத்தை நீக்கி இலிங்கத்தையெடுததுப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—**1 முதல் 1½ குன்றி எடை.

**துணைமருந்து :—** தேன், நெய், பனைவெல்லம் முதலி யவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** முறைக்காய்ச்சல், பழையசுரங்கள், விடாச்சுரங்கள் முதலிய பலவகை சுரங்களும் தீரும்.

**மருந்துணவு:—** நோயின் வல்லமை, உடலின் வலிமை முதலி யவைகளுக்குத் தகுந்தபடி புளியை ஆறுமுவ நககூடிய சொறபப் புளியாகச் சேர்த்தும பத்தியம ஏறபடுத்த வேணடியது.

★ வன்னி இலிங்கம்



**குறிப்பு :—** புடமிடுவதில் தீ அதிகமானல் இரசமாகிவிடும். ஆகையால், தீயை நிதானமாகப் போடவேண்டியது.

## 521. பிரதாபலிங்கச் செந்தூரம்

உலாந்தா இலிங்கம் 5 பலம் (175 கிராம்), இரசகற்பூரம் 6 பலம் (210 கிராம்), நெல்லிக்காய்க்கெந்தகம் 10 பலம் (350 கிராம்), வீரம் 3 பலம் (105 கிராம்), இரசசெந்தூரம் ½ பலம் (17½ கிராம்), மனோசிலை 1 பலம் (35 கிராம்).

**செய்முறை :—** இவையெல்லாவற்றையும் தனித்தனி தூய்மை செய்து மேற்கண்ட எடை நிறுத்தெடுத்துத் தனித்தனியே பொடித்து எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து இரண்டு மணி நேரம் அரைத்து வைத்துக்கொள்ளவும். காசிக்குப்பி ஒன்று சம்பாதித்து புற்றுமண்ணும் மணலும் சேர்த்தரைத்துப் புட்டிக்கு சீலைமண் செய்து உலர வைக்கவேண்டும். இந்தச் சீலை உலர்ந்த பின்பு மறுசீலை செய்யவேண்டும். இவ்விதம், ஒவ்வொரு சீலையும் உலரவுலர ஏழு சீலைசெய்து முடிவாகச் செம்மையாக உலர்த்தி முன் சித்தப்படுத்தின மருந்தை இதற்குள் போடவேண்டும். வாய்க்கு மாக்கல்லால் காரக்குஇடவேண்டும். மருந்தானது புட்டியில் அரைபாகம் இருக்கவேண்டும். பிறகு, கனத்த சட்டியில் நான்கு அங்குலம் மணலைக்கொட்டி மணல்மீது நடுவில் புட்டியை வைத்துப் புட்டியின் கழுத்துவரையில் மணலைக்கொட்டி ஓட்ட டுப்பில் ஏற்றி ஒருசாதி விறகால் தீபாக்கினி ஒருசாமம், கமலாக்கினி இருசாமம், காடாக்கினி நான்குசாமம் ஆக ஏழுசாம மும் எரித்துச் சிலாகைப்பதங்கண்டு தீயை நிறுத்திக் குளிர ஆற விட்டு புட்டியையெடுத்து சாக்கிரதையுடன் உடைத்துச் செந் தூரத்தை எடுத்துப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—**1 முதல் 2 குன்றி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், தேன், நெய், வெண் ணெய், இஞ்சிச்சாறு, சுக்குக் குடிநீர் சுக்கு இளகம், அசுவகந்தி இளகம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** இதனை எல்லா நோய்களிலும் உபயோகிக்கலாம். முக்கியமாக சுரநோய்கள், சன்னிபாத நோய்கள், சூலை நோய்கள், கிரந்தி நோய், புண்கள், புரை யோடின புண்கள், அழிரணம், குழிரணம், கைகால் முடக்கு, கீல்வாயு, முழங்கால்வாதம், கணைக்கால் வாதம் முதலிய அநேக நோய்கள் தீரும்.

**மருந்துணவு** :— நோயின் பலத்திற்குத் தகுந்தபடியும், உடல் நிலைமைக்குத் தகுந்தபடியும், புளி முதலியவைகளின் பத்தியத்தை ஏற்படுத்த வேண்டியது.

## 522. தீபலிங்க செந்தூரம்

இலிங்கம் (அ) 1 பலம் (35 கிராம்), திறமான பாற்சாம்பிராணி 1 பலம் (35 கிராம்), தீபகற்பூரம் 1 பலம் (35 கிராம்), (ஆ) மேற்றோல் சீவிய சுக்கு, அரிசித்திப்பிலி, மிளகு இவை வகைகுப் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்).

**செய்முறை** :— சாம்பிராணியைக் கல்வத்திற் பொடித்துச் சூடனையுஞ்சேர்த்து அரைத்து வந்தால் மெழுகு போலாகும். குறைந்தது மூன்று மணிநேரம் அரைக்கவேண்டும். பிறகு, அந்த மெழுகையெடுத்துப் பத்துபாகமாகச்செய்து வைத்துக்கொள்ளவும். ஒரு பாகத்தை ஒரு மெல்லியதுண்டு துணியில்பூசி இலிங்கக் கட்டியின்மேல் சுற்றி அழுந்தும்படியாக மெதுவாய் நசுக்கிவிட்டுக் கொளுத்திவிடவேண்டும், எரிந்தாறின பின்பு மேற்படி கருக்கை நீக்கிவிட்டு மறுபாகம் மெழுகை முன்போல் சீலைத்துண்டில் தடவி முன் இலிக்கக் கட்டியின்மேற்சுற்றி முன்போல் கொளுத்தி விடவேண்டும். எரிந்தாறின பின்பு முன்போற் கருக்கை நீக்கி விடவும். இவ்விதமே மீதியாயிருக்கிற மெழுகையும் முன்போல் துணியில் தடவி இலிங்கத்துக்குக் கவசித்தெரித்துச் சித்தப்படுத்திக்கொள்ளவும். இவ்விதம், பக்குவமாகப் பத்துத் தடவைகள் செய்ய இலிங்கமானது கட்டிப்போகும்.

(ஆ) விலுள்ள மூன்று சரக்குகளையும் இளவறுப்பாக வறுத்துச் சூரணித்துத் துணியில் வடிகட்டி கல்வத்திலிட்டு முன்சித்தப்படுத்தின இலிங்கக்கட்டியையும் கூடச்சேர்த்து ஒருமணிநோமரைத்துச் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— 2 முதல் 4 குன்றி எடை.

**துணைமருந்து** :— பனைவெல்லம், தேன், பஞ்சதீபாக்கினி இளகம், பறங்கிச்சக்கை இளகம் முதலியவைகளாம்.

**துணைமருந்தும், தீரும்நோய்களும்**:—இஞ்சிச்சாறு, வராகனெடை, தேன், வராகனெடை, இவ்விரண்டை மேற்கண்ட செந்தூரத்தைக் கலந்துண்ண, கிரந்திகள் குமட்டல்கள், சூலை, குன்மரோகம், வாயு, பறங்கப்புண், கரப்பான், தளுதளுப்பான படைகள், வண்டுகடி, தடிப்பு, கைகால் வெள்ளை, நீர்ச்சோகை பாண்டு, தேடாங்கள், சன்னி, மூர்ச்சை, மாதங்கள், வாய்ப்படைப்பு முதலியவைகள் தீரும்.



சீரகம் $1\frac{1}{4}$ வராகனெடை இஞ்சி $1\frac{1}{4}$ வராகனெடை இவ்விரண்டையும் சிதைத்து முக்கால் ஆழாக்கு நீரில் போட்டுக் கால் ஆழாக்குச் சுண்ணும்பு வைத்து வடிகட்டின குடிநீருடன் ஒரு வராகனெடை தேனைச் சேர்த்து மேற்கண்ட செந்தூரத்தை அளவுப்படி கலந்துண்ண நெஞ்சடைப்பு, பித்தவாயு சம்பந்த நோய்கள், வயிற்றில் எரிவந்தம், கைகால் காந்தல், ஆகியவைகள் தீரும்.

இன்னும், அந்தந்த நோய்களுக்குத்தகுந்த அனுபானங்களிலிட அநேக நோய்கள் தீரும். அனுபவசாலிகள் அனுபவத்தில் இதன் குணத்தைத் தெரிந்து கொள்ளக்கூடும்.

**மருந்துணவு**:— உடல் நிலை, நோய் வலிமை ஆகியவைகளுக்குத் தகுந்ததுபோல் மருத்துணவு ஏற்படுத்தவும்.

## 523. இலிங்க பற்பம்

இலிங்கம் 1 பலம் (35 கிராம்), பட்டிப்பூ 20 பலம் (700 கிராம்), பிராந்தி அல்லது சாராயம் 20 பலம் (700 கிராம்), எருக்கிலைச்சாறு செல்லத்தக்க அளவு, புளியம்புறணிச்சாம்பல் 5 பலம் (175 கிராம்), அரசம்பட்டைச் சாம்பல் 5 பலம் (175 கிராம்).

**செய்முறை**:— பட்டிப்பூவைக் கல்வத்திலிட்டுச் சாராயம் விட்டுத்தேய்த்த வெங்கலக்கிண்ணத்தில் அப்பிச்சாய்த்து வெய்யிலில் வைக்க சத்து இறங்கும். இந்தச் சத்தெல்லாம் ஒரு புட்டியில் சேகரித்துக்கொண்டு இலிங்கத்தை அப்பிரேகத் தகட்டின் மீது வைத்து கொஞ்சம் கொஞ்சமாகச் சுருக்கிடவேண்டும். அந்தச் சத்தெல்லாம் சுருக்கிட்டானபின்பு எருக்கிலைச்சாற்றுல் இரண்டுசாமம் சுருக்கிடவேண்டும். பிறகு, முன் இரண்டுவகைச் சாம்பலையும் ஒன்றுகக்கலந்து இரண்டு பங்காக்கி ஒரு பங்கை ஒருசிறுஓட்டில் வைத்து முன் சுத்தப்படுத்தின கட்டியை அதன் நடுவில் வைத்து அதன்மேல் மற்றொரு பங்கு சாம்பலைப் போட்டுக் கொஞ்சம் அழுத்தி விட்டு மேலோடு மூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் ஐந்துபங்கெடை வறட்டியில் புடமிட்டுக் குளிர ஆறின பின்பு எடுக்க இலிங்கமானது வெளுத்துக் கட்டியாக இருக்கும். சாம்பல் கலப்பில்லாமல் விழிப்புடன் எடுத்துப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு**:— 1 முதல் $1\frac{1}{2}$ குன்றி எடை.

**துணைமருந்து**:— இஞ்சிச்சாறு, சுக்குக் குடிநீர், தேன்,

பனைவெல்லம், நெய் இன்னும் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த இளகம், தூள் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்** :— சுரநோய்கள் சன்னிபாத சுரங்கள், கிரந்தி நோய், சூலைநோய்கள், பலவகைப்புண்கள், பலவகை வாயுக்கள் முதலியவைகள் தீரும். தாதுவிருத்தி, தேகசக்தி, தேக திடம் முதலியவைகள் உண்டாகும்.

## 524. இலிங்க பற்பம் (வேறு)

(அ) இலிங்கம் 1 பலம் (35 கிராம்), வேப்பங்காய்ச் சாறு சுமார் $\frac{1}{2}$ படி.

(ஆ) கருவங்கத்தை உராவின பொடி 5 பலம் (175 கிராம்) அடைவைத்த கோழிமுட்டையோடு 5 பலம் (175 கிராம்).

(இ) மருதம்பட்டைச் சாம்பல் 4 படி.

**செய்முறை:**— இலிங்கத்தை அப்பிரேகத் தகட்டின்மீது வைத்து வேப்பங்காய்ச்சாற்றைச் சிறுகச் சிறுகவிட்டுச் சுருக்கிட வேண்டும். மேற்படி சாறு போதாவிட்டால் மேலும், கொஞ்சம் சாறு அதிகமாகச் சேர்த்துக் கொள்ளலாம். கட்டியின்மீதுள்ள கருக்கு முதலியவைகளை நீக்கித் தூய்மைசெய்து வைத்துக் கொள்ளவும்.

(ஆ) விலுள்ள கருவங்கப்பொடியையும் அண்டஓட்டையும் கல்வத்திலிட்டு இரண்டுமணிநேரம் அரைத்து ஒரு குகையிலிட்டு குகைகளுச் சீலெட்டு உலர்த்திக் கொல்லுலையில் வைத்துக்குகை யுருக ஊதி எடுத்து ஆறவைத்துக் எடுக்க அதிலுள்ளதெல்லாம் நீர்த்து சுண்ணமாயிருக்கும்.

இந்தச் சுண்ணத்தில் கொஞ்சம் எடுத்து உமிழ்நீரை விட்டுக் குழைத்து முன் சுருக்கிட்ட இலிங்கக்கட்டியின்மேல் எங்கும் சமமாகப் படும்படியாகப் பூசி உலரவைக்கவேண்டும். அது உலர்ந்தபின்பு மறுபடியும் முன்போல் அந்தச் சுண்ணத்தை உமிழ் நீரால் குழைத்து முன்போல் கட்டியின்மீது தடவவேண்டும். இவ் விதம் உலரவுலர சுண்ணம் முழுவதையும் உமிழ்நீரால் குழைத்து கட்டிக்குப்பூசி செம்மையாக உலர்த்தி வைத்துக் கொள்ளவேண்டும். பிறகு, ஒரு சிறுகட்டியில் (இ) யிலுள்ள மருதம்பட்டைச் சாம்பலில் மூன்று ஆழாக்குச் சாம்பலைப்பரப்பி அதன்நடுவில் முன்



சித்தப்படுத்தின கவசத்தைவைத்து அதன்மீது மீதி ஐந்து ஆழாக்குச் சாம்பலையும் போட்டுக் கவசம் தெரியாமல் மூடிக் கொஞ்சம் அழுத்திவிட்டு மேற்சட்டிமூடி ஐந்து சீலைமண் செய் துலர்த்தி அடுப்பேற்றிக் கமலாக்கினியாக நான்குசாம நேரம் எரித்து ஆறவிட்டெடுக்க இலிங்கக் கட்டியானது சங்குபோல் வெண்ணிறமாக இருக்கும்.

**அளவு** :— $\frac{1}{2}$ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து** :— தாதுவிருத்திக்கானல்: பாலேடு, பால் அல்வா, கோதுமைப்பால் அல்வா, வெண்ணெய் முதலியவைகளாகும். சுக்குத்தூள், மிளகுத்தூள், பனைவெல்லம், தேன் முதலியவைகளும் இன்னும் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த சூரணம், இளகம் முதலியவைகளுமாகும்.

**தீரும்நோய்கள்** :— செரியாமை நோய், மந்தாக்கினி நோய், எல்லாவகைக் குன்மநோய், உதிரசூலை, பக்கசூலை, மேகசூலை, கிரந்திநோய், புண்கள், முதலியவைகள் தீரும். தாது நட்டம், போகசக்திக் குறைவு, முதலியவைகள் தீர்ந்து, தாது விருத்தி, தேகசக்தி, முதலியவைகள் உண்டாகும்.

**மருந்துணவு** :— நோய்க்குத் தகுந்தபடியும், உடல் நிலைமைக்குத் தகுந்தபடியும் மருந்துணவு ஏற்படுத்த வேண்டியது.

## 525. இலிங்க பற்பம் (வேறு)

இலிங்கம் $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்) இரசம் $1\frac{1}{2}$ பலம் ($52\frac{1}{2}$ கிராம்) வெங்காயச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:**—இலிங்கத்தையும், இரசத்தையும் சேர்த்துக் கல்வத்திலிட்டுக் கருக்கிறவரையிலரைத்துப் பிறகுவெங்காயச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து எட்டுசாமநேரம் அரைத்து ஒரு தம் காசு அளவு சிறுவில்லைகளாகச் செய்து உலர்த்தி வைத்துக்கொள்ள வேண்டும். கெட்டியான பூமியில் வளைபோன்ற ஒருகுழி செய்து அதில் அரைபாகம் கற்சுண்ணாம்பைப் பொடித்து நிறைத்து அதன் மீது முன்சித்தப்படுத்தின வில்லைகளைவைத்து அதன்மீதும் கற் சுண்ணாம்பைப்பொடித்துக் குழியின் வாய் மட்டம் நிறைத்துவிட வேண்டும். பிறகு, அந்தக் குழியின் வாய் ஓரத்திற்கு நான்கு அங்குலத்திற்கப்புறம் அதைச் சுற்றிலும் ஒரு சாண் அகலம் அகழியைப்போல் தோண்ட வேண்டும். இந்த அகழில் காட்டு வறட்டியை நிறைத்துவிடவேண்டும். வறட்டி முழுவதும் ஏககாலத்தில் பற்றிஎரியவேண்டியது அவசியமாகையால், விரற்கனமுள்ள திரியை எண்ணெயில் நனைத்து அந்த வறட்டியின்மீது சுற்றிலும்

வைத்துக் கொளுத்தி விடவேண்டியது. புடமெரியும்போது அதன் சாயை மற்றவர்கள் மீதுபடாமல் விலகிப்போடு இருக்க வேண்டும்.

புடம் ஆறினபின்பு எடுத்தால் வில்லைகளெல்லாம் வெண்ணிற மான பற்பமாயிருக்கும்.

**அளவு :—** ஒரு அரிசி எடை முதல் நான்கு அரிசி எடை வரையில்.

**துணைமருந்தும், தீரும்நோயும் :—** கருப்புக் கடுக்காய், காய்ச்சுக்கட்டி, துராஇலை ஆகியவை வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), இவற்றுள் ஒன்றை ஆழாக்கு நீரைவிட்டு அரை ஆழாக்காகச் சுண்டவைத்திறக்கி வடிகட்டி, இரண்டு வராகனெடை தேனைவிட்டு மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்து நாற்பது நாள் காலை மாலை இரண்டு வேளையும் உண்டுவர எல்லா வகைக் குட்டநோய்களும் தீரும்,

திராட்சைப்பழம், வாதுமைப்பருப்பு, வெற்றிலை, வெண்ணெய் ஆகிய ஒன்றில் மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண மூளையைப் பற்றின நோய்களெல்லாம் தீரும்.

இலவங்கத் தூள் அல்லது சாதிக்காய்த் தூள் $\frac{1}{4}$ வராகனெடை, தேன் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்) இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண எல்லாவித சீதள நோய்களும் தீரும்.

*சீமை* நீர்முள்ளிவிதைத்தூள் $\frac{1}{4}$ வராகனெடை, சாலாமிசிரித் தூள் $\frac{1}{4}$ வராகனெடை, தேன் 1 வராகனெடை இவற்றை சேர்த்து மேற்கண்ட பற்பத்தைப் அளவுப்படி கலந்துண்ண இந்திரிய கமலங்களிலுள்ள குற்றங்களை நீக்கி அவை பலப்பட்டு இந்திரிய விளைவுண்டாகும்.

வாதுமைப் பால்அல்வா $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), இதில் மேற் கண்ட பற்பத்தைப் அளவுப்படி கலந்துண்ண, தம்பனசக்தி, போகசக்தி முதலியவைகள் உண்டாகும்.

சுருக்கிச்சொல்லில் இந்தப் பற்பமானது பெரியநோய்களான குட்டநோய், தாதுக்குறைவு, சூலைநோய், வாதநோய், சன்னி நோய்கள் முதலியவைகளுக்குச் சஞ்சீவிக்கு ஒப்பானது; ஆகை யால், அருமையான மருந்துகளில் இதுவுமொன்று கடினத்திற்



சோம்பலுறாமல் சித்தப்படுத்தி வைத்துக்கொண்டால் உற்ற சமயத்தில் உதவியாகு மென்பதில் சந்தேகம் இல்லை.

**மருந்துணவு :—** இதனைச் சாப்பிடும்போது அதிகப்பசி உண்டாகுமாகையால் செரிக்கும் திறனுக்குத் தகுந்தபடி உணவு உட்கொள்வதை கவனித்துவரவேண்டியது.

## 526. இலிங்க பற்பம் (வேறு)

உலந்தா இலிங்கம் 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்) இது ஒரே கட்டியாக இருக்கவேண்டும். இதனை ஒரு பிங்கான் பாத்திரத்திற் போட்டு எலுமிச்சம்பழச் சாற்றை விடவேண்டும். இலிங்கக்கட்டி யானது எலுமிச்சபழச் சாற்றில் நான்கு அங்குலம் ஆழ்ந்தேயிருக்க வேண்டியது. இவ்விதம் ஓர் இரவும் பகலும் ஊறவைத்து இலிங் கத்தைக் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றையேவிட்டு அரைக்க வேண்டியது. சாறெல்லாம் சென்றபின்பு ஒரு உருண்டையாகச் செய்து நிழலிலுலர்த்திக் கொள்ளவேண்டும். பிறகு, கருஊமத்தங் காயைக் குடைந்து அதற்குள் மேற்படி இலிங்க உருண்டையை வைத்து ஊமத்தங்காயைச் சதையினுலடைத்துச் சந்தில்லாமற் செய்து வெள்ளை மெல்லிய துணித்துண்டை விளக்கெண்ணெ யில் நனைத்துக் காயைச் சுற்றிலும் சுற்றவேண்டியது. சுமார் ஒரு பெருந்தேங்காய்ப் பருமன் ஆகிவிட்டால் இரும்புக்கம்பியிற் கட் டித்தொங்கவிட்டுக் கொளுத்திவிடவேண்டும். சுவாலை அடங்கின வுடன் கம்பியிலிருந்தெடுத்துக் கீழே வைத்து ஒருவாயகன்ற சட்டி யில் மூடிவைத்து ஒருநாள் சென்றபின்பு எடுத்துக்கவசத்தைப் பிரித்துப்பார்த்தால் இலிங்கமானது வெண்ணிறமான பற்பமாகி இருக்கும்.

**அளவு :—** $\frac{1}{2}$ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து :—** வெண்ணெய், பாலேடு, பால்அல்வா, வாதுமை அல்வா முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** தாதுவிருத்தி, உடல்சக்தி, தம்பன சக்தி, தேகதிடம், நரம்புகளின்பலம் முதலியவைகளையுண்டாக்கு வதில் இது மிகவும் சிறப்புடையது.

**மருந்துணவு :—** சமயோசிதம்போல நல்ல ஆகாரங்களை யும், இரத்தவிருத்தியுண்டாகும் ஆகாரங்களையும் உபயோகிக்க வேண்டியது.

## 527. இலிங்க பற்பம் (வேறு)

இலிங்கக்கட்டி 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), வெங்காயச் சாறு ½ படி, அரசம்பட்டை 5 பலம் (175 கிராம்).

**செய்முறை :—** இலிங்கத்தை அப்பிரேகத் தகட்டின் மீது வைத்து மேற்படி வெங்காயச்சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்துச் சுருக்கிடவேண்டும். வெங்காயச்சாறெல்லாஞ் சென்றபின்பு அதன் மீதுள்ள கருக்கை நீக்கிவிட்டு அரசம் பட்டையை வெண்ணெய் போலரைத்து ஒரு உருண்டையாகச்செய்து அதற்குள் முன் சித்தப்படுத்தின இலிங்கக்கட்டியை வைத்து மூன்று சீலைமண் செய்து கவசத்தின் நான்கு பங்கெடை வறட்டியிற் புடமிட வேண்டும். ஆறினபின்பு எடுத்து முன்போல் அரசம்பட்டையை அரைத்து அதற்குள் வைத்து முன்போல் புடமிடவேண்டும் இவ்விதம் மடக்கிமடக்கி மூன்று அல்லது, நான்கு புடமிட்டால் இலிங்கமானது வெண்ணிறமான பற்பமாகியிருக்கும்.

**அளவு :—** ½ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து :—** பாலேடு, பால் அல்வா, வாதுமை அல்வா, கோதுமைபால் அல்வா முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** தாதுக்குறைவு, உடல் வலிமை யின்மை, நரம்புகளில் வலுவின்மை முதலியவைகளை நீக்கி தாது விருத்தி, அதிகரிக்கச் உடல் [illegible]ம், நரம்புகளின் சக்தி ஆகிய வைகளை செய்யும்.

**மருந்துணவு :—** புளிப்புப் பொருள்களை நீக்கவேண்டியது. பால், பால்சோறு, மிட்டாய்த் தினுசுகள் முதலியவைகளை அதிக மாகச் சேர்த்துவரவேண்டியது.

**குறிப்பு :—** இதில் தீ அதிகப்படியினும், குறைந்து விட்டாலும் பற்பமானது முறைப்பிரகாரம் ஆகாது. தீ குறைந்து விட்டால் இரண்டொருபுடம் அதிகமாகப் போட்டுக்கொள்ளலாம். தீ அதிகமாகிவிட்டால் கருகி வீணாய்ப் போகும். ஆகையால், இதனைச்செய்யும்போது தீ வைப்பதைப் பற்றி அதிக விழிப்புடன் இருக்க வேண்டும்.

## 528. இலிங்க பற்பம் (வேறு)

இலிங்கம் 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), உலர்த்தின மிளகாய்ச் செடியை எரித்த சாம்பல் 1 படி, இலந்தை விறகு 3 வீசை (4200 கிராம்).



**செய்முறை :—** அரைபாகம் சாம்பலை ஒரு சிறுபானையிற் போட்டு அதன் மத்தியில் மேற்படி இலிங்கக்கட்டியை வைத்து அதன் மீது மிச்சமுள்ள சாம்பலையும் போட்டுக்கொஞ்சம் அழுத்தி விட்டுப் பானையின் வாயை மண்தாலத்தால் மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி அடுப்பேற்றி இரண்டு விறகினுல் அடுப்பெரிக்க வேண்டும். விறகெல்லாம் ஆனபின்பு குளிர ஆறவிட்டு எடுத்தால் இலிங்கமானது வெண்ணிறமான பற்பமாகியிருக்கும்.

**அளவு :—** 1 முதல் $1\frac{1}{2}$ குன்றி எடை.

**துணைமருந்து :—** பாலேடு, பால்கோவா, வாதுமைப்பால் அல்வா, வெண்ணெய் முதலியவைகளாம்.

**தீரும்நோய்கள் :—** தாதுக்குறைவு, நரம்புகளின் வலுவின்மை, அசதி, சோர்வு முதலியவைகள் நீங்கிதாதுவலிமை, உடல் வலிமை, உடல்வலிவு முதலியவைகளெல்லாமுண்டாகும்.

**மருந்துணவு :—** இச்சாபத்தியம்; பசி சக்திக்குத் தகுந்த படி சத்துள்ள உணவுகளைச் சேர்த்துவரவேண்டியது.

## 529. இலிங்க பற்பம் (வேறு)

தூய்மைசெய்த இலிங்கம் 3 பலம் (105கிராம்), சரக்கொன்றை சமூலச்சாறு, எட்டிச் சமூலச்சாறு, புன்னைச் சமூலச்சாறு, வாட்கோரைச் சமூலச்சாறு, ஆத்திச் சமூலச்சாறு, மாவின் சமூலச்சாறு, கருவேலின் சமூலச்சாறு, கல்லாலின் சமூலச்சாறு இவை வகைக்கு ¼ படி.

**செய்முறை:—** இலிங்கத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்துச் சரக்கொன்றைச் சமூலச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்தரைத்து அந்தச் சாறெல்லாஞ் சென்றபின்பு வில்லை செய்துலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடுமூடி ஐந்து சீலைமண் செய்துலர்த்திக் கவசத்தின் இரண்டு பங்கு வறட்டியில் அப்புடமாகப் போட்டுக் குளிர ஆறின பின்பு எடுத்துக் கொள்ளவும். பிறகு, எட்டிச் சமூலச்சாற்றில் முன் போலரைத்து முன்போல் புடமிடவும். ஆனால், எட்டிலொரு பங்கு வறட்டியை அதிகப்படுத்தவும். இவ்விதமே புன்னைச் சாற்றிலும், வாட்கோரைச் சாற்றிலும், ஆத்திச்சாற்றிலும், மாம் பட்டைசாற்றிலும், கருவேலின் சாற்றிலும், கல்லாலின் சாற்றிலும் ஒவ்வொரு புடமிடவேண்டும். ஆனல், ஒவ்வொரு புடத்திற்கும் கவசத்தின் எட்டிலொரு பங்கெடை வறட்டியை அதிகப்படுத்திக் கொண்டு வரவேண்டும். இந்தப் புடத்தைக் கைபாகமாகவும் சாக்கிரதையாகவும் போட்டால் எவ்வித தடையுமின்றிப் பற்ப

மாகிறது. ஆனால், அனுபவத்தில் இதன் தீயை நிதானித்துக் கொள்ள வேண்டும். சில சமயம் கொஞ்சம் அதிகமாகவும் தீ வேண்டியதாயிருக்கிறது. ஆகையால், சமயோசிதம்போல அவசியமானபடி செய்ய வேண்டியது.

**அளவு:—** ½ முதல் 1 அரிசி எடை.

**துணைமருந்தும், தீரும்நோய்களும் :—** வாதசுவாச காசத்துக்கு முக்கிரட்டைச்சாற்றிலும், பித்த சுவாசகாசத்துக்கு இரட்டைப் பிரமட்டைச் சாற்றிலும், சேத்தும சுவாசகாசத்துக்கு அல்லிச் சாற்றிலும் கொடுக்க மேற்கண்ட நோய்கள் தீரும்.

வாதவீக்கத்துக்கு கள்ளிலும், பித்தவீக்கத்துக்கு கடுக்காய்க் குடிநீரிலும், சேத்துமவீக்கத்துக்கு தான்கறிக்காய்க் குடிநீரிலும் சேர்த்துக் கொடுக்க அவை தீரும்.

வாதசுரத்திற்கு குருவியிலைச் சாற்றிலும், பித்தசுரத்திற்குக் கல்லாலிலைச் சாற்றிலும், சேத்தும சுரத்திற்குப் பசுவின் தயிரிலும் சேர்த்துக் கொடுக்க அவை தீரும்.

வாத இரணத்திற்குப் பசுவின் மோரிலும், பித்த இரணத்திற்குப் தாய்ப்பாலிலும், சேத்தும இரணத்திற்குப் பசுவின் பாலிலும் சேர்த்து கொடுக்க தீரும்.

வாதமேகத்திற்கு வெண்ணெயிலும், பித்த மேகத்திற்குச் சர்க்கரையிலும், சேத்தும மேகத்திற்குக் கற்கண்டிலும் சேர்த்துக் கொடுக்கச் குணமாம்.

வாதக்கடுப்புக்குப் பனைவட்டிலும், பித்தக்கடுப்புக்கு வெல்லத்திலும், சேத்துமக் கடுப்புக்குக் கருப்பஞ் சாற்றிலும் சேர்த்துக் கொடுக்கக் சுகமாகும்.

வாதமுக்கலுக்குப் பசுவினெய்யிலும், பித்தமுக்கலுக்குத் தேங்காயெண்ணெயிலும், சேத்தும முக்கலுக்கு இளநீரிலும் சேர்த்துக் கொடுக்கத் அவை தீரும்.

வாதப்பிடிப்புக்குப் பன்னீரிலும், பித்தப்பிடிப்புக்குத் துளசிச் சாற்றிலும் சேத்துமப் பிடிப்புக்குத் திராட்சைச்சாற்றிலும் சேர்த்துக் கொடுக்க அவை தீரும்.

வாத உப்புசத்திற்கு நெல்லிச்சாற்றிலும், பித்த உப்புசத்திற்குக் கீழ்க்காய் நெல்லிச்சாற்றிலும், சேத்தும உப்புசத்திற்



பொன்னுங்காணிச் சாற்றிலும் சேர்த்துக் கொடுக்க அவை தீரும்.

வாதச் சொறிக்குக் கரிசாலைச்சாற்றிலும், பித்தச் சொறிக்கு வறண்முள்ளிச் சாற்றிலும் சேர்த்துக் கொடுக்கத் தீரும்.

வாத குன்மத்திற்குத் தும்பைச் சாற்றிலும், பித்த குன்மத்திற்குச் சாமந்திச் சாற்றிலும், சேத்தும குன்மத்திற்குக் கொட்டிச் சாற்றிலும் சேர்த்துக் கொடுக்க அவை நீங்கும்.

வாத சன்னிக்கு நெய்தற் சாற்றிலும், பித்தசன்னிக்கு வெந்நீரிலும், சேத்தும சன்னிக்குக் குளிர்ந்த நீரிலும் சேர்த்துக் கொடுக்கக் குணமாகும்.

**மருந்தளவு :—** உடலின்தன்மை, நோயின் வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தபடி மருந்தளவு ஏற்படுத்தவும்.

## 530. இலிங்கபற்ப இங்கிதமுறை

மேற்கண்ட வகைகளுள் ஒரு வகையாகச் செய்தெடுத்த **இலிங்கபற்பம்** ஒருபங்கு, கோங்கின் மலரரும்பு, மல்லிகையரும்பு, **பூசணியரும்பு**, புன்னையரும்பு, என்ற இவ்வாறையும் நிழலி லுலர்த்திப் பொடித்துத் தூள்செய்து துணியில் வடிகட்டிய தூள் வகைக்கு இரண்டு பங்கு இவை எல்லாவற்றையும் கல்வத்திலிட்டு எட்டுச் சாமநேரம் கைவிடாமல் அரைத்துக் கடலை அளவுள்ள மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி புட்டியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** ½ முதல் 1 மாத்திரை. (காலை, மாலை இரு வேளையும்)

**துணைமருந்தும், தீரும்நோய்களும் :—** குன்மத்திற்கும், முலைக்கண்ணின் இரணத்திற்கும், தாமரைச் சமூலச்சாற்றில் சேர்த்துக் கொடுக்கக் குணமாகும்.

**வயிற்றுவலிக்கும்**, தோளின் இரணத்திற்கும் **குப்பைமேனிச் சமூலச்சாற்றில்** சேர்த்துக் கொடுக்கக் குணமாகும்.

குன்ம சம்பந்தத்தாற் காணும் நளிருக்கும், மார்பின் பள்ளத்தின் இரணத்திற்கும், சீந்திற் சமூலச்சாற்றில் சேர்த்துக் கொடுக்கக் குணமாகும்.

குன்ம சம்பந்தத்தாற் காணும் மந்தத்திற்கும், தாடைப்

பள்ளத்திலுள்ள இரணத்திற்கும் அறுகு சமூலச்சாற்றில் சேர்த்துக் கொடுக்க அவை தீரும்.

குன்ம சம்பந்தத்தாற் கண்ட இரணத்திற்கும், முழங்கால் மடிப்பின் இரணத்திற்கும் இஞ்சிச்சாற்றில் சேர்த்துக் கொடுக்க அவை குணமாகும்.

## 531. இலிங்கச் சுண்ணம்

(அ) இலிங்கம் 1 பலம் (35 கிராம்), நந்தியாவட்டைப் பூச்சாறு 1 படி.

(ஆ) சுக்கான்கல் 3 பலம் (105 கிராம்), தும்பைச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இலிங்கத்தை அப்பிரேகத் தகட்டின்மீது வைத்து மேற்படி நந்தியாவட்டைப் பூச்சாற்றைச் சிறுகச் சிறுக விட்டுச் சுருக்கிடவேண்டும். அந்தச் சாறெல்லாம் சென்றபின்பு இலிங்கக்கட்டியை எடுத்து அதன் மீதுள்ள கருக்கை மெல்லிய கூரிய கத்திமுனையால் சீவி நீக்கிவிடவேண்டும். (ஆ)விலுள்ள சுக்கான் கல்லையும் பொடித்துத் தும்பைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரம் அரைத்து வெண்ணெய் போலான பின்பு ஒருமூசையும் அதற்குமேல் முடியும் செய்து உலர்த்திச் சித்தப்படுத்திக் கொள்ளவேண்டும். இரண்டு பலம் (70 கிராம்), நந்தியாவட்டைப் பூவை வெண்ணெய்போல அரைத்து முன் சித்தப்படுத்தின இலிங்கக்கட்டிக்குக் கவசம் செய்து முன் சித்தப் படுத்தியிருக்கிற குகைக்குள் வைத்து குகை வாய்க்குச் சீல்லிட்டு ஏழு சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் எட்டுப் பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின்னெடுக்க இலிங்கமானது மங்கலான வெண்ணிறமாக இருக்கும். ஆனால், மஞ்சளுக்குச் சிவக்கும்.

**அளவு:—** ½ முதல் 1 அரிசி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், வெண்ணெய், நெய், பாலேடு, பால்கோவா, வாதுமை அல்வா, முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—**வாயு நோய், சூலை நோய், கீல்வாயு, மேகவாயு, சன்னிபாத நோய்கள் முதலியவைகள் தீரும். தாதுக் குறைவு, நரம்புகளின் வலிவின்மை, மூளைவலிவின்மை, முதலிய வைகள் தீர்ந்து தாதுவலிமை, உடல் வலிமை முதலியவைகள் உண்டாகும். நரம்புகள் பலத்து முறுக்கேறி தெம்பும், தைரியமும் உண்டாகும்.



## 532. இலிங்கச் சுண்ணம் (வேறு)

கம்பி வெடியுப்பு 1 பலம் (35 கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம் 1 பலம் (35 கிராம்), இவ்விரண்டையும் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து வில்லைசெய்து செம்மையாக வெய்யிலிலுலர்த்தி இந்த வில்லையை விளக்கெண்ணெயில் தோய்த்து அகலிலிட்டு மேல கல்மூடி ஏழு சீலைமண் அழுத்தமாகச் செய்து உலர்த்தி நூறு பலம் வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுத்துக் கல்வத்தில் பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரம் அரைத்து 1 பலம் (35 கிராம்), இலிங்கக் கட்டிக்கு சமமாகக் கவசம் செய்து உலர்த்தி அதன்மீது 1 பலம் (35 கிராம்), அகத்தி விதையைத் தூள்செய்து வெள்ளைக்கருவை விட்டு மை போலரைத்து, அதன்மீது கவசித்து உலர்த்தி அகலிலிட்டு மேல கல் மூடி ஐந்து சீலைமண் செய்து உலர்த்தி 30 பலம் வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்க இலிங்கமானது வெளுத்துப் பற்பமாகி இருக்கும். ஆனால், மஞ்சளுக்குச் சிவக்கும்.

**அளவு :—** ½ முதல் 1 அரிசி எடை.

**துணைமருந்தும், தீரும்நோய்களும் :—** ஒரு வராகனெடை (3½ கிராம்), நல்ல வெல்லத்தில் மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண செம்மையாகக் கழிச்சலாகும். வயிற்றிலுள்ள கெட்ட மலங்களெல்லாம் வெளிப்பட்டு உடல் நலம் உண்டாகும்.

பனைவெல்லம் 1 வராகனெடை இதில் மேற்படி பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண எல்லாவகை கழிச்சல்களும் தீரும்.

தேன் 1 வராகனெடை இதில் மேற்படி பற்பத்தை அளவுப் படி கலந்துண்ண சுரம், சன்னி, தோடம் முதலியவைகள் தீரும்.

சுக்குத் தூள் ½ வராகனெடை, பொரித்த சீனக்காரத் தூள் ½ வராகனெடை, தேன் 1 வராகனெடை (3½ கிராம்) இவை எல்லா வற்றையும் சேர்த்துக் மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, திமிர்நோய், வாயுநோய் முதலியவைகள் தீரும்.

பறங்கிப்பட்டைத்தூள் 1 வராகனெடை (3½ கிராம்), தேன் 1 வராகனெடை (3½ கிராம்), இவ்விரண்டையும் சேர்த்து மேற்கண்ட பற்பத்தை அளவுப்படி கலந்துண்ண, இரணங்கள், வெடிப்புகள் முதலியவைகள் தீரும்.

**மருத்துணவு:—** நோயின் வலிமை உடல்வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தபடி சமயோசிதம்போல பத்தியமேற்படுத்தவும்.

## 533. இலிங்கப் பதங்கம்

இலிங்கம் *2* பலம் (*70* கிராம்), வளையலுப்பு *4* பலம் (*140* கிராம்) கறியுப்பு $1\frac{1}{2}$ ஆழாக்கு.

**செய்முறை :—** அடிகனத்த இரண்டு மண்சட்டியை எடுத்து இரண்டு சட்டிக்குப் பூவரசின் இலைச்சாற்றை உலர உலரப்பூசி உலர்த்தவேண்டும். இவ்விதம், மடக்கிமடக்கி ஏழு தடவைகள் செய்து கொண்டால் போதுமானது. பிறகு, முன்வளையலுப்பைப் பொடித்து இரண்டு பங்காங்கி ஒரு பங்கைச் சட்டியில் பரப்பிவைத்து அதன்மீது இலிங்கத்தைச் சிறுதுண்டுகளாகச் செய்து வைத்து அதன்மீது மறுபாதி வளையலுப்பையும் போட்டு சரக்கு தெரியாமல் மூடி அதன்மேல் கறியுப்பைத் தூள்செய்து அந்த உப்புத் தெரியாமல்மூடி விடவேண்டும். ஆனால், மத்தியில் காலணு அகலம் வட்டமான பள்ளம் கறியுப்பில் செய்து விடவேண்டும். பிறகு, மேற்சட்டிமூடி ஏழு சீலைமண் செய்துலர்த்தி வட்டடுப்பில் வைத்து தீபாக்கினி ஒருசாமம், கமலாக்கினி ஒரு சாமம், கடாக்கினி இரண்டுசாமம் ஆகக்கூடிய நான்குசாமமும் எரித்துக்குளிர ஆறினபின்பு எடுத்தால் மேற்சட்டி முதலியவைகளில் பதங்கம் ஏறிநிற்கும். இந்தப்பதங்கத்தை புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** $\frac{1}{2}$ முதல் *1* குன்றி எடை.

**துணைமருந்து :—** சுக்கு, பனைவெல்லம், சுக்குஇளகம், அமுக்கரா இளகம், பஞ்ச தீபாக்கினிஇளகம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** மேகவாயு, மேகசூலை, பக்கவாயு, சன்னிகள், சுரங்கள், முடக்குவாதம், கரட்டுச் சூலை முதலிய நோயகள் தீரும். இலகுவான வாயுகளுக்கு மூன்று அல்லது நான்கு வேளை கொடுத்து நிறுத்திக்கொள்ளவும்.

**குறிப்பு :—** முரட்டு நோய்களுக்கு முரட்டு மருத்துவம் அவசியம் வேண்டியது. ஆகையால், இதனை வாய்பிடிக்கிற வரையல் உபயோகித்துவரவேண்டும். வாய்பிடித்தால் மருந்தை நிறுத்திவிடவேண்டும். பிறகு, நோயும் தானே படிப்படியாகப் படிந்துபோகும்.



**மருத்துணவு :—** வாயுப் பொருள்கள் ஆகா. புளி, புகை ஆகியவைகளையும் நீக்கவேண்டியது. நெய், மோர், பால் ஆகியவைகளை உட்கொள்ளலாம்.

## 534. இலிங்காதி பதங்கம் (வேறு)

இலிங்கம் *12* வராகனெடை (*42* கிராம்), மடலரிதாரம், வீரம், இரச கற்பூரம், கெந்தகம் இவை வகைக்கு 6 வராகனெடை (*21* கிராம்), துத்தம், இரசம், வெண்காரம், வெள்ளைப் பாடாணம், நவச்சாரம் இவை வகைக்கு ௩ வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்), சோற்றுக்கற்றாழைச்சாறு செல்லத்தக்க அளவு, உப்பு $\frac{1}{2}$ படி, செங்கல்மா $\frac{1}{2}$ படி.

**செய்முறை :—** எல்லாச் சரக்குகளையும் தனித்தனியே பொடித்துக் கொள்ளவேண்டும். இரசத்தையும் கெந்தகத்தையும் சேர்த்து அரைத்துக் கொள்ளவேண்டும். பிறகு, எல்லாவற்றையும் ஒன்றுகச் சேர்த்துச் சோற்றுக்கற்றாழைச் சாற்றையும் சிறுகச்சிறுக விட்டு இரண்டுசாம நேரமரைத்து தாதுளங்காய்போல் உருண்டை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக்கொள்ளவும் பிறகு செங்கல் மாவையும் உப்பையும் சேர்த்திடித்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு பானைக்குள்போட்டு முன்சித்தப்படுத்தின உருண்டைகளையும் அதன்மீது பரப்பி அதன்மீது மிச்சமுள்ள செங்கல் உப்புப்பொடியையும் தூவி மேற்சட்டிமூடி ஏழு சீலைமண் செய்துலர்த்தி அடுப்பின் மீதேற்றித் தீபாக்கினி ஒருசாமம், கமலாக்கினி ஒருசாமம், காடாக்கினி இரண்டு சாமம் ஆகிய நான்கு சாமங்களும் எரித்துக் குளிர ஆறினபின்பு எடுத்தால் கட்டியின் மீது பதங்கம் ஏறியிருக்கும். இந்தப் பதங்கத்தை கவனத்துடன் சுறண்டி எடுத்துப் புட்டியில் வைத்துக் கொள்ளவும்.

கீழ்சட்டியிலுள்ள திப்பியைக் கல்வத்திலிட்டுக் கொஞ்சம் நீர் வார்த்து இரண்டு மணி நேரமரைத்து உளுந்து அளவுள்ள மாத்திரைகளாகச்செய்து வைத்துக்கொள்ள வேண்டும்.

**அளவு :—** பதங்கம்: $\frac{1}{2}$ முதல் *1* அரிசி எடை. மாத்திரை $\frac{1}{2}$ முதல் *1*.

**துணைமருந்து :—** வெண்ணெய், பால்ஆடை முதலியவைகளாகும். எட்டுநாள் அல்லது பத்துநாள் உபயோகிக்க வேண்டும்.

**தீரும்நோய்கள் :—** எல்லாவகைக் கிரந்திநோய்கள், குழிரணம், அழிகரணம், புரை இரணம் முதலிய எல்லாவகை இரணநோய்கள், கொடிப்பவுத்திரம், கிளைப்பவுத்திரம், மூலப்பவுத்திரம் முதலிய எல்லாவகைப் பவுத்திரநோய்களும், முளைமூலம், அடிமூலம், கிளைமூலம், முதலிய எல்லாவகை மூலநோய்களும், கண்டமாலை, ஓடுகண்டமாலை கழலைகள் முதலியவைகளும் தீரும். கப சம்பந்தமான வீக்கநோய்கள், ஆரம்ப குட்டநோய் முதலியவைகளும் இன்னும் அநேக நோய்களும் தீரும்.

**மருந்துணவு :—** உப்பு, மிளகாய் முதலியவைகளை நீக்க வேண்டியது. நெய்யில் பொரித்த பண்டங்களை அதிகமாகச் சேர்க்கவேண்டியது.

## 585. கண்டரச பற்பம்.

இதற்குச் சங்கு திராவகமுறை:— வெடியுப்பு 24 பலம் (840 கிராம்), இந்துப்பு 16 பலம் (560 கிராம்), கல்லுப்பு 8 பலம் (280 கிராம்), நவச்சாரம் 20 பலம், (700 கிராம்) சீனக்காரம் 40 பலம் (1400 கிராம்), பூநீறு 8 பலம் (280 கிராம்), வெண்காரம் 8 பலம் (280 கிராம்), நீலம் 2 பலம் (70 கிராம்), அன்னபேதி 2 பலம் (70 கிராம்).

**செய்முறை :—** இவை எல்லாவற்றையும் தனித்தனியே பிடித்துத் தூள்செய்து பிறகு ஒன்ருகச்சேர்த்து நன்ருக மசியும்படியாக இடித்து எட்டுப்பங்குசெய்து ஒருபங்கை வாலையிலிட்டு திராவகம் இறக்கவேண்டும். இறங்கின திராவகத்தை மறுபங்கிற் செலுத்தி முன்போல் திராவகமிறக்கவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி எட்டுத்தடவை திராவகமிறக்கி அரக்குக்குப்பியில் பத்திரப்படுத்தவும்.

இன்னொருவகைச் சங்குதிராவகம் :— வெடியுப்பு 24 பலம் (840 கிராம்), இந்துப்பு 16 பலம் (560 கிராம்), நவச்சாரம் 8 பலம் (280 கிராம்), அன்னபேதி 4 பலம் (140 கிராம்), துருசு 4 பலம் (140 கிராம்), படிக்காரம் 6 பலம் (210 கிராம்), பூநீறு 6 பலம் (210 கிராம்), வெண்காரம் 4 பலம் (140 கிராம்), கல்லுப்பு 19 பலம் (665 கிராம்).

**செய்முறை :—** இவற்றைத் தனித்தனியே இடித்துப் பிறகு எல்லாவற்றையுஞ்சேர்த்து நன்ருக மசியும்படியாக இடித்து எட்டுபாகமாக்கி ஒருபாகத்தை வாலையிலிட்டுத் திராவகமிறக்கி மறுபாகத்தில் சேர்த்துத் திராவக இறக்கவேண்டும். இவ்விதமே



மடக்கி மடக்கி ஏழுதடவை தொந்தித்து திராவகமிறக்கி அரக்குக் குப்பையில் பத்திரப்படுத்தவும்.

இலிங்கம் 8 பலம் (280 கிராம்) இதைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி இருவகைகளில் ஒருவகை திராவகத்தைச் சிறுகச் சிறுகவார்த்து நான்குசாமநேரம் அரைத்து ஒரு பானையில் வைத்து மறுபானைமூடி ஏழுசீலைமண்செய்து வட்டடுப்பில்வைத்து எட்டுச்சாமநேரம் காடாக்கினியாக எரித்து ஆறவிட்டுக்குளிர ஆறினபின்பு பிரித்து பதங்கத்தைச் சுறண்டிக் கல்வத்திலிட்டு முன் திராவகத்தைவிட்டு நான்குசாம நேரமரைத்து முன்போல் பானையிலிட்டு மேற்பானை மூடிச் சீலைமண் செய்து முன்போல் காடாக்கினியாக எட்டுச்சாமமெரிக்கவேண்டும். குளிர ஆறின பின்பு பதங்கத்தையெடுத்து முன்போலரைத்து முன்போலெரிக்கவும். இவ்விதம் மடக்கிமடக்கி ஐந்துதடவைகள் செய்தால் பதங்கமானது மேலே ஏருமல் கீழேயே நின்றுவிடும். அது தான் பக்குவம். கீழேயே நிற்காமல் மேலேறியிருந்தால் பழைய படி திராவகத்தைவிட்டு அரைத்துப் பதங்கம் ஏற்றவேண்டும். இரண்டொருதடவை அதிகமாகச்செய்தால் கீழேயே தங்கிவிடும். கவனமாக பதங்கத்தையெடுத்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 2 அரிசி எடை.

**துணைமருந்து :—** வெல்லம், சுக்குத்தூள், வெண்ணெய், நெய் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:—** சூசிகாநோய், காமாலைநோய், பாண்டுநோய், மகோதரம், அட்டகுன்மம், வாயுநோய்கள், உதிரவாயு, நாபிவாயு சூலைகள், மலசலபந்தம், கிராணிநோய், மூலநோய்கள், சுரநோய்கள், நடுக்கல்நோய், ஒடுக்கநோய், மேகவாயு, முத்தோடங்கள், சன்னிநோய்கள். கிரந்திநோய்கள், கைகால்முடக்கல், அண்டவாயு, மூலவாயு முதலிய அநேக சண்டிநோய்களும் தீரும்.

**மருந்துணவு:—** இது இரச சம்பந்த மருந்தாகையால் புளிப்புப் பொருள்களை நீக்கி உபயோகிப்பது உத்தமம். வாலிபர்கள், பெண்கள் முதலியவர்களுக்கு இலேசான பத்தியம் வைத்து உபயோகிக்கலாம்.

**குறிப்பு:—** இந்த மருந்தானது பிரபல வைத்தியர்கள் ஒவ்வொருவர் கையிலும் அவசியமிருக்கத் தக்கவைகளில் ஒன்று இது திராவக சம்பந்தமாகச் செய்யப்படுகின்றபடியால் வாய்

முதலியவைகள் பிடிக்காமல் அநேக சண்டிநோய்கள் தீருகின்றன. வேறெந்த மருந்திலும் தீராத சில முரட்டு நோய்களும் இந்த மருந்தினல் தீருகின்றபடியாலும், வேறுவகைக் கெட்ட குணங்கள் இதிலில்லாத படியாலும் இது எல்லோரும் கையாளத் தக்கது. ஆனல் இதுசெய்வதற்குக்கொஞ்சம் கடினமாகையால் கடினத்திற்குப் பால்மாருதவர்கள் செய்து இது பலருக்கும் உபயோகப்படும்படி உதவி செய்வார்களென நம்புகிறேம்.

**குறிப்பு:**— இந்த முறையானது தேரையர் கரிசலென வழங்கப்படுகிற நூலில் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனல் கைபாகப்பிசகிஞல் அநேகர் அதனைச்செய்து ஏமாந்து விடுகின்றனர்கள். சங்கதிராவகம் அநேக வகைகளாகச் செல்லப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு அனுபவசாலிகளுக்கும் குறைந்தபட்சம் ஒவ்வொரு முறை தெரிந்தேயிருக்கும். ஆயினும், நமது பரம்பரையில் அனுபோக சித்தமாக அடிக்கடி கையாண்டுவரும் இரண்டு முறைகள் மேலே எழுதப்பட்டிருக்கின்றன. இந்த முறைப்படி திராவகத்தை இறக்கிக் கொள்ளவேண்டியது அவசியம். இரண்டாவது இலிங்கத்தை மேற்படி திராவகம் விட்டரைத்துப் பானையில் வைத்தெரிப்பதனல் அரைப்புப் பேதத்தினலும், அக்கினியின் பேதத்தினலும், பதங்க மேறுவதற்குப் பதிலாக வாலை இரசமாகி விடுகிறது. ஆகையால், முதல்தடவை இலிங்கத்தை அரைத்து வில்லைசெய்து சட்டியில் செங்கல்மாவையும் உப்பையும் சேர்த்திடித்துப் பானையிறப்போட்டு அதன்மீது வைத்தெரிந்தகல் வாலை இரசமாகாமல் பதங்கமேறிவிடும். அல்லது எட்டுப்பலம் இரசத்தைக் குப்பியில் வைத்தெரித்துப் பதங்கமாகச் செய்து இந்தப் பதங்கத்தையெடுத்து மேற்படி திராவகத்தை விட்டரைத்து மேலே சொல்லியிருக்கிற ஏழுதடவை மடக்கிமடக்கிப் பதங்கித்து எடுந்துக்கொள்வதும் ஒருபாகமாம். இப்படிச் செய்வதில் குணத்தில் எவ்வித வேறுபாடுகளும் காணப்படவில்லை. இதனையெரிக்கும்போது ஆரம்பத்தில் கொஞ்சம் மெதுவாக எரித்து முறைப்படித் தீயை அதிகப்படுத்தியும் வரவேண்டும். இன்னும் மேல் கடத்திற்கு வெற்றிலைச்சாறு, ஊமத்தனிலைச்சாறு, முருக்கிலைச்சாறு ஆகியவைகளிலொன்றை உலர உலரப்பூசிச் சித்தப்படுத்திக் கொள்ளவேண்டும். பதங்கத்தை எரிக்கும் போது மேற்சட்டியின்மேலே ஈரத்துணியைப் போட்டு வைக்கவேண்டும். அது உலர்ந்து போகாமல் ஈரமாயிருக்கும்படி அடிக்கடி அதனை நனைத்தும் வரவேண்டும்.

இன்னஞ் சில முக்கியமான விஷயங்களை கவனித்துச்செய்தால் தடையின்றி இந்த மருந்து முடிவதில் சந்தேகமேயில்லை.



அவசியமானவர்கள் பதங்க விதிகளைப்பற்றி நமது **இரசவாத சிந்தாமணியை** பார்வையிடவும்.

## 536. நீலகண்டவாலை

(அ) இலிங்கம் 4 பலம் (140 கிராம்).

(ஆ) தாளகம், வீரம், இரசகற்பூரம், நெல்லிக்காய்க் கெந்தகம், மனேசிலை, சூடன், துருசு, வெள்ளைப்பாடாணம், சீனக்காரம், சிறுகண்நாகம், கருவங்கம், தூய்மைசெய்த பூநீறு, வெடியுப்பு இவை வகைக்குப் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்).

(இ) கறியுப்பு $\frac{1}{2}$ படி, செங்கல்மா $\frac{1}{2}$ படி, சித்திரமூலவேர்ப் பட்டைத்தூள் செல்லத்தக்க அளவு, தைவேளைச்சாறு செல்லத் தக்க அளவு.

**செய்முறை:**— (ஆ) விலுள்ள சிறு கண்நாகத்தையும் கருவங்கத்தையும் சேர்த்துருக்கி தாளகத்தையும் மனேசிலையையும், பொடித்துச் சிறுகச் சிறுக சுருக்கிட்டு இரும்புக் கரண்டியாற கடைந்து வந்தால் இரண்டு சரக்கும் மடிந்து தூளாகி அரைப் பிற்கு வரும். பிறகு, (அ) விலுள்ள இலிங்கம், (ஆ) விலுள்ள மற்ற சரக்குகள் எல்லாவற்றையும் ஒன்ருகச் சேர்த்துக கற்ருழைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாம நேரம் அரைத்து தூதுவளங்காய்ப் அளவு உருண்டை செய்து நிழலிலுலர்த்தி வைத்துக் கொள்ளவும். (இ) யிலுள்ள உப்பையும் செங்கல்மாவையும் சேர்த்து இடித்து இரண்டு பாகமாக்கி ஒருபாகத்தை அடிகனந்த ஒரு பானையில் போட்டுப் பரப்பி நடுவில் சித்திரமூலவேர்ப்பட்டைத் தூளைக் கொஞ்சம் பரப்பி அதன்மேல் முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற உருண்டைகளைப் பரப்பி அதன்மீது சித்திரமூலவேர்ப்பட்டைத் தூளைத்தூவி தைவேளைச் சாற்றைத் தெளித்து அதன்மேலே செங்கல்மா உப்பு பாகத்தைக் கும்பலாகப் போட்டு மேல்சட்டிக்குச் சித்திரமூலச்சாறு ஏழுதடவை உலர உலரப்பூசிக் காயவைத்து மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பேற்றி முதல் இரண்டுசாமம் தீபாக்கினியாகவும், அடுத்த இரண்டுசாமம் கமலாக்கினியாகவும் அடுத்த பன்னிரண்டு சாமம் காடாக்கினியாகவும் ஆகப் பதினறுசாமம் எரித்துக் கீழிறக்கிச் சாய்த்துவைத்து ஆறவிட்டுக் குளிர ஆறின பின்பு பக்குவமாகச் சீலைமண்ணைப் பிரித்துப் பதங்கத்தைச் சுறண்டியெடுத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:**— $\frac{1}{2}$ முதல் 1 அரிசி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், சுக்கு வெண்ணெய், பாலேடு, தாய்ப்பால் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** எண்பதுவகை வாதநோய்கள், எட்டுவகைக் குன்மம், மேகம், வலிப்பு, சூலை, எல்லாவகை வாயு, கபம் முதலிய அநேக நோய்கள் தீரும். புத்திச்சாலிகளான அநேக மருத்துவ வல்லுநர்களுக்கு இதன் அருமை பெருமைகளெல்லாம் தெரிந்தேயிருக்கும்; ஆகையால், இதைப்பற்றி அதிக விரிவாக எழுதாது சுருக்கமாகக் குறிக்கப்பட்டிருக்கிறது. விருப்பம் உள்ளவர்கள் இதனைச்செய்து இதன் சிறந்தகுணத்தை அனுபவத்தில் நிச்சயித்துக் கொள்ளலாம்.

## 537. உருத்திரவாயு இலிங்க மாத்திரை

(அ) இலிங்கக்கட்டி *1* பலம் (*35* கிராம்).

(ஆ) வெண்காரம் *1* பலம் (*35* கிராம்), துருசு *1* பலம் (*35* கிராம்), வெள்ளைப்பாடாணம் *1* பலம் (*35* கிராம்), எருக்கம்பால் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** (ஆ) விலுள்ள மூன்று சரக்குகளையும் சேர்த்துப் பொடித்து எருக்கம்பாலைச் சிறுகச் சிறுகவார்த்து இரண்டுசாமநேர அரைத்து வெண்ணெய் போலானபின்பு மூன்று பாகமாகச்செய்து ஒரு பாகத்தை (அ) விலுள்ள இலிங்கக்கட்டிக்கு எங்கும் சமபாகமாகக்கவசித்து உலர்த்திக்கொள்ளவும், கறியுப்பு *3* பலம் (*105* கிராம்), இதனைப்பொடித்து எருக்கம்பாலைச் சிறுகச் சிறுகவார்த்து அரைத்து வெண்ணெய் போலான பின்பு மூன்று பாகமாக்கி ஒருபாகத்தை முன் சித்தப்படுத்தி இருக்கிற கவசத்தின்மீது சமமாகப்பூசி உலர்த்தி நான்குவிரல் ஆழமும் ஒரு சாண் சதுரமும் உள்ள குழிதோண்டி இரண்டங்குல மணலைப் போட்டு அதன்மீது கவசத்தை வைத்து அதன்மீது நான்கு அங்குலம் மணலைக்கொட்டிச் சுமார் *50* பலம் (*1750* கிராம்) வறட்டியை அடுக்கி நெருப்பிட்டுப் புடமிடவேண்டும். ஆறினபின்பு எடுத்தால் கவசமானது கருகவெந்த பதமாக இருக்கவேண்டும்; அப்படி இல்லாவிட்டால் கீழ்மேலாகத் திருப்பி வைத்து முன்போல் புடமிடவும். ஆறினபின்பு எடுத்து இலிங்கத்தின்மீதுள்ள கவசத்தைநீக்கிவிட்டு முன் எடுத்துவைத்திருக்கிற இரண்டுபங்கில் ஒரு பங்கை இந்த இலிங்கக்கட்டிக்குக் கவசஞ்செய்து அதன்மீது முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற உப்பில் ஒரு பாகத்தைக் கவசஞ்செய்து வெய்யிலில் உலர்த்தி முன்போல் மணல் மறைவிற் புடமிடவேண்டும். மூன்றுந்தடவையும் முன் இரண்டு மருந்துகளையும் முன்போற் கவசித்து முன்போல் மணல் மறைவில் புடமிட்டெடுத்து இலிங்கத்திற்குச் சமனெடை பொரித்த வெண்காரத்தைச் சேர்த்துப் பொடித்து முலைப்பாலைச் சிறுகச்சிறுக வார்த்து ஒருசாமநேர அரைத்து மிளகு அளவு மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்தி பத்திரப்படுத்தவும்.



**அளவு:—** $\frac{1}{2}$ முதல் *1* மாத்திரை.

**துணைமருந்து:—** காலையில் இஞ்சிச்சாறு, மாலையில் சுக்குக்குடிநீர். காலை, மாலை இரண்டுவேளையும் நோயின் வலிவிற்குத் தகுந்தபடி பத்துநாள், இருபதுநாள் உபயோகிக்கவும்.

**தீரும்நோய்கள்:—** உருத்திரவாயு, மூச்சடைப்பு, பக்கவாயு, விதைவாயு முதலிய அபாயகரமான அநேக வாயுநோய்கள் தீரும்.

**மருத்துணவு:—** இச்சாபத்தியம்.

**குறிப்பு:—** இலிங்கத்தின் மீதுள்ள கவசத்தை ஒன்றுகச் சேர்த்து எருக்கம்பாலை விட்டரைத்து வில்லை செய்து உலர்த்தி ஆறவிட்டு மேலகல்மூடி சீலைமண்செய்து உலர்த்திக் கவசத்தின் நான்குபங்கெடை வறட்டியில் புடமிடவேண்டும். ஆறினபின்பு எடுத்து மறுபடியும் முன்போல் எருக்கம்பாலில் அரைத்து முன்போல் புடமிடவேண்டும். இவ்விதம், மடக்கி மடக்கி ஐந்துபுடமிட்டு எடுத்துக்கொள்ளவும்.

**அளவு:—** $\frac{1}{2}$ முதல் *1* குன்றி எடை.

**துணைமருந்து:—** பனைவெல்லம், சுக்கு, இளகம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:—** எல்லாவகைச் சூலைநோய், வாயுநோய்கள் முதலியவை தீரும்.

## 538. இலகு இலிங்க மாத்திரை

தூய்மைசெய்த இலிங்கம் $2\frac{1}{2}$ வராகனெடை ($8\frac{3}{4}$ கிராம்), தாளிசப்பத்திரித்தூள் *10* வராகனெடை (*35* கிராம்) *350* தேன் செலத்தக்க அளவு.

**செய்முறை:—** முன்னிரண்டு சரக்கையும் கல்வத்திலிட்டுத் தேனைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டு சாமநேரமரைத்துக் கடலை

அளவு மாத்திரைகள் செய்து பீங்கான் சிமிழில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு:—** ½ முதல் 1 மாத்திரை.

**துணைமருந்து:—** இஞ்சிச்சுரசம், சுக்குக்குடிநீர், அதிமதுரக்குடிநீர் முதலியவைகளாகும.

**தீரும்நோய்கள்:—** காலை, மாலை இரண்டுவேளையும் உபயோகித்துவர எல்லாவகை சுரநோய்களும் தீரும். கபசம்பந்தமான சுரத்துடன் உண்டாகும் இருமல் முலையவை தீரும்.

## 539. மார்த்தாண்ட பைரவம்

தூய்மைசெய்த இலிங்கம் 1 பலம் (35 கிராம்), தூய்மைசெய்த நேர்வாளம் ¾ பலம் (26¼ கிராம்), பொரித்த வெண்காரம் ½ பலம் (17½ கிராம்), தூய்மைசெய்த நவாச்சாரத் தூள் ¼ பலம் (8¾ கிராம்), எலுமிச்சம்பழச்சாறு செல்தத்தக்க அளவு.

**செய்முறை:—** நேர்வாளத்தைத தவிர மற்றெல்லாச் சரக்குகளையும் சேர்த்துப் பொடித்து வைத்துக் கொள்ளவும். நேர்வாளத்தைக் கல்வத்திலிட்டு எலுமிச்சம்பழச் சாற்றை வார்த்து அரைத்து வெண்ணெய் போலானபின்பு முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற தூளையும் நான்கு சாமநேரமரைத்து குன்றிமணி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்திக் கொம்புச் சிமிழில் அல்லது பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** 1 மாத்திரை. கழிச்சலாக வேண்டியதிருந்தால் சமயோசிதம்போல இரண்டுமூன்று உபயோகிக்கலாம். சிறு குழந்தைகளுக்கு அரைமாத்திரை போதுமானது. கழிச்சலாக வேண்டியதானல் ஒன்று ஒன்றரை கொடுக்கலாம்.

**துணைமருந்து:—** சுக்குக்குடிநீர், மிளகுக்குடிநீர், இஞ்சிச்சாறு, அரிசித்திப்பிலித் தூள், சீனிசர்க்கரை, பனைவெல்லம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:—** சுரங்கள், சுரத்தோடு கூடிய சுவாசம், உதரநோய், உன்மத்தநோய், பாண்டு, செரியாமை தருணசுரம், அக்கினிமந்தம், குன்மம், கப சம்பந்த வாதநோய், வாயுநோய், சூலைநோய், சோமோதரநோய், வாதரத்தநோய், குஷ்டு, மூலநோய் முதலிய அநேக நோய்களும் தீரும்.



**மருந்துணவு:—** மோர்சோறு சமயோசிதம்போல வேறு பத்தியங்களுமேற்படுத்தலாம்.

## 540. வஜ்ஜிரகண்டி மாத்திரை

தூய்மைசெய்த இலிங்கம் 8 வராகனெடை (28 கிராம்), இரசசெந்தூரம் 2 வராகனெடை (7 கிராம்) இரசகற்பூரம் 1 வராகனெடை (3½ கிராம்), வீரம் ½ வாரகனெடை எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** எல்லாவற்றையும் ஒன்றுகச் சேர்த்துப் பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து ஒரு சாமமும், இஞ்சிச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து ஒரு சாமம். அரைத்துக் குன்றிமணி அளவு மாத்திரைகளாகச் செய்து பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 1½ மாத்திரை.

**துணைமருந்து :—** இஞ்சிச்சாறு, சுக்குக் குடிநீர், கொடிவேலி வேர்ப்பட்டைக் குடிநீர், தேன், பனைவெல்லம், அந்தந்த நோய்களுக்குத் தகுந்த இரசம், தூள் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** ஐந்து நாளுபயோகித்தால் மேல் குடைச்சல், விதைவாதம், சூர்ச்சை, கணுக்கால் வாயு, முதலியவை தீரும். 10 நாள் உபயோகித்தால் புண், புரை முதலியவை தீரும். சுரத்திற்கு மூன்றுவேளை போதுமானது. தாகமுள்ள நடுக்கலுக்கு இரண்டு நாள் போதுமானது. இன்னும் வெள்ளை, அரையாப்பு, கண்டமாலை, தோடம், சன்னி, முதலியவைகளும் தீரும்.

**மருத்துணவு :—** சிறுபயறு, முருங்கைப்பிஞ்சு, ஆட்டிறைச்சி வற்றல், மிளகுநீர், துவரை, அரைக்கீரை, பால்கஞ்சி கோதுமைக்கஞ்சி, காடைச் சூப்பு, முதலியவைகளாகும்.

## 541. வஜ்ஜிரகண்டித் தைலம்

மேற்படி மாத்திரையை உபயோகித்த பின்பு கீழ்க்காணும் தைலத்தைத் தேய்த்துத் தலைமுழுகி வருவதால் அநேக குணங்களுண்டாயிருக்கின்றன. அது பின் வருகிற விதமாகும்.

நுணாப்பட்டை. துளசிவேர்ப் பட்டை, வெள்ளைப்பூண்டிதழ், மிளகு, மஞ்சள், கருவேப்பிலை ஈர்க்கு, இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்) இவையெல்லாவற்றையும் சிதைத்து நான்கு

படி தண்ணீரில் போட்டு எட்டிலொரு பாகமாகச் சுண்டவைத் திறக்கி வடிகட்டின குடிநீருடன் கால்படி எள் எண்ணெயைச் சேர்த்துக்காய்ச்சி கடுகுதிரள் பதத்திலிறக்கி வடிக்கட்டி வைத்துக்கொள்ளவும். தலைமுழுகுவது வெந்நீரில் சிகைக்காய் இட்டுச் செய்யவும். அன்று இச்சாபத்தியமாக இருக்கவும்.

## 542. இலிங்கப் புகை

தூய்மைசெய்த இலிங்கம் ஒருபங்கு, உலர்த்தின கள்ளிப் பட்டை ஒருபங்கு. இரண்டையும் நூள்செய்து வைத்துக் கொள்ளவும். இதில் சுமார் ¼ வராகனெடை எடுத்துப் பஞ்சில் தெளித்துச் சுங்கானில் வைத்துப் புகைபிடித்து உள்ளுக்கு விழுங்கவும். உடல் வலிமைக்குத் தகுந்தபடி காலை, மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கலாம். அல்லது காலையில் ஒரு வேளை மாத்திரம் உபயோகிக்கலாம்.

**தீரும்நோய்** :—சூலைக்கட்டுத் தீரும்.

**மருந்துணவு** :—சோறு தவிர மற்றொன்றும் ஆகாது. அவசியமானால் கொஞ்சம் சீனிசர்க்கரை சேர்த்துக் கொள்ளலாம். நோய் வலிவிற்குத் தகுந்தபடி மூன்று நாள், ஐந்து நாள், ஏழு நாள் உபயோகிக்கலாம். மறு பத்தியமுமிருந்து பத்தியத்தை முறித்து விடலாம்.

## 543. இலிங்கப் புகை (வேறு)

இலிங்கம் 5 வராகனெடை (17½ கிராம்), (இது ஒரே கட்டியாக இருக்கவேண்டும்). சாராயம் செல்லத்தக்க அளவு கோழி முட்டை வெள்ளைக்கரு செல்லத்தக்க அளவு, அத்திப்பால் செல்லத்தக்க அளவு.

**செய்முறை**:— இலிங்கத்தை அப்பிரேகத் தகட்டின் மீது வைத்துச் சாராயத்தைச் சிறுகச் சிறு கவார்த்து ஒரு சாமநேரஞ் சுருக்கிடவேண்டும். பிறகு, கோழிமுட்டை வெள்ளைக்கருவால் ஒரு சாமநேரம் சுருக்குக் கொடுத்துக் கட்டியின்மீதுள்ள கருக்கு முதலியவைகளை நீக்கிப் பொடித்துப் புட்டியில் வைத்துக்கொள்ளவும். ஒரு சேலைத்துண்டை அத்திப்பாலில் நனைத்து உலர்த்தி வைத்துக்கொள்ளவும். அவசியமானபோது இந்தத்துணியில் ஒரு துண்டைக்கிழித்து முன் சித்தப்படுத்தின இலிங்கப்பொடியில் கொஞ்சமெடுத்துத் தூவி சுங்கானில்வைத்து புகை பிடிக்கவும். புகைபிடிக்கும்போது கொஞ்சம் புகையைவிழுங்கி மூக்குவழியாக



விடவேண்டும். காலை, மாலை இரண்டு வேளையுமாக மூன்று நாட்கள் செய்யின் போதுமானது.

**தீரும்நோய்கள்** :— நாக்குப்புண், கால்புண், கால்சூலை முதலியவைகள் தீரும்.

**மருந்துணவு** :— நோய் கடுமையாயிருந்தால் புளியை நீக்கி பால்சோறு மாத்திரம் உபயோகித்து வரவும். நோய் இலேசாயிருந்தால் அதற்குத் தகுந்தபடி இலகுவாகப் பத்தியம் வைக்கவும்,

## 544. இலிங்கப் புகை (வேறு)

சாதிலிங்கம் 6 வராகனெடை (21 கிராம்), இரச கற்பூரம் 3 வராகனெடை (10 கிராம்), சீனக்காரம் ¾ வராகனெடை.

**செய்முறை**:— இவை எல்லாவற்றையும் பொடித்து ஆறு திரிகளாகச் செய்துவைத்துக் கொள்ளவும்.

**தீரும்நோய்கள்**:— திரியைக் கொளுத்தி நோயுடையேனுடைய உடலில் படும்படி செய்யவேண்டியது இதற்காக கனமான துப்பட்டியைக் கழுத்திலிருந்து தேகத்தின்மீது போர்த்தி நாற்காலியில் உட்காரவைத்துக் கொளுத்தி புகைபிடித்தால் உத்தமம். இப்படி மூன்று நாள் செய்தால் கிரந்திப்புண், அரையாப்பு, பிளவை, தீராத இரணங்கள் ஆகியவைகள் தீரும்.

**மருந்துணவு** :— தண்ணீர் வாய் கொப்பளிக்கக் கொடுக்கவும்; நல்லெண்ணெய், கடுகு, தேங்காயெண்ணெய், கேழ்வரகு ஆகியவைகளை நாற்பத்தைந்து நாள் வரையில் உபயோகிக்காமல் பத்தியமாக இருக்க வேண்டியது.

## 545. இலிங்கப் புகை (வேறு)

இலிங்கம் 2½ வராகனெடை (8¾ கிராம்), கருஞ்சீரகம் 1½ வராகனெடை கஸ்தூரி மஞ்சள் 1½ வராகனெடை, எருக்கம் வேர்த்தோல் 10 வராகனெடை (35 கிராம்), நொச்சிக்கொழுந்து 5 வராகனெடை (17½ கிராம்).

**செய்முறை**:— இலிங்கத்தை நுண்மையாகத் தூள்செய்து வைத்துக்கொள்ளவும். கருஞ்சீரகத்தையும், கஸ்தூரிமஞ்சளையும், தனித்தனியே தூள்செய்து முன் இலிங்கத்தூளுடன் சேர்த்துச் செம்மையாக ஒரு மணிநேரம் அரைத்துக் கொள்ளவும். வேரையும் கொழுந்தையும் பஞ்சுபோல் நறுக்கி முன்மருந்தைக்

கொஞ்சங் கொஞ்சமாகத் தூவி எல்லாம் ஒன்றாக சேரும்படி அரைத்துக் கையினலுதிர்த்துக் காயவைத்து பதினறு பங்கு செய்து ஒரு பங்கைச் சுங்கானில் வைத்து ஊதிப் புகைப்பிடிக்க வும். நாலுமிடறை வெளியில் விட்டு ஒருமிடற்றை உள்ளிறக் கவும். இவ்விதம், காலை மாலை இரண்டுவேளையும் செய்து வர வேண்டியது.

**தீரும்நோய்கள் :**—முகவாதம், தந்தவாதம், கால்கை குடைச்சல், விழிகளின் வீக்கங்கள், நரம்புகளைப்பற்றிய நோய் கள் முதலிய அநேக கடினமான நோய்கள் தீரும். நோயின் வலிவிற்குத் தகுந்தபடி பதினைன்று, பதின்மூன்று நாளுப யோகிக்கவும்.

**மருந்துணவு:**— புளி, நல்லெண்ணெய், வெங்காயம், ஆகியவைகளை நீக்கவும். கஞ்சி, ரொட்டி, பால்சோறு முதலிய வைகளாகும். வெந்நீர் பருகச் செய்து வரவும். மருந்து சாப் பிட்டபின்பு மூன்று அல்லது நான்குநாள் ஆறப்போட்டு பசுவின் நெய், விளக்கெண்ணெய் ஆகியவைகளில் அல்லது இரண்டைச் சேர்த்துச் சிகைக்காயிட்டு வெந்நீரில் தலைமுழுகச் செய்யவும். இவ்விதம், மூன்று நான்கு தலைமுழுக்குச் செய்து இருபதுநாள் கள் சென்றபின்பு நல்லெண்ணெய் சேர்க்கவும்.

## 546. இலிங்கத் தைலம்

இலிங்கம் 2 வராகனெடை (7 கிராம்) நல்லெண்ணெய் 8 பலம் (280 கிராம்).

**செய்முறை:**— வெள்ளிபோல துலக்கிய ஒரு பெரிய இரும்புக் கரண்டியில் இலிங்கத்தை வைத்துத் தீபாக்கினியாக பத்து நிமிட நேரம் எரித்து மேற்படி எண்ணெயை அதில் விட்டு பத்து நிமிட நேரம் சென்ற பின்பு அந்த எண்ணெயை மேலாக வடித்துக் கொண்டு அடியிலுள்ள சொற்ப எண்ணெயுடன் இலிங் கத்தைக் கட்டப்பாரையால் கடைந்து முன் எடுத்த எண்ணெயை யும் கலந்து நன்றாய் கலக்கி வைத்துக்கொண்டு பிடரி, முதுகு, முதலிய நரம்புகளில் பூசிவர, பிடரி, பின்னிசிவு, முன்னிசிவு, சன்னிகள், முதலியவை தீரும்.

இதுவரையில் இலிங்க சம்பந்தமான பலமுறைகளையும் எழுதிவந்தோம். இன்னும், இவ்வித அநேக முறைகளிருந்த போதிலும் நமது பரம்பரையிலுள்ளவர்களுக்கும், நமது சிநேகிதர் களுள் அநேகருக்கும் அனுபவ சித்தமான முறைகளையும் புத்தி



யுக்தி, அனுபவம் முதலியவைகளுக்கு ஏற்ற முறைகளையும் எழுதி இருக்கின்றோம். ஆனால், இலிங்க சம்பந்தமான முறைகளை உபயோகித்தால் சிற்சில சமயங்களில் சில உடலினர்க்கு அவை ஒவ்வாமல் தீயகுணத்தையும் உண்டாக்குவது உண்டு. அதற்கு இலிங்கம் விடமித்தல் நஞ்சுவீறு என்று பெயர். அதன் குறிகுணங் கள் அதன் பரிகாரம் முதலியவைகளைத் தெரிந்திருக்க வேண்டியது அவசியம் ஆகையால், அவைகளையும் பின் எழுதுகின்றோம்.

## இலிங்க வீறு குறிகுணங்கள்

வாயின் அடிப்பாகம், உள்நாக்கு முதல் குரல்வளை வரை யிலும், இருதயம், மார்பு, வயிற்றின் மேலாகிய பெருங்குடல் என்னும் இவ்விடங்களில் வெந்து, பஞ்சும் புண்ணும் வாடிப் போயிருப்பது அன்றியில் மேற்படி இடங்களில் காரம் செல்ல வொட்டாதபடி அதிக தொல்லையைக் கொடுத்து உணவு உட் கொள்ள வொட்டாமலும் அதிகத் தொந்தரவு செய்தல், பேசு தற்கு வருத்தமாயிருத்தல், வாய்திறந்தால் துர்நாற்றம் வீசுதல், அரோசகமாயிருத்தல், வயிற்றில் அக்கினியைப் போலெரிதல், வாய் நீரானது கெட்டுப்போன பனங்கள்ளைப் போலவும், காடி நீரைப் போலவும், வெண்மையாகவும், குழம்பாகவும், காணப் படுதல் என்னும் இக்குணங்களுண்டாகும்.

**இக் குறி குணங்கட்குப் பரிகாரம் :**— சாதிக்காய், வால்மிளகு, செம்பருத்தி வேர்ப்பட்டை, கற்கண்டுஆகிய நான்கும் வகைக்கு வராகனெடை ஒன்றாக எடுத்துக் குடிநீராகச் செய்து காலை, மாலை இரண்டு வேளைகளிலும் தவறாமல் ஒரு மண்டலம் குடித்துவரக் குணமாகும். மேற்கண்ட சரக்குகளின் அளவு ஒரு வேளைக்காம்.

## இரசகற்பூரம்

இது வைப்புச் சரக்கு இதிலும் பிரதானமானது இரசமே யாகும். சித்த மருத்துவத்தில் இது அநேக நோய்களுக்கு உபயோகப்படுத்தப்படுகிறது. இதனை உபயோகிக்கும் விதமாக உபயோகித்தால் அநேக கடினமான நோய்களெல்லாம் தீர்ந்து விடும். கிரந்தி நோய், இரணநோய் முதலிய அநேக கடின நோய்களுக்கு இது சஞ்சீவிக் கொப்பானது. இதனை முறைப்படி தூய்மைசெய்து உபயோகித்தால் அநேக சிறப்புடைய குணங்கள் உண்டாகும். இதை முறைப் பிசகாக உபயோகித்தால் வாய் பிடித்தல் முதலிய தீயகுணங்களுக்கு ஏதுவாகும். இது உள்ளுக்கு உபயோகப்படுவது போலவே வெளிக்கும் களிம்பு முதலியவை களாகச் செய்து உபயோகப்படுத்தப்படுகிறது.

## இரசகற்பூரத்தின் இயல்பு

**சித்த மருத்துவம் :**—வாதசூலை, எரிசூலை, குன்மநோய், தொடை வாழை, சோணித வாதம், அல்குல்ப் புற்று, அல்குல் இரணம், கிரந்தி நோய்கள், இரணமேகங்கள் முதலிய நோய்கள் தீரும்.

**யூனானி மருத்துவம் :**— கிரந்தி நோய், அரிப்பு நோய், சண்டமாலை நோய்கள், அழிரணம், குழிரணம், நீர்க்குண்டிக்காய், நீர்த்தாரை, நீர்ப்பை முதலியவைகளின் அகத்திலுள்ள இரணங்கள், புராதனமேக நோய், அஸ்மரிநோய், விந்துவெளிப்பாடு, தாதுவலிமை முதலியவைகளுக்கு உபயோகப்படுகின்றன.

**அலோபதி மருத்துவம் :**— சகல உக்கிரதாபன நோய்கள், மூளைதாபன நோய், இருதய நோய், நீர்க்கோவை, விரணசன்னி, ஆருத சர்மநோய்கள், கீல்வாதநோய் முதலியவைகள் தீரும்.

## இரசகற்பூர வைப்பு

கெந்தகம் 16 வராகனெடை (56 கிராம்), இரசம் 80 வராகனெடை (2800 கிராம்), கறியுப்பு ½ படி. (இதைப் பொடித்துக் கொள்ளவும்). செங்கல்பொடிமா செல்லத்தக்க அளவு.

**செய்முறை:**— கெந்தகத்தை ஒரு மண்பாண்டத்திலிட்டு உருக்கி அது உருகினவுடன் இரசத்தைச் சேர்த்து ஒரு கத்தியால் துழாவிக் கொண்டிருக்க இரண்டு சரக்கும் சேர்ந்து கறுத்துப்போகும். நன்றாகக் கறுத்துப் போனவுடன் கீழிறக்கி ஆறினபின் எடுத்துப் பொடித்து வைத்துக் கொள்ளவும். பின்பு இரண்டு சிறுமண் பானைகளை வாய் பொருந்தும்படியாகத் தேய்த்துச் சித்தப்படுத்தி ஒரு பானையில் அரைபாகம் வரை செங்கல்பொடிமாவையிட்டுப் பரப்பிச் சமமாக அழுத்தி அதன்மேல் உப்புப் பொடியைப் பரப்பி அதன்மேல் முன் சித்தப்படுத்தின கறுப்புப் பொடியைப் பரப்பி அந்தப் பானையின் மீது முன் சித்தப்படுத்தின மறுபானையை மூடி சந்தில்லாமல் ஏழு சீலைமண் வலுவாகச் செய்து காயவைத்து அடுப்பேற்றிக் காடாக்னியாக நான்கு சாமம் எரித்தாறவிட்டு மேற்பானையை மெதுவாக எடுத்தால் அதில் கட்டிகட்டியாயும், வெண்மை நிறமுள்ளதாயும் பதங்கித்திருக்கும்; இதுவே பூரம் எனச் சொல்லப்படும்.

**குறிப்பு :**— இரசகற்பூர வைப்புகள் நமது **இரசவாதச் சிந்தாமணியிற்** சொல்லப்பட்டிருக்கின்றன, இதனை வைப்பதற்கு சிரமப்படுவதைக் காட்டிலும் கடையில் வாங்கிக் கொள்வது உத்தமம். அவசியமானவர்கள் நமது இரசவாதச் சிந்தாமணியைப் பார்வையிடவும்.



## இரசகற்பூரத் தூய்மை

இதன் தூய்மை முறைகள் அநேக வகைகளுள் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் அனுபவப்படி செய்து கொள்வது வழக்கம். ஆயினும், பிரபலமும் அனுபவமான இரண்டொரு முறைகளையும் இங்கெழுதுவாம்.

இரசகற்பூரம் 1 பலம் (35 கிராம்). (இதனைச் சிறுதுண்டுகளாகச் செய்து மெல்லிய துணியில் தளர்ச்சியாக முடிந்து கொள்ள வேண்டும்). ஒரு மண் பாண்டத்தில் இரண்டுபடி பசுவின் பாலை விட்டு அதில் ஐந்து பலம் கஞ்சாவைத் தூள்செய்து அல்லது தண்ணீர் விட்டரைத்துக் கரைத்து முன் முடிப்பைக் கிழிக்கட்டிப் பாலுக்குள் தொங்கவிடவேண்டும். முடிப்பானது பானையினடியில் படாமலிருக்கவும் வேண்டும். பால் சுண்டி ¼ படி பாக்கியாயிருக்கும்போது இறக்கி ஆறினபின் இரசகற்பூரத்தை எடுத்துக் கொள்ளவேண்டும். இவ்விதமே மடக்கி மடக்கி மூன்று தடவைகள் செய்யின் இரசகற்பூரமானது தூய்மையாகிவிடும். வாய் பிடிக்கும் குணமுள்ள சரக்காகையால், இதை மேற்கண்டபடி தூய்மை செய்வதால் அந்தத் தீயகுணம் நீங்கிப்போகும்.

**இரசகற்பூரத் தூய்மை (வேறு) :**— பச்சைக் கஞ்சா இலைச்சாறு ½ படி (இது அகப்படாவிட்டால் 10 பலம் உலர்ந்த கஞ்சாவில் இரண்டு படி தண்ணிரை விட்டுக் ½ படியாகச் சுண்டக் காய்ச்சி வடிகட்டிக் திப்பி நீக்கின குடிநீரைச் சேர்த்துக் கொள்ளவும்). தாய்ப்பால் ½ படி இவ்விரண்டையும் கலந்து வைத்துக் கொண்டு 10 பலம், இரசகற்பூரத்தை ஓட்டில் வைத்து அடுப்பின் மீதேற்றிச் சிறுதீயாக எரித்து மேற்படி கலவையைச் சிறுகச் சிறுகவிட்டுச் சுருக்கிட வேண்டும். இக் கலவை நீரெல்லாம் சென்ற பின் பூரக்கட்டியை எடுத்து அதன் மீதுள்ள கருக்கு முதலியவைகளைக் கத்தியால் சுரண்டி நீக்கிவிட வேண்டும். சாம்பிராணி 10 பலம் தீபகற்பூரம் 10 பலம் இவ்விரண்டையும் தனித்தனி பொடித்துப் பிறகு, ஒன்றாகக் கலந்து இரண்டு பங்காக்கி ஒரு பங்கைக் கீழே பரப்பி அதன்மேல் முன் சித்தப்படுத்தின கட்டியை வைத்து அதன்மேல் மற்ற ஒருபங்கையும் போட்டுத் திரியினால் கொளுத்தி விடவேண்டும். தூளெல்லாம் பற்றி எரிந்தபின் கட்டியை எடுத்து மேலுள்ள கருக்கை நீக்கி

உபயோகித்துக் கொள்ளவும். இதுவும் ஒருவகைத் தூய்மையாகும்,

**இரசகற்பூரத் தூய்மை(வேறு)** :— இரசகற்பூரம் 1 பலம் (35 கிராம்), முசுமுசுக்கைச்சாறு ¼ படி, முலைப்பால் அல்லது பசும்பால் ¼ படி, இரச கற்பூரத்தை ஒட்டிலிட்டு அடுப்பேற்றி முன்னர் முசுமுசுக்கைச் சாற்றைவிட்டுச் சுருக்குக்கொடுத்து அச்சாறெல்லாஞ் சென்றபின்பு பாலால் சுருக்கிடவேண்டும். பாலெல்லாஞ் சென்றபின் கட்டியையெடுத்து மேலுள்ள கருக்கைச் சுறண்டிக் கட்டியை எடுத்து உபயோகித்துக்கொள்ள வேண்டும். இதுவும் ஒருவகைத் தூய்மையாம்,

**இரசகற்பூரத் தூய்மை (வேறு)** :— இரசகற்பூரம் 1 பலம்(35 கிராம்) முலைப்பால் அல்லது பசுவின் பால் ½ படி மேற்படி கட்டியை ஒட்டிலிட்டு மேற்படி பாலைச் சிறுகச் சிறுகவிட்டுச் சுருக்கிடவேண்டும். பாலெல்லாஞ் சுண்டினபின்பு கட்டியை எடுத்துக் கட்டியிலுள்ள சுருக்கு முதலியவைகளைச் சுறண்டி நீக்கி அரைப்படி சிற்றுமணக்கெண்ணெயைக் குவிவான ஒரு பாத்திரத்தில் விட்டு முன் சித்தப்படுத்தின கட்டியை ஒரு மெல்லிய துணியில் முடிந்து கிழிக்கட்டி எண்ணெய்ப் பாண்டத்தில் தொங்கவிட்டுப் பானையின் அடிப்புறத்தில் படாமல் செய்யவேண்டும். இரண்டு அல்லது மூன்றுசாமம் மெதுவாக எரித்து ஆறவிட்டு எடுத்து எண்ணெய்ப் பசையில்லாமல் மெல்லிய துணியில் துடைத்து எடுத்துக் கொள்வதும் ஒருவகைத் தூய்மையாகும். இதனாலும் வாய் பிடிக்காது,

## 547. பூரக்கட்டு

ஒருபலமுள்ள பூரக்கட்டி 1 (35கிராம்) நெல்லிக்காய்க் கெந்தகம் ½ பலம் (17½ கிராம்). கெந்தகத்தை முலைப்பாலைச் சிறுகச் சிறுகவார்த்து ஒருசாமமரைத்துப் பூரக்கட்டிக்குக் கவசித்து கரிநெருப்பில் திருப்பித்திருப்பி வாட்டி ஈரங் காய்ந்தபின்பு ஒரு ஓட்டில் வைத்து அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்துப் புரட்டிப் புரட்டி வறுத்து மேற்கவசம் தீய்ந்தபின்பு எடுத்தாறவிட்டு மேற்கவசத்தைப்பிரித்து நீக்கி அந்தக் கட்டியை ஒரு பீங்கான் பாத்திரத்திலிட்டு அதில் கத்திரியிலைச்சாற்றை, அக்கட்டியானது முழுகி நிற்கும்படி விடவேண்டியது அல்லது அக்கட்டியைக் கத்தரிக்காய்க்குள் செலுத்தி சூடேறும்படியாக இலகுபுடம் போடவேண்டியது. பின்பு முன்போல் கெந்தகத்தைக் கவசித்து வாட்டி வறுத்தெடுத்து முன்போலவே ஊறப் போடவேண்டியது.



அல்லது புடம்போடவேண்டியது. இவ்விதம், மடக்கி மடக்கி 7 தடவைகள் செய்யின் முழுக்கட்டாகும்.

**அளவு:**— 1 முதல் 4 அரிசி எடை.

**துணைமருந்து:**— பனைவெல்லம், வெண்ணெய், பாலேடு முதலியவைகளாகும்.

**துணைமருந்து:**— வாயுநோய், வாதசூலை, குன்மநோய், தொடைவாழை, இரணங்கள் முதலிய நோய்களும், இன்னும் முன்னே சொல்லியிருக்கப்பட்ட அநேக நோய்களும் தீரும். ஆனால், சமயோசிதம்போல் அந்த நோய்க்குத் தகுந்த இளகம் முதலியவைகளில் சேர்த்துக் கொடுத்தால் அதிக குணஞ் செய்யும்.

**மருத்துணவு:**— நோயின்வலிமை உடல்வலிமை முதலியவைகளுக்கேற்றபடி ஏற்படுத்தவும்.

## 548. பூரக்கட்டு (வேறு)

பால் சாம்பிராணி, தீபகற்பூரம் இவைக்குப் 10 பலம் (350 கிராம்), இவ்விரண்டையும் ஆரம்பத்தில் தனித்தனியே பொடித்துப் பின்பு இரண்டையும் சேர்த்தரைக்கப் பிளாஸ்திரி போலாகும். இதனை நூறு பங்காகச் செய்து கொள்ளவேண்டும். மூன்றுவிரற் கனசதுரமான ஒரு சீலைத் துண்டில் முன் களிம்பில் ஒரு பங்கைத்தடவி ஒரு பலமுள்ள பூரக்கட்டியை அதன் மத்தியில் வைத்துத் துண்டைச்சுற்றி இருமுனைகளையும் அழுத்தித் திரித்துக் குரட்டில் பிடித்துக்கொண்டு விளக்கில் கொளுத்திக் கவசம் எரிந்தபின்பு ஆறவிட்டுக் கவசத்தைப் பிரித்து மறுபடியும் முன் களிம்பில் ஒரு பங்கைச் சீலைத்துண்டில் தடவி முன் கட்டிக்குக் கவசித்து முன்போலக் கொளுத்தி ஆறவிட்டுக் கவசத்தை நீக்கவேண்டும். இவ்விதம், மடக்கி மடக்கி நூறுபங்கு களிம்பையும் நூறு தடவைகள் கவசித்துக் கொளுத்தி எடுக்கப் பூரமானது முழுக்கட்டாகும்.

**அளவு:**— 1 முதல் 4 அரிசி எடை.

**துணைமருந்து** :— பனைவெல்லம், பாலேடு முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:**— பற்பலவகை மேகநோய், பிரமேகங்கள், வாயுநோய், சூலைநோய்கள் ஆகியவைகள் தீரும்.

## 549. பூரக்கட்டு (வேறு)

இரசகற்பூரம் $1\frac{1}{2}$ பலம் (52 கிராம்) சேராங்கொட்டை 100, காலங்குலகனமும் மூன்று பலம் நிறையுள்ள சதுரமான வெள்வங்கத் தகடு 1.

**செய்முறை:**— ஒரு மண்சட்டியில் ஐம்பது சேராங்கொட்டைகளை இரண்டாகவெட்டிப் பரப்பி அதன் மீது வெள்வங்கத் தகட்டை வைத்து அதன்மீது பூரக்கட்டியை வைத்து அதன் மீது மற்ற ஐம்பது சேராங்கொட்டைகளையும் நறுக்கிக் கட்டி தெரியாமல் மேற்சட்டி மூடி ஐந்து சீலமண் செய்துலர்த்திக் கமலாக்கினி ஒரு சாமமாகவும், தீபாக்கினி ஒரு சாமமாகவும் ஆக இரண்டு சாமமெரித்து ஆறினபின் கட்டியையெடுத்துப் பொடித்துப் புட்டியில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு:**— 1 முதல் 4 அரிசி எடை.

**துணைமருந்து:**— சுக்கை அரைத்தவிழுது, பனைவெல்லம், வெண்ணெய், பாலேடு முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:**— நடுக்குவாதம், உதறுவாதம் முதலிய நரம்பைப்பற்றின வாதநோய்கள் தீரும்

**மருந்துணவு:**— நோய்வலிமை, உடல்வலிமை முதலியவைகளுக்குத் தக்கபடி புளியை நீக்கிவைக்கவும். வலிவாக இருந்தால் இச்சாபத்தியமாக வைக்கவும்.

## 550. பூரக்கட்டு (வேறு)

இரசகற்பூரம் 1 பலம் (35 கிராம்) (இது ஒரே கட்டியாக இருக்க வேண்டும்) பால் நண்டை இடித்தசாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:**— பூரக்கட்டியை அப்பிரேகத் தகட்டின் மீது வைத்து மேற்படி பால் நண்டுச்சாற்றைச் சிறுகச்சிறுகவிட்டுச் சுருக்கிடவேண்டும். இவ்விதம் நான்கு சாமநேரம் சுருக்கிட்டு எடுத்து அதன்மீதுள்ள கருக்கு முதலிவைகளை நீக்கிப் பொடித்து வைத்துக்கொள்ளவும்.

**அளவு:**— 3 முதல் 4 அரிசி எடை.

**துணைமருந்து:**— தாளிசப்பத்திரித்தூள், அரிசித்திப்பிலித்தூள், மிளகுத்தூள், பனைவெல்லம், தேன் முதலியவைகளாகும்.



**தீரும்நோய்கள்:**— என்புசுரம், இருமலோடு கூடிய சுரம், வாயுநோய், சூலைநோய், இந்திரிய ஒழுக்குநோய் முதலியவைகள் தீரும். வாயுசம்பந்தமான தாதுகுறைவு தீர்ந்து தாது வலிமை உண்டாகும்.

**மருந்துணவு:**— உடல்வலிமை, நோய்வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தபடி ஏற்படுத்தவும்.

## 551. பூரக்கட்டு (வேறு)

இரசகற்பூரம் 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்) (இது ஒரே கட்டியாக இருக்கவேண்டும்) பருமனுன மொந்தன் வாழைப் பழம் 8.

**செய்முறை:**— ஒரு வாழைப்பழத்தின் மத்தியில் சக்கரமாக அறுத்தெடுத்து மேற்படி பூரக்கட்டியை அதற்குள் வைத்து எடுத்து துண்டை வைத்துப் பொருத்தி அதை நூலாற்கட்டி அதன்மீது மூன்று சீலமண்செய்து பதினைந்து பலம் வறட்டியில் புடமிட்டு ஆறினபின்னெடுத்து இன்னொரு வாழைப்பழத்தை முன்போல் துவாரஞ்செய்து முன்போல் வைத்து மூடி முன்போல் சீலமண்செய்து முன்போல் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு புடமிட்டெடுத்துப் பொடித்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:**— 1 முதல் 4 அரிசி எடை.

**துணைமருந்து:**— பனைவெல்லம், சீனிசர்க்கரை, சுக்குக் குடிநீர், சோம்பு குடிநீர் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:**— வாயுநோய்கள், மலபந்தம், இரணங்கள் ஆகியவைகள் தீரும். நெடுநாட்பட்ட உதிரக்கட்டு, அக்கிரமசூதகம் முதலியவைகளும் தீரும்.

**மருந்துணவு:**— சமயோசிதம்போல பத்தியம் வைத்தும், பத்தியம் வைக்காமலும் உபயோகிக்கலாம்.

## 552. பூரக்கட்டு (வேறு)

இரசகற்பூரம் 1 பலம் (35 கிராம்) பருமனுன புளிநரளைக் கிழங்கு 4.

**செய்முறை:**— ஒரு கிழங்கைக் குடைந்து அதற்குள் பூரக்கட்டியை வைத்து அத்தூளால் மூடி மூன்று சீலமண்செய்து உலர்த்தி பத்துப்பலம் வறட்டியில் புடமிடவேண்டும். புடம் ஆறினபின்பு கட்டியை எடுத்து மற்றொரு கிழங்கைக் குடைந்து

அதற்குள் வைத்துக் குடைந்தெடுத்த தூளால் மூடி மூன்று சீலைமண் செய்துலர்த்தி முன்போல் 10 பலம் (350 கிராம்), வறட்டியில் புடமிட்டெடுத்துக் கொள்ளவும். பிறகு முன்போல் கிழங்குக்குள் வைத்து சீலைமண்செய்துலர்த்தி 8 பலம் வறட்டியில்புடம் 1, பிறகு 6 பலம் வறட்டியில் புடம் 1 ஆகநான்கு புடமுமிட்டெடுத்தால் பூரமானது உருகி மணிபோலிருக்கும்.

**குறிப்பு:—** இந்தப் பாகத்தைச் செய்து முடிப்பதற்குத் தீயைப்பற்றி அதிகம் கவனிக்க வேண்டியதிருககிறது. சில சமயம் தீ அதிகமாகவும்; சில சமயம் தீ குறைவாகவும் வேண்டியதிருக்கிறது. புடம் போட்டெடுத்தால் கிழங்கானது அதிகம் கருகிப்போகாமல் வெந்த பதமாக இருக்கவேண்டும் செம்மையாக வேகாமல் பச்சையாக இருந்தால் இரண்டொரு புடம் அதிகமாகப் போட்டுக் கொள்ளவேண்டும். சமயோசிதம் போல வறட்டியை அதிகப்படுத்தியும் குறைத்தும் கொள்ளலாம். சற்று நிதானமாகவும் கவனமாகவுஞ் செய்துகொண்டால் தப்பாமல் மணியாகி உருகி நின்றுவிடும். இதனைப் பொடித்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** 1 முதல் 4 அரிசி எடை.

**துணைமருந்து:—** பனைவெல்லம், சீனி சர்க்கரை, சுக்கு இளகம், வால் மிளகு இளகம், பறங்கிப் பட்டைஇளகம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:—** சூலைநோய், இரணநோய், யோனிப் புற்று, கிரந்திநோய் நீர்ப்பைரணம், மேகரம் முதலிய அநேக நோய்கள் தீரும்.

**மருத்துணவு:—** இச்சாபத்தியம், நோய், பலமாயிருந்தால் கடின பகத்தியமாகவும் வைத்து உபயோகிக்கலாம்.

## 553. பூரக்கட்டு (வேறு)

இரச கற்பூரம் 1 பலம் (35 கிராம்), நாயுருவி உப்பு 1 பலம் (35 கிராம்), சங்கிலைச்சாறு செல்லத்தக்க அளவு:

**செய்முறை:—** இரச கற்பூரத்தை ஒரு பீங்கான் பாத்திரத்திற்போட்டு அது ஆழ்ந்திருக்கும்படியாக தாய்ப்பாலை விட்டு ஊறவைக்க வேண்டும். இருபத்து நான்கு மணிநேரம் ஆன பிறகு அப்பாலை யெடுத்து நீக்கிவிட்டு வேறு புதிய பாலை முன்பால் விட்டு வைக்கவேண்டும். இருபத்துநான்கு மணிநேரஞ் சென்று அதையும் நீக்கி மூன்றுந்தடவையும் பாலைவிட்டு ஊற வைத்து இருபத்துநான்கு மணிநேரஞ் சென்ற பின்பு எடுத்துக்கொள்ளவும். ஒரு சட்டியில் முன் நாயுருவி உப்பைக்கொஞ்சம் போட்டுப் பரப்பி அதன்மீது முன் சித்தப்படுத்தின கட்டியை வைத்து அடுப்பின் மீதேற்றிச் சிறுதீயாக எரித்து மேற்படி சங்கிலைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்துச் சுருக்கிடவேண்டும். இவ்விதம் நான்கு சாமநேரம் சுறுக்கிட்டெடுத்தால் பூரமானது கட்டிப்போகும்



**குறிப்பு:—** மேற்கண்ட மாதிரியாகவே கெந்தகம், இலிங்கம் ஆகியவைகளுக்குச் சுருக்கிட அவைகளும் கட்டிப்போகும்.

**அளவு:—** மேற்படி கட்டியைப் பொடித்து வைத்துக் கொண்டு வேளைக்கு ஒரு அரிசி எடை முதல் நான்கு அரிசி எடை வரையில் உபயோகிக்கலாம்.

**துணைமருந்து :—** பனைவெல்லம், சினிசர்க்கரை, வெண்ணெய், பாலேடு, இளக வகைகள் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** வாயு நோய், மேகநோய், சூலை, நோய், பிடிப்பு நோய், கிரந்தி நோய்கள் முதலியவை தீரும்.

**மருத்துணவு:—** நோயின் வலுவிற்குத் தகுந்தபடி புளியை அறவே நீக்கியும், சுட்டுச் சேர்த்தும் பத்தியம் வைக்க வேண்டியது.

### நாயுருவி உப்பு

நாயுருவி சமூலத்தை உலர்த்தி எரித்துச் சாம்பலாக்கி ஒரு படி. சாம்பலுக்கு நான்குபடி தண்ணீர் விட்டுக் கரைத்து மூன்று நாள் வைத்துத் தெளிவிறுத்துக் காய்ச்சினால் உப்பாகும். இதுவே நாயுருவி உப்பாகும்.

## 554. பூரக்கட்டு (வேறு)

இரசகற்பூரம் 6 வராகனெடை (21 கிராம்) (இது ஒரே கட்டியாக இருக்கவேண்டும்). தாளகம் $2\frac{1}{4}$ வராகனெடை எலுமிச்சம் பழச்சாறு செல்லத்தக்க அளவு; ஜங்கால்பச்சை 6 வராகனெடை கய்ச்சுக்கட்டி 6 வராகனெடை (21 கிராம்).

**செய்முறை :—** தாளகத்தைப் பொடித்து எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து மைபோல அரைத்து பூரக் கட்டியின் மீது சமமாகப் பூசி வெய்யிலில் வைத்து உலர்த்திக் கொள்ளவேண்டும். பிறகு, ஐங்கால்பச்சையையும் காய்ச்சுக் கட்டியையும் பொடித்து இரண்டு பாகமாக்கி ஒரு சிறு கலயத்தில் ஒரு பாகத்தைப் போட்டுப் பரப்பி அதன் நடுவில் முன் சித்தப் படுத்தின கட்டியை வைத்து அதன் மீது மறுபாதியையும் போட்டமுத்தி கலயத்தின் வாய்க்குச் சில்லிட்டுச் சீலை செய்து ஏழு பலம் வறட்டியில் புடமிட்டு ஆறினபின் கட்டியை எடுத்துக் கொள்ளவும். மறுபடியும் முன்போல் தாளகத்தை அரைத்துப் பூசி உலர்த்தி முன்போல் ஐங்கால்பச்சையையும் காய்ச்சுக் கட்டியையும் பொடித்துக் கீழ்மேலிட்டு முன்போல் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் போட்டால் இரசகற்பூரமானது இறுகிக்கட்டுப் பட்டுப்போம். இதனை எடுத்துப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** இரண்டு அரிசி எடை முதல் மூன்று அரிசி எடை வரை.

**துணைமருந்து :—** வெண்ணெய், பனைவெல்லம், பறங்கிச் சக்கை இளகம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** கிரந்தி நோய்கள், அழிரணம், குழிரணம், முதலிய இரணநோய்கள், கை கால்பிடிப்பு, சூலை, வாய்வு நோய்கள் முதலிய பல நோய்கள் தீரும்.

**மருந்துணவு :—** நோயின் வலிமை, உடலின் வலிமை, முதலியவைகளுக்குத் தகுந்தபடி ஏற்படுத்தவும்.

## 555. இரசகற்பூர மெழுகு

தூய்மைசெய்த இரசகற்பூரம் 5 வராகனெடை ($17\frac{1}{2}$ கிராம்), ஆற்றுத் தும்மட்டிக் காய்ச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரசகற்பூரத்தைக் கல்வத்தில் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாம நேரம் கைவிடாமலரைக்க வேண்டும். வெண்ணெய்போல அரைபட்டு மெழுகு பதமானதும் பீங்கான் சிமிழில் அல்லது கொம்புச் சிமிழில் வழித்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** $\frac{1}{2}$ முதல் 1 குன்றி எடை.



**துணைமருந்து :—** வெல்லம், சுக்கை அரைத்த விழுது, வெண்ணெய், வேறு இளக வகைகள் முதலியனவாம்.

**தீரும்நோய்கள் :—** மலக்கட்டு, குன்மநோய், கௌசை, பிலிகை, கிரந்தி நோய், இரணங்கள், மேக நோய்கள் முதலியவைகளெல்லாம் தீரும்.

**மருந்துணவு :—** சமயோசிதம்போல பத்தியம் ஏற்படுத்தவும்.

**குறிப்பு :—** இரச சம்பந்தமான மருந்துகளை உபயோகிக்கும் போது புளியை உபயோகிக்காமல் இருப்பது உத்தமம். அவசியமானால் புளியைச் சுட்டுச் சேர்த்துக் கொள்ளவும். பூரத்தை விளக்கெண்ணெயில் சம்பந்தப்படுத்திக் கொடுத்தால் வாய் பிடிக்காது.

## 556. இரசகற்பூர மெழுகு (வேறு)

தூய்மைசெய்த இரசகற்பூரம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), தூய்மை செய்த நெல்லிக்காய்க் கெந்தகம் $\frac{1}{4}$ பலம் பறங்கிப்பட்டைத் தூள் $\frac{1}{4}$ பலம் கருஞ்சீரகம் $\frac{1}{4}$ பலம் கையாந்த கரைச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** கருஞ்சீரகத்தைக் கொஞ்சம் கையாந்த கரைச்சாற்றில் போட்டு இரண்டு நாள் ஊறவைத்து மூன்று நாள் கல்வத்திலிட்டு அரைத்து வெண்ணெய் போலான பின்பு மற்ற சரக்குகளையும் சேர்த்து மேற்படி சாற்றையே சிறுகச் சிறுக விட்டு நான்கு சாம நேரம் கைவிடாமல் அரைக்க வேண்டும். ஒரே தடவையாக அரைக்கக் கூடாவிட்டால் தினம் இரண்டொரு சாமமாயினும் அரைக்கவேண்டும். வெண்ணெய் போலான பின்பு வழிக்கும் போது கொஞ்சம் தேனை விட்டு வழித்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

**அளவு :—** 2 முதல் 4 குன்றி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், நல்லவெல்லம், சுக்கை அரைத்த விழுது, இளக வகைகள் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** புண்கள், கிரந்திநோய்கள், அரையாப்பு, சூலைநோய் முதலியவை தீரும்.

**மருந்துணவு :—** முருங்கைப் பிஞ்சு, அவரைப் பிஞ்சு, பீர்க்கங்காய், பாசிப்பயறு, துவரை முதலியவைகளாகும். மூன்று

நாள் மருந்தைக் கொடுத்து மூன்று நாள் மறுபத்தியம் வைத்து மறுநாள் விளக்கெண்ணெய் தேய்த்து தலைமுழுக்கு செய்விக்கவும். இவ்விதம், இரண்டு மூன்று தடவைகள் செய்யின் எத்தனை நாட்பட்டவைகளாயினும் மேற்படி நோய்கள் தீரும்.

## 557. கோரோசனை மெழுகு

புதிதான சித்திரமூல வேர்ப்பட்டைத்தூள், 16 வராகனெடை (560 கிராம்), தூய்மைசெய்த இரசகற்பூரம் 2 வராகனெடை (7 கிராம்), கோரோசனை 2 வராகனெடை, குங்குமப்பூ வராகனெடை 2 தேன் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** குங்குமப்பூவைக் கல்வத்திலிட்டுத் தேனைச் சிறுகச்சிறுக வார்த்தரைத்து குங்குமப்பூ அரைப்பட்ட பின்பு இரசகற்பூரத்தைச் சேர்த்தரைத்து அதுவும் அரைப்பட்ட பின்பு சித்திரமூலவேர்த் தூளைச் சேர்த்து தேனைச்சிறுகச் சிறுக விட்டு எட்டுசாமநேரம் கைவிடாமலரைத்துப் பீங்கான் சிமிழில் பத்திரப் படுத்தவும்.

**அளவு:—** 3 முதல் 5 குன்றி எடை உடல் நிலைமைக்கும் நோயின்வலிவிற்குத் தகுந்தபடி உபயோகிக்கவும்.

**துணைமருந்து:—** சீனிசர்க்கரை, பனைவெல்லம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** சூலைநோய்கள், அரையாப்பு, கண்டமாலை, நுணுக்காய்க்கிரந்தி, கள்ளிப்பூக்கிரந்தி, மேக இரணங்கள் சூதகவாயு, அல்குல்புற்று, லிங்கப்புற்று, கருப்ப வாயு, உதிரச்சிக்கல், பிரசவ பெண்களுக்கு காணும் உதிரச்சிக்கல், உதிரச்சிக்கலினுலுண்டாகும் சன்னி, தோடம் முதலியவைகள் தீரும். சூதகம கட்டுப்பட்டிருக்கிறவர்களுக்கும் இதனை உபயோகித்தால் அதையுடைத்து வெளிப்படுத்தும்.

**மருந்துணவு:—** புளியை நீக்கவேண்டியது; காலை, மாலை இரண்டுவேளையுமாக ஏழுநாள் உபயோகித்து எட்டாம் நாள் சிற்றுமணக்கெண்ணெய், அல்லது நல்லெண்ணெய் பசுவின் நெய் ஆக மூன்றும் சேர்ந்த முக்கூட்டெண்ணெயைத் தேய்த்து சனி, புதன் ஆகிய நாள்களில் தலைமுழுகச் செய்யவேண்டும். இவ்விதம், நான்கைந்து தலைமுழுக்குச் செய்து பிறகு, வழக்கம் போல் குளிக்கச் செய்யவும். நோய் எளிதாக இருந்தால் மூன்று நாள், அல்லது நான்குநாள் உபயோகித்தால் போதுமானது.



**குறிப்பு:—** சில உடலினர்க்கு வாய் பிடிக்குமாகையால், அந்த வகையினர்கள் தினம் நான்கைந்துதடவை தாம்பூலந் தரித்துக்கொள்வதினல் வாய்பிடிக்காது. கெந்தகப் புளிப்பை தண்ணீரில் கரைத்து வாய் கொப்பளித்து வருவதினலும் அதன் வேகமிராது. வேறெந்த மருந்தினலும் தீராத நோய்களுக்கு இதனை முடிவாக உபயோகிக்கலாம். கடின நோய்களுக்கு இது சஞ்சீவிக்கொப்பானது.

## 558. இரசற்கபூர மெழுகு (வேறு)

தூய்மைசெய்த இரசகற்பூரம் 3 வராகனெடை (10½ கிராம்), தூய்மைசெய்த இரசம் 3 வராகனெடை கருவங்கம் 3 வராகனெடை கெந்தகம் 3 வராகனெடை, வெற்றிலைச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** கருவங்கத்தைக் கரண்டியில் வைத்துருக்கி இரசத்தைத் தொந்தித்துக் கல்வத்திலிட்டு மற்ற சரக்குகளையுங்கூடச் சேர்த்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாம நேரம் அரைக்க மெழுகாகும். பீங்கான் தாழியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** 2 முதல் 3 குன்றி எடை.

**துணைமருந்து:—** பனை வெல்லம், நல்லவெல்லம், வெண்ணெய், பாலேடு முதலியவைகளாகும்,

**தீரும்நோய்கள் :—** பறங்கிப்புண், மேகநோய், சூலைநோய் ஆகியவைகள் தீரும். மூன்றுநாள் ஆறுவேளை கொடுத்தால் போதுமானது. நோய் கடினமாயிருந்தால் இடையில் பத்து நாள்விட்டு மறுபடி ஒருமுறை உபயோகிக்கலாம்.

**மருந்துணவு :—** இச்சாபத்தியம்,

## 559. வெட்டை மெழுகு

தூய்மைசெய்த இரசகற்பூரம் 2 வராகனெடை (7 கிராம்), இரசம் 3 வராகனெடை (10½ கிராம்), சேராங்கொட்டைத் தைலம் செல்லத்தக்க அளவு, சீனிசர்க்கரை 2 பலம் (70 கிராம்) நெய் 1½ பலம் (52½ கிராம்).

**செய்முறை :—** இரண்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டு மேற்படி தைலத்தைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்து மெழுகு பதத்தில் மேற்படி சர்க்கரையையும், நெய்

யையும் சேர்த்து மறுபடி கொஞ்சம் அரைத்து மெழுகு பதமாகப் பீங்கான் சிமிழில் வைத்துக்கொள்ளவும்.

**அளவு :—** ½ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், வெண்ணெய், பாலேடு முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** வெட்டை, நோயானது எத்தனை நாள் பட்டதாயினும் தீர்ந்து விடும். ஆண் குறியிலுள்ள புண், நீர்த்தாரையிலுள்ள புண் முதலிய வெட்டை சம்பந்தமான நோய்களெல்லாம் தீரும்.

**மருந்துணவு :—** வெந்நீரைத் தவிர்க்கவும்; எருமைத் தயிர், எருமைமோர் ஆகியவைகளைச் சேர்த்துவரவும்; குளிர்ந்த நீர் பருகச் செய்யவும்.

**குறிப்பு :—** கடினமான நோய்களுக்குக் கடினமான மருந்து அவசியமாக இருக்கிறது. வேகமான மருந்துகளைச் சாக்கிரதையுடன் உடயோகித்தால் எவ்வித தொல்லையும் இல்லாமல் நோய் குணமாகி போக ஏதுவாகும். நல்லவர்களைப் போல கெட்டவர்களுமிருப்பது சகசமாமையால் கடின மருத்துவம் செய்ய சில கடினமான மருந்துகளும் அவசியம் வேண்டியதே. ஆகையால் அவ்வகை முறைகளையும் அவசியமான சமயங்களில் எழுதிவருகின்றோம். அதைப்பற்றிக் கனவான்கள் மன்னிப்பார்களென நம்புகின்றோம்.

## 560. இரசகற்பூர மெழுகு (வேறு)

தூய்மைசெய்த இரசகற்பூரம் 1 வராகனெடை (3½ கிராம்), இலவங்கத்தூள் 1 வராகனெடை (3½ கிராம்), ஓமத்தூள், 1 வராகனெடை (3½ கிராம்), மேற்றேல் சீவின முற்றல் தேங்காய்த் துருவல் ½ பலம் (17½ கிராம்), தேங்காய்த் தனிப்பால் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** எல்லாச் சரக்குகளையும் கல்வத்திலிட்டு, மேற்படி பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரம் அரைத்து மெழுகாக்கிப் பீங்கான் சிமிழியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 2 குன்றி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், சுக்கை அரைத்த விழுது, இளக வகைகள் முதலியவைகளாகும்.



**தீரும்நோய்கள் :—** மேகநோய்கள், கைகால் பிடிப்பு, சூலை நோய்கள் முதலியவை தீரும்.

**மருந்துணவு :—** புளி, கைப்பு ஆகியவைகளைத் தவிர்க்கவும்.

## 561. இரசகற்பூர மெழுகு (வேறு)

தூய்மைசெய்த இரசகற்பூரம் 1 வராகனெடை (3½ கிராம்), சமமான வெற்றிலை 37, தேங்காய்ப்பால் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** பூரத்தைக் கல்வத்தில் பொடித்து ஒவ்வொரு வெற்றிலையாகச் சேர்த்து அரைத்து எல்லா வெற்றிலையும் சென்ற பின்பு தேங்காய்ப் பாலைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து மெழுகு பதத்தில் பீங்கான் சிமிழில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** 4 முதல் 7 குன்றி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** சூலைநோய், புண்கள், வெட்டை முதலியவைகள் எத்தனை நாள்பட்டவையாயினும் தீரும். இந்த மருந்தை வாய் பிடிக்கிற வரையில் கொடுக்கவேண்டும்.

**மருந்துணவு :—** சாதத்தைப் பொங்கிக் குளிர ஆற வைத்துத் தண்ணீர்விட்டு உப்பில்லாமல் சாப்பிடவும் தேங்காயை துணை உணவாக உபயோகித்துக் கொள்ளலாம். மருந்து சாப்பிட்ட நாள் எத்தனையோ அத்தனை நாள் பத்தியமிருந்து விளக்கெண்ணெய் தேய்த்து தலைமுழுக்குச் செய்யவும்.

**குறிப்பு :—** இந்த மருந்தும் பத்தியமும் கடினமானவையாயினும் கடினமான நோய்களுக்கு அவசியமாக இது வேண்டியதாக இருக்கிறது. ஆகையால், இவ்வகை முறையும் இங்கெழுதப்பட்டிருக்கிறது.

## 562. பூர மாத்திரை

தூய்மைசெய்த இரசகற்பூரம், இலவங்கதூள், ஓமத்தூள் இவை வகைக்கு 1 பலம், ஆற்றுத் தும்மட்டிக்காய்ச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** முன் மூன்று சரக்குகளையும் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து எட்டுச் சாம நேரம் அரைத்து அரைக் குன்றிமணியெடை உள்ள மாத்திரைகளாக செய்து நிழலிலுலர்த்தி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 2 மாத்திரை.

**துணைமருந்து :—** தாய்ப்பால், விளக்கெண்ணெய் பனை வெல்லம், சுக்குக் குடிநீர், சோம்புக்குடிநீர் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** வாயுநோய்கள், மலபந்தத்தினு லுண்டான நோய்கள் பிள்ளைகளுக்குண்டாகும் வலிப்பு, சூலை நோய் முதலியவை தீரும். இது சிறு குழந்தைகள் முதல் முதுமையர் ஈறாக எல்லோருக்கும் அநேக நோய்களில் உபயோகிக்கலாம். அனுபோகசாலிகளுக்கு இதன் குணம் அனுபவத்தில் தானே தெரியவரும்.

**மருந்துணவு :—** நோயின் வலிமை, உடல் வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்தவும்.

## 563. வாயு மாத்திரை

கடையில் விற்கிற கெலோமல் என்னும் பூரபற்பம் 1 பலம் (35 கிராம்), நெல்லிக்காய்க் கெந்தகம் $\frac{1}{4}$ பலம் ($8\frac{3}{4}$ கிராம்), கரிசலாங்காணிச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** எல்லாவற்றையும் ஒன்றுகச் சேர்த்துப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்துக் குன்றிமணி அளவுள்ள மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** $\frac{1}{2}$ முதல் 1 மாத்திரை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், சுக்கை அரைத்த விழுது இளக வகைகள் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** வாயுநோய்கள், கல்வாயுக்கள், கை கால் முடக்கு, சூலை, அல்குல் புற்று. இலிங்கப் புற்று, அழிரணம், குழிரணம் முதலிய அநேக நோய்கள் தீரும்.

**மருந்துணவு :—** நோய் கடினமாயிருந்தால் புளியை நீக்கி பத்தியம் வைக்கவும். இளமை உடலினர்க்கு வாய் பிடிக்கும் ஆகையால், கொஞ்சம் கவனிப்போடு உபயோகிக்கவும்.



## 564. நவஸ்பூர மாத்திரை

தூய்மைசெய்த பூரம் $2\frac{1}{2}$ வராகனெடை ($8\frac{3}{4}$ கிராம்), தூய்மை செய்த நேர்வாளப் பருப்பு 5 வராகனெடை ($17\frac{1}{2}$ கிராம்), மேற்றோல் சீவி இடித்த சுக்குத் தூள் 10 வராகனெடை (35 கிராம்), வெந்நீர் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** மேற்படி சரக்குகளைக் கல்வத்தில் இட்டு அரைத்து வெந்நீரைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைக்க வேண்டும். பிறகு குன்றி மணியளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** $\frac{1}{2}$ முதல் 1 மாத்திரை.

**துணைமருந்து :—** தாய்ப்பால், பனைவெல்லம், சீனிசர்க்கரை வாழைப்பழம், வெண்ணெய், பாலேடு முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** மாந்தம், சுரம், இசிவு, வாயு, சூலை நோய் முதலியவைகள் தீரும்.

**மருந்துணவு :—** சமயோசிதம் போல எளிய பத்தியமாகவும், கடின பத்தியமாகவும் ஏற்படுத்தவும்.

## 565. தீர் அந்தாஸ்கரன் மாத்திரை

தூய்மைசெய்த இரசகற்பூரம், மிளகுத்தூள், இலவங்கத் தூள், ஓமத்தூள், பூலாங்கிழங்கு தூள் இவை வகைக்கு 5 வராகனெடை ($17\frac{1}{2}$ கிராம்), ஆற்றுத் தும்மட்டிக்காய் 125 இவற்றை வரகு வைக்கோலில் அல்லது நெல்வைக்கோலில் வைத்துக் கொளுத்தி விட்டுக் கொஞ்சம் வெதுப்பி இடித்துச் சாறு பிழிந்து கொள்ளவேண்டும்.

**செய்முறை :—** பூரத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மற்ற தூள்களையும் சேர்த்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து அரைக்கவேண்டும். அந்தச் சாறெல்லாம் சென்ற பின்பு ஒரு குன்றி மணி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 3 மாத்திரை.

**துணைமருந்து:—** பனைவெல்லம், நல்லவெல்லம், வாழைப்பழம், சுக்கை அரைத்த விழுது, இளக வகைகள் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** அண்டவாதம், நெரிகட்டுசுரம், கீல்வாயு, வாத நோய்கள், நரம்பைப்பற்றின நோய்கள், குன்ம நோய்கள், உதரநோய்கள், கட்டி முதலியவைகள் தீரும்.

**மருந்துணவு :—** இச்சாபத்தியம் மீன், கருவாடு, புளி, புகை ஆகா; வெள்ளாட்டுக்கறிச் சூப்பு, பசுவின் மோர், பசுவின் பால், நெய் முதலியவை ஆகும்.

## 566. கற்பூர சிந்தாமணி மாத்திரை

தூய்மைசெய்த இரசகற்பூரம் 5 வராகனெடை ($17\frac{1}{2}$ கிராம்). சாதிக்காய்த் தூள் 5 வராகனெடை தூய்மைசெய்த நேர்வாளப் பருப்பு 10 வராகனெடை (35 கிராம்). சோற்றுக் கற்றாழைச்சாறு செல்லத்தக்க அளவு, கருவேலம் பிசின் தூள் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்).

**செய்முறை :—** இரச கற்பூரத்தைப் பொடித்து மற்ற இரண்டு சரக்குகளையும் சேர்த்து வெண்ணெய் போல அரைத்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து முடிவில் பிசின் தூள்களைத் சேர்த்துக் அரைத்து குன்றிமணி அளவுள்ள மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** $\frac{1}{2}$ முதல் 1 மாத்திரை.

**துணைமருந்து :—** சர்க்கரை, வெல்லம், நெய், முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** எல்லாவகை சுரநோய்களும் தீரும். வாயு நோய்கள், கீல்வாயு, முடக்குவாயு, சூலை நோய் முதலியவைகளும் தீரும்,

**குறிப்பு :—** இது கழிச்சலாகிற குணமுள்ளதாகையால் ஆரம்பத்தில் குறைந்த அளவாக உபயோகித்து உடல் நிலைமையை நிதானித்து மாத்திரையைக் குறைத்தும் அதிகப்படுத்தியும் உபயோகிக்க வேண்டியது.

**மருந்துணவு :—** நோயின் வலிமை, உடல் வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தபடி ஆகார வகைகளையும், பத்தியங்களையும் ஏற்படுத்த வேண்டியது.



## 567. சூலை இராட்சச மாத்திரை

தூய்மைசெய்த பூரம் 5 வராகனெடை ($17\frac{1}{2}$ கிராம்), விடத்தேரி இலை $2\frac{1}{2}$ பலம் புங்கம்வேர்க் குடிநீர் செல்லத்தக்க அளவு. குப்பை மேனிச்சாறு, துளசிச்சாறு, வெற்றிலைச்சாறு, கழற்சி இலைச்சாறு, செம்பருத்தி இலைச்சாறு இவை ஐந்தும் வகைக்குச் சம அளவாகச் சேர்த்த சாறு செல்லத்தக்க அளவு எலுமிச்சம்பழச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** விடத்தேரிஇயிலையைத் தனியே அரைத்து எடுத்துக்கொள்ளவும். பூரத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து முன் அரைத்ததையுஞ் சேர்த்துப் புங்கவேர்க் குடிநீரைச் சிறுகச் சிறுகவார்த்து ஒரு சாமநேரமரைத்து மற்ற ஐந்து சாற்றின் கூட்டையும் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாமநேரம் அரைக்க வேண்டும். பிறகு, எலுமிச்சம்பழச் சாற்றைச் சிறுகச்சிறுக வார்த்து ஒன்றரைச் சாமநேர அரைக்கவேண்டும். பிறகு ஐம்பது மாத்திரைகளாகச் செய்து நிழலிலுலர்த்தி புட்டியில் பத்திரப் படுத்தவிம்,

**அளவு :—** $\frac{1}{2}$ முதல் 1 மாத்திரை; காலை மாலை இரண்டு வேளையும் உபயோகிக்கவும்; ஏழுநாள் போதுமானது.

**துணைமருந்து:—** வெண்ணெய், பாலேடு, பனைவெல்லம், சுக்கையரைத்த விழுது முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:—** கிரந்திநோய், சூலைநோய், சூலைக் கட்டு, பலவகைப்புண்கள், பிரமேகம், குன்மநோய், வாயு நோய், வாதவிகாரம் முதலிய அநேக கடின நோய்கள் தீரும்.

**மருந்துணவு :—** புளி புகை ஆகாது. பழையசாதம், குளிர்ந்த தண்ணீர், பால், தயிர், மோர், வெல்லம், கத்தரிப் பிஞ்சு, முருங்கைப்பிஞ்சு, அறைக்கீரை, துவரை, எலுமிச்சம் பழம் ஆகியவைகளாகும். மருந்தை விட்டபின் நான்குநாளைக் கொருதரம் விளக்கெண்ணெய் தேய்த்துத் தலைமுழுகச் செய்து வர வேண்டும்.

## 568. ஹல்தீபூர மாத்திரை

தூய்மைசெய்த இரசகற்பூரம் ½ வராகனெடை ($17\frac{1}{2}$ கிராம்), மஞ்சள்பொடி 1 பலம் (35 கிராம்). தேன் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** பூரத்தைப் பொடித்து மஞ்சள் தூளையுஞ் சேர்த்துத் தேனைச் சிறுகச் சிறுகவார்த்து ஒரு சாமநேரமரைத்துக்

கடலை அளவு மாத்திரைகள் செய்து பீங்கான் பாண்டத்தில் வைத்துக்கொள்ளவும்.

**அளவு:—** ½ முதல் 1 மாத்திரை.

**துணைமருந்து:—** பனைவெல்லம், சர்க்கரை, தாய்ப்பால் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:—** எல்லா வகை சுரநோய்களிலும் உபயோகிக்கலாம்.

**மருந்துணவு:—** நோய்க்குத் தகுந்தபடி பத்தியமேற்படுத்தவும்.

## 569. சுகக் கழிச்சல் மாத்திரை

தூய்மைசெய்த இரசகற்பூரம் 5 வராகனெடை (17½ கிராம்), இலவங்கச்சூரணம் 10 வராகனெடை (35 கிராம்), ஆற்றுத்தும்மட்டிக்காய்ச் சாறு ½ படி.

**செய்முறை :—** பூரத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து இலவங்கத் தூளையும் சேர்த்து ஒரு மணிநேரம் அரைத்துச் செம்மையாக கலந்த பின்பு இதையெடுத்துப் பீங்கான் பாத்திரத்தில்போட்டு மேற்படி ஆற்றுத்தும்மட்டிக்காய்ச் சாற்றை அதில் விட்டு நன்ருகக்கலக்கி வெய்யிலில் வைத்து அதில் தூம்பு தூசி விழாதபடி மெல்லிய துணியினுல் வேடுகட்டி வெய்யிலில் வைக்க வேண்டும். இரண்டொரு தடவை கலக்கியும் வரவேண்டும். சாறெல்லாஞ் சுண்டினபின்பு கல்வத்திலிட்டரைத்து மெழுகு பதத்தில் இரண்டு குன்றிமணி எடையுள்ள மாத்திரைகளாகச் செய்து வெய்யிலிற் காயவைத்து புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** ½ முதல் 1 மாத்திரை; படுக்கைக்குப்போகும் போது ஒரு மாத்திரையை வாயில் போட்டுக்கொண்டு கொஞ்சம் வெந்நீர் சாப்பிட்டுப் படுத்துக்கொள்ளவும். காலையில் செம்மையாக கழிச்சல் ஆகும்.,

**தீரும்நோய்கள் :—** உடலிலுள்ள வாதபித்த கப தீய நீர்கள் வெளிப்பட்டு உடல் ஆரோக்கிய முண்டாகும்.

**மருந்துணவு:—** காலையில் வழக்கம்போல் சாப்பிட வேண்டியது தான்.



## 570. பால சஞ்சீவி மாத்திரை

தூய்மைசெய்த இரசகற்பூரம் 5 வராகனெடை (17½ கிராம்), வெள்ளைக் காக்காட்டான் வேர்த்தோல் 5 வராகனெடை தாய்ப்பால் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** மேற்படி வேர்த்தோலைத் தனியே வெண்ணெய்போல் அரைத்துக்கொள்ளவேண்டும். பிறகு, பூரத்தைப் பொடித்துச் சேர்த்துப் தாய்ப்பாலைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டு சாமநேரம் அரைத்துப் பயறளவாக மாத்திரைகள்செய்து நிழலிலுலர்த்திப் பீங்கான் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** 1 முதல் 2 மாத்திரை.

**துணைமருந்து:—** தாய்ப்பால், தேன் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:—** குழந்தைகளின் எல்லா நோய்களுக்கும் கொடுக்கலாம். நோயிற்குத் தகுந்தபடி மூன்றுநாள், முதல் ஏழுநாள், உபயோகிக்கலாம்.

**மருந்துணவு :—** இச்சாபத்தியம்.

## 571. ஔவைபால சஞ்சீவிமாத்திரை

வெள்ளைக் காக்கரட்டான் வேர்த்தோல் 2 பலம், (70 கிராம்), தூய்மைசெய்த இரசகற்பூரம் 5 வராகனெடை (17½ கிராம்), தூய்மைசெய்த இலிங்கம் 5 வராகனெடை தூய்மைசெய்த வாளம் 1 வராகனெடை (3½ கிராம்), கோரோசனை 1 வராகனெடை.

**செய்முறை:—** காக்கரட்டான் வேரை அம்மியில் வைத்து நீர்வார்த்து வெண்ணெய்போல் அரைத்து எடுத்துவைத்துக் கொள்ளவும். இலிங்கத்தையும், இரசகற்பூரத்தையும் கல்வத்தில்பொடித்து முன் அரைத்த விழுதையும் சேர்த்து ஒருமணி நேரம் அரைத்து எடுத்து இரண்டு பாகமாகச்செய்து வைத்துக் கொள்ளவும். வாளத்தைக் கல்வத்தில் போட்டுப் பொடித்து முன் இரண்டுபங்கில் ஒருபங்கைக்கூடச்சேர்த்து அரைத்துச் சிறு பயறளவு மாத்திரைகள் செய்து நிழலிலுலர்த்தி புட்டியில்போட்டு நம்பர் 1-என்று குறிப்பிட்டு வைத்துக்கொள்ளவும்.

கோரோசனையைக் கல்வத்தில் பொடித்து மற்றொரு பங்கைச் சேர்த்து ஒரு சாமநேரம் அரைத்துச்சிறு பயறளவு மாத்திரைகள்

செய்து நிழலிலுலர்த்தி புட்டியில்போட்டு நம்பர் 2-என்று குறிப்பிட்டு வைத்துக்கொள்ளவும்.

**அளவு:—** $\frac{1}{2}$ முதல் 1 மாத்திரை.

**துணைமருந்து :—** தாய்ப்பால், பொடுதலைக் குடிநீர், நுணாஇலைக் குடிநீர் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** குழந்தைகளுக்கு உண்டாகும் எல்லா நோய்களுக்கும் உபயோகமாகும். மலம் அதிகமாகப் போகவேண்டியதிருந்தால் முதல் நம்பர் மாத்திரையை உபயோகிக்கவும். மற்ற காலங்களில் இரண்டாம் நம்பர் மாத்திரையை உபயோகிக்கவும்.

**மருந்துணவு :—** சமயோசிதம்போல தாய் முதலியவர்களுக்கு பத்திய ஏற்படுத்தவும்.

## 572. இரச கற்பூர பற்பம்

(அ) இரசகற்பூரம் 1 பலம் (35 கிராம்), (இது ஒரே கட்டியாக இருக்கவேண்டும்) குன்றிமணி இலையை அரைத்த விழுது 10 பலம் (350 கிராம்).

(ஆ) அவுரிஇலை, விழுதிஇலை, தக்காளிஇலை, நத்தைச்சூரி இலை இவை வகைக்குப் $2\frac{1}{2}$ பலம் ($87\frac{1}{2}$ கிராம்)

**செய்முறை:—** குன்றிமணி இலையை அரைத்து மேற்படி கட்டிக்குக் கவசஞ்செய்து உலர்த்தி ஐந்து சீலைமண் செய்து உலர்த்தி ஒருசாண் சதுரக்குழி தோண்டி அதில் இரண்டு விரற்கனம் மணலைப்பரப்பி அதற்குள் முன் கவசத்தை வைத்து மேலும் மணலைக்கொட்டி மூடி மணல்மீது கவத்தின் ஐந்துபங்கு எடை வறட்டியில் புடமிட வேண்டும். புடம் ஆறின பின்பு எடுத்து மேல் கீழாகப் புரட்டிவைத்து முன்போல் புடமிடவேண்டும். இவ்விதம், மூன்றுபுட மிட்டெடுத்தால் பூரம் கட்டாகிவிடும். பிறகு (ஆ) விலுள்ள இலைகளை அரைத்து முன் கட்டிக்குக் கவசித்துச்சீலைமண்செய்து ஈரமுலர்ந்தவுடன் கவசத்தின் ஒன்றரைப்பங்கு வறட்டியில் புடமிடவேண்டும். ஆறினபின்பு கவசத்தைப் பிரித்து நீக்கிவிட்டு முன்போல் நான்குவகை இலைகளையும் அரைத்துக் கவசஞ்செய்து முன்போல் ஒரு புடமிடவும். ஆறினபின்பு கவனமாக எடுக்கவும். அவ்விதம் எடுத்தால் பூரமானது பற்பமாகியிருக்கும்.



**அளவு:—** 1 முதல் 3 அரிசி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், வெண்ணெய் இளக வகைகள் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** வாயுநோய்கள், சுரம், சன்னி முதலியவைகள், சூலை, கைகால்பிடிப்பு, இரணங்கள், குழிப்புண்கள் முதலியவைகள் தீரும்.

**மருந்துணவு:—** நோயின் வலுவிற்குத்தகுந்தபடி பத்திய மேற்படுத்தவும்.

## 573. இரசகற்பூரம் பற்பம் (வேறு)

தூய்மைசெய்த இரசகற்பூரம் 2 வராகனெடை, (7 கிராம்), பச்சைக் கற்பூரம் 2 வராகனெடை, எலுமிச்சப்பழச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இரண்டையும் கல்வத்தில் இட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச்சிறுகவார்த்து இரண்டுமணி நேரம் அரைத்து வில்லைசெய்துலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி மூன்று சீலைமண்செய்து உலர்த்திக் கவசத்தின் இரண்டு பங்கு வறட்டியை அடுக்கி எரித்துப் புகையடங்கின பின்பு முன் கவசத்தை வைத்து அவிழ்ட்டமாக மேற்படி சரக்குகள் புகையாமல் எடுத்து ஆறினபின்பு கல்வத்திலிட்டுப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 2 குன்றி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், சுக்கு முதலியவைகளாகும். காலை, மாலை இரண்டு வேளையும் வாய்பிடிக்கிற வரையில் உபயோகிக்கவும்.

**தீரும்நோய்கள் :—** கண்டமாலை, புண், கட்டிகள், கொருக்கு, கிரந்தி, பிரமேகம், சூலை, எல்லாவகை இரணங்கள் ஆகியவைகள் தீரும்.

**மருந்துணவு :—** புளி, புகை, புணர்ச்சி ஆகியவைகளைத் தள்ளவும்.

**குறிப்பு :—** வாய் பிடிக்கிற மருந்துகளினால் கொஞ்சம் கடினமாய் இருப்பது போலவே அதிக லாபமும் இருக்கிறது. வலு

வான நோய்களுக்கு சிலருக்கு இவ்வித மருந்துகள் அவசியமாகவே காணப்படுகிறது. ஆகையால், எந்த சமயத்தில் எந்த மருந்து உபயோகிக்க வேண்டியதாக நேரிடுமோ அந்தச் சமயங்களில் உதவும்படியாக எல்லா வகை மருந்துகளும் எழுதும்படியாக்க கடமைப்பட்டிருக்கின்றோம்.

## 574 பூர சட்ரச பற்பம்

இரசகற்பூரம் தேவையான அளவு, இதனைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மைபோலான பின்பு தண்ணீரை விட்டுக் கலக்கித் தெளியவைத்துத் தெளிந்தவுடனே தெளிவையிறுத்து நீக்கிவிட வேண்டும். மறுபடியும முன்போல் தண்ணீரை விட்டு முன் போல் தெளிவை இறுத்து நீக்கி விடவேண்டும். இவ்விதம், மடக்கி மடக்கிப் பத்துத்தடவைகள் கழுவியெடுத்து வெய்யிலில் உலர்த்திக் கொள்ளவேண்டும். பிறகு இதனை எடுத்து இதில் பாதிஎடை பொரித்த வெண்காரத்தைச் சேர்த்து ஒருமணிநேரம் அரைத்துப் புட்டியில் வைத்துக்கொள்ளவும்.

**அளவு** :— 1 முதல் 2 குன்றி எடை.

**துணைமருந்து** :— பனைவெல்லம், வெண்ணெய், வாழைப் பழம், சுக்குக் குடிநீர், சுக்கை அரைத்த விழுது முதலியவை களாகும்.

**தீரும்நோய்கள்** :— சுரம், சன்னி, சூலை, குன்மம், வாயு முதலியவைகள் தீரும். ஐந்து அல்லது ஏழு வேளைகள் உபயோகித்தால் போதுமானது.

**மருந்துணவு** :— சமயோசிதம் போலவும், நோய்க்குத் தகுந்ததுபோலவும் பத்தியமேற்படுத்த வேண்டியது.

## 575. முடிபூர பற்பம்

இரசகற்பூரம் 5 பலம் (175 கிராம்), எண்ணெய்ச் சிக்கு முதலியவைகள் போக்கின தலைரோமம் 5 பலம் (175 கிராம்), அழுக்கில்லாத வெள்ளைத்துணி 5 பலம் நல்லெண்ணெய் செல்லத் தக்க அளவு.

**செய்முறை**:— பூரக்கட்டியின்மீது தலை மயிரைச்சுற்றி அதன் மீது துணியைச்சுற்றி நல்லெண்ணெயில் குளிர நனைத்துக் கொளுத்தி விட்டு எரித்து ஆறினபிறகு கட்டியை யெடுத்துக் கருக்கை நீக்கி நுணுக்கி வைத்துக்கொள்ளவும்.



**அளவு**:— ½ முதல் 1 அரிசி எடை.

**துணைமருந்து**:— பனைவெல்லம், வெண்ணெய் முதலிய வைகளாகும்.

**தீரும்நோய்கள்** :— புண்கள், கட்டிகள், வெட்டை, சூலை, மேகம் முதலியவை தீரும்.

**மருந்துணவு** :— வியாதிக்குத் தகுந்தபடியும், உடல் இயல்பிற்குத் தகுந்தபடியும் பத்தியம் ஏற்படுத்தவும்.

## 576. அஷ்ட கற்பூரம்

தூய்மைசெய்த இலிங்கம் 8 வராகனெடை (28 கிராம்), இரசகற்பூரம் 2 வராகனெடை (7 கிராம்), வீரம் 2 வராகனெடை வெடியுப்பு, இந்துப்பு, வளையலுப்பு, வெண்காரம், நவச்சாரம் இவை வகைக்கு 1 வராகனெடை (3½ கிராம்), தாய்ப்பால் செல்லத்தக்க அளவு, கோழிமுட்டை 1.

**செய்முறை** :— மேற்படி சரக்குகளைக் கல்வத்திலிட்டுப் பொடித்துத் தாய்ப்பாலைச் சிறுகச் சிறுகவார்த்து ஒரு சாமநேரம் அரைத்துக் குழம்பு பதமாக்கிக் கோழிமுட்டையை உடைத்து அதிலுள்ள கருக்களை நீக்கிவிட்டு அதில் மேற்படி குழம்பை விட்டு அதன்வாயை மறு அண்டவோட்டினால் மூடி இரண்டு சீலைமண்செய்து ஒரு சட்டியில் நான்கு அங்குல கனம் மணல் போட்டு அதன்நடுவில் மேற்படி முட்டைக் கவசத்தை வைத்து மேற்சட்டி மூடி ஐந்து சீலைமண்செய்து இரண்டுசாமம் எரிக்க வும். குளிர ஆறினபின்பு எடுத்து பொடித்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு**:— 1 முதல் 2 குன்றி எடை.

**துணைமருந்து**:— பனைவெல்லம், வெண்ணெய், முதலிய வைகளாகும்.

**தீரும்நோய்கள்** :— வயிற்றுவலி, குன்மநோய், சுரம், சன்னி, இசிவு, வலிப்பு, சூலை, புண், புரை, முதலிய அநேக நோய்கள் தீரும். அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணை மருந்துகளிலிட அநேக நோய்கள் தீரும்.

**மருந்துணவு**:— நோய்வலிவு, உடல்வலிவு முதலியவை களுக்குத் தகுந்தபடி சமயோசிதம்போல பத்தியம் ஏற்படுத்தவும்.

பால் ஒரே தடவையில் வேண்டுமென்பது அவசியமில்லை. கிடைக்கும்போதெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாகச் சுருக்கிட்டுக் கொள்ளலாம். எவ்விதத்திலும் மேற்கண்ட அளவு சுருக்கிட்டுக் கொண்டால் உத்தமம். எவ்வளவுக் கவ்வளவு அதிகமாகச் சுருக்கிடுகின்ருேமோ அவ்வளவுக் கவ்வளவு சிறந்த குணத்தைக் தரும. சுருக்கிட்டான பின்பு நிலக்கடம்பு இலையை அரைத்து மேற்படி கட்டிக்கு விரற்கனம் கவசித்துச் சீலைமண் ஐந்துசெய்து கவசத்தின் ஒரு பங்கு எடை வறட்டியில் அவிபுடமாகப்போட்டு எடுத்துக் கொள்ளவும். ஆறினபின்பு எடுத்துக் கவசத்தை நீக்கிவிட்டுப் பூரத்தைக் கல்வத்திலிட்டு அதற்குச் சமன் முன் இலிங்கத்தையும் சேர்த்துப் பொடித்து ஒரு மணி நேரம் அரைத்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** ½ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், வெண்ணெய், நெய் முதலியவைகளாகும்.

**தீரும் நோய்கள்:—** மேகநோய்ங்கள், மேகவாயு, சூலை கைகால் பிடிப்பு, சுரம், சன்னி, முதலியவைகள் தீரும்.

**மருந்துணவு:—** இச்சாபத்தியம். பால், தயிர், சேர்த்துக் கொள்ளவும்.

## 580. சண்டமாருத செந்தூரம்

தூய்மைசெய்த இரசகற்பூரம் 10 வராகனெடை (35 கிராம்), தூய்மை செய்த இலிங்கம் 8 வராகனெடை (28 கிராம்), தூய்மை செய்த வீரம், தூய்மைசெய்த கெந்தகம், தூய்மைசெய்த இரச செந்தூரம் இவை வகைக்கு 2 வராகனெடை (7 கிராம்), கோழி முட்டை வெள்ளைக்கரு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** சரக்கெல்லாவற்றையும் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி வெள்ளைக்கருவைச் சிறுகச் சிறுக விட்டு இரண்டுசாம நேரம் அரைத்து வில்லைகள் செய்து உலர்த்தி வைத்துக் கொள்ளவும். ஒரு புதுச் சட்டியில் தண்ணீரைவார்த்து அடுப்பேற்றிக் குமிழி எழும்பும்படியாகக் காய்ச்சி அதில் மேற்படி வில்லைகளைப் போட்டு வெந்தபதமாக எடுத்துக் காயவைத்துக் கொள்ளவும். பிறகு பச்சரிசி 2½ பலம் (87½ கிராம்), சுரைக்காய் 2½ பலம். இரண்டையும் ஒரு சட்டியில் போட்டு முன்போல் வேகவிட்டுக் குமிழி எழும்பும்படியாகக் காய்ச்சி மேற்படி வில்லைகளைப் போட்டு இரண்டொரு நிமிடந் தாமதித்து உடனே எடுத்துக் குளிர்ந்த நீரை விட்டுக்கழுவி வெய்யிலில் வைத்துக் காய்ந்த பின்பு பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.



**அளவு:—** ½ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், வெண்ணெய், சுக்கை அரைத்த விழுது, பஞ்சதீபாக்கினிஇளகம், திரிகடுகுஇளகம், திரிபலைஇளகம், விளக்கெண்ணெய் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:—** பதின்மூன்று சன்னி, அதிசாரபேதி, பௌத்திரம், எண்பது வாதம், பதினெட்டுச்சூலை, பாரிசவாயு, ஆறுவகைப்பாண்டு, விதைவாதம், ஊதுகாமாலை, ஆறுவகைச் சோகை, ஆறுவகைப் புற்றுநோய்கள், ஆடியலறுசன்னி, அண்டவாதம், முகவாதம், பதினெட்டுவகைக் குட்டம், பாம்புக்கடி, பூரான்கடி, எட்டுவகைக் குன்மம், காக்கைவலி, சூதக வாயு, கணுவாயு, கணுவாதம், புண்கள், கிரந்திகள், வெடி சூலை, குலையெரிவு, பக்கவலி, மகோதரம், தலைவலி, குதிரை வலி, குமரகண்டவலி, கண்டமாலை, தமரகவாயு, நாய்க்கடி நஞ்சு, எலிக்கடிநஞ்சு, விப்புருதி, சுரம், நாற்பதுவகை பித்தம், கரப்பான்நோய், கரப்பான் சம்பந்த மதுமேகம் ஆகியவைகள் தீரும். இன்னும் அந்தந்த நோய்களுக்குத் தகுந்த துணைமருந்துகளில் கொடுக்க அநேக நோய்கள் தீரும். இதனைச் சிறுவர்முதல் முதியோர் ஈருகவுள்ள எல்லோருக்கும் உபயோகிக்கலாம்.

**மருந்துணவு :—** இச்சாபத்தியம்ச் பால், நெய் முதலியவைகளை அதிகமாகச் சேர்க்கவும்.

## 581. முப்பூரச் செந்தூரம்

தூய்மைசெய்த இரசகற்ப்ரம், இலிங்கம், இரசசெந்தூரம் இவை வகைக்குப் 1 பலம் (35 கிராம்), அரசங்கொழுந்துச் சாறு செல்லத்தக்க அளவு, அரசங்கொழுந்து 15 பலம் (525 கிராம்).

**செய்முறை :—** முன் மூன்று சரக்குகளையும் கல்வத்திலிட்டுப் பொடித்து அரசங்கொழுந்துச் சாற்றைச்சிறுகச் சிறுக வார்த்து இரண்டுசாமநேரம் அரைத்து ஒரே வில்லையாகச் செய்து உலர்த்தி அரசங்கொழுந்தை அரைத்து ஒரு உருண்டையாகச் செய்து அதற்குள் மேற்படி வில்லையைவைத்துக் கவசித்து அதன்மீது ஒரு சீலைமண்செய்து கவசத்தின் மூன்று பங்கு எடை

வறட்டியில் புடமிட்டு ஆறினபின்பு எடுத்துப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ குன்றி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், திரிகடுகு இளகம், திரிபலை இளகம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:—** சுரங்கள், சன்னிகள், வயிற்றுவலி, குன்மநோய், சூலைநோய், சூதகவாயு, மேகநோய் ஆகியவைகள் தீரும். விளக்கெண்ணெயில் கலந்துக் கொடுக்கச் செம்மையாகக் கழிச்சலாகி உடலிலுள்ள தீயநீர்கள் வெளிப்பட்டு உடல் சௌக்கியமுண்டாகும்.

**மருந்துணவு:—** புளி, புகை, புணர்ச்சி, காப்பான் பொருக்கள், கோழி, மீன், கருவாடு முதலியவைளாகும்.

## இரசகற்பூர வீறு குறிகுணங்கள்

இரசகற்பூர வேகத்தால் முகத்தில் செல்வாப்புக் கட்டியைப் போல் வேர்க்குருவும், முகப்பருவும் உண்டாதல்; மார்பின் பள்ளத்தில் பரு, கட்டி, இரணம், புண் என்ற இவைகள் காணுதல்; இடைப்பக்கங்களில் வலித்தல்; வயிறு புண்ணுதல்; விதைகள் வீங்கி நோவுண்டாதல்; உள்நாக்கில் இரணங் காணுதல், அடிக்கடி கழிச்சலாகி அதில் இரத்தகழிச்சல் உண்டாதல் என்ற இக்குணங்களுண்டாகும்.

## இரசகற்பூர வீறு முறிவுமருத்துவம்

வேலை வேர் $\frac{1}{4}$ பலம் வேர் நிலப்பனைக்கிழங்கு $\frac{1}{4}$ பலம், ($8\frac{3}{4}$ கிராம்), பொன்னுங்காணிவேர் $\frac{1}{4}$ பலம், கண்டுபரங்கிவேர் $\frac{1}{4}$ பலம், இந்நான்கையும் குடிநீராகச்செய்து காலை மாலை இரண்டுவேளைகளிலும் விடாமல் இரண்டு வாரம் அல்லது மூன்று வாரங்கள் வரையில் குடித்துவரக் குணமாகும்

## வீரம்

இது வெள்ளை நிறமானதாயும், எவ்வித வாசனையும் இல்லாததாயும், ஒரு விதக்காரமுள்ளதாயும், இருக்கும். இது சிறிய பளிங்குக் கற்களைப் போலாவது அல்லது, பெரிய படிகக் கல்லைப் போலாவது இருக்கும். இதை நெருப்பிலிட்டால் வெகு எளிதாய் உருகும். (295) டிகிரிக்கு எரித்தால் பொங்கிப் புகையாகப் பறந்துவிடும். இதைப் பதங்கித்தால் அரைப் பிரகாசமான, அல்லது வெள்ளையான பளபளப்புள்ள பொடியாகும். வீரமானது தண்ணீரிலும், சாராயத்திலும், ஈதரிலும், தாராளமாகிக் கரையும். தண்ணீரோடு எவ்விதத் தடையுமின்றிக் கலந்து போகும். இன்னம் கறியுப்பு, நவச்சாரம், என்ற இவற்றில் ஒன்றோடு சேர்க்கப்பட்டால் மிகவிரைவில் கரையும் தன்மையுடையதும். இரச சம்பந்த கனப்பொருள்களில் நீரில் கரையத்தக்கதில் இதுவே மிக முக்கியமானதுமாகும். ஆகையால், இது செயநீர்களிலும், திராவகங்களிலும் அதிகமாகச் சேர்க்கப்படுகிறது. இந்தக் கட்டியின் மீது கொஞ்சம் சுண்ணும்பைத் தடவினால் சிவந்து காணப்படும். வீரப்பொடியைச் சுண்ணும்பு நீருடன் கலந்தால் மஞ்சள் நிறமான வண்டல் அடியில் படிந்து பின் புறம் சிவந்து போகும். இது கரப்பான் வாதநீக்கி; அதாவது இதை உட்கொண்டால் உடலிலுள்ள தாதுக்கள் அழுகிப் போக ஒட்டாமல் செய்கிற மருந்து; இதை மருந்துகளோடு சேர்த்தால் சரக்குகள் மடிந்து மக்கித் தம்குணங்கள் கெட்டுப் போகாமல் காக்குங்குணமுள்ள மருந்து என்பதே வீரமானது வைப்புச் சரக்கு; இதன் வைப்பு பல சித்த மருத்துவ நூல்களிலும் பற்பல வகைகளாகச் சொல்லப்பட்டிருக்கின்றன. ஆயினும், அவற்றுள் பிரபலமான இரண்டொரு முறைகளையும் இங்கெழுதுவதால் அதன் உற்பத்தி அதன் சம்பந்தச் சரக்குகள் முதலியவைகளைத் தெரிந்து கொள்ள ஏதுவாகும் என்பதே கருத்து.

## வீர வைப்பு

தூய்மைசெய்த வெடியுப்பு, தூய்மைசெய்த நவச்சாரம், கறியுப்பு, படிக்காரம், துருசு, அன்னபேதி, இவை வகைக்குப் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்). தூய்மைசெய்த இரசம் 18 பலம், (630 கிராம்), இவற்றைக் கல்வத்திலிட்டுக் கெந்தகத் திராவகம் விட்டு, 8 சாமம் அரைத்து வாலையிலேற்றி பாகப்படி எரித்துக் கொள்வதேயாம். இந்த வீரத்துடன் மேற்கண்ட சரக்குகளில் ஒவ்வொரு பலம் தடவைக்குத் தடவை சேர்த்து முன்னம் சொன்ன முறைப்படி மடக்கி மடக்கி எரித்தெடுத்த வீரமே திராவகம் முதலியவைகளுக்குச் சிறப்பானது. இப்பொழுது கடையில் விற்கப்படுவதெல்லாம் பின்காணும் விதமாய்ச் செய்யப்படுவதேயாகையால் அவ்வளவாய் மேலான குணத்தைத் தராதென நிதானித்து வைக்கவேண்டியது

## வீர வைப்பு ஆங்கிலமுறை

இரசம் 2 பலம் (70 கிராம்), கெந்தகத் திராவகம் 21½ அவுன்ஸ் இவை இரண்டையும் சேர்த்து, இரசமானது பற்பமாகிற வரையில் எரித்துக் காய்ச்சி நன்றாகக் குளிர ஆறின பின்பு 2 பலம் கறியுப்பைச் சேர்த்துப் பீங்கான் கல்வத்தில் பொடித்துப் பதங்கப் பாத்திரத்திலிட்டு முறைப்படி செய்து முறைப்படி தீயை அதிகப் படுத்திப் பதங்கமேறின பின் ஆறவிட்டெடுத்துக் கொள்வதேயாகும்.

வீரத்துக்குச் சவ்வீரம், சரக்குச்சுண்ணம், வெள்ளைச்செந்தூரம், வராகத்தின்தலையெனப் பல பெயர்களுண்டு. மேல்நாட்டில் செய்யப்பட்டுவருவதால் பறங்கிப்பாடாணம் என ஒரு பெயருமுண்டு.

**சித்த மருத்துவம் வீரத்தின் குணம் :—** குன்மம், குறைநோய், மகா வாதநோய்கள், தீயமாமிசம் வளர்ச்சி, சூலை நோய்கள், புண்கள் கொருக்கு, மேகநோய் நீடித்திருக்கிற தோல்நோய், குட்டம், காக்கைவலி, கீல்வாத நோய், நீர்மதக நோய், நீர்க்கோவை, விசை நரம்புகளின் வீக்கம், பிரமேகம், தந்திமேகம், தோல்நோய் முதலியகொடியநோய்கள் தீரும்.

## வீரத்திற்குப் பகைச்சரக்குகள்

சுண்ணாம்புத் தண்ணீர், வாந்தியுப்பு, காடிசத்துருகாரம் முட்டையின் வெள்ளைக்கரு, சவுக்காரம் முதலியவைகளாகும்.

## வீரத் தூய்மை

வீரக்கட்டி 1 பலம் (35 கிராம்), சீனக்காரம் 3 பலம் (105 கிராம்), இரும்புச்சட்டியில் சீனக்காரத்தை உருக்கி தண்ணீரான வுடன் வீரக்கட்டியை இட்டு இரும்புக்கத்தியால் புரட்டிக் கொண்டு வரவேண்டும். கட்டியானது கீழே அழுந்தி விடாமல் தடவைக்குத் தடவை கொஞ்சம் தூக்கிக் கொடுத்து வரவும் வேண்டும். இப்படிச் செய்து சீனமெல்லாம் வறண்ட பின் னெடுத்து வைத்து ஆறினபின் கட்டியின் மீதுள்ள சீனத்தைக் கத்தியினால் மெதுவாகச் சுறண்டி 1½ பலம் (52½ கிராம்), சூடனைத் தூள் செய்து கட்டியின் கீழ் மேலிட்டமுத்திக் கொளுத்தி வீட்டாறின பின்னெடுத்துக் கொள்வதே வீரத்தூய்மையாகும்.



## 582. வீரக்கட்டு

மேற்சொன்ன பாகப்படி 11 தடவைகள் மடக்கி மடக்கிச் செய்துகொண்டால் வீரமானது அரைப்பாகம் கட்டுப்படும். முழுக் கட்டாக்க வேண்டுமானால், மேற்சொன்னபடியே 21 தடவைகள் மடக்கி மடக்கிச்செய்து கொள்ளவேண்டும். சிலசமயம் 16, 17 தடவைகளிலும் கட்டிப்போவதுண்டு. ஆகையால், தடவைக்குத் தடவை பார்த்து வரவேண்டும். மேலும், இதை நெருப்பிலிட்டால் ஊசிப் புகையிருக்குமே ஒழிய புகையடங்கிய கட்டாகாது.

## 583. வீரக்கட்டு (வேறு)

திறமான சாம்பிராணி, சூடன் என்னும் தீபகற்பூரம், இவை வகைக்கு 10 பலம் (350 கிராம்), இவ்விரண்டையும் அம்மியில் வைத்து அரைத்துப் பிளாஸ்திரி போலான பின்பு 10 பங்காகச் செய்து வைத்துக் கொள்ளவேண்டும். இரண்டங்குலம் சதுரமான சேலைத்துண்டில் ஒரு பங்கைத்தடவி அதன் மத்தியில் ஒரு பலக் கட்டி வீரத்தைவைத்துப் பிளாஸ்திரிச்சேலையின் இருபக்கங் களையும் சேர்த்து முறுக்கிவிட்டு அதைக் குறட்டில் பிடித்து விளக்கில் கொளுத்திக் கட்டியின்மீதுள்ள கவசமெல்லாம் எரிந்தபின்பு ஆறவைத்துக் கத்தியால் கட்டியின்மீதுள்ள சிட்டத்தைச் சுறண்டி எடுக்கவேண்டும். இரண்டாந்தடவை முன்களிம்பை இரண்டாம் பங்கை வேறு சேலைத்துண்டில் தடவி முன் கட்டிக்குக்கவசித்து முன்போலவே கொளுத்தி ஆறவைத்து ஆறினபின்பு சிட்டத்தை நீக்கி முன்போல களிம்பு தடவி முன்போலவே செய்யவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி நூறுதடவைகள் செய்யின் வீரங்கட்டுப் பட்டுப்போகும்.

## 584. வீரக்கட்டு (வேறு)

இரண்டு பலமுள்ள வீரக்கட்டி, (இது நான்கு பக்கமும மேடு பள்ளமின்றி ஒத்ததாயிருக்க வேண்டும்). பின் காணும் முறைப்படி. சித்தப்படுத்தின துப்பாக்கி மருந்து 20 பலம், (700 கிராம்) மேல்நாட்டு மருந்தானால் மிகவும் மேன்மையாயிருக்கும். இந்த மருந்தானது எவ்வளவு உயர்ந்ததாக இருக்கின்றதோ அதற் குத் தக்கபடி வீரமும் அவ்வளவு நேர்த்தியாகவும், சிறப்பான குணமுள்ளதாகவுமிருக்கும். மேலும், மருந்து சேதமாகாமலும், அபாயத்திற்கு ஏதுவாகாமலும் அதிக கவனிப்போடு செய்தால் இம் மருந்தால் அநேக நோய்கள் தீருவதுமின்றி வேறு பற்பல முறை களுக்கும் உதவும்.

**செய்முறை:—** காற்றில்லாமல் வெளியான இடத்தில் ஒரு கவசத்திற்கு ஒவ்வொருகுழியாக பத்துகுழிகள் செய்யவேண்டும். இந்தக்குழி ஒவ்வொன்றும் மூன்று அங்குல ஆழமும். மூன்று அங்குல சதுரமுள்ளதாகவும் இருக்கவேண்டும். இந்தக் குழியில் அரைப் பலம் மேற்படி துப்பாக்கி மருந்தைப் பரப்பி அதன்மேல் முன் வீரக்கட்டியை வைத்து அக்கட்டியின் மேலும், கட்டியைச் சுற்றிலும், ஒன்றரைப் பலம் மேற்படி மருந்தைப் போடவேண்டும். இந்த மருந்தினுல் கட்டியானது மறைந்துபோவதுமின்றி கட்டியின் நாலாபக்கமும் மருந்தானது ஏற்றக் குறைச்சலின்றிச் சமமாயிருக்க வேண்டும். பின்பு ஒரு நீண்ட கோலின் நுனியில் தடிப்பான ஒரு சாம்பிராணிவர்த்தியைக் கட்டிக் கொளுத்திக்கொண்டு எட்ட நின்றுகொண்டு முனசித்தப்படுத்தி வைத்திருக்கிற மருந்தில் வைத்தால் அது உடனே குப்பெனப்பற்றி எரியும். சற்றுநேரம் தாமதித்துக் குழியில் துப்பாக்கி மருந்தானது பாக்கியாய் நின்று விடமால் எல்லாம் எரிந்து விட்டதாவெனத் திட்டமாகப் பார்த்து வீரக்கட்டியானது முற்றும் குளிர ஆறினபின்பு எடுத்துக்கொள்ள வேண்டும்.

பின்பு அதற்கடுத்த குழியில் முன்போலவே அரைப்பலம் துப்பாக்கி மருந்தை அடியில் வைத்து அதன்மேல் முன் வீரக் கட்டியை வைத்து ஒன்றரைப்பலம் முன் மருந்தை முன்போலவே சமபாகம் போட்டு மறைத்து நிறைத்து முன்போலவே எட்ட நின்றுகொண்டு முன்போல் கொளுத்திச் சற்று தாமதித்துத் துப் பாக்கி மருந்தெல்லாம் மிச்சமில்லாமல் பற்றி எரிந்ததா என்று பார்த்து வீரக்கட்டியானது குளிர ஆறினபின்பு எடுத்துக்கொள்ள வேண்டும்.

இவ்விதமாக மடக்கி மடக்கி நூறு தடவைகள் செய்து எடுத்துக் கொள்ளவேண்டும். இப்பக்குவத்தைத் தொடர்ச்சியாக ஒரேநாளில் செய்ய வேண்டுமென்பது அவசியமல்ல. நாள் தோறும் இயன்றவரையில் 10 அல்லது 15, தடவைகள் செய்து கொள்ளலாம். ஆனுல், எவ்விதமும் நூறு தடவைகள் மடக்கி மடக்கிச் செய்ய வேண்டியது மிக மிக அவசியம்.

இதன்பின்பு வாயகன்ற ஒரு மண்பாண்டத்தில் 8 படி நன் நான்காய் வெட்டப்பட்ட சேராங்கொட்டையைபோட்டு அதன் மேல் முன்சித்தப்படுத்தின வீரக்கட்டியை வைத்து அதன் மேலும் 8 படி நந்நான்காக வட்டப்பட்ட சேராங்கொட்டை யைப் போடவேண்டும். இவ்விதம் போடப்பட்ட சேரங்கொட் டையானது மேற்படி பாண்டத்தின் வாய் மட்டத்திற்கு ஒத்



திருக்கவேண்டும். பின்பு அந்தப்பாண்டத்தின் வாயில் சேராங் கொட்டையின் மீது 1 படி வெண்ணெயை உருண்டையாக உருட்டிவைத்து அடுப்பின் மீதேற்றி ஆரம்பத்தில் சிறுதீயாக எரித்து 1 சாமம் சென்றவுடன் பாண்டத்திலுள்ள வித்துக்களை யும் கொளுத்திவிடவேண்டும். இதை வீட்டில் அல்லது சனப் பழக்கமுள்ளவிடத்தில் வைத்தெரிக்கலாது. இதை எரிக்கும் போது அபாரமான புகையும் ஒருவித வாசனையுமுண்டாகும். அதைச் சுவாசிக்கும் சில தேதிகளுக்கு வீக்கம் முதலிய பல தொந்தரவுகளுண்டாகும். மேலும் இது பற்றி எரியும் போது பெருஞ்சு வாலையோடு எரியுமாகையால் இதன் மேல் கூரை முதலியவைகளாலான கட்டிடங்களிருக்கலாகாது அப்படியிருக் கும் பட்சத்தில் அபாயத்திற்கு ஏதுவாகும். இதை ஊருக்கு வெளியில் மைதானமான விடத்தில் வைத்தெரிப்பதே உத்தம மும் அபாயமற்றதுமாகும். அப்படி வெளியில் எரிப்பவர்களும் திட காத்திர முள்ளவர்களும், அனுபவப்பட்டவர்களும் மேற்படி கொட்டைப்புகையால் கெடுதி சம்பவிக்காத சுபாவமுடையவர் களும் இருக்கவேண்டும். மேலும் எரிப்பவர்கள் எரிக்குமுன் தயிர்சாதம், வெங்காயம், சாந்த சமன உணவுகளை வயிறு நிறையச்சாப்பிட்டு ஆரம்பிக்கவேண்டும். பாண்டத்திலுள்ள கொட்டையானது பற்றிஎரிய ஆரம்பித்தால் சமீபத்தில் ஆளி ருப்பதும் அனுவசியமே. ஏனெனில் இது நன்றுய் பற்றி எரிய ஆரம்பித்துவிட்டால் முழுவதும்பற்றி எரிந்ததே அடங்குமின்றி வேறுவிதகாரணமின்றி நெருப்பு அமர்ந்துபோகாது. அப்பாண் டத்துடனே ஒருநாள் ஆறவிட்டு மறுநாள் எடுத்துக்கொள்ள வேண்டும். வீரமானது செம்மையாகக் கட்டுப்பட்டு இறுகி யிருக்கும். இதைத் தனியாகவே உடல்நிலை, உடல்வலிவு, நோயின்வலிவு, முதலியவைகளுக்கேற்ற அளவுப்படி தகுந்த துணைமருந்துகளுடன் உபயோகிக்க, மகா மாரிக்காய்ச்சல் (பிளேக்) விரணமேகநோய்கள், குட்டங்கள், குறைநோய்கள், குன்மங்கள், கெட்டமாமிசநோய்கள், மகாவாதங்கள், மகா மூர்ச்சாநோய்கள், மகா சூலைகள், எம்மருந்திலும் தீராத கீல் பிடிப்புகள் முதலியவைகளும் தீரும். விடகழிச்சல் முதலிய எந்த நோயினுலும் உடல் சில்லிட்டு நாடிகளெல்லாம் வீழ்ந்து அடங்கி விட்டாலும் இதை அளவுப்படி உட்கொண்ட உடனே உடலில் சூடேறி நரம்புகள் உற்சாகப்பட்டு நோய் குணமாகும்.

**இவ்விதம் வீரத்தைக்கட்டி** செந்தூரம், பற்பம், மெழுகு, திராவகம், செயநீர் முதலியவைகளில் உபயோகப்படுத்தலாம். இதைக் கடினப்பட்டு ஒருமுறை செய்துகொண்டால் அநேக

ஆண்டுகள் உபயோகிக்கலாம். இந்த வீரமானது பிர்மாஸ்திரம் முதலிய முறைகளிலும் சேர்க்கப்படுகிறது. அறிவாளிகளான அனுபவசாலிகள் இதன்விசேட முறைகளையும் தெரிந்துகொள் வார்கள். இதைமுறைப்படியும், அளவுப்படியும், சமயோசிதமாகவும் உபயோகித்தால் எவ்விதக் கெடுதியுமுண்டாகாது. வீரத்தைக் கட்டும் முறைகளில் அனுபவயுக்தமாய் இதற்குச் சமானமான தொன்றுமில்லை யென்றே சொல்லவேண்டும். இம்முறையானது இரசவாதம், வைத்தியம் என்னும் இருவழிக்கும் உபயோகமாவ துடன் மற்றெல்லா முறைகளைப்பார்க்கிலும் இதில் அதிகப்பிர சித்த குணத்தையுடனே தெரிந்து கொள்ளலாம். இந்த மருந்தில் உபயோகப்படும் துப்பாக்கி மருந்தின் பாகம் பின் வருகிறவித மாகும்.

## வீரக்கட்டிற்குத் துப்பாக்கி மருந்து

பாகப்படுத்தின கம்பி வெடியுப்பு 75 பங்கு, தூய்மைசெய்த கெந்தகம் 10 பங்கு, எருக்கின் கரி 15 பங்கு.

**செய்முறை:—** முன் மூன்றையும் தனித்தனி பொடித்து தனித்தனியே துணியில் வடிகட்டி செய்துகொள்ள வேண்டும். பின்பு மூன்றையும் மேற்சொன்ன நிறைவீதம் ஏற்றக் குறை வின்றிச் சரியாக நிறுத்தெடுத்து மண்பாத்திரத்தில் போட்டு கையால் நன்றாக சேர்த்துக் கொள்ளவேண்டும். பின்பு மரக் கல்வத்திலிட்டு மாக்குழவியால் நன்றாயரைத்தெடுத்து மண்பாத் திரத்தில் போட்டு காடியைத் தெளித்து ஈரப்பசையுண் டாக்கிச்சிறு வில்லைகளாகச்செய்து சாக்கிரதையுடன் வெய்யிலில் உலர்த்தவேண்டும். ஈரப்பசையின்றி நன்றாகயுலர்ந்தபின்பு மறு படியும் மரக்கல்வத்திலிட்டு மரக்குழவியால் பொடித்துத் தூளாக்கி காடிநீர் தெளித்து ஈரப்பசை உண்டாக்கி வில்லைகளாகச்செய்து முன்போல் உலர்த்தவேண்டும். இவ்விதம் ஏழுதடவைகள் மடக்கி மடக்கிப் பொடித்துப் பொடித்துக் காடிவிட்டு வில்லைகள் செய்து உலர்த்திக்கொள்ள வேண்டும்.

**எச்சரிக்கை:—** இம்மருந்தானது அபாயத்திற் கேதுவான தாகையால் அதிக சாக்கிரதையுடன் செய்யவேண்டும். கருங் கல், இரும்பு முதலிய பாத்திரத்தில் செய்யலாகாது கடுமையான வெய்யிலில்வைத்தும் உலர்த்தலாகாது. எனத் தெரிந்திருக்க வேண்டும். இவ்விதம் மருந்தைச்செய்யவும், இதை உபயோகிக் கவும் அரசாங்க சட்ட அனுமதி (லைஸென்ஸ்) பெறவேண்டியது



அவசியமாகையால் அவ்வித அனுமதியும் பெற்றுச்செய்ய வேண்டுமெனவும் தெரிந்திருக்க வேண்டியது.

மேற்கண்ட மருந்தைச் செய்யக்கூடாத நிலைமையில் உயர் தரமான சீமை மருந்தை வாங்கி உபயோகித்துக் கொள்ளலாம்.

## மேற்படி வீரக்கட்டுகளை உள்ளுக்கு உபயோக்கும் விதம்.

மேற்படி கட்டுகளைப் பொடித்து புட்டியில் வைத்துக் கொள் ளவும்.

**அளவு:—** ½ முதல் 1 அரிசி எடை.

**துணைமருந்து:—** அரை வராகனெடை இஞ்சிச்சாறு, அல்லது, அரை வராகனெடை வெல்லம், அல்லது இஞ்சிச்சாறு ½ வராகனெடை, தேன் ½ வராகனெடை, இவ்வரண்டையும் கலந்தது; இன்னும் சமயோசிதம்போல் வேறு அனுபானங்களி லும் உபயோகிக்கலலாம். காலை மாலை இரண்டுவேளையும் மூன்று நாள் ஆறுவேளை உபயோகிக்கவும். சில வாலிபர்களுக்கு மூன்று நாளைக்குள் வாய்பிடித்தால் மருந்தை நிறுத்திவிடவும். இடை யில் தாமதப்படுத்தி அவசியமானல் மறுபடியும் உபயோகிக்கவும்.

**தீரும்நோய்கள்:—** பதின்மூன்றுவகை சன்னி நோய் கள், சிலேத்து நோய்கள், மேக நோய்கள், சுவாசகாச நோய்கள், கண்டமாலை நோய்கள், பிராணுவஸ்த்தை முதலியவைகள் தீரும்.

**மருந்துணவு:—** சமயோசிதம்போல் பத்தியம் மேற் படுத்திக் கொள்ளவும்.

## 585. வீரச் செந்தூரம்

### (பூநீறு செயநீர்)

தூய்மைசெய்த பூநீறு ¼ படி, கல்லுப்பு ¼ படி, கற்சுண்ணும்பு ¼ படி, சிறு பிள்ளைகள் மூத்திரம் 2 படி.

**செய்முறை:—** முன்மூன்று சரக்குகளையும் பொடித்து மேற்படி சிறுநீரை விட்டுக்கலக்கி ஒரு புதுப்பானையில் விட்டு அடுப்பைப்போல கல்லையடுக்கி பானைக்கு அடியில் ஒரு பீங்கானை வைக்கவும். பானையினடியிலிருந்து நீர் கசிந்துகொண்டிருக்கும். வடியும் நீரை யெல்லாம் சேகரித்து ஒரு புட்டியில் பத்திரப்படுத் தவும். இதுவே பூநீற்று செயநீராம்.

சவளையான இரும்பு 4 வராகனெடை (14 கிராம்), இதனைக் காய்ச்சி ஓமக்கனம் தகடு தட்டிச் சித்தப்படுத்தி வைத்துக்கொள்ளவும். இரசம், வீரம், இவை வகைக்கு $1\frac{1}{2}$ வராகனெடை ($5\frac{1}{4}$ கிராம்), படிக்காரம் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), சூடன் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), துருசு $\frac{1}{2}$ வராகனெடை ($1\frac{3}{4}$ கிராம்).

**செய்முறை:—** மேற்கண்டசரக்குகளை யெல்லாம் கல்வத்திலிட்டுப் பொடித்து முன் சித்தப்படுத்தி வைத்திருக்கிற **பூநீற்று** செயநீரைச் சிறுகச் சிறுகவிட்டு ஒருசாமநேரம் அரைத்து மேற்படி இரும்புத் தகட்டின் மீது எங்கும் சமமாகப்பூசி அகலமான பீங்கானில் ஒரு பக்கத்தில் வைத்து சற்று சாய்த்து வைத்தால் அதிலிருந்து நீர் கசிந்து கொண்டிருக்கும், அந்த நீர் சேர சேர சேகரித்துப் பீங்கானில் வைத்துக் கொள்ளவும். இதுவே அயசெயநீராகும்.

வீரம் 5 வராகனெடை ($17\frac{1}{2}$ கிராம்), இரசம் 5 வராகனெடை, ($17\frac{1}{2}$ கிராம்), இரண்டையுங் கல்வத்திலிட்டு, அரைத்து இரசம் மடிந்தபின்பு அயசெயநீரைச் சிறுகச் சிறுகவிட்டு நான்கு சாமநேரம் அரைத்து வழித்து ஒரு கிளிஞ்சிலில் வைத்து மேலும் ஒரு கிளிஞ்சில் மூடி உலர்ந்த வாழைநாரினுல் கிளிஞ்சில் தெரியாமல் சுற்றி அதன்மீது மூன்று சுண்ணும்புச் சீலைசெய்து உலர்த்தி வைத்துக்கொள்ளவும்.

கற்சுண்ணும்பு $\frac{1}{2}$ படி, கறியுப்பு $\frac{1}{2}$ படி, இவ்விரண்டையும் உரலில் போட்டு மாவுபோலிடித்து இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு சட்டியில் போட்டுச் சமமாக அழுத்திவிட்டு அதன்நடுவில் முன் சித்தப்படுத்தின கிளிஞ்சில் கவசத்தை வைத்து அதன்மீதும் மறுபாதித்தூளைப்போட்டு மேல்சட்டிமூடி மூன்றுசீலை மண்செய்து அடுப்பேற்றி மெதுவான தீயாக இரண்டு சாமம் எரிக்கவும். ஆறினபின்பு கவசத்தைப் பிரித்து எடுத்தால் செந்தூரமாகியிருக்கும். இதனை எடுத்து பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ குன்றி எடை.

**துணைமருந்து:—** இஞ்சிச்சாறு, தேன், பனைவெல்லம், நல்லவெல்லம், சுக்கை அரைத்த விழுது முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:—** விடாக்கழிச்சல், உதிரக்கட்டு, உதிரவாயு, **சூதகசன்னி**, சூலைக்கட்டு, வாயுநோய்கள், பக்கவாதம், பாரிசவாதம் முதலிய இருபது வகை வாதநோய்கள், அறுபத்து நான்கு சுரங்கள், சன்னிபாதநோய்கள், சைத்திய நோய்கள், தோடங்கள் முதலிய அநேக நோய்கள் தீரும். ஏழுவேளை அல்லது, பத்துவேளை உபயோகிக்கவும். நோய்கள் பலமாயிருந்தால் சமயோசிதம்போல் இடையில் விட்டுவிட்டுப் பிறகு உபயோகிக்கவும்.



**மருந்துணவு :—** நோயின்வலிமை, உடலின்வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தபடி ஏற்படுத்தவும்.

**குறிப்பு:—** இந்தச் செந்தூரமானது மிகவும் அருமையானது வாய்ப்பிடிக்காது. ஆயினும் மகா வேகமுடையதாகையால் உடல் வலிமை முதலியவைகளை நிதானித்து அதிக சாக்கிரதையுடன் உபயோகித்தால் மேற்கண்ட நோய்களெல்லாம் காற்றுப் பறந்தோடும்.

## 586. வீரச் செந்தூரம் (வேறு)

முன்சொன்ன வகைகளில் ஒரு வகையாகக் கட்டின வீரம் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), நாய் வேளைச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** மேற்படி வீரத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்துப் மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து வில்லை செய்துலர்த்தி சிறு அகலில் வைத்து மேலகல்மூடி மூன்று சீலைமண் செய்து உலர்த்தி ஒருசாண் சதுரமானதும், எட்டங்குல ஆழமுமுள்ள குழிதோண்டி அதில் இரண்டங்குலம் மணலைப் பரப்பி அதன் மீது முன் கவசத்தை வைத்துக் குழிநிறைய மணலைக் கொட்டி அதன் மீது ஒரு சாண் உயரம் புடமிடவேண்டும். புடம் ஆறின பின்பு எடுத்து அந்தக் கவசத்தைத் தலைகீழாகப் புரட்டி வைத்து மணலைக் கொட்டி முன்போல் புடமிடவேண்டும். குளிர ஆறின பின்பு கவசத்தைப் பிரித்துக் கல்வத்திலிட்டுப், பொடித்து முன்போல் நாய் வேளைச்சாற்றை விட்டு இரண்டு சாம நேரம் அரைத்து முன் வில்லை செய்துலர்த்தி கவசித்து முன்போல் இரண்டு பக்கமும் புடமிடவும். இவ்விதம் மடக்கி மடக்கி ஏழு தடவைகள் செய்தெடுத்தால் கருஞ்சிவப்பான செந்தூரமாகி இருக்கும். ஆனுல் அதிக வேகமாகவும், நோய்களை அதிக சுறுசுறுப்பாகவும் கண்டிக்கும்.

**அளவு :—** $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ குன்றி எடை.

**துணைமருந்து :—** இஞ்சிச்சாறு, தேன், பனைவெல்லம், நல்லவெல்லம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:—** மார்நோவு, முத்திரவாயு, விருக்ஷிக வாதம், சூலைக்கட்டு, மேகநோய்கள் முதலியவைகள் **தீரும்.**

**மருத்துணவு:—** சமயோசிதம்போல் ஏற்படுத்தவும்.

## 587. வீரச் செந்தூரம் (வேறு)

(அ) வீரம் 1 பலம், (35கிராம்) (இது ஓரேகட்டியாக இருக்க வேண்டும்) வெண்பட்டு ஒரு சாண் சதுரமானது, தேன் செல்லத் தக்க அளவு, சாம்பிராணி 1 பலம் (35 கிராம்), சூடன் 1 பலம் (35 கிராம்), பன்றி நெய் 3 பலம் (105 கிராம்).

(ஆ) வெடியுப்பு, இநதுப்பு, கல்லுப்பு, நவச்சாரம், கறியுப்பு, படிக்காரம், வளையலுப்பு, பூநீறு, கெந்தக உப்பு, அட்டுப்பு, கல்வச்சாலவணம், பிடாலவணம், அப்ளாக்காரம், எவட்சாரம், சத்திச்சாரம், உமிலிச்சாரம், தும்பைச்சாரம் முதலிய உப்புகளில் எத்தனை வகைகள் கிடைக்குமோ அத்தனை வகைகள் சமபாகமாக எடுத்துக் குப்பைமேனிச்சாற்றை அல்லது அகத்திக்கரை இலைச்சாற்றை அல்லது, பொன்னுங்காணி இலைச்சாற்றை, அல்லது, எலுமிச்சம் பழச்சாற்றை விட்டரைத்து வில்லை தட்டி உலர்த்திப் புடமிட்டெடுத்துக் கொள்ளவேண்டும். மறுபடியும் முன் சாற்றையே விட்டரைத்து முன்போலவே புடமிட்டெடுத்துக் கொள்ளவும். இப்படிச் சித்தப்படுத்தின உப்பானது சுமார் இருபது பலமிருக்கவேண்டியது. புளியாரையை அரைத்த விழுது 30 பலம் (1050 கிராம்).

**செய்முறை:—** வீரத்தின் மீது பட்டுத் துண்டைச் சுற்றித் தேனில் குளிர நனைத்து அப்பிரேகத் தகட்டின் மீது வைத்துக் கடும்வெய்யிலில் ஒரு நாள் வைத்து எடுத்துக்கொள்க. பிறகு, சாம்பிராணியையும் சூடனையும் கல்வத்தில் அரைக்க மெழுகு போலாகும். அதனை முன் வீரக் கட்டியின் மீது எங்கும் சமமாகப் பூசவேண்டும். அதன் மீது ஒரு துணியைச் சுற்றிக் கிழிக்கட்டி ஒரு இரும்புச் சட்டியில் அல்லது, கரண்டியில் அடியில் படாமல் தொங்கவிட்டு பன்றி நெய்யைவிட்டு அதன் மீதேற்றிச் சிறு தீயாக எரித்து எல்லாம் பற்றி எரிந்து சரக்கிற் பிடிக்கும் சமயத்தில் எடுத்து கருக்கை நீக்கி வைத்துக் கொள்க.



ஒரு சட்டியில் புளியாரையை அரைத்த விழுதை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தைக் கீழே பரப்பி அதன்மீது பத்துப் பலம் முன் சித்தப்படுத்தின உப்புப் பற்பத்தைப் பரப்பி அதன் நடுவில் வீரக்கட்டியை வைத்து அதன் மீது பத்துப் பலம் முன் உப்புப் பற்பத்தைப் போட்டு அதன் மீது மறுபங்கு புளியாரையை அரைத்த விழுதை வைத்துப் பரப்பி மேற்சட்டி மூடி ஏழுசீலை மண் செய்து அடுப்பேற்றி நான்கு சாமம் எரிக்கவேண்டும். முதல் சாமம் தீபாக்கினியாகவும், மறுசாமம் கமலாக்கினியாகவும், மற்றிரண்டு சாமமும் காடாக்கினியாகவும் எரிக்கவேண்டும். குளிர ஆறினபின்பு எடுத்தால் செந்தூரமாகியிருக்கும். இதனைப் பத்திரப்படுத்தவும்.

**அளவு :—** 1 முதல் 2 அரிசி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், தேன், இஞ்சிச்சாறு, சுக்கை அரைத்த விழுது, இளக வகைகள் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** பக்கவாதம், முகவாதம், முடக்கு வாதம், நரித்தலைவாதம் முதலிய வாதநோய்கள், வாதநோய்கள், சன்னிகள், தோடங்கள், சைத்தியநோய்கள், சுரநோய்கள், சூலைநோய்கள் முதலிய அநேக நோய்கள் தீரும்.

**மருத்துணவு :—** உடல்வலிமை, நோய்வலிமை முதலியவைகளுக்குத் தகுந்ததுபோலவும், சமயோசிதமாகவும் பத்தியம் ஏற்படுத்தவும்.

## 588. வீரச் செந்தூரம் (வேறு)

செய்யூருப்பு அல்லது பருங்கட்டிகளான கறியுப்பு 2 படி, வெள்ளைச்சாட்டரணை இலை செல்லத்தக்க அளவு, புளியாரைச் சாறு செல்லத்தக்க அளவு, வீரம் 1 பலம் (35 கிராம்), (இது ஓரே கட்டியாக இருக்கவேண்டும்).

**செய்முறை :—** ஒரு கலயத்தில் வெள்ளைச்சாட்டரணை இலையைப்பரப்பி அதன்மேல் சுமார் ஒரு ஆழாக்கு உப்பைப் பரப்பி அதன் மீது இலையைப் பரப்பி அதன் மீது முன்போல் உப்பைப் பரப்பவேண்டும். இவ்விதம் இலையையும் உப்பையும் அடுக்கடுக்காகப் பரப்பி முடிவாக இலையைப் பரப்பி கலயத்தின் வாயை மூடிச் சில்லிட்டு ஐந்து சீலைமண் செய்து கவசத்தின் நான்கு பங்கு எடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின்பு எடுக்கவும். பிறகு முன் போலவே இலையையும் உப்பையையும் அடுக்கடுக்காக அடுக்கி முன்போலவே புடமிடவும். இவ்விதம்

மடக்கி மடக்கி ஏழுதடவை புடமிட்டால் உப்பானது கட்டுப்பட்டுப் போகும். இதனைப் பத்துப் பாகமாக்கி வைத்துக் கொள்ளவும். ஒரு பாகத்தைக் கல்வத்தில் போட்டுப் புளியாரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரம் அரைத்து வெண்ணெய் போலான பின்பு மேற்படி வீரக்கட்டிக்கு எங்கும் சமமாயிருக்கும் படி கவசம் செய்ய வேண்டியது. வெய்யிலில் வைத்து உலர்த்தி செம்மையாக உலர்ந்தபின்பு மற்றொருபாக உப்பை முன்போல் புளியாரைச் சாற்றை விட்டு அரைத்து முன்போல் கவசம் செய்து உலர்த்த வேண்டியது. இவ்விதம் பத்துப் பங்கு உப்பையும் அரைத்துக் கவசத்தின் மீது கவசமேற்றி முடிவாகப் பத்துநாள் வெய்யிலில் வைத்து உலர்த்தி ஒரு சட்டியில் வைத்து மேல்சட்டி மூடி ஏழு சீலமண் செய்து உலர்த்தி அடுப்பின் மீதேற்றி முதல்சாமம் தீபாக்கினியாகவும், இரண்டாவது சாமம் கமலாக்கினியாகவும், இரண்டுசாமம் காடாக்கினியாகவும். ஆகக்கூடி நான்கு சாமம் எரித்து ஆறவிட்டுக் குளிர ஆறின பின்பு எடுத்தால் வீரமானது காவிக்கல் போன்றிருக்கும். இதனைப் பொடித்து புட்டியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு :—** ஒரு அரிசி எடை. இது அதிகவேகமுடையதாகையால, ஐந்து பலம் நெய்யில் சேர்த்து அந்த நெய்யில் சமயோசிதம் போல் ஒரு வராகனெடை, இரண்டு வராகனெடை வீதம் சாப்பிட்டு வரவும.

**துணைமருந்து :—** பனைவெல்லம், வெண்ணெய், பாலேடு முதலியவைகளாகும.

**தீரும்நோய்கள் :—** எண்பதுவகை வாதம், எட்டுவகை குன்மம், சூலைநோய் முதலிய பெரியநோய்களெல்லாம் குணமாகும். இதன் பெருமையும் அருமையும் அநேகம். இதனைச் செய்து அனுபவப்பவர்கள் தாம் தாமே தெரிந்து கொள்ளக் கூடும்.

**மருத்துணவு :—** நோயின் வலிமை உடல் வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்தவும்.

**குறிப்பு :—** இது வாத முறையில் அதிகம் சிறந்ததெனச் சொல்லப்பட்டிருக்கிறது. விருப்பமானவர்கள் இதனைச் செய்து அவ்விதமாகவும் பரிசோதித்துப் பார்க்கலாம். வெள்ளி இருபது பங்கை உருக்கி ஒரு பங்கு குருவைக் கொடுத்தால், வெள்ளி முழு வெட்டையாகும். பிறகு இருபது பங்கு வெள்ளியை உருக்கி முழு வெட்டையிலொரு பங்கைக் கொடுக்க அரை வெட்டையாகும். பிறகு பத்துப் பங்கு வெள்ளியை உருக்கி அரை வெட்டையில் ஒன்று கொடுக்க உள்ளது போலாகும்.



## 589. வீரச் செந்தூரம் (வேறு)

வீரக்கட்டி இரண்டிரண்டு வராகனெடை உள்ளவைகள் 5, பருமனான கொம்புப்பாகற்காய் 5, சோற்றுக்கற்றாழைச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** ஒரு பாகற்காயைக் கீறி அதற்குள் ஒரு கட்டியை வைத்து மூன்று சீலமண் செய்யவேண்டும். இவ்விதமே மற்ற நான்கு காய்களையும் கீறி மற்ற நான்கு கட்டிகளையும் தனித்தனி வைத்து தனித்தனி சீலமண் செய்து வைத்துக் கொள்ளவும். பிறகு பத்துப் பலம் வறட்டியைக் கொளுத்திப் புகை அடங்கினபின் அதற்குள் கவசத்தை வைத்து அவிபுடமாக எடுத்து ஆறின பின்பு வீரக்கட்டியை எடுத்துக் கொள்ளவும். இவ்விதமே மற்ற கவசங்களையும் அவிபுடமாகப் போட்டு எடுத்துக் கொள்ளவும். எல்லாக் கட்டிகளையும் கல்வத்திலிட்டுப் பொடித்துக் கற்றாழைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்துப் பன்னிரண்டு சாம நேரம் அரைத்து வில்லை செய்துலர்த்தி ஓட்டில் வைத்து மேலோடு மூடி ஏழு சீலமண் செய்துலர்த்திக் கவசத்தில் மூன்று பங்கு வறட்டியில் புடமிட்டு ஆறின பின்பு எடுக்க, ரோஜாப்பூ வண்ணமான செந்தூரமாகியிருக்கும்.

**அளவு :—** $\frac{1}{4}$ குன்றி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், இஞ்சிச்சாறு, தேன் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** வாயுநோய், சன்னிநோய், குன்மம், கீல்வாயு முதலியவைகள் தீரும்.

**மருந்துணவு :—** இச்சாபத்தியம்.

## 590. வீரச் செந்தூரம் (வேறு)

வீரம் 1 பலம் (35 கிராம்), காட்டாமணக்குப் பால் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** ஒரு பீங்கானில் வீரக்கட்டியை வைத்து அதில் காட்டாமணக்குப் பாலைவிடவேண்டும். கட்டியானது

பாலில் ஒரு அங்குலம் ஆழ்ந்திருக்கவேண்டியது. அதனை வெய்யிலில் வைத்து அந்தப் பாலெல்லாம் சுண்டின பின்பு மறுபடியும் முன்போல் அந்தப் பாலை விடவேண்டியது. அதனை வெய்யிலில் வைத்துப் பால் சுண்டின பின்பு முன்போல் பாலை விடவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஐந்து தடவைகளுக்குக் குறையாமல் உலர்த்திக் கொள்ளவும். பிறகு அந்த மாசுகளுடன் கல்வத்தில் பொடித்து ஒருநாள் வெய்யிலில் வைத்தால் ரோஜாப்பூ வண்ணமுள்ள செந்தூரமாகும்.

**அளவு** :— ½ முதல் 1 அரிசி எடை.

**துணைமருந்து** :— பனைவெல்லம், வெல்லம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்** :— வயிற்றுவலி, சன்னிகள், வாயுக்கள் முதலானவை தீரும்.

**மருந்துணவு** :— சமயோசிதம் போல ஏற்படுத்தவும்.

## 591. வீரச் செந்தூரம் (வேறு)

தூய்மைசெய்த வீரம் ½ பலம் (17½ கிராம்), இலிங்கம் 1 பலம் (35 கிராம்), இரசசெந்தூரம் 1 பலம் (35 கிராம்), தூய்மைசெய்த கருநாபித்தான் ¼ பலம் (8¾ கிராம்), தூய்மை செய்யப்பட்ட வாளப் பருப்பு ½ பலம். இஞ்சிச் சாறு செல்லத்தக்க அளவு, அஞ்சிலை நொச்சிச் சாறு செல்லத்தக்க அளவு, கருந்துளசிச் சாறு செல்லத் தக்க அளவு.

**செய்முறை** :— வாளத்தைக் கல்வத்திலிட்டு மை போல அரைத்து மற்ற சரக்குகளையும் சேர்த்துப் பொடித்து இஞ்சிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரம் அரைத்துக் கல்வத்துடன் ஈரத்தை உலர வைத்து அஞ்சிலை நொச்சிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரம் அரைத்துக் கல்வத்துடன் ஈரத்தை உலர வைத்துக் கருந்துளசிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரம் அரைத்து வில்லைதட்டி வெய்யிலில் வைத்துச் செம்மையாக உலர வைத்துப் பொடிக்கச் செந்தூரமாய் இருக்கும். புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— ½ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து** :— விளக்கெண்ணெய், சுக்குக் குடிநீர், இஞ்சிச் சுரசம் முதலியவைகளாகும்.



**தீரும்நோய்கள்** :— கழிச்சலாகும்; வாயு, சுரம், சன்னி, மேகவாயு, வயிற்றுவலி, கௌசிகை, நெஞ்சுவலி, மார்புவலி ஆகியவை தீரும்.

**மருந்துணவு** :— நோய் வலிவாக இருந்தால் புளி, புகை, புணர்ச்சி ஆகியவைகளை நீக்கவும். நோய் எளியதாயிருந்தால் இச்சாபத்தியம் ஏற்படுத்தவும்.

## 592. வீரச் செந்தூரம் (பச்சை)

(அ) தூய்மைசெய்த வீரம் 2 வராகனெடை (7 கிராம்), தூய்மைசெய்த இலிங்கம் 1 வராகனெடை (3½ கிராம்), கற்பூர வெற்றிலைச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை** :— இரண்டு சரக்கையும் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி வெற்றிலைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்து வெய்யிலில் காயவைத்து எடுத்துக் கொள்ளவும்.

(ஆ) தூய்மைசெய்த இரசகற்பூரம் 2 வராகனெடை (7 கிராம்), நவச்சாரம் 4 வராகனெடை (14 கிராம்), தண்ணீர் செல்லத்தக்க அளவு, தாய்ப்பால் செல்லத்தக்க அளவு.

**செய்முறை** :— இரண்டு சரக்குகளையும் கல்வத்திலிட்டுப் பொடித்து அதில் ஒருபடி தண்ணீரை விட்டுக் கலக்கித் தெளிய வைத்து தெளிவை இறுத்து விடவேண்டும். பிறகு கல்வத்தில் போட்டரைத்து முன்போல் ஒருபடி நீரை விட்டுக் கலக்கித் தெளிய வைத்துத் தெளிவை இறுத்து விடவேண்டும். இவ்விதம் பத்து தடவை அரைத்துப் பத்து தடவை நீர்வார்த்து ஈரமில்லாமல் உலர்த்தி தாய்ப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரம் அரைத்து வெய்யிலில் காய வைத்து எடுத்துக் கொள்ளவும்.

(அ-ஆ) ஆகிய இருவகைகளிலுள்ளவைகளை ஒன்றாகச் சேர்த்து அரைத்துப் பத்திரப்படுத்தவும்.

**அளவு** :— 1 முதல் 2 குன்றி எடை.

**இதனைப் பயன்படுத்தல்** :— ஞாயிற்றுக்கிழமை காலையில் மேற்சொல் போக்கிய ½ வராகனெடை சுக்கையும், ½ வராகனெடை வேலி வேர்ப் பட்டையையும் சேர்த்து அரைத்து உருண்டையாக்கி உடல் வலிமைக்குத் தகுந்தபடி ஒன்று, அல்லது 1½ குன்றி மணி எடை செந்தூரத்தை அதற்குள் வைத்துச்

சாப்பிடச் சொல்லவும். இவ்விதமே அன்று மாலையிலும் கொடுக்கவும். பால், பச்சைப்பயறு, பச்சையரிசி ஆகிய மூன்றையும் சேர்த்துப் பொங்கி நெய் சேர்த்துச் சாப்பிடச் சொல்லவும். மறு நாள் தமது விருப்பம் போலவும், வழக்கம் போலவும் சாப்பிடலாம். இடையில் மருந்தில்லை. மறுஞாயிற்றுக்கிழமை முன் போல் கொடுக்கவும். பத்தியமும் அப்படியே. மூன்றுவது ஞாயிற்றுக்கிழமையும் இப்படியே செய்க. ஞாயிற்றுக்கிழமை தவிர மற்ற நாள்களில் வேறு பத்தியமில்லாவிடினும் நாற்பது நாள் வரையில் புணர்ச்சியைத் தவிர்க்க வேண்டியது அவசியம். இவ்விதம் மூன்று ஞாயிற்றுக்கிழமைகள் சாப்பிட்டால் மேக நோய்கள், குன்மநோய்கள், சூலை நோய்கள், வாத நோய்கள் முதலிய அநேக நோய்கள் தீரும்.

**குறிப்பு:—** இதனைத் தேவ சந்நிதிகளிலிருந்து உபயோகிக்க வேண்டியது. இதனால் வரும் வரும்படியைத் தருமத்திற்கு உபயோகிக்க வேண்டியது. இந்த நிபந்தனையின் பேரில் உபயோகித்து அநேக நோய்கள் தீர்ந்திருக்கின்றன.

## 593. வீரச் செந்தூரம் (வேறு)

இரச செந்தூரம் 1 பலம் (35 கிராம்), வீரம் 1 வராகனெடை (3½ கிராம்), விடத் தரைமரப்பட்டை அல்லது விடத்தேரான் பட்டையைத் தண்ணீர் விட்டிடித்துப் பிழிந்த சாறு செல்லத் தக்க அளவு.

**செய்முறை:—** மேற்படி இரண்டு சரக்குகளையும் கல்வத்தி லிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரம் அரைத்து வில்லை தட்டி வெய்யிலில் காயவைக்க வேண்டும். செம்மையாக உலர்ந்த பின்பு கல்வத்திலிட்டுப் பொடித்து முன் சாற்றை முன்போல் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரம் அரைத்து முன்போல் வில்லைதட்டி முன்போல் உலர வைக்கவும். இவ்விதம் மடக்கி மடக்கி நான்கு தடவைகள் உலர்த்தி முடிவாகப் பொடித்துப் புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** ½ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து :—** தேன், பனைவெல்லம், விளக்கெண்ணெய் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:** சுரம், சன்னி, உதிரச்சிக்சல்கள், விடகழிச்சல் ஆகியவைகள் தீரும்.



**மருந்துளவு :—** நோய் வலிவு, உடல் வலிவு, ஆகியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்தவும்.

## 594. வீரச் செந்தூரம் (வேறு)

தூய்மைசெய்த வீரக்கட்டி சுமார் 1 முதல் 4 பலம் இருக்கலாம்; காட்டாமணக்குப் பால், புளியாரைச் சாறு செல்லத் தக்க அளவு, பொற்றலைக் கையாந்தகரைச் சாறு செல்லத் தக்க அளவு, காசி குப்பி 1.

**செய்முறை :—** வீரக்கட்டியை ஒரு பிங்கானில் போட்டு அதில் காட்டாமணக்குப் பாலை விட வேண்டும். கட்டியானது பாலிற்குள் ஒரு அங்குலம் ஆழ்ந்திருக்க வேண்டும். அதை வெயிலில் வைத்துப் பாலைவிட்டுச் சுண்ட வைக்கவேண்டும். மூன்றுதடவையும் பாலைவிட்டுச் சுண்டவைத்துக் கொள்ளவும். பிறகு ஒரு கல்சட்டியில் வைத்துப் புளியாரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்துச் சிறுதீயாக எரித்து சுருக்குக் கொடுக்கவேண்டும். கட்டியானது மலர்ந்து அட்டுப்புப்போலாகி விடும். அதைக் கல்வத்தில்போட்டுக் கையாந்தகரைச் சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாம்நேரம் அரைத்து ஈரமில்லாமல் உலர்த்தி மேற்படி காசிக் குப்பிக்கு ஏழு சீலைமண் செய்து உலர்த்தி அதற்குள் முன் மருந்தைப்போட்டுக் குப்பி வாய்க்கு மாக்கல் மூடியிட்டு வாய்க்கு ஏழு சீலைமண் செய்து காய்ந்த பின்பு ஒரு தாழிச்சட்டியில் நான்கு விரல்கனம் மணலைப் பரப்பி அதன் நடுவில் குப்பியைவைத்துக் குப்பிமறைய மணலைப் போட்டு அடுப்பேற்றி ஒருசாமம் தீபாக்கினியாகவும், ஒருசாமம் கமலாக்கினியாகவும், இரண்டிசாமம் காடாக்கினியாகவும் ஆகக் கூடி நான்குசாமம் எரித்துக் குப்பியை உடைத்து விழிப்புடன் செந்தூரத்தை எடுத்துக் கொள்ளவும். செந்தூரம் கறுப்பாயிருக்கும்.

**அளவு:—** 1 முதல் 2 அரிசி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், நல்லவெல்லம், விளக்கெண்ணெய், நெய் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** சன்னிநோய், வயிற்றுவலி, சூலைக்கட்டு, பக்கவாதம் முதலிய அநேக நோய்கள் தீரும்.

**மருந்துளவு:—** நோயின் வலிமை, உடல்வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்தவும்.

**குறிப்பு** :— இது அதிக வேகமுடையதாகையால், மூலச் சூடுள்ள உடலினர்க்கு ஆகாது. ஆகையால், அத்தகையினர்களுக்கு உபயோகிக்கவே கூடாது.

## 595. வீர மெழுகு

(அ) துய்மைசெய்த வீரம் 8 பலம் (280 கிராம்), முருங்கைப் பூச்சாறு ½ படி, செப்பு நெருஞ்சிச்சாறு ½ படி.

**செய்முறை** :— ஒரு பெரிய பானையின் அடி ஓட்டைப் பருமனாக உடைத்து அதில் கரியிட்டு நெருப்பு உண்டாக்கி அதன் நடுவில் மூன்று மண்சட்டிகளை வைக்கவேண்டும். ஒரு தோண்டி ஓட்டை உடைத்து அதன் நடுவில் வீரக்கட்டியை வைத்துக் கரி நெருப்பின் நடுவில் வைத்திருக்கிற மண்கட்டிகளின்மீது வைக்கவேண்டும். பிறகு வீரக்கட்டியின்மீது கால் படி முருங்கைப் பூச்சாற்றை விட்டு இரண்டுமுழ நீளமுள்ள மூங்கில் பிளாச்சியைத் துடுப்புப்போல் சீவி அடிபற்றுமல் நான்கு பக்கமும் துழாவிக் கொடுக்கவேண்டும். சாறு அரைவாசிசுண்டி மேற்படி கட்டி கரைந்துபோன பதத்தில் கால்படி செப்பு நெருஞ்சிச்சாற்றைவிட்டுத் துழாவி வரவேண்டும். பிறகு சரக்குப் புகையாமல் மேற்படி இரண்டுவகைச் சாற்றையும் மாற்றி மாற்றி விட்டுவரவேண்டியது. இவ்விதம் நான்கு சாமம் சுருக்கிட்டுக் குழம்புப்பதத்தில் தீயைக்குறைத்து சரக்குப்புகையாமல் கொஞ்சம் நீரிருக்கும்போதே இறக்கி வெய்யிலில் வைத்து நீரெல்லாம் சுண்டினபின்பு வழித்தெடுத்துத் தனியே வைத்துக்கொள்ளவும்.

(ஆ) கறியுப்பு பருங்கல்லாய்த் தேவையான அளவு (இதனை முறத்தில் போட்டுத் தேய்த்துப் புடைத்து எடுத்துக் கொள்ளவும்.) சிறு செருப்படிச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை**:— மேற்படி உப்பைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுகவார்த்து நான்கு சாம நேரம் அரைத்து வில்லைசெய்து உலர்த்தி ஓட்டிலிட்டு மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து உலர்த்தி முழப்புடமிடவேண்டும். இவ்விதம் மேற்படி சாற்றுல் மடக்கி மடக்கிப் பத்துப்புடமிட்டு எடுத்துக்கொள்ளவும்.

முன் (அ) விலுள்ள வீரக்குழம்பையும், (ஆ) விலுள்ள உப்புப் பற்பத்தையும் சம எடையாகச் சேர்த்துப் தேனைச் சிறுகச்



சிறுக வார்த்து இரண்டு சாமநேரம் அரைத்துப் பீங்கான் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு**:— சங்கம் வேர்ப்பட்டை, சங்கின் இலை, மேற்றேல் சீவின சுக்கு இவை வகைக்கு ¼ வராகனெடை, இம்மூன்றையும் சேர்த்து வெண்ணெய் போல் அரைத்து அதற்குள் மேற்படி மெழுகை ½ முதல் குன்றி எடை வைத்துச் சாப்பிடவேண்டும். அதற்கு மேல் சங்கின் வேர்ப்பட்டை, சங்கின்இலை, மேற்றேல் சீவின சுக்கு, சிற்றரத்தை, கண்டத்திப்பிலி, இவை வகைக்கு 1 வராகனெடை (3½ கிராம்), இவை எல்லாவற்றையும் அம்மியில் வைத்து அரைத்துப் பிழிந்து கரண்டிக்காம்பை நெருப்பைப்போல் காய்ச்சி அதில் தேய்த்து முறித்து வடிகட்டிச் சாப்பிடவேண்டும். இன்னும் தேன், பனைவெல்லம், இஞ்சிச்சாறு முதலியவைகளிலும் துணைமருந்துகளிலும் கொடுக்கலாம்.

**தீரும்நோய்கள்** :— கபவாதம், சைத்திய நோய்கள் குன்மநோய்கள், பின்னிசிவு, முன்னிசிவு, வாதநோய்கள், வாயு நோய்கள், சன்னிநோய்கள், தோடங்கள், சுரநோய்கள் முதலியவைகள் தீரும். வலிமையறிந்து மூன்று, ஐந்து, ஏழுவேளை கொடுக்கவும்.

**குறிப்பு** :— அனுபவசாலிகளான மருத்துவர்கள் கையில் அவசியமிருக்கத்தக்க மருந்துகளில் இதுவும் ஒன்று. இதனுல் வாய்பிடிக்காது. எவ்வித கெட்ட குணமும் உண்டாக்காது. குழந்தை முதல் வயோதிகர் ஈருகவுள்ள எல்லோருக்கும் உபயோகிக்கலாம். இதனைக் குறைந்த அளவும் செய்து கொள்ளலாம். அதிகமாக வேண்டுமாகுலும் ஏககாலத்தில் செய்துகொள்ளலாம். ஒரே நாளையில் நான்கு சாமம் சுருக்கிடவேண்டுமென்னும் அவசியமும் இல்லை. தினம் ஒவ்வொரு சாமமாகவும் சுருக்கிட்டுக்கொள்ளலாம். ஆகையால், அவரவர்கள் சமயோசிதம் போல் செய்து வைத்துக் கொள்ளக்கூடும்.

## 596. வீர மெழுகு (வேறு)

துய்மை செய்த வீரம் 1 பலம் (35 கிராம்), ஆட்டு இரத்தம், காட்டாமணக்குப் பால், இளநீர், தாய்ப்பால் இவை வகைக்குச் செல்லத்தக்க அளவு.

**செய்முறை**:— வீரக்கட்டியைச் சிறு பீங்கான் பாத்திரத்தில் வைத்து அது முழுகும்படியாக ஆட்டு இரத்தத்தைவிட்டு இருபத்துநான்கு மணிநேரம் வைத்து நீர்விட்டுக்கழுவி வேருெரு

பீங்கானில் போட்டு அது முழுகும்படியாகக் காட்டாமணக்குப் பாலை விடவேண்டும். அதனை வெய்யிலில்வைத்து உலர்ந்த பின்பு மறுபடியும் முன்போல் காட்டாமணக்குப் பாலை விட்டு முன்போல் உலர்த்தவேண்டும். மூன்றுதடவையும் இவ்விதமே உலர்த்திக்கொள்ளவும். இவ்விதமே இளநீரையும் மூன்றுதடவை விட்டு மூன்றுதடவை உலர்த்திக்கொள்ள வேண்டும். முடிவாக வெய்யிலில் வைத்துச் செம்மையாக உலர்ந்தபின்பு ஒரு பெரிய சட்டியில் நீர்வார்த்துக் கொதிக்கவைத்து மேற்படி வீரத்தைச் சிறு பீங்கானில் வைத்துக் கொதிக்கிற நீரில் மிதக்கவிட்டு கால்படி தாய்ப்பாலைச் சிறுகச் சிறுக வார்த்துச் சுருக்குக் கொடுத்துக் கொண்டு வந்தால் அது மலர்ந்து மெழுகாகிவிடும். அதனை எடுத்துப் பீங்கான் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** 1 முதல் 2 அரிசி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், சுக்கை அரைத்த விழுது, நல்லவெல்லம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** குன்மநோய்கள், சூலைநோய்கள், கைகால்முடக்கு, பக்கவாதம், சூலைநோய் முதலிய அநேக கடின நோய்கள் தீரும். பொதுவாகச் சொல்லில் சண்டிநோயாகிய எல்லாநோய்களிலும் உபயோகிக்கலாம்.

**மருத்துணவு:—** நோய்வலிமை, உடல்வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்தவும்.

## 597. வீர மெழுகு (வேறு)

தூய்மைசெய்த வீரம், இரசகற்பூரம், இலிங்கம், நெல்லிக்காய்க்கெந்தகம், இரசசெந்தூரம், மனோசிலை, அரிதாரம், இரசம், வெண்காரம், மிர்தார்சிங்கி இவை வகைக்கு 2 வராகனெடை (7 கிராம்), பலகைச்சூடன் 10 வராகனெடை (35 கிராம்), பளிங்குச்சாம்பிராணி 10 வராகனெடை (35 கிராம்).

**செய்முறை :—** கெந்தியையும் இரசத்தையும் சேர்த்து அரைத்து நன்றுகக் கறுத்தபின்பு வீரம் தவிர மற்ற சரக்குகளையும் பொடித்துத் தனியே வைத்துக்கொள்ள வேண்டும். சாம்பிராணியையும், சூடனையும் சேர்த்து அரைத்து மெழுகுபதமாகும் சமயத்தில் இலிங்கத்தைத் தனியே பொடித்து அதில் சேர்க்க வேண்டும். ஒருமணி நேரம் அரைத்து முன் சித்தப்படுத்தி இருக்கிற தூள்களையும் சிறுகச்சிறுகச் சேர்த்து நான்கு சாம நேரம் அரைக்க மெழுகாகும். எடுத்துப் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.



**அளவு:—** ½ முதல் 1 மிளகளவு. நோய்க்குத் தகுந்தபடி ¼, ½, ¾ ஒரு மண்டலம் உபயோகிக்கலாம்.

**துணைமருந்து:—** பனைவெல்லம், நல்லவெல்லம், வெண்ணெய் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** பக்கவாதம், பாரிசவாயு, உருத்திரவாயு, பக்கசூலை, கிரந்திநோய், நடுக்குவாதம், திமிர்வாதம், கோரைவாதம், தனுர்வாதம், குருதிச்சிக்கல், உதிரவாயு, சன்னி, சுரம் முதலியவைகள் தீரும்.

**மருத்துணவு:—** நோய்வலிவு, உடல்வலிவு முதலியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்தவும்.

## 598. வீர மெழுகு (வேறு)

வீரம், இரசகற்பூரம், இரசசெந்தூரம், நெல்லிக்காய்க் கெந்தகம், இவை வகைக்கு 1 வராகனெடை (3½ கிராம்), துருசு 1½ வராகனெடை (5¼ கிராம்), சீனக்காரம் 1½ வராகனெடை (5¼ கிராம்), தாளகம் ½ வாரகனெடை (1¾ கிராம்), இந்தச் சரக்குகளை முறையே தூய்மைசெய்து கொள்ளவேண்டும். தேன் ½ ஆழாக்கு, முருங்கைப்பூச்சாறு ½ ஆழாக்கு, இவ்விரண்டையும் கலந்துகொள்ளவேண்டும்.

**செய்முறை:—** மேற்கண்ட சரக்குகளைப் பொடித்து முன் கலந்து வைத்திருக்கிறதைச் சிறுகச் சிறுக வார்த்து நான்குசாம நேரம் அரைத்து மெழுகுபதத்தில் எடுத்துப் பீங்கான் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** ½ முதல் 1 மிளகளவு.

**துணைமருந்து:—** பனைவெல்லம், நல்லவெல்லம், சுக்கை அரைத்த விழுது, வெண்ணெய் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:—** வயிற்றுவலி, கூடிநோய்கள், சூலையானைக்கால்வீக்கம், சுரம், சன்னி முதலியவைகள் தீரும்.

**மருந்துணவு:—** சமயோசிதம் போல் ஏற்படுத்தவும்.

## 599. வீர மெழுகு (வேறு)

வீரம், இரசகற்பூரம், இலிங்கம், இரசசெந்தூரம், இவை வகைக்கு 4 வராகனெடை (14 கிராம்), நெல்லிக்காய்க்கெந்த

கம், இரசம், கல்நார், இந்துப்பு, காந்தம் இவை வகைக்கு 5 வராகனெடை ($17\frac{1}{2}$ கிராம்), பசுவின் வெண்ணெய் 3 பலம் (105 கிராம்), விளக்கெண்ணெய் 3 பலம் (105 கிராம்).

**செய்முறை :—** மேற்படி சரக்குகளைத் தூய்மைசெய்து பொடித்து வைத்துக்கொள்ளவும். சிறு சட்டியை அடுப்பின் மீதேற்றிச் சிறுதீயாக எரித்து மேற்படி வெண்ணெயில் கொஞ்சமும், எண்ணெயில் கொஞ்சமும் விட்டு மேற்படி தூள்களைப் போட்டுக் கிளறவேண்டும். அடிக்கடி வெண்ணெயையும், எண்ணெயையும் விட்டுக்கொண்டும் வரவேண்டும். எல்லாம் சென்ற பின்பு எடுத்துக் கல்வத்திலிட்டு ஒருசாமநேரம் அரைத்து மெழுகாக்கிப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** $\frac{1}{2}$ முதல் 1 மிளகளவு,

**துணைமருந்து :—** பனைவெல்லம், சுக்கை அரைத்த விழுது, இளகவகைகள் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** சுரம், சன்னி, இருமல், சூலை நோய் ஆகியவைகள் தீரும்.

**மருத்துணைவு:—** இச்சாபத்தியம்; மருந்தை மூன்று நாள் உபயோகித்துப் பின் மூன்றுநாள் மறு பத்தியம் வைக்கவேண்டும்.

## 600. வீர மெழுகு (வேறு)

தூய்மைசெய்த வீரம், இரசகற்பூரம், இரசம், இலிங்கம் இவை வகைக்கு $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), பளிங்குச்சாம்பிராணி, கூடன், கம்பிவெடியுப்பு, நவச்சாரம், பெருங்காயம் இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), தூய்மைசெய்த வெண்காரம், தூய்மைசெய்த நேர்வாளப்பருப்பு வகைக்கு 1 பலம் (35 கிராம்), தேன் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** சாம்பிராணியையும் கூடனையும் கல்வத்திலிட்டரைத்து மெழுகுபதத்தில் மற்ற சரக்குகளையும் பொடித்துச் சிறுகச் சிறுகத் தூவித்தேனையுஞ் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாம நேரம் அரைத்துப் பீங்கான் சிமிழில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** $\frac{1}{2}$ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து:—** பனைவெல்லம், வெண்ணெய் முதலியவைகளாகும்.



**நோய்கள்:—** அறுபத்துநான்கு வகைச் சுரங்கள், மகோதரம், நச்சுப்பாண்டு, பீனிசங்கள், அல்குல் புற்று, இலிங்கப்புற்று, வெடிசூலை, சுளை, கருப்பை நோய் சொறிசிரங்கு முதலியவைகள் தீரும்.

**மருத்துணைவு:—** இச்சாபத்தியம்; நோய் வலிவாகயிருந்தால் புளி, புகைப்பு ஆகியவைகளை நீக்கவும்.

**குறிப்பு:—** இது பெரும்பான்மையும் வாய் பிடிக்கிறதில்லை. ஆனால், சிற்சில சமயங்களில் சிற்சிலருக்கு வாய் பிடிப்பதுண்டு. அவர்களுக்கு விளக்கெண்ணெயையும், தாய்ப்பாலையும் சமமாகச் சேர்த்து உபயோகித்து வந்தால் வாய்வேக்காடு மாறிப்போகும்.

## 601. வீர மெழுகு (வேறு)

தூய்மைசெய்த வீரம், இரசகற்பூரம், இலிங்கம், இரசசெந்தூரம் இவை வகைக்கு 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), மேற்றோல் சீவின சுக்குத்தூள், மிளகுத்தூள், அரிசித்திப்பிலித் தூள் இவை வகைக்கு 3 வராகனெடை ($10\frac{1}{2}$ கிராம்) தூய்மைசெய்த நேர்வாளப்பருப்பு 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), தேன் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** இவை எல்லாவற்றையும் தனித்தனியாகப் பொடித்து ஒன்றுகச்சேர்த்துத் தேனைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரம் அரைத்து மெழுகுபதமான பக்குவத்தில் பீங்கான் சிமிழில் வைத்துக்கொள்ளவும்.

**துணைமருந்து:—** பனைவெல்லம், நல்லவெல்லம், சுக்கை அரைத்தவிழுது, வெண்ணெய் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** சூலைக்கட்டு, கிரந்தி, மேகவாயு, உதிரவாயு, வாதசுரம், சன்னிபாத சுரம், கபவாத சுரம் ஆகியவைகள் தீரும்.

**மருத்துணைவு:—** சமயோசிதம்போலவும் உடல்நிலைமைக்குத் தகுந்தபடியும் ஏற்படுத்தவும்.

## 602. வீர மெழுகு (வேறு)

தூய்மைசெய்த வீரம், பூரம், இலிங்கம் இவை வகைக்கு 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), மேற்றோல் சீவின சுக்குத்தூள்,

மிளகுத் தூள், அரிசிதிப்பிலித் தூள், தூய்மைசெய்த நேர்வாளப் பருப்பு இவை வகைக்கு 1 பலம் (35 கிராம்), தேன் செல்லத் தக்க அளவு.

**செய்முறை :—** எல்லாச் சரக்குகளையும் தனித் தனியே பொடித்து மற்ற தூள்களையும் ஒன்ருகச் சேர்த்துத் தேனைச் சிறுகச்சிறுக வார்த்து இரண்டு சாமநேரம் அரைத்து மெழுகு பதத்தில் எடுத்துப் பீங்கான் பாத்திரத்தில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** ½ முதல் 1 குன்றிஎடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், நாட்டுச்சர்க்கரை, வாழைப்பழம் முதலியவைகளாகும். மருந்து சாப்பிட்டு ஒரு நாழிகைக்குப் பிறகு வெந்நீர் சாப்பிடவேண்டும்; கழிச்சலாகும்.

**தீரும்நோய்கள் :—** வாயுநோய்கள், சூலைநோய்கள், வயிற்றுவலி முதலியன தீரும்.

**மருத்துணவு:—** மிளகுரசமும் சாதமும் கொடுக்கவும். கழிச்சல் அதிகமானுல் மோரும் சாதமும் சாப்பிடவும். தண்ணீரில் குளித்து விடவும்.

## 603. வீர மெழுகு (வேறு)

தூய்மைசெய்த வீரம் ½ பலம் (17½ கிராம்), சிற்றுமணக் கெண்ணெய் ½ ஆழாக்கு, பசுவின் வெண்ணெய் ½ பலம்.

**செய்முறை:—** வீரத்தை எண்ணெயில்போட்டு அடுப்பேற்றிச் சிறு தீயாக எரிந்துவந்தால் எண்ணெயானது தடித்த பதமாகவரும். அந்தச் சமயத்தில் வெண்ணெயைப்போட்டு ஆவி வராமல் மூடிவைத்திருந்து குளிர ஆறினபின்பு சிமிழில் அடைத்துக்கொள்ளவும்.

**அளவு :—** ¼ முதல் ½ குன்றிஎடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், வெண்ணெய், சுக்கை அரைத்தவிழுது முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** வயிற்றுவலி, குன்மநோய், வாயு நோய் முதலியன தீரும்.

**மருத்துணவு :—** புளி, புகை கைப்பு நீக்கவும்; இச்சா பத்தியம்.



## 604. வீர மெழுகு (வேறு)

வீரம் தேவையான அளவு. (இது ஒரே கட்டியாக இருக்க வேண்டும்.) இதனை ஒரு பீங்கான் பாத்திரத்தில்போட்டு அதில் புளிப்பு மாதுளம்பழச் சாற்றை விடவேண்டும். அதை வெய்யிலில் வைத்துச் சுண்டின பின்பு மறுபடியும் முன்போல் முன் சாற்றை விடவேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி ஐந்து தடவைகளுக்குக் குறையாமல் வைத்து முடிவாக மெழுகுபதத்தில் எடுத்துக் கல்வத்தில் ஒருசாமநேரம் அரைத்துப் பீங்கான் சிமிழில் வைத்துக்கொள்ளவும்.

**அளவு:—** ½ முதல் 1 மிளகளவு.

**துணைமருந்து :—** பனைவெல்லம், சுக்கை அரைத்த விழுது முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** சன்னி, சுரம், வாதநோய், வாயு நோய், உதரநோய் முதலியவை தீரும்.

**மருத்துணவு :—** சமயோசிதம்போல் பத்தியம் ஏற்படுத்தவும்.

## 605. வீர மெழுகு (வேறு)

வீரம் 1 வராகனெடை (3½ கிராம்), பூரம் 1 வராகனெடை (3½ கிராம்), (இரண்டையும் தாய்ப்பாலில் நான்கு நாள் ஊற வைத்து எடுத்துக் கொள்ளவும்). சுக்குத்தூள் 1 வராகனெடை, மிளகுத்தூள் 1 வராகனெடை, தேன் 4 வராகனெடை.

**செய்முறை :—** எல்லாவற்றையும் கல்வத்திலிட்டு மேற்படி தேனைச் சிறுகச் சிறுக வார்த்து அரைத்து மெழுகு பதத்தில் வழித்துப் பீங்கான் சிமிழில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** ½ முதல் 1 மிளகளவு.

**துணைமருந்து :—** பனைவெல்லம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** மேகம், சூலை, வயிற்றுவலி ஆகியவைகள் தீரும். ஐந்து அல்லது ஆறு வேளை கொடுத்தால் போதுமானது.

**மருத்துணவு :—** புளி, புகை, புணர்ச்சி நீக்கவும்.

## 606. வீர மெழுகு (வேறு)

தூய்மைசெய்த வீரம், நவச்சாரம், தூய்மைசெய்த இரச கற்பூரம், மேற்றோல் சீவிய சுக்குத் தூள், மிளகுத்தூள், அரிசித் திப்பிலித் தூள் இவை வகைக்கு 1 வராகனெடை (3½ கிராம்), கோழிமுட்டை மஞ்சட்கருத் தைலம் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** எல்லாவற்றையும் கல்வத்திலிட்டுப் பொடித்து அண்டத் தைலத்தைச் சிறுகச் சிறுக வார்த்துக் குன்றி மணி அளவுள்ள மாத்திரைகள் செய்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** ½ முதல் 1 மாத்திரை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், நாட்டுச்சர்க்கரை, வெண்ணெய் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** உருத்திர வாயுக்கள், சன்னி, சைத்தியம், தோடம், உதிரவாயு, உதிரச்சிக்கல், பிரசவ உதிரக் கட்டு, சூலைக்கட்டு முதலியவைகள் தீரும்.

**மருத்துணவு :—** நோயின் வலிவு, உடல் வலிவு முதலியவைகளுக்குத் தகுந்தபடி சமயோசிதம் போல பத்தியம் ஏற்படுத்தவும்.

## 607. வீர மெழுகு (வேறு)

தூய்மைசெய்த வீரம், இலிங்கம், இரசகற்பூரம், சூடன் இவை வகைக்கு 1 வராகனெடை (3½ கிராம்), இரச செந்தூரம், இரசம், வகைக்கு 2 வராகனெடை (7 கிராம்), ஓமம் 5 வராகனெடை, தேன் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** ஓமத்தைத் தவிர மற்றெல்லாச் சரக்குகளையும் பொடித்து வைத்துக் கொள்ளவும். சிறிய சட்டியில் ஓமத்தில் அரைவாசியைப் பரப்பி அதன் நடுவில் முன் தூளைபோட்டு அதன் மீதும் ஓமத்தைப் போட்டுப் பரப்பி மேல்சட்டி மூடி மெதுவாக எரிக்கவும். ஓமம் தானே பற்றி எரியும். எரிந்து அடங்கின பிறகு மேற்படி சரக்குகளையும், ஓமக்கரியும் சேர்த்துக் கல்வத்தில் போட்டுத் தேனைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாம நேரம் அரைத்துக் குன்றிமணி அளவுள்ள மாத்திரைகள் செய்து பீங்கான் பாத்திரத்தில் பயன்படுத்தவும்.

**அளவு :—** ½ முதல் 1 வராகனெடை.



**துணைமருந்து :—** பனைவெல்லம், சுக்கை அரைத்த விழுது, வெண்ணெய் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** சுரங்கள், பதின்மூன்று வகை சன்னிகள், ஏழுவகைத் தோடங்கள், பதினெட்டு வகைச் சூலைகள், எட்டுவகைக் குன்மங்கள், வயிற்றுவலி முதலிய அநேக நோய்கள் தீரும்.

**மருத்துணவு :—** நோய்க்குத் தகுந்தபடி புளி, புகை முதலியவைகளை நீக்கிப் பத்தியம் ஏற்படுத்தவும். மருந்தை மூன்று நாள் உபயோகித்து மறு மூன்று நாளும் பத்தியம் இருக்க வேண்டும். நான்காம் நாள் விளக்கெண்ணெயாவது நெய்யாவது தேய்த்துத் தலைமுழுகச் செய்ய வேண்டும்.

## 608. வீர மெழுகு (வேறு)

தூய்மைசெய்த வீரம் 1 வராகனெடை (3½ கிராம்), இரச கற்பூரம் 1 வராகனெடை (3½ கிராம்), கோழிமுட்டை 1, தேன் செல்லத்தக்க அளவு.

**செய்முறை :—** கோழி முட்டையை உடைத்து வெள்ளைக் கருவை மாத்திரம் எடுத்துக் கொண்டு மேற்படி இரண்டு சரக்குகளையும் தூள்செய்து அதில் போட்டு ஒரு நாள் வெய்யிலில் வைத்து மறுநாள் எடுத்துக் கல்வத்தில் போட்டு அரைத்துப் வில்லை தட்டிக் காயவைத்து ஓட்டில் வைத்து மேலோடு மூடி மூன்று சீலைமண் செய்து உலர்த்தி நெல்லை வேகவைக்கும் போது அதற்கு மத்தியில் வைத்து நெல் வெந்த பிறகு எடுத்துக் கல்வத்திலிட்டுத் தேனைச் சிறுகச் சிறுக வார்த்து ஒரு சாம நேரம் அரைத்துச் சிமிழில் வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** ½ முதல் 1 மிளகளவு.

**துணைமருந்து :—** பனைவெல்லம், கருப்புச்சர்க்கரை, அல்லது நாட்டுசக்கரை வெண்ணெய் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** சுரம், சன்னி, வயிற்றுவலி, சூதக வாயு முதலியவை தீரும்.

**மருத்துணவு :—** இச்சாபத்தியம்.

## 609. வீர மெழுகு (வேறு)

தூய்மைசெய்த வீரம் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), கல் முதலியவைகள் ஆய்ந்து தூய்மைசெய்த ஓமம் 5 பலம் (175 கிராம்), தேன் செல்லத்தக்க அளவு.

**செழுய்முறை :—** ஓமத்தை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு பானை ஓட்டில் போட்டு அதன் நடுவில் வீரக் கட்டியை வைத்து அதன் மீது மறுபாதி ஓமத்தைக் கோபுரம் போல் கொட்டி அடுப்பேற்றிச் சிறுதீயாக எரித்து வருகையில் ஓமக்குவியலின் நுனியில் ஒரு தம்பிடி அகலம் வேகாதிருக்கும் பக்குவத்தில் இறக்கி வைத்துக் குளிர ஆறினபின்பு எல்லா வற்றையும் கல்வத்திலிட்டுப் பொடித்துத் தேனைச் சிறுகச் சிறுக விட்டு ஒரு சாம நேரம் அரைத்து மெழுகு பதமாக எடுத்து வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** $\frac{1}{2}$ முதல் 1 குன்றி எடை.

**துணைமருந்து :—** முத்தெருக்கஞ் செவி இலையை அரைத்த விழுது சுமார் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), நோயிற்குத் தகுந்த படி மூன்று பொழுது, ஆறுபொழுது கொடுக்கவும்.

**தீரும்நோய்கள்:—** பிரசவித்த பெண்களுக்கு அழுக்கு கட்டுப்பட்டிருந்தால் அது வெளிப்பட்டுப் போகும். அந்த அழுக்குக் கட்டினுலுண்டான சுரம், உடல்வலி, கடுப்பு முதலியவைகள் தீரும்.

**மருந்துணவு :—** இச்சாபத்தியம்.

## 610. வீர மெழுகு (வேறு)

தூய்மைசெய்த வீரம் 1 பலம், பொன்னுங்காணிச் சாறு $\frac{1}{4}$ படி, வாழைப்பழச் செயநீர் $\frac{1}{4}$ படி.

**செய்முறை :— புது ஓட்டில் வீரக் கட்டியை வைத்துப்** பொன்னுங்காணிச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்துச் சுருக்கிட வும். பிறகு வாழைப்பழச் செயநீரைச் சிறுகச்சிறுகவிட்டுச் சுருக் கிடவும். எல்லாம் சேர்ந்து மெழுகாகியிருக்கும். இதனைப் பீங்கான் குப்பியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** $\frac{1}{2}$ முதல் 1 குன்றி எடை.



**துணைமருந்து :—** பனைவெல்லம், நாட்டுச் சர்க்கரை வெண்ணெய் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** வயிற்றுவலி, சன்னி, சுரம் ஆகி வைகள் தீரும்.

**மருந்துணவு :—** இச்சாபத்தியம்.

## 611. வீர மெழுகு (வேறு)

இரசகற்பூரம் $1\frac{1}{4}$ வராகனெடை, வீரம் $1\frac{1}{4}$ வராகனெடை, தூய்மைசெய்த நேர்வாளம் $1\frac{3}{4}$ வராகனெடை.

**செய்முறை :—** வீரத்தைக் கல்வத்திலிட்டுப் பொடித்து மற்ற இரண்டு சரக்குகளையும் சேர்த்து அரைத்து ஒருசாமநேரம் அரைக்க மெழுகாகும். இதனைப் பீங்கான் குப்பியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு:—** $\frac{1}{2}$ முதல் 1 மிளகளவு.

**துணைமருந்து :—** பனைவெல்லம், நாட்டுச்சர்க்கரை வெண்ணெய் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** கழிச்சலாகி உடலிலுள்ள கெட்ட நீர்கள், வெளிப்பட்டு உடல் நலம் உண்டாகும். கழிச்சல் நிற்க வேண்டுமானல் மோரும் சாதமும் சாப்பிடவும். அதிலும் நிற்காவிட்டால் வசம்பைச்சுட்டுச் சாம்பலாக்கித் தேனில் கலந்து கொடுக்க நிற்கும். இந்த மருந்தானது வாலிபர்களுக்குப் பயன்படாது. இதை முரட்டு உடலினர்கள், கடினமான உடலினர்கள் ஆகியவர்களுக்கு அதிக கவனத்து டன் உபயோகிக்கவேண்டும்.

**குறிப்பு :—** இவ்வகை மருந்துகளும் சிலசமயங்களில் அவசியமாகக் காணப்படுகின்றபடியால் ஆங்காங்கும் இவ்வித முறைகள் எழுதப்பட்டிருக்கின்றன. ஆகையால், அனுபவ சாலிகள் அவ்வகை மருந்துகளை உபயோகிக்க நேரிட்டால் அதிக விழிப்போடு பயன்படுத்த வேண்டும்

## 612. வீர பற்பம்

**இதற்கு அஞ்சுப்பு செயநீர்:—** அமுரியுப்பு, நீர்முள்ளி உப்பு, வெடியுப்பு, நவாச்சாரம், பூநீறு இவை வகைக்கு 5 பலம்

(175 கிராம்), இவற்றைப் பொடித்துப் பீங்கானில்போட்டு மேல் பீங்கான் மூடிச் சீலைமண்செய்து செயநீர்க்குழியில் புதைத்து வைத்து செயநீராக்கிக் கொள்ளலாம். அல்லது பனிக்காலமாயிருந்தால் பனியில் வைத்து செயநீராக்கிக்கொள்ளலாம். இந்தச் செயநீரைபுட்டியில் பத்திரப்படுத்தி வைத்துக்கொள்ளவும்.

வீரம் தேவையான அளவு. இதனைக் கவத்திலிட்டு மேற்படி செயநீரைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாம நேரம் அரைத்து வில்லை செய்து உலர்த்தி அகலிட்டு மேல கல்மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்திக் கவசத்தின் நான்கு பங்கெடை வறட்டியில் புடமிட்டு ஆறினபின் எடுக்க பற்பமாக இருக்கும்.

**அளவு:**— ½ முதல் 1 குன்றிஎடை.

**துணைமருந்து :**— தேன், பனைவெல்லம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:**— சன்னி, கலப்புநோய், சைத்தியம், வாத இசிவு, வலிப்பு, குன்மநோய், சூலைநோய் முதலிய அநேக நோய்கள் தீரும். சுகசன்னிக்கு இலவங்கத்தை வெற்றிலைச் சாற்றில் இழைத்து மேற்படி பற்பத்தை அளவுப்படி சேர்த்துக் கொடுக்க அது தீரும்.

**மருந்துணவு :**— சமயோசிதம்போல பத்தியம் மேற்படுத்தவும்.

**குறிப்பு :**— மேற்கண்ட செயநீரினல் பூரம், கெந்தகம் முதலிய எல்லாச் சரக்குகளையும் பற்பமாக்கிக் கொள்ளலாம்.

## 613. வீர பற்பம் (வேறு)

மனேசிலை 3 வராகனெடை (10½ கிராம்), அன்னபேதி 3 வராகனெடை (10½ கிராம்), தூய்மைசெய்த வீரம் 3 வராகனெடை, சோற்றுக்கற்ருழைச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை :**— மனேசிலையையும், அன்னபேதியையுங் கல்வத்திலிட்டுப் பொடித்துக் சோற்றுக்கற்ருழைச் சாற்றைச் சிறுக சிறுகச் வார்த்து அரைத்தால் புகை உண்டாகும். புகை அடங்குகிற வரையில் அரைத்து எடுத்து ஒரு உருண்டையாகச் செய்து அதற்குள் வீரக்கட்டியை வைத்து கவசித்து வெய்யிலில் காயவைத்து ஒரு சிறு அகலில் வைத்து மேல கல் மூடிச் சீலை மண் செய்து இருபது பலம் உமியில் காற்றில்லாத இடத்தில் புடமிட்டுச் சூட்டுடன் எடுத்து அதன் மீது மூன்று பலம் சோற்றுக் கற்ருழைச் சாற்றைச் சொட்டுச் சொட்டாக விடவேண்டும். ஆறினபின்பு கவசத்தைப் பிரித்து எடுத்தால் உள்ளே வீரமானது பற்பமாக இருக்கும்.



**அளவு :**— ½ முதல் 1 அரிசி எடை.

**துணைமருந்து :**— வெண்ணெய், பாலேடு, நாட்டுச் சர்க்கரை முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :**— எண்வகைக் குன்ம நோய்கள் முன்னிசிவு, பின்னிசிவு, சூலைநோய், சைத்தியம், தோடம், கிரந்தி நோய்கள், குட்ட நோய்கள் முதலியவை தீரும்.

**மருந்துணவு :**— நோய் வலிவு உடல் வலிவு முதலியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்தவும்.

## 614. வீரச் சுண்ணம்

தூய்மைசெய்த வீரம் 1 வராகனெடை (3½ கிராம்), வெடியுப்பு 1 வராகனெடை (3½ கிராம்), கொடிக் கள்ளிப்பால் செல்லத்தக்க அளவு.

**செய்முறை:**— மேற்படி இரண்டு சரக்குகளையும் பொடித்து ஒரு ஓட்டில் வைத்து மேற்படி கள்ளிப்பாலை ஒவ்வொரு துளியாக விட்டுக் குச்சியால் கிண்டிவர இரண்டும் சேர்ந்து சுண்ணமாகியிருக்கும்.

**அளவு:**— 1 முதல் 2 அரிசி எடை.

**துணைமருந்து :**— சிற்றுமணக்கெண்ணெய் 1½ அல்லது 2 வராகனெடை எண்ணெயில் மேற்கண்ட அளவுப்படி பற்பத்தைச் சேர்த்துக் காலை மாலை இரண்டு வேளையும் ஏழுநாள்கள் கொடுக்கவேண்டும்.

**தீரும்நோய்கள் :**— நவமூல முளைகளும் கூட்டோடு அழுகி விழுந்துபோகும்.

**மருந்துணவு :**— பச்சரிசி, பச்சைப்பயறு, பசுவின்பால் ஆகிய மூன்றையும் சேர்த்துக் கிச்சடி சமைத்து நெய்யை விட்டுக் கொண்டு சாப்பிடவும். ஆட்டிறைச்சியுமாகும். ஆனல் மிளகாய் முதலிய காரப் பொருள்களை அதிகமாகச் சேர்க்கலாகாது.

## 615. வீரச் சுண்ணம் (வேறு)

வீரம் 1 பலம் (35 கிராம்), சீமைத் திராட்சைக் காடி $\frac{1}{4}$ படி, பசுவின் மூத்திரம் $\frac{1}{4}$ படி, வேப்பெண்ணெய் 2 பலம் (70 கிராம்), வெள்ளைச்சாரணைச்சாறு $\frac{1}{4}$ படி, சுக்கான்கல்லு 2 பலம் தும்பைச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** காடி முதலிய மூன்று திரவத்தையும் ஒரு பானையில்விட்டு அதில் வீரக்கட்டியைப் போட்டு மூடி சீலைமண் செய்து ஒருமண்டலம் பூமியில் புதைத்தெடுத்து ஓட்டில் வைத்து வெள்ளைச்சாரணைச் சாற்றைச் சிறுகச் சிறுக விட்டுச் சுருக்குக் கொடுக்கக்கட்டும். சுக்கான் கல்லைப் பொடித்துத் தும்பைச்சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து இரண்டு சாமநேரம் அரைத்து மூசையும் மூடியும் செய்து உலர்த்திக் கொள்ளவும். வெள்ளைச் சாரணை இலையை அரைத்து முன்வீரக்கட்டிக்குக் கால் அங்குலம் கவசம்செய்து மேற்படி குகைக்குள் வைத்து மேற்படி சில்லிட்டு ஏழு சீலைமண்செய்து உலர்த்தி அரை கெசப் புடமிடவும். ஆறின பின்பு எடுத்தால் சீமைச்சுண்ணும்பு போன்ற வெண்மையான கட்டியாகியிருக்கும். அதைப் பொடித்துப் புட்டியில் பத்திரப் படுத்தவும்.

**அளவு:—** $\frac{1}{2}$ முதல் 1 அரிசி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், வெண்ணெய், நெய் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** சூலைக்கட்டு, பக்கவாதம், பாரிச வாதம், சன்னி, சைத்தியம், தோடம், சுரம், குன்மம், நச்சுக் கழிச்சல், குருதிக்கட்டு, குருதிவாயு, சூதகசன்னி முதலியவைகள் தீரும்.

**மருந்துணவு :—** சமயோசிதம்போல் ஏற்படுத்தவும்.

## 616. வீரப் பதங்கம்

தாம்பிரத்தைப் புளிஇலைக் கனம் தகடடித்து அதற்குச் சமன் நெல்லிக்காய்க்கெந்தகத்தைத் தண்ணீர் விட்டு அரைத்து மேற்படி தகட்டிற்குக் கவசித்து உலர்த்தி அகலில் இட்டு மேலகல் மூடிச் சீலைமண்செய்து புடமிட்டெடுக்க வெட்டையாகும்.



அதை உருக்கி அதை உராவின பொடிக்குச் சமன் வீரம், இந்த இரண்டிற்கும் சமன் புளியாரை இலை இவை எல்லாவற்றையும் அரைத்து ஒரு வில்லையாகச் செய்து ஒரு சட்டியின் நடுவில் வைத்து மேல் சட்டி மூடிப்பலமாக ஏழு சீலைமண் செய்து உலர்த்தி வட்ட அடுப்பில் வைத்து நான்குசாமம் எரிக்க மேல் சட்டியில் பதங்கம் ஏறியிருக்கும். அந்தப் பதங்கத்தை மிக்க கவனமாக எடுத்துக்கொள்ளவும்.

**அளவு :—** $\frac{1}{2}$ முதல் 1 அரிசி எடை.

**துணைமருந்து :—** பனை வெல்லம், நாட்டுச்சர்க்கரை, வெண்ணெய் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** குன்மநோய்கள், குட்டநோய், சூலை நோய், சன்னி, தோடம், சைத்தியம், பக்கவாதம் முதலிய அநேக நோய்கள் தீரும்.

**மருந்துணவு :—** நோய்வலிவு, உடல் வலிவு, முதலிய வைகளுக்குத் தகுந்தபடி இலகு பத்தியமாகவும், கடின பத்திய மாகவும் ஏற்படுத்த வேண்டியது.

**குறிப்பு :—** இந்தப் பதங்கத்தினுல் வாய்பிடித்தல் முதலிய தீயகுணங்கள் ஒன்றுமிராது. ஆகையால், பிரபல வைத்தியர்கள் இந்த மருந்தைச் செய்து கையிருப்பாக வைத்திருக்க வேண்டியது அவசியம். அப்படி வைத்திருப்பதினுல் உற்ற சமயங்களில் உதவியாக இருக்கும்.

## 617. வீரப் பதங்கம் (வேறு)

வீரம் 1 பலம் (35 கிராம்), இரசகற்பூரம் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), அயப்அரபொடி $1\frac{1}{2}$ பலம் ([illegible] கிராம்).

**செய்முறை :—** வீரத்தையும், பூரத்தையும் பொடித்துக் கொள்ளவும். அயப் அரபொடியை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஒரு சட்டியில் போட்டு அதன் மீது முன் சித்தப்படுத்தின தூளைப் போட்டுப் பரப்பி அதன் மீது மறுபாதி அரப்பொடியைப் போட்டு மேல்சட்டி மூடிச் சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பேற்றிச் சிறு தீயாக இலந்தை விறகால் அல்லது, ஆவாரை விறகால் அல்லது, தென்னை ஓலையால் இரண்டு சாம நேரம் எரித்து ஆறின பின்பு எடுத்துப் பதங்கத்தைச் சுரண்டி வைத்துக் கொள்ளவும்.

**அளவு :—** $\frac{1}{2}$ முதல் $1\frac{1}{2}$ குன்றி எடை.

**துணைமருந்து :—** பனைவெல்லம், நல்ல வெல்லம், சுக்கை அரைத்த விழுது முதலியவைகளில் சேர்த்துக் கொடுத்து அதன் மேலே இஞ்சிச் சுரசத்தை பருகச் செய்யவேண்டும். இவ்விதம் ஐந்தாறு வேளை செய்தால் போதுமானது.

**தீரும்நோய்கள் :—** எல்லாவகை சன்னிகள், எல்லா வகை தோடங்கள் ஆகியவைகள் தீரும்.

**மருத்துணைவு :—** சமயோசிதம் போல பத்தியம் ஏற்படுத்தவும்.

## 618. வீர மாத்திரை

தூய்மைசெய்த வீரம் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), ஓட்டடைத்தூள் 1 வராகனெடை, ($3\frac{1}{2}$ கிராம்), கருந்துளசிச் சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** மேற்படி இரண்டு சரக்குகளையும் கல்வத்தில் விட்டுப் பொடித்து மேற்படி சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாமநேரம் அரைத்து மிளகளவு உருட்டி நிழலில் உலர்த்தி புட்டியில் பத்திரப்படுத்தவும்.

**அளவு:—** $\frac{1}{2}$ முதல் 1 மாத்திரை.

**துணைமருந்து:—** பனைவெல்லம், நாட்டுச்சர்க்ரை, வெண்ணெய் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** பதின்மூன்று வகை சன்னிகள், சைத்தியங்கள், தோடங்கள், வாதநோய்கள், வாயுநோய்கள் ஆகியவைகள் தீரும்.

**மருத்துணைவு :—** சமயோசிதம் போல ஏற்படுத்தவும்.

## 619. வீரப் புகை

வீரம், இரசகற்பூரம், இரசம், பாடாணம், காந்தம், துருசு, படிக்காரம், மிருதார்சிங்கி, இவை வகைக்குப் $1\frac{1}{4}$ பலம் ($43\frac{3}{4}$ கிராம்).



**செய்முறை :—** இவற்றைப் பொடித்துத் துணியில் பரப்பி வத்தியாகத் திரித்துக் கொளுத்தி நோயாளியினுடைய உடலில் புகை பிடிக்கவும். ஒரு பலத்திற்கு ஆறு வத்தி செய்யவும். மூன்று நாள் ஆறு வேளை புகைபிடிக்கவும். பதினோராம் நாள் விளக்கெண்ணெய் தேய்த்து வெந்நீரில் தலைமுழுகச் செய்யவும்.

**தீரும்நோய்கள்:—** கிரந்திப்புண், அரையாப்பு, பிளவை, தீராத இரணங்கள் ஆகியவை தீரும்.

**மருந்துணைவு :—** நல்லெண்ணெய், கடுகு, தேங்காய், தேங்காயெண்ணெய் முதலியவைகளை நீக்கவேண்டியது.

## 620. வீரப் பதங்கம் (வேறு)

வீரம் 1 பலம் (35 கிராம்), இரசகற்பூரம் $\frac{1}{2}$ பலம் ($17\frac{1}{2}$ கிராம்), அயத் தூள் 3 பலம் (105 கிராம்).

**செய்முறை :—** முன்சொன்ன இரண்டு சரக்குகளையும் தூள்செய்து தனியே வைத்துக் கொள்ளவும். நாற்பதுபலம் கொள்ளும்படியான இரண்டு சட்டிகளை வாய்பொருந்தும்படி தேய்த்து இரண்டு சட்டியிலும் குப்பைமேனிஇலைச் சாற்றைத் தடவிக் காயவைக்க வேண்டும். மறுபடியும் மேல் சட்டிக்கு மாத்திரம் காயக் காய மேற்படி சாற்றை ஐந்தாறு தடவைபூசி உலர்த்திக் கொள்ளவேண்டும். அயத்தூளை இரண்டு பாகமாகச் செய்து ஒரு பாகத்தைக் கீழ்ச்சட்டியில் பரப்பி அதன்மீது முன் தூளைக்கொட்டிப் பரப்பி அதன்மீது மறுபாதி அயத்தூளைப்போட்டு மூடி மேல்சட்டி மூடி ஏழு சீலைமண் செய்து உலர்த்தி அடுப்பேற்றி ஒருசாமநேரம் கமலாக்கினியாக எரித்துத் தீயை நிறுத்திக் கீழே இறக்கிச் சட்டியைக் கொஞ்சம் சாய்வாகக்கிடத்தி வைத்துக்குளிர ஆறினபின்பு சட்டியைப் பிரித்துப் பதங்கத்தைச் சுரண்டி எடுத்து 2 தடவையும் முன்போல் பதங்கித்துக் கொள்ளவும்.

**அளவு:—** $\frac{1}{4}$ முதல் $\frac{1}{2}$ குன்றி எடை.

**துணைமருந்து:—** பனைவெல்லம், சுக்கை அரைத்தவிழுது, சுக்கு இளகம் முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள் :—** சன்னி, சுரம், தோடம், வயிற்று வலி, வாயுநோய்கள் முதலியவைகள் தீரும்.

**குறிப்பு:—** எந்தப் பதங்கத்தை எரித்தபோதிலும் அவ்விடத்தில் அதிர்ந்த சத்தங்கூடாது. மேல்சட்டியின் மீது ஈரத் துணியைப் போட்டுக் கொண்டு வரவேண்டியது.

**மருந்துணவு :—** நோய்வலிவு, உடல்வலிவு, முதலியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்தவும்.

## 621. அயவீரச் செந்தூரம்

அய அரப்பொடி 2 பலம் (70 கிராம்), வீரம் 1 பலம் (35 கிராம்) புளியாரைச்சாறு செல்லத்தக்க அளவு.

**செய்முறை:—** அயத்தையும் வீரத்தையும் கல்வத்திலிட்டு மேற்படி சாற்றைச சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரம் அரைத்து வில்லை தட்டி உலர்த்தி வைத்துக்கொள்ளவும். இரண்டு சிறு சட்டிகளை எடுத்து வாய் பொருந்தும்படியாகத் தேய்த்துக் கீழ்ச்சட்டியில் முன் வில்லையைவைத்து மேல்சட்டி மூடி ஐந்து சீலைமண் வலுவாகச்செய்து காயவைத்து அடுப்பேற்றிக் கமலாக்கினியாக நான்கு சாமம் எரித்துக் குளிர ஆறினபின்பு கவசத்தைப்பிரித்து மேல் சட்டியிலிருக்கிற பதங்கத்தையும், கீழ்ச் சட்டியியிலிருக்கிற சரக்கையும் சேர்த்து முன் புளியாரைச் சாற்றைச் சிறுகச் சிறுக வார்த்து நான்கு சாமநேரம் அரைத்து முன்போல் வில்லை செய்து உலர்த்தி முன்போல் சட்டியில் வைத்து முன்போல் நான்கு சாமம் எரிக்க வேண்டும். இவ்விதம் மடக்கி மடக்கி மேலே பதங்கம் ஏருமல் கீழே இருக்கிறவரையில் எரிக்க வேண்டும். அரைப்பு, எரிப்பு ஆகியவைகளுக்குத் தகுந்தபடி ஐந்து தடவை அல்லது, ஏழு தடவையில் செந்தூரமாகி விடும். வீரச்செந்தூரங்களில் இதுவும் ஒரு அருமையான முறை. இதனுல் வாய் வேகாது.

**அளவு:—** 2 முதல் 4 அரிசி எடை.

**துணைமருந்து :—** தேன், பனைவெல்லம், வெள்ளைச் சர்க்கரை, இஞ்சிச்சாறு, முதலியவைகளாகும்.

**தீரும்நோய்கள்:—** குன்மநோய், வாயுநோய், சன்னி, சைத்தியநோய், இரணநோய் முதலியவைகள் தீரும்.



**மருந்துணவு :—** நோய்வலிமை, உடல்வலிமை முதலியவைகளுக்குத் தகுந்தபடி பத்தியம் ஏற்படுத்தவும்.

## வாய்பிடிக்கும் மருந்துகள், வாய்பிடிக்காதிருக்க துணைமருந்துகள்.

இரசகற்பூரம், வீரம் முதலியவைகள் சம்பந்தமான அநேக மருந்துகளினுல் வாய் பிடிக்குமாகையால், அவ்வித மருந்துகளைக் கீழ்க்கண்டவிதமாக உபயோக்கித்தால் வாய்பிடிக்காமல் இருப்பதுடன் அந்தந்த நோய்களைக் கண்டிக்கவும் ஏதுவாகும். அவை பின் வருகிற விதமாகும்.

மேற்ருேல் சீவின சுக்கு, மிளகு, அரிசித்திப்பிலி, மஞ்சட் கடுக்காய்த்தோல், தான்றிக்காய்த் தோல், நெல்லிமுள்ளி, நற்சீரகம், பெருஞ்சீரகம், மாசிக்காய், காய்ச்சுக்கட்டி, இந்தப் பத்துச் சரக்குகளையும் தனித்தனி இடித்த தூள் வகைக்கு 1 பலம் (35 கிராம்), வாய்பிடிக்கும் இரசகற்பூரத்தின், அல்லது, வீரத்தின் பதங்கம், பற்பம், செந்தூரம் ஆகியவைகளில் தமக்கு விருப்பமான ஒருவகையில் 1 வராகனெடை ($3\frac{1}{2}$ கிராம்), மேற்படி தூளுடன் சேர்த்துத் தேனைச் சிறுகச் சிறுக வார்த்து ஒருசாமநேரம் அரைத்து மெழுகு பதத்தில் கொஞ்சம் நெய்யை விட்டு அரைத்து இளகபதமாக எடுத்து வைத்துக்கொள்ளவும். இந்த இளகத்தில் உடல்வலிமை முதலியவைகளுக்குத் தகுந்த அளவுப்படி உபயோகித்து வருவதனுல் வாய்பிடிக்கும் கொடிய குணம் நீங்கிப்போகும்.

## மேற்படி வேறு

கடையில் விற்கிற விளாவின கெந்தகத் திராவகத்தை வாங்கி ஒரு பங்கிற்கு இருபது பங்கு தண்ணீர் சேர்த்து வாய் கொப்பளித்து வருவதினுல் மேற்படி மருந்துகள் வாய்பிடிக்காது. வாய்பிடித்திருந்த போதிலும் இரண்டு மூன்று வேளையில் சாந்தமாகிவிடும்.

## மேற்படி வேறு

வாய் பிடிக்கும் மருந்துகளை ஆரம்பித்த நாள் முதல் தினம் ஒன்றிற்கு நான்கைந்து தடவைகள் தாம்பூலந்தரித்துக் கொண்டு வந்தால் வாய்பிடிக்காது.